29.09.2022 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்ற சாதாரண மன்றக்கூட்ட தீர்மானங்கள்

ம.அ.1ந.க.எண்.பி2/01532/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:402/2022 **பொருள் எண்.01**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-1, வார்டு -2ல் கத்திவாக்கம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சென்னை நடுநிலைப்பள்ளி கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

வ எண்.	வார்டு எண்:2	மண்டலம்-01
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	பெருநகர சென்னை மாநகராட்சி. மண்டலம் -1 பகுதி-1 வார்டு-2ல் கத்திவாக்கம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சென்னை நடுநிலைப்பள்ளி கட்டிடம்.
2	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது?	1985
3	அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு?	தரை தளம் 75.50 சதுரமீட்டர்
4	அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு?	75.50 சதுரமீட்டர்
5	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.47027.51/-
6	அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா?	பயன்பாட்டில் உள்ளது
7	அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	சென்னை கத்திவாக்கம் நடுநிலைப்பள்ளி கட்டிடத்தை புதுப்பித்து நவீனப்படுத்தப்பட்ட வகுப்பறைகள் கூடிய கட்டிடமாக மேம்படுத்தப்படுகிறது
8	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்?	பழைய கட்டிடத்தில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளது. இடிந்து விழும் அபாயத்தில் உள்ளது
9	கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்?:	மண்டல அலுவலர் 1

எனவே, மண்டலம்-1, பகுதி-1, வார்டு-2ல் கத்திவாக்கம் நெடுஞ்சாலையில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் உள்ள மேற்குறிப்பிட்ட கட்டிடம் மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளதாலும் மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் அச்சத்துடன் இருப்பதாலும் கட்டிடத்தை புதுப்பிக்க வேண்டியுள்ளதால், இப்பள்ளியின் பழுதடைந்த கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> "16.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண். 22/2022, நாள்.16.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."
>
> "23.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.171/2022, நாள்.23.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.6.ந.க.எண்.7264/1/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:403/2022 **பொருள் எண்.02**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 6, பகுதி-15, கோட்டம்-69 - ஜி.கே.எம் காலனி 12வது தெருவில் அமைந்துள்ள - சென்னை மாநகராட்சி தொடக்கப் பள்ளி கட்டிடம் - மிகவும் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

மண்டலம்-6, பகுதி-15, கோட்டம்-69 - ஜி.கே.எம் காலனி 12வது தெருவில் அமைந்துள்ள, சென்னை தொடக்கப் பள்ளி கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடமானது சுமார் 25 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட கட்டிடம் ஆகும். இது மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் அபாய நிலையில் உள்ளது.

மேற்கண்ட கட்டிடத்தினை இடிப்பதற்கான பணியை மண்டலம்-6 மேற்கொள்ள சம்பந்தப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு கட்டிடத்தை இடிப்பதற்கு 2021-2022ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9,50,000.00/- ஆகும். மேலும் பழமையான மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள கட்டிடத்தை இடிப்பதற்கு முன் இக்கட்டிடத்தில் மறுசுழற்சி முறைக்கு உபயோகப்படுத்தப்படும் பொருட்களான ஜன்னல், இரும்பு கதவு போன்றவற்றிற்கு அளவீடு எடுக்கப்பட்டு தற்போது 2021-2022 ஆம் ஆண்டு விலைப்பட்டியல்படி கணக்கிடப்பட்ட தொகை ரூ.5,46,490.93/- என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மறுசுழற்சிமுறைக்கு உபயோகப்படுத்தப்படும் பொருட்களான ஜன்னல், இரும்பு கதவு ஆகிய பொருட்களின் தற்போதைய நிலையைக்கருத்தில் கொண்டு மிகவும் பழமையான கட்டிடம் என்பதால் 25 சதவிகிதம் மதிப்பிறக்கம் செய்யப்பட்ட தொகை ரூ.1,36,623.00/- ஆகும். ஒப்பந்ததாரர் இந்த மறுசுழற்சிமுறைக்கு உபயோகப்படுத்தப்படும் பொருட்களுக்கான தொகை காசோலையாக பெருநகர சென்னை மாநகராட்சியின் கருவூலத்தில் செலுத்தப்படுவதற்கு அனுமதியும் வேண்டப்படுகிறது.

ஜி.கே.எம் காலனி 12வது தெரு, பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான தொடக்க பள்ளி கட்டிடத்தின் விவரங்கள் கீழ்காணும் வகையில் சமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்	கோட்டம் எண்-69	மண்டலம்-6
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	ஜி.கே.எம் காலனி 12வது தெரு, சென்னை மாநகராட்சி தொடக்கப் பள்ளி கட்டிடம்
2	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது?	சுமார் 25 வருடங்களுக்கு முன்பு
3	அந்த கட்டிடத்தின் பரப்பளவு எவ்வளவு?	437.41சதுரமீட்டர்
4	அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு?	1922.00 சதுர மீட்டர்
5	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.13,96,516.82/-
6	அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா?	ஆம்
7	அந்த கட்டிடம் இடித்தற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	புதியதாக G+2 பள்ளி கட்டிடம் அமைப்பதற்காக
8	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	மிகவும் பழுதடைந்துள்ளது

9	கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்?	அண்ணா பல்கலைக்கழகத்தின் அறிக்கை மற்றும் செயற்பொறியாளர்
10	வார்டுக்குழு தீர்மான எண், மற்றும் நாள்	மண்டலம் - 6 வார்டுக்குழு தீர்மான எண், 192/2022

எனவே, மண்டலம்-6, பகுதி-15, கோட்டம்-69, ஜி.கே.எம் காலனி 12வது தெருவில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் பழுதடைந்த கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> "16.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண். 30/2022, நாள்.16.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

> "23.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.175 /2022, நாள்.23.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.6.ந.க.எண்.இ1/ 822 /2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:404/2022 **பொருள் எண்.03**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-6, வார்டு-71, பாரதி சாலையில் அமைந்துள்ள மிகவும் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள கோட்ட அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-16, வார்டு-71, பாரதி சாலையில் அமைந்துள்ள மிகவும் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள கோட்ட அலுவலக கட்டிடம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடமானது சுமார் 64 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட கட்டிடம் ஆகும். இது மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் அபாய நிலையில் உள்ளது.

மேற்கண்ட கட்டிடத்தினை இடிப்பதற்கான பணியை மண்டலம்-6 மேற்கொள்ள சம்பந்தப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு கட்டிடத்தை இடிப்பதற்கு 2021-22ஆண்டு அலுவலக விலைப்பட்டியல் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 2,65,000.00/- ஆகும். மேலும் பழமையான மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள கட்டிடத்தை இடிப்பதற்கு முன் இக்கட்டிடத்தில் மறுசுழற்சி முறைக்கு உபயோகப்படுத்தப்படும் பொருட்களான ஜன்னல், இரும்பு கதவு போன்றவற்றிற்கு அளவீடு எடுக்கப்பட்டு தற்போது 2021-22 ஆண்டு விலைப்பட்டியல்படி கணக்கிடப்பட்ட தொகை ரூ.1,14,523.35/- என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மறுசுழற்சிமுறைக்கு உபயோகப்படுத்தப்படும் பொருட்களான ஜன்னல், இரும்பு கதவு ஆகிய பொருட்களின் தற்போதைய நிலையைக் கருத்தில் கொண்டு மிகவும் பழமையான கட்டிடம் என்பதால் 40 சதவிகிதம் மதிப்பிறக்கம் செய்யப்பட்ட தொகை ரூ.68,714/- ஆகும். ஒப்பந்ததாரர் இந்த மறுசுழற்சி முறைக்கு உபயோகப்படுத்தப்படும் பொருட்களுக்கான தொகையை காசோலையாக பெருநகர சென்னை மாநகராட்சியின் கருவூலத்தில் செலுத்தப்படுவதற்கு அனுமதியும் வேண்டப்படுகிறது.

பாரதி சாலையில் அமைந்துள்ள கோட்ட அலுவலகம் மிகவும் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தின் விவரங்கள் கீழ்காணும் வகையில் சமர்ப்பிக்கப்படுகிறது.

t. v ©	கோட்டம் v © - 71	மண்டலம்-6
1.	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	பாரதி சாலையில் அமைந்துள்ள கோட்ட அலுவலகம்
2.	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ?	சுமார் 64 வருடங்களுக்கு முன்பு
3.	அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ?	176.64 சதுர மீட்டர்
4.	அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ?	3000.00 சதுர மீட்டர்
5.	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ?	ரூ.69241.02/-
6.	அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ?	பயன்பாட்டில் உள்ளது
7.	அந்த கட்டிடம் இடித்தற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	பாரதிசாலையில் புதியதாக கோட்ட அலுவலகம் அமைப்பதற்கு
8.	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்?	பழுதடைந்துள்ளது
9.	கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்?	செயற்பொறியாளர்

10.	வார்டுக்குழு தீர்மான எண். மற்றும் நாள்	மண்டலம் - 6 வார்டுக்குழு தீர்மான எண்- பின்னர் பெறப்படும்

எனவே, மண்டலம்-6, பகுதி-16, வார்டு-71, பாரதி சாலையில் அமைந்துள்ள மிகவும் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள கோட்ட அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "23.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.226/2022, நாள்.23.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

சு.து.ந.க.எண்/தே.ந.வா.தி-ந.வீ.கா/B2A/4829/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.08.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:405/2022 **பொருள் எண்.04**

பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - உச்சநீதிமன்ற வழிகாட்டுதல் - நகர்புற வீடற்றோர் காப்பகம் - மண்டலம் 08, கோட்டம் - 103, 107 - பழைய காப்பக கட்டிடங்களை இடித்து புதிய கட்டிடம் கட்ட அனுமதி.

உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு ஒரு காப்பகம் வீதம், 84 இலட்ச மக்கள் தொகை கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சியில் 83 காப்பகம் செயல்படவேண்டும். தற்போது 55 காப்பகங்களும் (13 சிறப்பு காப்பகம் உட்பட) மேலும் கூடுதல் காப்பங்களுக்கான கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பின்படி மற்றும் NULM திட்டத்தின் 8th PSCயின் கூட்ட நிகழ்விலும் புதியதாக 3 காப்பகங்கள் கட்ட அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பின்வரும் இரண்டு இடங்கள் காப்பகம் கட்ட தேர்வு செய்யப்பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு.

வ.எண்	மண்டலம்	கோட்டம்	முகவரி	இடம் / கட்டிடத்தின் தற்போதைய நிலை.
1	8	103	மாநகராட்சி பள்ளிகட்டிடம், கெல்லீஸ், செம்மண்பேட்டை, சென்னை -10	பழுதடைந்த கட்டிடம்.
2	8	107 (பழைய கோட்டம்-106)	கலெக்ட்ரேட் காலனி, 6வது குறுக்கு தெரு, அமைந்தகரை, சென்னை – 29.	பழுதடைந்த, பழைய UPHC கட்டிடம்

மேற்குறிப்பிட்ட இரண்டு கட்டிடங்களும் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. அக்கட்டிடங்களை இடித்து அதே இடத்தில் புதிய கட்டிடம் கட்டவும். 8th PSCயின் கூட்டத்தில் ஒரு புதிய காப்பகம் கட்ட ஒதுக்கப்பட்ட 75 இலட்சம் நிதியை பயன்படுத்தலாம்.

எனவே,

1. பழுதடைந்துள்ள கட்டிடங்களை இடித்து, அதே இடத்தில் வேறு காப்பகம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும்,
2. மேற்கூறிப்பிட்ட இரண்டு காப்பகங்கள் கட்ட NULM திட்டத்தின் 8th PSCயின் கூட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை பயன்படுத்தவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "20.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண். 060/2022, நாள்.20.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

> "23.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.191/2022, நாள்.23.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ம.அ.9.ந.க.எண்.இ1/06924/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.08.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:406/2022 **பொருள் எண்.05**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-9 பகுதி-24, வார்டு - 111 ல் ஆண்டர்சன் சாலையில் உள்ள ஆரம்ப பள்ளி கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, பகுதி -24 வார்டு – 111ல் ஆண்டர்சன் சாலையில் உள்ள ஆரம்ப பள்ளி கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி வேண்டப்படுகிறது. அதன் விவரம் பின்வருமாறு.

வார்டு எண்	111
இடம்	ஆண்டர்சன் சாலையில் உள்ள ஆரம்ப பள்ளி
கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	1990
கட்டிடத்தின் பரப்பளவு	266 ச.மீ
இடத்தின் பரப்பளவு	630 ச.மீ.
கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.39679/-
கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா	பழுதடைந்த நிலையில் உள்ளது
இடித்தபின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது.	இடித்து அகற்றி அவ்விடத்தில் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியில் புதிய இரண்டு அடுக்கு கட்டிடம் கட்டும் பணி.

எனவே, மண்டலம்-9, பகுதி -24 வார்டு – 111ல் ஆண்டர்சன் சாலையில் உள்ள ஆரம்ப பள்ளி பழுதடைந்த கட்டிடத்தை இடித்து அகற்றி அவ்விடத்தில் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியில் புதிய இரண்டு அடுக்கு பள்ளி கட்டிடம் கட்டும் பணி மேற்கொள்ள இருப்பதால், பழுதடைந்த பள்ளிக் கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> *"16.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண். 23/2022, நாள்.16.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."*

> *"23.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.172/2022, நாள்.23.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".*

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ10.ந.கஎண்.அ1/11896/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:407/2022 **பொருள் எண்.06**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-10, வார்டு 141ல் சி.ஐ.டி நகர் 4வது பிரதான சாலையில் உள்ள சென்னை மேல்நிலைப்பள்ளி பி பிளாக்கில் மிகவும் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

மண்டலம்-10 - வார்டு 141ல் சி.ஐ.டி நகர் 4வது பிரதான சாலையில் உள்ள சென்னை மேல்நிலைப்பள்ளி பி பிளாக்கில் மிகவும் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ளது. இக் கட்டிடத்தை இடிப்பதற்கு 11.07.2022 அன்று நடைபெற்ற வார்டு குழுவில் தீர்மான எண் 65/2022 ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட சென்னை மேல்நிலைப்பள்ளி பி பிளாக் கட்டிடத்தை இடித்து, அவ்விடத்தில் மீண்டும் புதியதாக பள்ளி கட்டிடம் கட்டப்பட உள்ளது.

இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம்

வார்டு எண்	141
கட்டிடம் அமைந்துள்ள இடம்	சி.ஐ.டி.நகர் 4வது பிரதான சாலை உள்ள சென்னை மேல்நிலைப்பள்ளி பி பிளாக் கட்டிடம்.
கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	1982
கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக	தரைதளம் =129.10ச.மீ முதல் தளம் =129.10ச.மீ இரண்டாம் தளம் =129.10ச.மீ
கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு	3473.81 ச.மீ
கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.223678.60
கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா?	இல்லை
கட்டிடம் இடித்தபின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது.	வகுப்பறைகள் கொண்ட பள்ளிக் கட்டிடம் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் கட்டிடமாக பயன்படுத்த உள்ளது.
வார்டு குழு தீர்மான எண் மற்றும் நாள்.	தீர்மான எண். 65/2022 நாள். 11.07.2022

எனவே, மண்டலம்-10, பகுதி-30, வார்டு-141ல் சி.ஐ.டி நகர் 4வது பிரதான சாலையில் உள்ள சென்னை மேல்நிலைப்பள்ளி பி பிளாக்கில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> "16.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண். 31/2022, நாள்.16.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

> "23.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.176/2022, நாள்.23.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ10.ந.கஎண்.அ1/11897/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:408/2022 **பொருள் எண்.07**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-10, வார்டு 141ல் கண்ணம்மாபேட்டை, நியூபோக் சாலையில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளியில் மிகவும் பழுதடைந்த உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள சத்துணவு கூட கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

மண்டலம்-10, வார்டு-141ல் கண்ணம்மாபேட்டை, நியூபோக் சாலையில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளியில் உள்ள சத்துணவு கூட கட்டிடம் மிகவும் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ளது. இக்கட்டிடத்தை இடிப்பதற்கு 09.05.2022 அன்று நடைபெற்ற வார்டு குழுவில் தீர்மான எண்.24 ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட மிகவும் பழுதடைந்த உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளி சத்துணவு கூடத்தை இடித்து, அவ்விடத்தில் மீண்டும் புதியதாக சத்துணவு கூட கட்டிடம் கட்டப்பட உள்ளது.

இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம்

வார்டு எண்	141
கட்டிடம் அமைந்துள்ள இடம்	நியூபோக் சாலை சென்னை உயர்நிலைப்பள்ளி சத்துணவு கூட கட்டிடம்
கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	1957
கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக	தரைதளம் = 45.93ச.மீ
கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு	1826.46 ச.மீ
கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ. 120000.27
கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா?	இல்லை
கட்டிடம் இடித்தபின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது.	புதிய சத்துணவு கூட கட்டிடமாக பயன்படுத்த உள்ளது
வார்டு குழு தீர்மான எண் மற்றும் நாள்.	தீர்மான எண். 24/2022 நாள். 09.05.2022

எனவே, மண்டலம்-10, பகுதி-30, வார்டு-141ல் நியூபோக் சாலையில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளியில் உள்ள சத்துணவு கூட கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> "16.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண். 32/2022, நாள்.16.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

> "23.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.177/2022, நாள்.23.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.11ந.க.எண்.இ1/6311 /2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:409/2022 **பொருள் எண்.08**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 11, பகுதி - 33, கோட்டம் - 148, கோவரதன் நகர் வாஞ்சிநாதன் தெருவில் மழைநீர் உட்புகும் நிலையில் உள்ள தாழ்வான பழைய கட்டிடத்தில் இயங்கி வந்த அங்கன்வாடி மைய கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி

மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு காரம்பாக்கம் க.கணபதி அவர்களின் 23.11.2021 நாளிட்ட கடிதத்தில், மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அங்கன்வாடி மையங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்து தர வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு கடிதம் அளித்துள்ளார்

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11 பகுதி-33, கோ -148 – கோவரதன் நகர் வாஞ்சிநாதன் தெருவில் மழைநீர் உட்புகும் நிலையில் உள்ள தாழ்வான பழைய கட்டிடத்தில் இயங்கி வந்த அங்கன்வாடி மைய கட்டிடத்தை இடித்து விட்டு புதிய நவீன அங்கன்வாடிமைய கட்டிடம் அமைக்கபட உள்ளதால் பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

வார்டு எண்	148
இடம்	கோவரதன் நகர் வாஞ்சிநாதன் தெரு
கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	2003-2004
கட்டிடத்தின் பரப்பளவு	32.61 ச.மீ
இடத்தின் பரப்பளவு	82.28 ச.மீ
கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.99443.47
கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா	ஆம்
இடித்தபின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது.	நவீன அங்கன்வாடி மையம்

மேற்கண்ட பழைய அங்கன்வாடி மைய கட்டிடம் பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெறப்பட்டவுன் மின்னணு ஒப்பந்தம் கோரப்பட்டு உரிய ஒப்பந்ததாரர் மூலம் இடித்து அகற்றப்படும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே மண்டலம்-11, பகுதி-33, கோட்டம்-148 கோவரதன் நகர் வாஞ்சிநாதன் தெருவில் மழைநீர் உட்புகும் நிலையில் உள்ள தாழ்வான பழைய அங்கன்வாடி மையம் கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

> "23.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.179/2022, நாள்.23.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.11.ந.க.எண்.இ1/6310/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 10.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:410/2022 **பொருள் எண்.09**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 11, கோட்டம் - 148, மீனாட்சி அம்மன் நகர், சன்னதி தெருவில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பழைய கட்டிடத்தில் இயங்கி வந்த நியாயவிலை கடை கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11 பகுதி-33, கோ -148 – மீனாட்சி அம்மன் நகர், சன்னதி தெருவில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பழைய கட்டிடத்தில் இயங்கி வந்த நியாயவிலை கடை கட்டிடத்தை இடித்து விட்டு புதிய பல்நோக்கு கூடம் அமைக்கபட உள்ளதால் பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

வார்டு எண்	148
இடம்	மீனாட்சி அம்மன் நகர், சன்னதி தெரு
கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	1985-1986
கட்டிடத்தின் பரப்பளவு	64.50 ச மீ
இடத்தின் பரப்பளவு	114.24 ச மீ
கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.66867.25
கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா	ஆம்
இடித்தபின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது.	புதிய பல்நோக்கு கூட கட்டிடம்

மேற்கண்ட மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பழைய நியாயவிலை கடை கட்டிடம் பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெறப்பட்டவுன் மின்னணு ஒப்பந்தம் கோரப்பட்டு உரிய ஒப்பந்ததாரர் மூலம் இடித்து அகற்றப்படும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, மண்டலம்-11, பகுதி-33, கோட்டம்-148 மீனாட்சி அம்மன் நகர், சன்னதி தெருவில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பழைய கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "23.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.180/2022, நாள்.23.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ம.அ.11.ந.க.எண். 6453/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 01.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:411/2022 **பொருள் எண்.10**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 11, வார்டு -150, ராஜேஸ்வரி நகர் 2வது தெருவில் உள்ள பழைய சிதிலமடைந்த பயன்பாடற்ற பழைய பஞ்சாயத்து கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 11, பகுதி - 34, வார்டு - 150யில் பழைய சிதிலமடைந்த பயன்பாடற்ற கீழ்கண்ட பழைய பஞ்சாயத்து கட்டிடத்தை இடித்து அகற்ற பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

வார்டு எண்	150
இடம்	ராஜேஸ்வரி நகர் 2 வது தெரு
கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	1979
கட்டிடத்தின் பரப்பளவு	34.1 ச.மீ
இடத்தின் பரப்பளவு	1288 ச.மீ
கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	49,237.31
கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா	இல்லை
இடித்தபின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது.	விளையாட்டு திடல் விரிவாக்க பயனுக்காக

மேற்கண்ட மண்டலம் - 11, பகுதி - 34, வார்டு - 150யில் ராஜேஸ்வரி நகர் 2வது தெருவில் உள்ள பழைய பஞ்சாயத்து கட்டிடம் மிகவும் சிதிலமடைந்து பயன்பாடற்ற நிலையில் உள்ளதால் இக்கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.167/2022, நாள்.23.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.11.ந.க.எண்.6452/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 02.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:412/2022 **பொருள் எண்.11**

பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம் - 11, வார்டு -150, துண்டலம் திருவீதி அம்மன் கோயில் தெருவில் உள்ள பழைய சிதிலமடைந்த பயன்பாடற்ற பல்நோக்கு கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 11, பகுதி - 34, வார்டு - 150ல் பழைய சிதிலமடைந்த பயன்பாடற்ற கீழ்கண்ட பல்நோக்கு கட்டிடத்தை இடித்து அகற்ற பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

வார்டு எண்	150
இடம்	துண்டலம் திருவீதி அம்மன் கோயில் தெரு பல்நோக்கு கட்டிடம்
கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	1998
கட்டிடத்தின் பரப்பளவு	44 ச.மீ
இடத்தின் பரப்பளவு	245 ச.மீ
கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	53,102.55
கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா	இல்லை
இடித்தபின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது.	பல்நோக்கு கட்டிடம்

எனவே, மண்டலம் - 11, பகுதி - 34, வார்டு - 150ல் துண்டலம் திருவீதி அம்மன் கோயில் தெரு பல்நோக்கு கட்டிடம் மிகவும் சிதிலமடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ளதால் இக்கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது

"23.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.168/2022, நாள்.23.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.12.ந.க.எண்.இ1/5799/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:413/2022 **பொருள் எண்.12**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 12, வார்டு -159 காமராஜர் தெருவில் அமைந்துள்ள பழைய பேரூராட்சி கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-12ல் வார்டு-159ற்குட்பட்ட பகுதிகளில் மாமன்ற உறுப்பினர் வார்டு-159 அவர்கள் 15.07.2022 அன்று மண்டல அதிகாரிகளுடன் கள ஆய்வு மேற்கொண்டதில் காமராஜர் தெருவில் உள்ள பழுதடைந்த பழைய பேரூராட்சி கட்டிடத்தை இடித்து அகற்ற அறிவுறுத்தப்பட்டதாலும், மாமன்ற உறுப்பினரின் 18.04.2022 நாளிட்ட கோரிக்கையின் அடிப்படையிலும் ரூ.1,06,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 10.08.2022 அன்று நடைபெற்ற 12வதுமண்டல வார்டு குழுவில் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் இடித்து அகற்றப்பட வேண்டிய பழைய பேரூராட்சி கட்டிடத்தின் விவரங்கள் கீழ்க்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

வார்டு எண்.	159
இடம்	காமராஜர் தெரு
கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	1962 (60 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது)
கட்டிடத்தின் பரப்பளவு	100.3ச.மீ
கட்டிடம்அமைந்துள்ளஇடத்தின்மொத்தபரப்பளவு	348.79. ச.மீ
தற்போதைய கட்டிடத்தின்புத்தக மதிப்பு	ரூ.118172.89
தற்போது கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா	பயன்பாட்டில் உள்ளது
கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது	புதிய Health and Wellness Center கட்டிடம் கட்டப்பட உள்ளது.
கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	மிகவும் பழுதடைந்த 60 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட பேரூராட்சி கட்டிடம்
வார்டு குழு தீர்மான எண்.	தீர்மானம் எண்.164, நாள் 10.08.2022

எனவே, மண்டலம்-12, வார்டு-159 காமராஜர் தெருவில் அமைந்துள்ள பழைய பேரூராட்சி கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "23.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.227/2022, நாள்.23.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ம.அ.12.ந.க.எண்.இ1/2564/3/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:414/2022 **பொருள் எண்.13**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-12, வார்டு-166, பி.வி.நகர் 3வது பிரதான சாலையில் அமைந்துள்ள பழைய பொதுக்கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்றியதற்கு பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-12ல் உள்ள 10 இடங்களில் பொதுக்கழிப்பிடம் சீரமைப்பு மற்றும் கட்டுமான பணி மேற்கொள்ள ரூ.96,06,000/-ற்கு முதன்மை செயலர் / ஆணையர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து வார்டு-166, பி.வி.நகர் 3வது பிரதான சாலையில் அமைந்துள்ள பழைய பொதுக் கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்றி விட்டு அவ்விடத்தில் மீண்டும் புதியதாக பொதுக்கழிப்பிடம் அமைக்கும் பணிக்கு ரூ.25,86,000/-க்கு மதிப்பீடு தயார் செய்து 08.04.2022 அன்று மின்னணு ஒப்பம் பெறப்பட்டு குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு 22.04.2022 அன்று பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது உள்ளாட்சி தேர்தல் நடைபெற்று மாண்புமிகு மேயர் மற்றும் நிலைக்குழு தலைவர்கள் மற்றும் மண்டல வார்டு குழு தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதால் மேற்படி பொதுக்கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்றியதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெற வேண்டியது அவசியமாகிறது.

12வது மண்டல வார்டு குழு தீர்மான எண். 03ன்படி, 25.04.2022 நாளிட்ட கூட்டத்தில் வார்டு-166, பி.வி.நகர் 3வது பிரதான சாலையில் அமைந்துள்ள பழைய பொதுக் கழிப்பிட கட்டிடத்தை இடித்து அவ்விடத்தில் மீண்டும் புதியதாக பொதுக்கழிப்பிடம் அமைக்கும் பணிக்கு பின்னேற்பு அனுமதி பெற பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இடித்து அகற்றப்பட்ட பழைய பொதுக்கழிப்பிட கட்டிடத்தின் விவரங்கள் கீழ்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

வார்டு எண்.	166
இடம்	பி.வி. நகர் 3வது பிரதான சாலை
கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	2003 (19 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது)
கட்டிடத்தின் பரப்பளவு	78.34 ச.மீ
கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் மொத்த பரப்பளவு	280.60 ச.மீ
தற்போதைய கட்டிடத்தின் புத்தக மதிப்பு	ரூ.5.25 லட்சம்
தற்போது கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா?	பயன்பாட்டில் இல்லை
கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது	புதிய பொதுக்கழிப்பிட கட்டிடம் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட உள்ளது.
கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	பொது மக்கள் பயன்பாட்டில் இல்லாத பழைய கட்டிடம்
வார்டு குழு தீர்மான எண்.	தீர்மானம் எண்.3, நாள். 12.04.2022

எனவே, மண்டலம்-12, வார்டு-166, பி.வி.நகர், 3வது பிரதான சாலையில் அமைந்துள்ள பழைய பொதுக்கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்றியமைக்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"20.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு(பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண். 067/2022, நாள்.20.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"
>
> *"23.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.*193/2022*, நாள்.*23.09.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.13.ந.க.எண்.சி2/3402/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.08.2022 நாளிட் குறிப்பு

தீர்மான எண்:415/2022 **பொருள் எண்.14**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-13, வார்டு-169, ஜோதியம்மாள் நகரில் அமைந்துள்ள பழுதடைந்த பொதுக்கழிப்பிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகாரட்சி, மண்டலம்-13, பகுதி-40, வார்டு-169ல் ஜோதியம்மாள் நகரில் அமைந்துள்ள பொது கழிப்பிடம் பழுதடைந்து இடியும் தருவாயில் உள்ளது. சமூக விரோத செயல்கள் இரவு நேரங்களில் நடைபெறுகிறது. மேலும், பொது மக்கள் பயன்பாட்டிற்கு புதிய பொது கழிப்பிடம் அருகாமையில் உள்ளதால் இப்பழுதடைந்த பொது கழிப்பிடத்தை இடித்து அவ்விடத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் புதிய கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டு, மண்டலம்-13 வார்டு குழு தீர்மான எண். 69/2022, 08.06.2022 நாளிட்ட கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டு ஏற்று கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு(பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று பழுதடைந்த பொது கழிப்பிடத்தை இடிக்க வேண்டிய அவசியமாகிறது.

அதன்படி விவரம் பின்வருமாறு:

வார்டு எண்	169
இடம்	ஜோதியம்மாள் நகர்
கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	1997-98
கட்டிடத்தின் பரப்பளவு	30.96 Sq.mt
இடத்தின் பரப்பளவு	41.40 Sq.mt
கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.49262.43
கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா	இல்லை
இடித்தபின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது.	சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் புதிய நியாயவிலை கடை கட்டிடம் கட்டப்பட உள்ளது.

எனவே, மண்டலம்-13, பகுதி-40, வார்டு-169ல் ஜோதியம்மாள் நகரில் அமைந்துள்ள பழுதடைந்த பொதுக்கழிப்பிடம் உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளதால், அக்கடிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு(பொது சுகாதாரம்), நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "20.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண். 061/2022, நாள்.20.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"
>
> "23.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.192/2022, நாள்.23.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.13.ந.க.எண்.சி1/3521/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.08.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:416/2022 **பொருள் எண்.15**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-13, பகுதி-39, வார்டு-178 - 100 அடி தரமணி இணைப்பு சாலை மற்றும் கோதாவரி தெரு சந்திப்பில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தற்பொழுது இயங்கி வரும் பழைய பழுதடைந்த அங்கன்வாடி கட்டிடத்தை (மைய எண்: 33603100426 - 33603100427) இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, பகுதி-39, வார்டு-178 - 100 அடி தரமணி இணைப்பு சாலை மற்றும் கோதாவரி தெரு சந்திப்பில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தற்பொழுது இயங்கி வரும் பழைய பழுதடைந்த அங்கன்வாடி கட்டிடத்தை (மைய எண்:33603100426-33603100427) இடித்து, அவ்விடத்தில் 2022-23ம் ஆண்டு வேளச்சேரி சட்ட மன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் புதியதாக அங்கன்வாடி மைய கட்டிடம் கட்டுவதற்கு 13வது மண்டல வார்டு குழு தீர்மானம் எண்.15, நாள்-09.05.2022-ன்படி பரிந்துரை பெறப்பட்டுள்ளது.

கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள அங்கன்வாடி கட்டிடத்தை பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெறப்பட்டவுடன் உரிய ஒப்பந்ததாரர் மூலம் இடித்து அகற்றப்படும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

அதன் விவரம் பின்வருமாறு:-

வார்டு எண்	178
இடம்	100 அடி தரமணி இணைப்பு சாலை மற்றும் கோதாவரி தெரு சந்திப்பு
கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	1998
கட்டிடத்தின் பரப்பளவு	தரை தளம் 105ச.மீ.
இடத்தின் பரப்பளவு	396 ச.மீ.
கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ. 65000.00
கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா	இல்லை
இடித்தபின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது.	2022-23ம் ஆண்டு வேளச்சேரி சட்ட மன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் புதியதாக அங்கன் வாடி மைய கட்டிடம் கட்டப்பட உள்ளது.

எனவே, மண்டலம்-13, பகுதி-39, வார்டு-178 100 அடி தரமணி இணைப்பு சாலை மற்றும் கோதாவரி தெரு சந்திப்பில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தற்பொழுது இயங்கி வரும் பழைய பழுதடைந்த அங்கன்வாடி கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "16.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண். 27/2022, நாள்.16.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."
>
> "23.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.174/2022, நாள்.23.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ம.அ.14.ந.க.எண்.இ1/0740/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *26.08.2022* நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:417/2022 **பொருள் எண்.16**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - *14*, வார்டு 182, 183 மற்றும் 188ல் உள்ள மிகவும் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள அங்கன்வாடி கட்டிடம் மற்றும் பொது கழிப்பறை கட்டிடங்களை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 14 , வார்டு 182, 183 மற்றும் 188ல் உள்ள மிகவும் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கட்டிடங்களை இடித்து அகற்றி புதியதாக கட்டிடம் கட்ட உள்ளது.

கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கட்டிடங்களை இடித்து அகற்ற நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெறப்பட்டவுடன் ஒப்பந்ததாரர்கள் மூலம் இடித்து அகற்றிய பின்னர் புதியதாக இவ்விடத்தில் கட்டிங்கள் கட்டப்படும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது

அதன் விவரம் பின்வருமாறு :-

வ. எண்	வார்டு எண்	இடிக்கப்பட உள்ள கட்டிடத்தின் விவரம்	கட்டிடத் தின் பரப்பளவு	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	கட்டிடம் பயன்பாட்டி ல் உள்ளதா	கட்டிடம் இடத்த பின் எந்த மாதிரி பயன் படுத்தப்பட உள்ளது
1	*183*	கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள அங்கன்வாடி	38.10 மீ	*72000.00*	ஆம்	மீண்டும் புதியதாக கட்டிடம் கட்டப்பட உள்ளது
2	*182*	அன்னை சத்யா நகர் 5வது குறுக்கு தெருவில் உள்ள பொது கழிப்பிடம்	34.44 மீ	*44212.80*	இல்லை	சாலையோர பூங்கா அமைப்பதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது
3	*188*	மயிலை பாலாஜி நகர் 1வது பிரதான சாலையில் உள்ள பொது கழிப்பிடம்	40.70 ச.மீ	*102514.00*	ஆம்	மீண்டும் புதியதாக கட்டிடம் கட்டப்பட உள்ளது
4	*188*	மயிலை பாலாஜி நகர் 1வது பகுதி 2வது பிரதான சாலையில் உள்ள பொது கழிப்பிடம்	*40.70*	*102514.00*	ஆம்	மீண்டும் புதியதாக கட்டிடம் கட்டப்பட உள்ளது
5	*188*	மயிலை பாலாஜி நகர் 2வது பகுதி 1வது பிரதான சாலையில் உள்ள பொது கழிப்பிடம்	*40.70*	*102514.00*	ஆம்	மீண்டும் புதியதாக கட்டிடம் கட்டப்பட உள்ளது
6	*188*	மயிலை பாலாஜி நகர் 2வது பகுதி 2வது பிரதான சாலையில் உள்ள பொது கழிப்பிடம்	*40.70*	*102514.00*	ஆம்	மீண்டும் புதியதாக கட்டிடம் கட்டப்பட உள்ளது

7	188	மயிலை பாலாஜி நகர் 2வது பகுதி 2வது குறுக்கு சாலையில் உள்ள பொது கழிப்பிடம்	40.70	102514.00	ஆம்	மீண்டும் புதியதாக கட்டிடம் கட்டப்பட உள்ளது
8	188	மயிலை பாலாஜி நகர் 2வது பகுதி 3வது பிரதான சாலையில் உள்ள பொது கழிப்பிடம்	40.70	102514.00	ஆம்	மீண்டும் புதியதாக கட்டிடம் கட்டப்பட உள்ளது
9	188	மயிலை பாலாஜி நகர் 3வது பகுதி 1வது பிரதான சாலையில் உள்ள பொது கழிப்பிடம்	40.70	102514.00	ஆம்	மீண்டும் புதியதாக கட்டிடம் கட்டப்பட உள்ளது
10	188	மயிலை பாலாஜி நகர் 3வது பகுதி 2வது பிரதான சாலையில் உள்ள பொது கழிப்பிடம்	40.70	102514.00	ஆம்	மீண்டும் புதியதாக கட்டிடம் கட்டப்பட உள்ளது
11	188	மயிலை பாலாஜி நகர் 4வது பகுதி 1வது பிரதான சாலையில் உள்ள பொது கழிப்பிடம்	40.70	102514.00	ஆம்	மீண்டும் புதியதாக கட்டிடம் கட்டப்பட உள்ளது
12	188	மயிலை பாலாஜி நகர் 4வது பகுதி 2வது பிரதான சாலையில் உள்ள பொது கழிப்பிடம்	40.70	102514.00	ஆம்	மீண்டும் புதியதாக கட்டிடம் கட்டப்பட உள்ளது

எனவே, மண்டலம் - 14 , வார்டு 182, 183 மற்றும் 188ல் உள்ள மிகவும் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள அங்கவாடி கட்டிடம் மற்றும் பொது கழிப்பறை கட்டிடங்களை இடித்து அகற்ற, நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> *"16.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண். *24/2022*, நாள்.*16.09.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."
>
> *"23.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.*173/2022*, நாள்.*23.09.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

பொ.து.ந.க.எண்.ஈ2/36595/2021

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:418/2022 **பொருள் எண்.17**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - டாக்டர்.மகிமா அலிசியா, மருத்துவ அலுவலர், மண்டலம்-7 சுகாதாரத் துறை (மாற்றுப்பணி அடிப்படையில் மண்டலம்-8 இல் பணிபுரிகிறார்) - துறைத் தேர்வில் தேர்ச்சி பெறாமல் வழங்கப்பட்ட வருடாந்திர ஊதிய உயர்வுகளை மாற்றியமைத்து திருத்தி ஊதியம் நிர்ணயம் செய்து தனியரின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டது - தனியருக்கு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க மன்றத்தின் அனுமதி

மண்டல அலுவலர், மண்டலம்-8 அவர்களின் 21.11.2019 நாளிட்ட கடிதத்தில், டாக்டர். எம்.மகிமா அலிசியா, மருத்துவ அலுவலர், சுகாதாரத் துறை, மண்டலம் - 8 (ஊதியம் பெறுமிடம் மண்டலம்-7) அவர்களுக்கு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கக் கோரி சுகாதாரத் துறையிலிருந்து கோப்பு பெறப்பட்டுள்ளது.

டாக்டர்.எம்.மகிமா அலிசியா, மருத்துவ அலுவலராக 28.02.2014 அன்று முதல் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்துள்ளார். அன்னாரின் பணிப்பதிவேடு ஆய்வு செய்யப்பட்டது.

S. No	Name	Designation	DOA	Date of Regularization	Date of Probation	Year of Increments Passed	Amount of Increment given	Which section under TN Act	Is Increments given without Probation Declaration (Yes/ No)	Recovery Amount Details	Any DP Action is pending against her	LLP	Details of Departmental Examination passed & Date
1	Dr. M. Mahima Alicia	Medical Officer, Zone- 7	28.02.2014, F.N	-	-	01.01.2016 to 01.01.2018	Rs.84,146/-	TN Govt. Servants (Conditions of Service) Act, 2016, Section 30	Yes	Rs.84,146/- (on 05.10.2021)	No	No	Dept. Test in the TN Medical Code, Dt:28.05.2015 & The Account Test for Executive Officer, Dt:30.05.2018

பொதுத்துறையின் 13.02.2020 நாளிட்ட கடிதத்தில், மேற்படி மருத்துவ அலுவலர் துறைத் தேர்வுகளை தகுதிகாண் பருவ காலத்திற்குள் முடிக்காமல் 30.05.2018ல் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றுள்ளதால் தனியருக்கு தேர்வு எழுதிய நாள் வரை வழங்கப்பட்டுள்ள ஊதிய உயர்வுகளுக்கான (கருத்தியலான காலம்) பணப்பயன்களை முழுமையாக கணக்கீடு செய்து உரிய கணக்கு அலுவலர் அவர்களின் கருத்துரையுடன், அத்தொகையினை தனியரிடமிருந்து பெற்று (except 1st increment) பெருநகர சென்னை மாநகராட்சியின் கருவூலத்தில் செலுத்தி தேர்வு எழுதிய நாளான 30.05.2018 அன்று தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்து கோப்பினை மீள சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் 28.09.2021 நாளிட்ட செயல்முறை ஆணையில், டாக்டர்.எம். மகிமா அலிசியா, மருத்துவ அலுவலர் அவர்கள் துறை தேர்வில் தேர்ச்சி பெறாத காலத்திற்கு (31.05.2021 to 30.09.2021) வழங்கப்பட்டுள்ள ஊதிய உயர்வு கணக்கீடு செய்து மிகை ஊதியம் ரூ.84,146/- தனியரின் 31.05.2021 முதல் 30.09.2021 வரையிலான மாத ஊதியத்தில் பிடித்தம் செய்திட ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், அதற்கான பதிவுகளை (BPV No.32622/10/2021-22, Date.08.10.2021) பணிப்பதிவேட்டில் (பக்கம் எண்.19) பதியப்பட்டுள்ளது.

06.12.2021 நாளிட்ட தனியரின் கடிதத்தில், துறை தேர்வில் தேர்ச்சி பெறாததால், மிகையாக வழங்கப்பட்ட ஊதிய உயர்வு தொகையினை பிடித்தம் செய்யப்பட்டது என்றும் எனவே, தனக்கு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்து ஆணை வழங்குமாறும் கோரியுள்ளார்.

மண்டல அலுவலர், மண்டலம்-7 அவர்களின் 05.01.2022 நாளிட்ட குறிப்பில், டாக்டர்.எம். மகிமா அலிசியா, மருத்துவ அலுவலராக *28.02.2014* அன்று பணிநியமனம் செய்யப்பட்டு பணியில் சேர்ந்தார் என்றும், தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை/ விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்றும், எனவே, தனியருக்கு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க ஆணை பெற்று தருமாறு கோரி கோப்பு பெறப்பட்டது.

மேலும், ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ-*3/49369/2012*, நாள்.*24.11.2012*ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு.*2*ன் கீழ் வரும் பதவிகளுக்கு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் நீட்டிப்பு செய்தவராக அறிவித்து ஆணை வழங்க பணி நியமன அதிகாரி மன்றம் என்பதால் நியமனக்குழு மூலமாக மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவேண்டும்.

இதன் தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்ததில், தனியருக்கு பின்வருமாறு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட வேண்டும்.

வ. எண்	**மருத்துவ அலுவலரின் பெயர்**	**பணியில் சேர்ந்த நாள்**	**முறையாக பணிவரன் முறைப்படுத்தப்படுத்த வேண்டிய நாள்**	**தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட வேண்டிய நாள்.**
1	டாக்டர். எம். மகிமா அலிசியா	*28.02.2014* மு.ப.	*28.02.2014* மு.ப.	*31.05.2018* மு.ப.

ஆகவே, மேற்கண்ட மருத்துவ அலுவலருக்கு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்க, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

பொ.து.ந.க.எண்.ஈ2/28624/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:419/2022 **பொருள் எண்.18**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மண்டலம்-9 - திருமதி.N.தேன்மொழி, முதுநிலை பூச்சியியலர் அவர்களுக்கு இப்பதவியில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்க மன்றத்தின் அனுமதி.

சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை, சு.து,(ம).ந.க.எண்.எம்1/2759/2007, நாள்.21.11.2008ன்படி, திருமதி.N.தேன்மொழி அவர்கள் பூச்சியியல் உதவியாளராக பணி நியமனம் செய்து, 17.12.2008 அன்று முற்பகல் மண்டலம்-6ல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து, பின்பு 02.02.2018 நாளிட்ட ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, முதுநிலை பூச்சியலாளராக பதவி உயர்வு பெற்று மண்டலம்-9ல் 19.12.2008 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

மண்டல அலுவலர், மண்டலம்-9 அவர்களின் 02.08.2022 நாளிட்ட கடிதத்தில், திருமதி.N.தேன்மொழி, முதுநிலை பூச்சியியலர் பதவியில் பணிவரன்முறை செய்திடும் பொருட்டு, பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்ததில் அன்னார் இதுநாள்வரை சம்பளமில்லா விடுப்பு ஏதும் துய்க்கவில்லை எனவும், ஒழுங்கு நடவடிக்கை நிலுவை ஏதும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது, எனவே, தனியர் முதுநிலை பூச்சியியலர் பதவியில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவித்து ஆணை பெற்று தருமாறு கோரி கோப்பு மற்றும் பணிப்பதிவேடு பெறப்பட்டுள்ளது.

திருமதி. N. தேன்மொழி, முதுநிலை பூச்சியியலர் அவர்களின் பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்ததில், தனியரின் மீது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் ஏதும் இல்லை என தெரிவித்து, தனியரின் பணிவிவரங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும், தனியர் முதுநிலை பூச்சியியலர் பதவிக்கான கல்வித்தகுதியினை பூர்த்தி செய்துள்ளார்.

வ. எண்	அலுவலரின் பெயர்	பூச்சியியல் உதவியாளராக பணியில் சேர்ந்த நாள்	பணிவரன் முறைப் படுத்திய நாள்	தகுதிகாண் பருவம் முடித்த வராக அறிவிக்கப்பட்ட நாள்	முதுநிலை பூச்சியி யலராக பணியில் சேர்ந்த நாள்	விடுப்பு களின் விவரம்	பணிவரன் முறைப் படுத்தப்பட வேண்டிய நாள்	தகுதி காண் பருவம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நாள்
1	திருமதி. N. தேன்மொழி	17.12.2008	17.12.2008	17.12.2010	19.12.2018	-	19.12.2018	19.12.2020

ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ3/49369/2012, நாள்.24.11.2012 மற்றும் அரசாணை எண்.181, நாள்.06.10.2009ன்படியும், பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு2ன்கீழ் வரும் பதவிகளுக்கு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் நீட்டிப்பு செய்தவராக அறிவித்து ஆணை வழங்க பணிநியமன அதிகாரி மன்றம் என்பதால், நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும்.

ஆகவே, திருமதி.N.தேன்மொழி அவர்களுக்கு முதுநிலை பூச்சியியலாளர் பதவி வகுப்பு-II ன் கீழ் வருவதால், இப்பதவியில் கீழ்கண்டவாறு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவித்திட நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்	அலுவலரின் பெயர்	முதுநிலை பூச்சியியலராக பணியில் சேர்ந்த நாள்	பணிவரன்முறைப் படுத்தப்பட வேண்டிய நாள்	தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நாள்
1	திருமதி. N. தேன்மொழி	19.12.2018	19.12.2018	19.12.2020

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

பொ.து.ந.க.எண்.ஈ1/10415/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:420/2022 **பொருள் எண்.19**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் - 01.02.2022 ஐ அறுதி நாளாகக் கொண்டு 2022-2023 தேர்ந்த பெயர் பட்டியல் தயாரித்து - கண்காணிப்பு பொறியாளர்(மின்சாரம்) பதவி உயர்வுக்கு அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியில் கண்காணிப்பு பொறியாளர்(மின்சாரம்) பதவி வகுப்பு-1Aன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பதவி உயர்வு அளித்து பணியமர்வு ஆணை வழங்கும் அதிகாரம் அரசின் வசம் உள்ளது. சென்னை மாநகராட்சியில் பொறியியல் பணிவிதிகள் 1969ன்படி, இப்பதவிக்கான அறுதி நாள் ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி மாதம் முதல் தேதி ஆகும். இப்பதவிக்கான ஊட்டப்பதவி கோட்ட மின் பொறியாளர் பதவியாகும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் கண்காணிப்பு பொறியாளர் (மின்சாரம்) பதவி உயர்வுக்கு நிர்ணயிக்கப்பட்ட சென்னை மாநகராட்சி பொறியியல் பணிவிதிகள் 1969ன்படி கல்வித்தகுதி மற்றும் நியமன முறைகள் பின்வருமாறு.

அட்டவணை-I

Name of the Post	Method of appoinment	By Appointment Qualification (Existing)
(1)	(2)	(3)
Superintending Engineer (Electrical) (Scale of Pay Rs.37400-67000+GP 8700) Class-1A Rs, 1,23,100-250400/- (level 28- 7pay commission)	By promotion or by appointment on deputation.	1) Degree in Electrical Engineering of any University or Institution recognized by the University Grants Commission for purposes of its grant; and 2) A minimum of seven years approved experience in Electrical Engineering of which not less than four years shall have been in the construction operation and Maintenance of high tension sub-stations and underground distribution systems and not less than that two years experience in responsible and administrative charge.

2022-2023 ஆம் பட்டியல் ஆண்டிற்கு கண்காணிப்பு பொறியாளர் (மின்சாரம்) பதவிக்கு ஏற்படும் காலிப்பணிடங்களுக்கான விவரம் அட்டவணை -II ல் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

அட்டவணை - II

1	பதவி உயர்வுக்கான பதவியின் பெயர்	கண்காணிப்பு பொறியாளர் (மின்சாரம்).
2	மைய நாள்	01.02.2022
3	ஊதிய விகிதம்	ரூ. 37400-67000 + 8700 தர ஊதியம் ரூ.1,23,100-250400/-level 28-7வது ஊதியக்குழுவின்படி)

4	காலிப்பணியிட மதிப்பீடு (Estimate of vacancies)	1) அனுமதிக்கப்பட்ட பணியிடம் - 2 2) நிரந்தரப் பணியிடம் - 2 3) தற்காலிகப் பணியிடம் - 0 (a) தற்போது பணிபுரிபவர்கள் - 1 4) பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் **(திரு.ஆர்.ஜெயராமன் ஓய்வு பெற்ற நாள். 30.06.2022)** - 1 5) மைய நாளன்று உள்ள காலிப்பணியிடம் - 0 6) பட்டியல் ஆண்டில் பதவி உயர்வினால் ஏற்படும் காலிப்பணியிடம் - 0 7) எதிர்பாராமல் ஏற்படும் காலிப்பணியிடம் (அரசாணை எண்.368, P &R துறை, நாள். 18.10.1993ல் Hence, for a Single vacancy estimated one number should be added to the estimate in order to meet unexpected contingencies and a panel constisting of two names should be drawn - 1 **மொத்த காலிப்பணியிடம் - 02**
5	வளர் நிலை பதவியின் பெயர் மற்றும் தகுதிகள் (Feeder Category Details)	1) Degree in Electrical Engineering of any University or Institution recognized by the University Grants Commission for purposes of its grant; and 2) A minimum of seven years approved experience in Electrical Engineering of which not less than four years shall have been in the construction operation and Maintenance of high tension sub-stations and underground distribution systems and not less than that two years experience in responsible and administrative charge
6	கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா ?	2021-2022 ஆம் ஆண்டிற்கான கண்காணிப்பு பொறியாளர்(மின்சாரம்) பதவிக்கு 2 நபர்களை கொண்ட தெரிவுப்பட்டியலில் இடம் பெற்ற திரு. எம்.பரந்தாமன் மண்டல அலுவலருக்கும் மற்றும் திருமதி.ஆர்.விஜயலட்சுமி கோட்ட மின் பொறியாளருக்கும் கண்காணிப்பு பொறியாளராக (மின்சாரம்) பதவி உயர்வு வழங்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் கண்காணிப்பு பொறியாளர் (மின்சாரம்) பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பதவி உயர்வு அளித்து ஆணை வழங்கும் அதிகாரம் அரசின் வசம் உள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது நடைமுறையில் உள்ள பொறியியல் பணிவிதிகளின்படி, கண்காணிப்பு பொறியாளர்(மின்சாரம்) பதவி உயர்வுக்கு பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட கோட்ட மின் பொறியாளர்களது பணி முதுநிலை படி, தகுதியை பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

அட்டவணை -III

வ. எண்.	பெயர் / திருவாளர்கள்	உதவி கோட்ட மின் பொறியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் மற்றும் அப்பதவியில் பணி புரிந்த காலம்	கோட்ட மின் பொறியாளர் பணியில் சேர்ந்த நாள்	கோட்ட மின் பொறியாளராக பணியில் சேர்ந்த நாள் முதல் மைய நாள். 01.02.2022 நாள்வரை கோட்ட மின் பொறியாளர் பதவியில் காலம்	குறிப்பு
1.	திரு.C.A.பாலமுரளி.	07.01.2011 8 வருடம் 1 மாதம் 11 நாட்கள்	18.02.2019	2 வருடம் 11 மாதங்கள் 14 நாட்களாகும்	ஓய்வு பெறும் நாள். *31.05.2028*
2.	திரு. M.இளங்கோவன்	07.01.2011 8 வருடம் 1 மாதம் 11 நாட்கள்	18.02.2019	2 வருடம் 11 மாதங்கள் 14 நாட்களாகும்	ஓய்வு பெறும் நாள். *31.05.2030*
3.	திரு. R. இம்தியாஸ் அகமது	07.01.2011 8 வருடம் 1 மாதம் 11 நாட்கள்	18.02.2019	2 வருடம் 11 மாதங்கள் 14 நாட்களாகும்	ஓய்வு பெறும் நாள். *31.05.2027*

பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலர், விழிப்பு குழுமம், அவர்களின் 19.07.2022 நாளிட்ட கடிதத்தில், மேற்படி அட்டவணை-III்ல் வரிசை எண் 1 முதல் 3 வரை கண்டுள்ள நபர்களின் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொ.து.ந.க.எண்.ஈ13/சிறப்பு/2022, நாள்.15.07.2022ன் குறிப்பில் அட்டவணை III்ல் வரிசை எண் 1 முதல் 3 வரை கண்டுள்ள நபர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கீழ்கண்ட அட்டவணை IV்ல் கண்டுள்ள கோட்ட மின் பொறியாளர்களின் மந்தன அறிக்கை பெறப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் கண்காணிப்பு பொறியாளர்(மின்சாரம்) பதவிக்கு, நிர்ணயிக்கப்பட்டுள்ள சென்னை மாநகராட்சி பொறியியல் பணிவிதிகள் 1969ன்படி பொறியியல் பணி அனுபவத்தில் குறைந்தபட்சம் 7 ஆண்டுகள் பணி முடித்திருக்க வேண்டும். மேலும், Construction, Operation and Maintenance of high tension sub-stations and underground distribution systems-ல் நான்கு வருடம் அனுபவமும், குறைந்தபட்சம் administrative charge பணியில் 2 வருடங்கள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அட்டவணை III்ல் கண்டுள்ள தனியர்கள் உதவி கோட்ட மின் பொறியாளர் பதவியில் 8 வருடம் 1 மாதம் 11 நாட்களும், கோட்ட மின் பொறியாளர் பதவியில் 2 வருடம் 11 மாதங்கள் 14 நாட்கள் பணிபுரிந்திருக்கின்றனர்.

மேலும், அட்டவணை III்ல் வரிசை எண் 1ல் கண்டுள்ள நபர் installation and maintenance is H.T.services at Perundgudi Dumpiung ground மற்றும் வரிசை எண்.2ல் கண்டுள்ள நபர் installation and maintenance is H.T.services at Kodungaiyur Dumpiung ground மற்றும் administrative charge அனுபவம் பெற்றுள்ளனர் என கண்காணிப்பு பொறியாளர்(மின்சாரம்) அவர்கள் 24.08.2022 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சென்னை மாநகராட்சி பொறியியல் 1969 பணிவிதிகளில் குறிப்பிட்டுள்ள Construction Operation and Maintenance of high tension sub-stations and underground distribution systems தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியில் பராமரிக்கப்படுவதில்லை மாறாக இப்பணிகள் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

தற்போது, பெருநகர சென்னை மாநகராட்சியில், மின்சார துறையில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

i) Maintenance of all electrical works in all Greater Chennai Corporation buildings, including UPHCs, UCHCs, School Buildings, Amma Unavagam etc.
ii) Collection of Track Rent to the tune of Rs.50 crores per annum.
iii) Maintenance of all electrical works in Parks & Playfields.
iv) Power – supply coordination for Bio-mining at the Dumping yards, Micro-Composting Centres (MCC) etc.
v) All Electrical works under SBM 2.0 (Swachh Bharat Mission)
vi) Works in Electrical Crematoriums.
vii) Permanent rainwater pumping stations has to be established in all flood prone areas.
viii) Monitoring the Electronic Rain gauges.
ix) Maintenance of BOV (Battery Operated Vehicles) in the Zones wherein Conservancy operations are directly done by Greater Chennai Corporation.

2022-2023ஆம் ஆண்டிற்கான கண்காணிப்பு பொறியாளர்(மின்சாரம்) பதவியில் எற்பட்டுள்ள காலிப்பணியிடம் நிரப்பப்பட வேண்டிய அவசியம் உள்ளதால், சென்னை மாநகராட்சி பொறியியல் பணிவிதிகளின்படி கீழ்கண்ட அட்டவணை-IVல் கண்டுள்ள கோட்ட மின் பொறியாளர்களுக்கு கண்காணிப்பு பொறியாளர்(மின்சாரம்)ஆக பதவி உயர்வு வழங்க 2022ஆம் ஆண்டிற்கான பட்டியல் வெளியிட அரசின் ஆணை வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்படலாம்.

எனவே,

1. 01.02.2022 ஐ மைய நாளாகக் கொண்டு, 2022-2023 ஆம் ஆண்டிற்கான கண்காணிப்பு பொறியாளர்(மின்சாரம்) பதவி உயர்வுக்கு சென்னை மாநகராட்சி பொறியியல் பணிவிதிகளின்படி 1969-ன்படி கல்வித்தகுதி மற்றும் மின் பொறியாளராக அனுபவத்தகுதி பெற்ற பின்வரும் பணியில் மூத்த கோட்ட மின் பொறியாளர்களை கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,

அட்டவணை *IV*

வ.எண்.	பெயர் / திருவாளர்கள்	கோட்ட மின் பொறியாளர் பணியில் சேர்ந்த நாள்
1.	திரு.C.A.பாலமுரளி.	18.02.2019
2.	திரு. M.இளங்கோவன்	18.02.2019

2. மேற்படி, தெரிவுப்பட்டியலின் ஒப்புதலுக்குட்பட்டு, 7வது ஊதியக்குழு பரிந்துரையின்படி, ரூ.123100 - *250400* (Level 28) என்ற ஊதிய விகிதத்தில் கண்காணிப்பு பொறியாளராக (மின்சாரம்) பதவி உயர்வுக்கு ஊதியம் வழங்க ஆணை வேண்டியும் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நியமனக்குழுவின் மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/1431 - 3/2022

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 25.08.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:421/2022 **பொருள் எண்.20**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - Phase-II - சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் - விரைவில் நடைபெறவுள்ள 24-வது உயர்மட்டக்குழு கூட்டத்தில் (24th High Power Committee Meeting) வைக்கப்படவுள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மண்டலம் 10, கோட்டம் 128, மாம்பலம் வட்டம், விருகம்பாக்கம் கிராமம், பிளாக் எண்.17, புல எண்.129/2ல் அமைந்துள்ள திறந்தவெளி நிலத்தினில் அவசர அவசியம் கருதி சென்னை மெட்ரோ இரயில் நிறுவன பணிகள் மேற்கொள்ள முன்நுழைவு அனுமதி வழங்குவதற்கு அனுமதி.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மாவட்ட வருவாய் அலுவலரின் 20.06.2022 நாளிட்ட கடிதத்தில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் சம்பந்தமான விரைவில் நடைபெறவுள்ள 24-வது உயர்மட்டக்குழு கூட்டத்தில் (24th High Power Committee Meeting) வைக்கப்படவுள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களை அவசர அவசியம் கருதி சென்னை மெட்ரோ இரயில் நிறுவன பணிகள் மேற்கொள்ள முன்நுழைவு அனுமதி வழங்குமாறும், பின்னர் மேற்படி நடைபெறவுள்ள 24-வது உயர்மட்டக்குழு கூட்டத்தின் ஒப்புதல் மற்றும் உரிய அரசாணை பெறப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலம் மற்றும் உடைமைத்துறை மாவட்ட வருவாய் அலுவலரின் 24.06.2022 நாளிட்ட கடிதத்தில், மண்டலம்-10ஐ சார்ந்த பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களை மத்திய வட்டார துணை ஆட்சியருடன் இணைந்து 24.06.2022 அன்று காலை 11.00 மணிக்கு கூட்டுப்புலத் தணிக்கை மேற்கொள்ள உரிய அலுவலரை அனுப்பி வைக்குமாறு சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் 10-வது மண்டல அலுவலரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மத்திய வட்டார துணை ஆட்சியரின் 24.06.2022 நாளிட்ட புலத்தணிக்கை குறிப்பில், குறிப்பிடப்பட்டுள்ள நிலமானது ஆற்காடு சாலையில் அமைந்துள்ளது எனவும், இந்த திறந்தவெளி நிலம் A4 மருத்துவமனை முன்பாக தற்போது காலியிடமாக உள்ளது எனவும், இப்புலங்களுக்கான நான்கு எல்லைகள் விபரம் பின்வருமாறு:

வடக்கு : கட்டடங்கள்
தெற்கு : ஆற்காடு ரோடு
கிழக்கு : ஏ.வி.எம் அவென்யூ முதல் தெரு
மேற்கு : கட்டடம்

மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு நிலம் வழங்கிட உயர்மட்டக்குழுக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கலாம் எனவும், உயர்மட்டக்குழு கூட்ட முடிவுகளுக்குப் பின் உரிய அரசாணை பெறப்பட்டவுடன் மண்டல அலுவலரின் கருத்துருவினை பெற்றும், உரிய நிலமதிப்பினை பெற்றும் மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு நிலத்தை வழங்கலாம் என தெரிவித்துள்ளார்.

10-வது மண்டல அலுவலர்/மாவட்ட வருவாய் அலுவலரின் 17.08.2022 நாளிட்ட குறிப்பில், மேற்படி நிலமானது பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சாலை விரிவாக்கத்திற்காக பெறப்பட்டுள்ளது எனவும், தற்போது சென்னை மெட்ரோ இரயில் Phase-II திட்டத்திற்காக ஆற்காடு சாலையில் மாம்பலம் வட்டம், விருகம்பாக்கம் கிராமம், பிளாக் எண்.17, புல எண்.129/2ல் உள்ள நிலத்தினை நிரந்தர அடிப்படையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்க நிலம் மற்றும் உடைமைத்துறை மூலம் மேல்நடவடிக்கை எடுக்கலாம் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, இந்நேர்வில், சென்னை மாவட்டம், மாம்பலம் வட்டம், விருகம்பாக்கம் கிராமம், மண்டலம்-10, பகுதி-29, கோட்டம்-128, பிளாக் எண்.17, புல எண்கள்.129/2, ஆற்காடு சாலையில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தினில் நிரந்தர

அடிப்படையில் வழங்கப்படவுள்ள 54 சதுர மீட்டர் நிலத்திற்கு வழிகாட்டு விலை மதிப்பின் *(Guideline Value)* அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ள நிலக்கிரயத் தொகையான (54 sq.mtr x GLV 86545 = 4673430) ரூ.46,73,430/-ஐ (ரூபாய் நாற்பத்து ஆறு இலட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து நானூற்று முப்பது மட்டும்) பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உடன் செலுத்த வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டும், மேலும் அப்புலத்தில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன பணிகள் மேற்கொள்ளும் பொழுது பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் தகுந்த பாதுகாப்புடனும், கட்டிட இடுபாடுகளை உடனுக்குடன் அகற்றிடவும், சாலையில் ஏற்படும் பள்ளங்களை உடனுக்குடன் சரி செய்திட வேண்டுமென்ற அடிப்படையிலும், விரைவில் நடைபெறவுள்ள சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் *24*-வது உயர்மட்டக்குழு கூட்டத்தின் ஒப்புதல் மற்றும் திட்டம், வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் (சி.மு) துறையின் அரசாணையினை எதிர்நோக்கி சென்னை மெட்ரோ இரயில் நிறுவன திட்டப் பணிகளுக்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்குவதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"26.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.192/2022 நாள்.26.09.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/1431 - 4/2022

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 25.08.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:422/2022 **பொருள் எண்.21**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத் துறை - Phase-II - சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் - விரைவில் நடைபெறவுள்ள 24-வது உயர்மட்டக்குழு கூட்டத்தில் (24th High Power Committee Meeting) வைக்கப்படவுள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மண்டலம் 10, கோட்டம் 127, அமைந்தகரை வட்டம், செஞ்சேரி கிராமம், பிளாக் எண்.4, புல எண்.116ல் அமைந்துள்ள திறந்தவெளி நிலத்தினில் அவசர அவசியம் கருதி சென்னை மெட்ரோ இரயில் நிறுவன பணிகள் மேற்கொள்ள முன்நுழைவு அனுமதி வழங்குவதற்கு அனுமதி.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மாவட்ட வருவாய் அலுவலரின் 20.06.2022 நாளிட்ட கடிதத்தில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் சம்பந்தமான விரைவில் நடைபெறவுள்ள 24-வது உயர்மட்டக்குழு கூட்டத்தில் (24th High Power Committee Meeting) வைக்கப்படவுள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களை அவசர அவசியம் கருதி சென்னை மெட்ரோ இரயில் நிறுவன பணிகள் மேற்கொள்ள முன்நுழைவு அனுமதி வழங்குமாறும், பின்னர் மேற்படி நடைபெறவுள்ள 24-வது உயர்மட்டக்குழு கூட்டத்தின் ஒப்புதல் மற்றும் உரிய அரசாணை பெறப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலம் மற்றும் உடைமைத்துறை மாவட்ட வருவாய் அலுவலரின் 24.06.2022 நாளிட்ட கடிதத்தில், மண்டலம்-10ஐ சார்ந்த பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களை மத்திய வட்டார துணை ஆட்சியருடன் இணைந்து 24.06.2022 அன்று காலை 11.00 மணிக்கு கூட்டுப்புலத் தணிக்கை மேற்கொள்ள உரிய அலுவலரை அனுப்பி வைக்குமாறு சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் 10-வது மண்டல அலுவலரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மத்திய வட்டார துணை ஆட்சியரின் 24.06.2022 நாளிட்ட புலத்தணிக்கை குறிப்பில், குறிப்பிடப்பட்டுள்ள நிலமானது காளியம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ளது எனவும், இந்த திறந்தவெளி நிலம் தற்போது காலியிடமாக உள்ளது எனவும், இப்புலங்களுக்கான நான்கு எல்லைகள் விபரம் பின்வருமாறு:

வடக்கு : கட்டடம்
தெற்கு : சாலை
கிழக்கு : காளியம்மன் கோவில் தெரு
மேற்கு : கட்டடம்

மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு நிலம் வழங்கிட உயர்மட்டக்குழுக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கலாம் எனவும், உயர்மட்டக்குழு கூட்ட முடிவுகளுக்குப் பின் உரிய அரசாணை பெறப்பட்ட உடன் மண்டல அலுவலரின் கருத்துருவினை பெற்றும், உரிய நிலமதிப்பினை பெற்றும் மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு நிலத்தை வழங்கலாம் என தெரிவித்துள்ளார்.

10-வது மண்டல அலுவலர்/மாவட்ட வருவாய் அலுவலரின் 17.08.2022 நாளிட்ட குறிப்பில், மேற்படி காளியம்மன் கோயில் தெரு, அமைந்தகரை வட்டம், செஞ்சேரி கிராமம், பிளாக் எண்.4, புல எண்.116-ல் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 105 சதுர மீட்டர் திறந்தவெளி நிலத்தினை சென்னை மெட்ரோ இரயில் Phase-II திட்டத்திற்காக நிரந்தர அடிப்படையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்க நிலம் மற்றும் உடைமைத்துறை மூலம் மேல்நடவடிக்கை எடுக்கலாம் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, இந்நேர்வில், சென்னை மாவட்டம், அமைந்தகரை வட்டம், செஞ்சேரி கிராமம், மண்டலம்-10, பகுதி-29, கோட்டம்-127, பிளாக் எண்.4, புல எண்கள்.116, காளியம்மன் கோயில் தெருவில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி நிலத்தினில் நிரந்தர அடிப்படையில் வழங்கப்படவுள்ள 105 சதுர மீட்டர் நிலத்திற்கு வழிகாட்டு

விலை மதிப்பின் *(Guideline Value)* அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ள நிலக்கிரயத் தொகையான (105 sq.mtr x GLV 50485 = 5300925) ரூ.53,00,925/-ஐ (ரூபாய் ஐம்பத்து மூன்று இலட்சத்து தொள்ளாயிரத்து இருபத்துஐந்து மட்டும்) பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உடன் செலுத்த வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டும், மேலும் அப்புலத்தில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன பணிகள் மேற்கொள்ளும் பொழுது பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் தகுந்த பாதுகாப்புடனும், கட்டட இடுபாடுகளை உடனுக்குடன் அகற்றிடவும், சாலையில் ஏற்படும் பள்ளங்களை உடனுக்குடன் சரி செய்திட வேண்டுமென்ற அடிப்படையிலும், விரைவில் நடைபெறவுள்ள சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் *24*-வது உயர்மட்டக்குழு கூட்டத்தின் ஒப்புதல் மற்றும் திட்டம், வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் (சி.மு) துறையின் அரசாணையினை எதிர்நோக்கி சென்னை மெட்ரோ இரயில் நிறுவன திட்டப் பணிகளுக்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்குவதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"26.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.193/2022 நாள்.26.09.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/2733/2021

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 25.08.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:423/2022 **பொருள் எண்.22**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - Phase-II - சென்னை மெட்ரோ இரயில் திட்டப் பணிகளுக்காக தேர்வு செய்யப்பட்ட மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களில் புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டு 22வது உயர்மட்டக்குழு கூட்டத்திற்கு (22nd HPC Meeting) ஒப்புதல் வழங்கப்பட்டது - ஆலந்தூர் வட்டம் (ம) கிராமம், பிளாக் எண்.7, புல எண்கள். 3-ல் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலத்தினில் 1538 ச.மீ நிலத்தினை நிரந்தர அடிப்படையில் வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டு மண்டல அலுவலகத்தின் அறிக்கை பெறப்பட்டது - தற்போது சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தொழில்நுட்ப குழுவின் தற்போதைய புதிய திருத்திய வரைபடத்தின்படி ஒதுக்கீடு செய்ய அனுமதி.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண்மை இயக்குநரின் 12.07.2021 நாளிட்ட கடிதத்தில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் சம்பந்தமாக நடைபெறவுள்ள 22வது உயர்மட்டக்குழு கூட்டத்தில் (22nd High Power Committee Meeting) வைக்கப்படவுள்ள அரசு நிலங்களின் துறை வாரியான விவரங்கள் இணைத்து அனுப்பப்பட்டு, அதன்படி நடைபெறவுள்ள உயர்மட்டக்குழு கூட்டத்திற்கு முன்பாக பெருநகர சென்னை மாநகராட்சியின் விரிவான குறிப்புரைகளை அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

தனி வட்டாட்சியர்/நிமஉது அவர்களின் 20.07.2021 நாளிட்ட புலத்தணிக்கை குறிப்பில், ஆலந்தூர் வட்டம் மற்றும் கிராமம், பிளாக் எண்.7, புல எண். 3-ல் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலமானது Grand Southern Trunk சாலையில் அமைந்துள்ளது. புலம் காலி நிலமாக உள்ளது. இப்புலத்திற்கான நான்கு எல்லைகள் விவரம் பின்வருமாறு:

வடக்கு : பிளாக் எண். 7, T.S.No. 3 pt & சாலை

தெற்கு : பிளாக் எண். 7, T.S.No. 3 pt & சாலை

கிழக்கு : New Street

மேற்கு : Block No. 12, T.S.No.

மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு நிலம் வழங்கிட உயர்மட்டக்குழுக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கலாம். உயர்மட்டக்குழு கூட்ட முடிவுகளுக்குப்பின் உரிய அரசு ஆணை பெறப்பட்டவுடன் மண்டல அலுவலரின் கருத்துருவினை பெற்று, உரிய நிலமதிப்பினை பெற்றும் மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு நிலத்தினை வழங்கிடலாம் என தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து அரசாணை (நிலை) எண். 256, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (சி.மு) துறை, நாள்: 09.11.2021-ல் சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம் மற்றும் கிராமம், பிளாக் எண்.7, புல எண். 3-ல் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலத்தினில் 1538 சதுர மீட்டர் நிலத்தினை நிரந்தர அடிப்படையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு மாற்றுதல் மற்றும் முன்நுழைவு அனுமதி வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து 12-வது மண்டல அலுவலரின் 27.07.2022 நாளிட்ட கடிதத்தில், மண்டலம்-12, வார்டு-160, பிளாக் எண். H7 மற்றும் 3-ல் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான ஆலந்தூர் புதுத்தெரு சந்திப்பு மற்றும் GST சாலையில் அமைந்துள்ள அன்னபூர்ணா ஹோட்டல் மற்றும் அதை சுற்றியுள்ள 1538 சதுர மீட்டர் அமைந்துள்ள இடமானது ஆலந்தூர் மண்டலம்-12ல் இந்நாள்வரை பெருநகர சென்னை மாநகராட்சி பொறுப்பில் பராமரிக்கப்பட்டு வருகிறது எனவும்,

மேற்படி 1538 சதுர மீட்டர் நிலத்தினை நிரந்தர அடிப்படையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால், கூட்டுப்புலத்தணிக்கையின்படி மண்டலம்-12 அலுவலகத்தின் மேல் மெட்ரோ இரயில் வழித்தடம் செல்ல வடிவமைக்கப்பட்டுள்ளது எனவும், இவ்வாறு மெட்ரோ இரயில் செல்வதால் எதிர்காலத்தில் மண்டலம்-12 அலுவலகம் கட்ட குறிப்பிட்ட உயரம் மட்டுமே கட்ட முடியும் எனவும் கட்டடத்தை

விரிவாக்கம் செய்யவோ, உயரம் எழுப்பவோ முடியாது, தற்போதுள்ள தரைதளம் மற்றும் 2 தளங்கள் மட்டுமே எதிர்காலத்திலும் கட்ட முடியும் என்பதால் இதனை கருத்தில்கொண்டு மெட்ரோ இரயில் நிர்வாகம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உரிய நிவாரணத் தொகை மற்றும் நிலத்திற்குரிய நிலக்கிரயத் தொகையை செலுத்த வேண்டுமென்ற அடிப்படையில், பணிகள் முடிவடைந்தவுடன் இடத்தை சீர் செய்து தர வேண்டுமென்ற நிபந்தனையுடன் நிலம் மற்றும் உடைமைத்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மாவட்ட வருவாய் அலுவலர் / சட்ட அலுவலரின் *08.08.2022* நாளிட்ட கடிதத்தில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தொழில்நுட்ப குழுவின் தற்போதைய புதிய திருத்திய வரைபடத்தின்படி, *(New Revised Sketch from CMRL Technical Wing)* இரண்டு தூண் அமைப்புகள் அமைக்க *88* சதுர மீட்டர் நிலத்தினை நிரந்தர அடிப்படையிலும், பூமிக்கு மேல் *12*-வது மண்டல அலுவலக கட்டிடத்திற்கு மேற்பகுதியில் மெட்ரோ இரயில் வழித்தடம் *[Viaduct 9 (ECV-02)]* அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தற்காலிக அடிப்படையில் *1450* சதுர மீட்டர் நிலத்தினை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, இந்நேர்வில், சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம் (ம) கிராமம், மண்டலம்-*12*, பகுதி-36, கோட்டம்-160, ஜி.எஸ்.டி சாலை, பிளாக் எண்.7, புல எண். 3-ல் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மண்டல அலுவலகம்-12 அமைந்துள்ள நிலத்தினில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தொழில்நுட்ப குழுவின் தற்போதைய புதிய திருத்திய வரைபடத்தின்படி *(New Revised Sketch from CMRL Technical Wing)*,

- இரண்டு தூண் அமைப்புகள் அமைக்க நிரந்தர அடிப்படையில் வழங்கப்படவுள்ள *88* சதுர மீட்டர் நிலத்திற்கு வழிகாட்டு விலை மதிப்பின் *(Guideline Value)* அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ள நிலக்கிரயத் தொகையான (88 sq.mtr x GLV 72120 = 6346560) ரூ.63,46,560/-ஐ (ரூபாய் அறுபத்து மூன்று இலட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து ஐநூற்று அறுபது மட்டும்) பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உடன் செலுத்த வேண்டுமென்ற அடிப்படையிலும்,
- பூமிக்கு மேல் *12*-வது மண்டல அலுவலக கட்டிடத்திற்கு மேற்பகுதியில் மெட்ரோ இரயில் வழித்தடம் *[Viaduct 9 (ECV-02)]* அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தற்காலிக அடிப்படையில் கோரப்பட்டுள்ள *1450* சதுர மீட்டர் நிலத்தினில் தற்போது அமைந்துள்ள தரைதளம் மற்றும் *2* தளங்கள் கொண்ட மண்டல அலுவலக கட்டடத்தை பெருநகர சென்னை மாநகராட்சியின் எதிர்கால பயன்பாட்டிற்காக விரிவாக்கம் செய்யவோ, உயரம் எழுப்பவோ முடியாத சூழ்நிலையில், தற்போது அமையப்பெற்றுள்ள அமைப்பின்படி தரைதளம் மற்றும் *2* தளங்களாக மட்டுமே மீண்டும் மறு கட்டுமானம் அமைக்க முடியும் என்பதால், அதனை ஈடு செய்யும் விதமாக மேற்படி *1450* சதுர மீட்டர் நிலத்திற்கு வழிகாட்டு விலை மதிப்பின் *(Guideline Value)* அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ள (1450 sq.mtr x GLV 72120 = 104574000/2 = 52287000) தொகையில் பாதி ரூ.5,22,87,000/-யினை (ரூபாய் ஐந்து கோடியே இருபத்து இரண்டு இலட்சத்து எண்பத்து ஏழாயிரம் மட்டும்) இழப்பீட்டுத் தொகையாக *(Compensation Amount)* பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உடன் செலுத்த வேண்டுமென்ற அடிப்படையிலும்,
- மேற்படி புலத்தில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன பணிகள் மேற்கொள்ளும்போது, அப்புலத்தில் இயங்கிவரும் *12*-வது மண்டல அலுவலகத்தினை பாதுகாப்பு கருதி, தற்காலிகமாக மாற்று இடத்தில், பொதுமக்களின் நலன் கருதி அப்புலத்திற்கு மிகவும் அருகில் இயங்குவதற்குரிய வசதியினை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சொந்த செலவிலேயே செய்து தர வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டும்.
- மேலும் அப்புலத்தில் அமைந்துள்ள மண்டலம்-*12* அலுவலக கட்டிடமானது மிகவும் பழையது என்பதால், சென்னை மெட்ரோ இரயில் நிறுவன பணிகள் மேற்கொள்ளும்போது, மண்டல அலுவலகத்திற்கு பாதிப்பு ஏற்படும் என தெரியவருவதால்,

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சொந்த செலவிலேயே ஏற்கனவே அமையப்பெற்றுள்ளபடி மீண்டும் புதியதாக கட்டித்தர வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டும், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் தகுந்த பாதுகாப்புடனும், கட்டட இடுபாடுகளை உடனுக்குடன் அகற்றிடவும், சாலையில் ஏற்படும் பள்ளங்களை உடனுக்குடன் சரி செய்திட வேண்டுமென்ற அடிப்படையிலும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன திட்டப் பணிகளுக்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்குவதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.194/2022 நாள்.26.09.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/2039/2022

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 14.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:424/2022 **பொருள் எண்.23**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம் - 7, பகுதி - 20, வார்டு - 92 உள்ள முகப்பேர் கிழக்கு - 10வது பிளாக் இளங்கோ சாலையில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட பல்நோக்கு கட்டிடம் - பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட்., X-405 நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் பாடி பகுதி - முகப்பேர் - 2E (02FB067NT) நியாய விலை கடைக்கு ஒதுக்கீடு செய்ய அனுமதி.

இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர், பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட்., X-405 அவர்களின் 03.08.2022 நாளிட்ட கடிதத்தில், மதுரவாயல் தொகுதிக்குப்பட்ட 92வது வார்டு முகப்பேர் பகுதியில் தனியார் கட்டிடத்தில் இயங்கிவரும், நியாயவிலைக் கடைக்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் முகப்பேர் கிழக்கு - 10வது பிளாக் இளங்கோ சாலையில் உள்ள மதுரவாயல் புதிய கட்டிடம் கட்டப்பட்டு தயார் நிலையில் உள்ளதால், 03.08.2022 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நியாயவிலைக் கடைக்கு புதிதாக ஒதுக்கீடு செய்து தர கோரப்பட்டது.

மண்டல அலுவலர், மண்டலம் - 7 அவர்களின் 26.08.2022 நாளிட்ட கருத்துருவின்படி, மண்டலம் - 7, பகுதி - 20, வார்டு - 92க்கு உட்பட்ட முகப்பேர் கிழக்கு - 10வது பிளாக் இளங்கோ சாலையில் மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட பல்நோக்கு கட்டிடத்தில் உள்ள இரண்டு கடைகளில் ஒரு கடையை பூங்காநகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட் நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் பாடி பகுதி முகப்பேர் - 2E (02FB067NT) என்ற நியாய விலை கடைக்கு ஒதுக்கீடு செய்ய பூங்காநகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட் அவர்கள் அலுவலகத்திலிருந்து கடிதம் பெறப்பட்டது. இதன் பொருட்டு கட்டி முடிக்கப்பட்ட இக்கட்டிடத்தினை நியாயவிலை கடைகளுக்கு ஒதுக்கீடு செய்து தருவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது, என்றும் மேலும், கடிதத்துடன் கட்டிடத்தின் அளவுகளுடன் (10.33 மீ x 7.84 மீ = 81 ச.மீ / 870 சதுர அடி) (வரைபடத்தின்படி) நியாய விலைக் கடை பயன்பாட்டிற்கு பெருநகர சென்னை மாநகராட்சி விதிகளின்படி ஒதுக்கீடு செய்து வழங்கும்படி, மண்டல அலுவலர், மண்டலம் - 7 அவர்களின் மூலம் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மன்றத் தீர்மானம் எண்.689/2013 நாள்.31.10.2013-ன்படி மக்கள் நலன் கருதி வியாபார நோக்கமின்றி செயல்படும் அரசு நிறுவனமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நியாய விலை கடைக்கு மாத வாடகை சதுர அடிக்கு ரூ.5/- என்று நிர்ணயம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளபடி, இப்பொருளில் கண்டுள்ள கடைக்கு நிர்ணயம் செய்யவும், இனிவரும் காலங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நியாய விலைகடைகளுக்கும் மற்றும் கூட்டுறவு நியாய விலை கடைகளுக்கும் மாத வாடகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி கோரும் கோப்புகளில் சதுர அடிக்கு ரூ. 5/- என்றே நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடனும் பெரும்பான்மை மன்ற உறுப்பினர்களின் கருத்தின் அடிப்படையிலும் அதற்கு மன்றம் அனுமதி அளித்துள்ளது.

எனவே, மண்டலம் - 7, பகுதி - 20, வார்டு - 92க்கு உட்பட்ட முகப்பேர் கிழக்கு - 10வது பிளாக் இளங்கோ சாலையில் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்களின் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட பல்நோக்கு கட்டிடத்தினை நியாயவிலை கடைக்காக முகப்பேர் - 2E (02FB067NT) கட்டி முடிக்கப்பட்ட கட்டிடத்தின், நிலப்பரப்பளவு = (10.33 மீ x 7.84 மீ = 81 ச.மீ / 870 சதுர அடி) ஆகும்.

<u>கீழ்கண்ட நிபந்தனையின் அடிப்படையில்</u>

1. மண்டலம் - 7, பகுதி - 20, வார்டு - 92ல் உள்ள பூங்காநகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட் கீழ் இயங்கும் முகப்பேர் - 2E (02FB067NT) நியாயவிலைக் கடைக்கு ஒரு சதுர அடி ரூ. 5/- வீதம், 870 ச. அடிக்கு மாத வாடகை ரூ.4,350/- மற்றும் 12 மாத வாடகை முன்பணம் ரூ. 52,200/- செலுத்த வேண்டும் என்றும்,
2. கட்டிடங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்றுதான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில்,

மேற்படி கட்டிடத்தினை பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட்., X-405 நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் பாடி பகுதி முகப்பேர் - 2E (02FB067NT) கடைக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள, மாத வாடடையின் அடிப்படையில் நியாய விலைக் கடைக்கு அவசர அவசியம் கருதி மண்டல வார்டு குழு பரிந்துரையின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு ஒதுக்கீடு செய்ய நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.195/2022 நாள்.26.09.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/2894/2021

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 07.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:425/2022 **பொருள் எண்.24**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம் - 7, பகுதி - 20, கோட்டம் - 92, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை (வடக்கு) மண்டலம் விநியோகப்பிரிவு - I அம்பத்தூர் பகுதியில் முகப்பேர் கிழக்கு 11/22 (02FA006NT) செயல்பட்டு வரும் அமுதம் சில்லறை அங்காடியின் கட்டிடத்திற்கு மாற்று இடத்தில் புதிதாக கட்டிடம் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் 2020 - 2021 ஆம் ஆண்டின் கட்டி முடிக்கப்பட்டுள்ள கட்டிடத்தினை மாவட்ட வருவாய் அலுவலர் / முதுநிலை மண்டல மேலாளர் (வடக்கு) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொது விநியோகம் நியாய விலைக்கடை பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்ய அனுமதி

மாவட்ட வருவாய் அலுவலர் / முதுநிலை மண்டல மேலாளர் (வடக்கு) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை (வடக்கு) மண்டலம் விநியோகப்பிரிவு - I அவர்களின் 10.12.2021 நாளிட்ட கடிதத்தில், அம்பத்தூர் பகுதி முகப்பேர் கிழக்கு 11/22 (02FA006NT) அமுதம் சில்லறை அங்காடியின் கட்டிடமானது பாரதிதாசன் சாலையில் தனியரது வாடகை கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது என்றும், இந்நிலையில் அம்பத்தூர் மண்டலம் - 7, பகுதி - 20, கோட்டம் - 92, 10வது பிளாக் இளங்கோ சாலையில் பல்நோக்குக் கட்டிடம் பொதுவிநியோக கடை கட்டிடம் மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் / சட்டமன்ற உறுப்பினர் மதுரவாயல் அவர்களின் 2020 - 2021 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டு நிதியில் ரூ.44.40/- இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கிட மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருவள்ளூவர் அவர்கள் பரிந்துரை செய்துள்ளார் என்று கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர், மண்டலம் - 7 அவர்களின் 26.08.2022 நாளிட்ட கடிதத்தில், மண்டலம் - 7, பகுதி - 20, கோட்டம் - 92ல் உள்ள முகப்பேர் கிழக்கு 10வது பிளாக் இளங்கோ சாலையில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட பல்நோக்கு கட்டிடத்தில் உள்ள இரண்டு கடைகளில் ஒரு கடையை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் அம்பத்தூர் பகுதியில் செயல்பட்டு வரும் (02FA006NT) முகப்பேர் கிழக்கு அமுதம் சில்லறை அங்காடியின் கட்டிடத்திற்கு ஒதுக்கீடு செய்ய 10.08.2022 அன்று நடைப்பெற்ற மண்டலம் 7 வார்டு குழுவின் மன்றத் தீர்மானம் எண். 217, நாள். 11.08.2022ன்படி, அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் இக்கட்டிடத்தின் நிலப்பரப்பளவு (10.33 மீ x 7.84 மீ = 81 ச.மீ / 870 சதுர அடி) (வரைப்படத்தின்படி) மண்டல அலுவலர், மண்டலம் - 7 அவர்களின் மூலம் பரப்பளவுடன் கூடிய புல வரைப்படம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மன்றத் தீர்மானம் எண்.573/2015 நாள். 30.09.2015-ன்படி இனிவரும் காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்தும், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்தும் மற்றும் சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தும் கட்டப்படும் கட்டிடங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் இயங்கும் அனைத்து நியாயவிலை கடைகளுக்கு மட்டும் ஒதுக்கீடு செய்யும்போது தற்பொழுது நடைமுறையிலுள்ள மன்றத் தீர்மானத்தின்படி, கட்டிடம் ஒதுக்கீடு செய்வதற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் - 7, பகுதி - 20, கோட்டம் - 92ல் உள்ள முகப்பேர் கிழக்கு 10வது பிளாக் இளங்கோ சாலையில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியில் 2020 - 2021 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட பல்நோக்கு கட்டிடத்தில் நிலப்பரப்பளவு (10.33 மீ x 7.84 மீ = 81 ச.மீ / 870 சதுர அடி) (வரைப்படத்தின்படி),

1. வாடகையின்றியும், வாடகை முன்பணம் இன்றியும் ஒதுக்கீடு செய்வதற்கும்,

2. கட்டிடங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்றுதான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில்,

மேற்படி கட்டிடத்தினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் *(02FA006NT)* முகப்பேர் கிழக்கு *10*வது பிளாக் இளங்கோ சாலையில் உள்ள கடைக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள, வாடகையின்றியும், வாடகை முன்பணம் இன்றியும் என்ற அடிப்படையில் நியாய விலைக் கடைக்கு அவசர அவசியம் கருதி மண்டல வார்டு குழு பரிந்துரையின் அனுமதிக்குட்பட்டு ஒதுக்கீடு செய்ய, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.196/2022 நாள்.26.09.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.13.வ.து.ந.க.எண்.சி2/0103/2021

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 28.08.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:426/2022 **பொருள் எண்.25**

பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம்-13 – வருவாய்துறை- வார்டு-176- பெசன்ட்நகர், 31வது குறுக்கு தெரு, ஊரூர் வண்ணாந்துறை புதுப்பிக்கப்பட்டு புதியதாக கட்டப்பட்டது – ஓய்வறை ஒதுக்கீடு செய்வதற்கு மன்றத்தீர்மானம் பெறப்பட்டது – தற்போது சலவைக்கற்கள் பயன்பாட்டிற்கான வாடகை நிர்ணயம் செய்ய அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, வருவாய்துறை, வார்டு-176, பெசன்ட்நகர், 31வது குறுக்கு தெரு, ஊரூர் வண்ணாந்துறை (Dhobikhana) புதுப்பிக்கப்பட்டு புதியதாக 26 ஓய்வு அறைகள் 2017-18 ஆம் ஆண்டு வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்டு கட்டிட துறையினால் ஒப்படைக்கப்பட்டது. ஏற்கனவே பயன்படுத்தி வந்த பயனாளிகளான சலவையாளர்களுக்கு அவ்விடத்தை வழங்கி செயல்பட நடவடிக்கை எடுக்குமாறு வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டதன் பேரில், 24 ஓய்வறைகளை பொருத்தவரையில் முன்பு இருந்த சலவையாளர்களுக்கே ஒதுக்கீடு செய்யவும், கூடுதலாக உள்ள இரண்டு ஓய்வு அறைகள் குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யவும், அதற்கான மாத வாடகை, ஓய்வு அறை ஒன்றிற்கு ரூ.474/- மேலும், சரக்கு மற்றும் சேவை வரி 18% என ஆக மொத்தம் ரூ.559/- என நிர்ணயம் செய்து வாடகை தொகை வசூலிக்கவும் முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 25.01.2022 நாளிட்ட ஆணை பெறப்பட்டது. மேலும், சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின், தீர்மான எண். 130/ 2022ல் 25.01.2022 ன்படி மன்றத் தீர்மானம் பெறப்பட்டது.

வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களின் 28.07.2021 நாளிட்ட கருத்துரையில், மண்டல அலுவலர், மண்டலம்-13 அவர்கள் தற்போது எத்தனை சலவை கற்கள் உள்ளது என்பதை உறுதி செய்யவும், சலவை கற்களுக்கான திருத்திய வாடகை நிர்ணயம் செய்ய தலைமை அலுவலகத்திற்கு தனியாக முன்மொழிவு அனுப்புமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

இது குறித்து களஆய்வு செய்ததில் கட்டிடம் புதுப்பிக்கப்பட்ட பிறகு கூடுதலாக இரு ஓய்வு அறைகளுடன் மொத்தம் 26 ஓய்வு அறைகள் கட்டப்பட்டுள்ளது என்பதால் 24 சலவைக்கான கற்களில் தற்போது 12 சலவை கற்கள் மட்டுமே உள்ளது என்று தெரிய வந்துள்ளது. தற்போது மண்டல அலுவலர்- 13 அவர்களின் ஆணை பெறப்பட்டு மேலும், ஒரு சலவைக்கல் அமைக்கப்பட்டது.

வார்டுகுழு / மண்டலம்-10ன் தீர்மானத்தின்படி,04.06.2001ஆம் ஆண்டு சலவைக் கற்கள் ஒன்றிற்கு மாத வாடகையாக ரூ.6/- என நிர்ணயம் செய்யப்பட்டது.

தற்போது 26 ஆண்டுகளுக்கு பிறகு, ஒரு நாளைக்கு ரூ.0.50 பைசா வீதம், மாதம் ஒன்றிற்கு சலவைக்கல் ஒன்றிற்கு ரூ.15/- வீதம் மாத வாடகை நிர்ணயம் செய்யப்படலாம் என மண்டலம்-13 – கோட்டம்-176 - ஊரூர் வண்ணாந்துறை – சலவைத்துறை ஆய்வுக்குழு பரிந்துரை செய்துள்ளது.

எனவே,

1. 26 பயனாளிகளும் இருக்கின்ற சலவைக்கற்களை பயன்படுத்துவதற்கான வாடகையாக மாதம் ஒன்றிற்கு ஒவ்வொரு பயனாளிக்கும் தலா ரூ.15/- என (Rent for utilization of stone for washing) நிர்ணயம் செய்யவும்.
2. தற்போதுள்ள 13 சலவைக்கற்களை சுழற்சி முறையில் 26 சலவையாளர்கள் சலவை கற்களை பயன்படுத்தவும்.
3. மேற்படி சலவை கற்களை பயன்படுத்த ஒவ்வொரு ஒதுக்கீட்டாளரும் தக்க உறுதிமொழி மற்றும் மறுப்பின்மை சான்று அளிக்க கேட்டுக்கொள்ளவும்,

மேற்காணும் 1 முதல் 3 வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (வரிவிரிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.197/2022 நாள்.26.09.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ம.க.கு.ந.க.எண்.ஆ8/1103/2022

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 07.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:427/2022 **பொருள் எண்.26**

பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் - 2006-க்கு முந்தைய மற்றும் 2016-க்கு முந்தைய ஊதிய விகிதங்களில் ஊதியம் பெறும் -அலுவலர்களுக்கான/ பணியாளர்களுக்கான 01.07.2022 முதல் திருத்தியமைத்த அகவிலைப்படி விகிதங்கள் குறித்து - அரசாணை வெளியிடப்பட்டுள்ளது - இவ்வரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தியமைக்கு பின்னேற்பு அனுமதி.

2006-க்கு முந்தைய மற்றும் 2016-க்கு முந்தைய ஊதிய விகிதங்களில் தொடர்ந்து ஊதியம் பெறும், அலுவலர்கள்/ பணியாளர்களுக்கு பொருந்தும் வகையில் அகவிலைப்படி விகிதங்கள் 01.07.2022 முதல் திருத்தியமைத்து, அரசாணை (நிலை) எண்.255, நாள்:18.08.2022 அரசாணையை அரசு வெளியிடப்பட்டுள்ளது. அரசாணையின் விவரம் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது:-

நிதி (படிகள்)த் துறை

அரசாணை (நிலை) எண்.255, நாள்.18.08.2022

(சுபகிருது, ஆவணி-2, திருவள்ளுவர் ஆண்டு 2053)

சுருக்கம்

படிகள் 01.07.2022 முதல் 2006-ஆம் ஆண்டிற்கு முந்தைய மற்றும் 2016-ஆம் ஆண்டிற்கு முந்தைய ஆகிய ஊதிய விகிதங்களில் ஊதியம் பெறும் அலுவலர்களுக்கான அகவிலைப்படி வீதங்கள் - ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.

பின்வருவனவற்றைப் படிக்கவும்:-

1. அரசாணை (நிலை எண்.4, நிதி (படிகள்)த் துறை, நாள்.01.01.2022.
2. இந்திய அரசு, புதுடில்லி, நிதியமைச்சகம், செலவுத் துறையின் அலுவலக குறிப்பாணை எண்.1/3(2)/2008-E-II(B), நாள்.07.04.2022.
3. இந்திய அரசு, புதுடில்லி, நிதியமைச்சகம், செலவுத் துறையின் அலுவலக குறிப்பாணை எண்.1/3(1)/2008-E-II(B) நாள்.07.04.2022 .

-0O0-

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் 2006-ஆம் ஆண்டிற்கு முந்தைய மற்றும் 2016-ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதங்களில் தொடர்ந்து ஊதியம் பெறும் அலுவலர்களுக்கான அகவிலைப்படிகளில் வீதங்கள் கீழ்கண்டவாறு அனுமதித்து ஆணைகள் வெளியிடப்பட்டன:-

2006-ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதங்கள்		**2016-ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதம்/தர ஊதியம்**	
எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது	**திருத்தியமைக்கப்பட்ட அக விலைப்படி வீதம்** (மாதம் ஒன்றுக்கு)	**எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது**	**திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம்** (மாதம் ஒன்றுக்கு)
(1)	(2)	(3)	(4)
01.01.2022	அடிப்பைடை ஊதியம் மற்றும் அகவிலை ஊதியத்தில் 368 சதவீதம்	01.01.2022	அடிப்பைடை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 196 சதவீதம்

2. இந்திய அரசு அலுவலக குறிப்பாணைகளைப் பின்பற்றி, முந்தைய ஊதிய விகிதங்களில் தொடர்ந்து ஊதியம் பெறும் மாநில அரசு அலுவலர்களுக்கு தற்போது கீழே குறிப்பிட்டுள்ளபடி திருத்தப்பட்ட வீதங்களில் அகவிலைப்படிகளை அனுமதித்து அரசு ஆணையிடுகிறது:-

2006-ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதங்கள்		**2016-ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதம்/ தர ஊதியம்**	
எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது	**திருத்தியமைக்கப்பட்ட அக விலைப்படி வீதம்** (மாதம் ஒன்றுக்கு)	**எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது**	**திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம்** (மாதம் ஒன்றுக்கு)
(1)	*(2)*	*(3)*	*(4)*
01.07.2022	அடிப்பைடை ஊதியம் மற்றும் அகவிலை ஊதியத்தில் 381 சதவீதம்	*01.07.2022*	அடிப்பைடை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 203 சதவீதம்

3. இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட அகவிலைப்படி 01.07.2022 முதல் ரொக்கமாக வழங்கப்படும். மேலும், 01.01.2022 முதல் 30.06.2022 வரை அகவிலைப்படியானது 2006 -ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதங்கள் மற்றும் 2016-ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதம் / தர ஊதியம் முறையே 368 சதவீதம் மற்றும் 196 சதவீதமாக தொடர்ந்து இருக்கும்.

4. ஜூலை 2022-ஆம் மாதத்திற்கான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை தற்போது நடைமுறையில் உள்ள பணமில்லா பரிவர்த்தனை முறையான மின்னணு தீர்வு சேவை மூலம் வழங்கப்பட வேண்டும். திருத்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிடுகையில் அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும். அதுவே, *50* காசுக்குக் குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும்.

5. இச்செலவு, சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் பெருந்தலைப்பு, துணைப் பெருந்தலைப்பு, சிறு தலைப்பின் கீழ்வரும் 303, அகவிலைப்படி என்ற நுணுக்கத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

6. இதற்கான பட்டியல்கள் அனுப்பப்படும் போது, முதன்மை மாநிலக் கணக்குத் துறைத் தலைவரின் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), அனுமதிக்காகக் காத்திராமல், திருத்தப்பட்ட அகவிலைப்படியை வழங்குமாறு கருவூல அலுவலர்கள்/ சம்பளக் கணக்கு அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா. முருகானந்தம்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

எனவே, அரசாணை (நிலை) எண். 255, நிதி (படிகள்)த் துறை, நாள். 18.08.2022-ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தியதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"26.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.198/2022 நாள்.26.09.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ம.க.கு.ந.க.எண்.அ8/1240/2022

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 17.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:428/2022 **பொருள் எண்.27**

பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் - திருத்தப்பட்ட தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம் பெறும் பணியாளர்களுக்கு 01.07.2022 முதல் மற்றுமொரு தனிப்பட்ட உயர்வு (Ad-hoc Increase) வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது - இவ்வரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைபடுத்த - மன்றத்தின் அனுமதி

அரசாணை (நிலை) எண்.256, நிதி (படிகள்)த்துறை, நாள் 18.08.2022, பத்தி-3ல் திருத்தப்பட்ட தொகுப்பூதியம் (Consolidated Pay) / நிலையான ஊதியம் (Fixed Pay) / மதிப்பூதியம் (Honorarium) பெறும் பணியாளர்களுக்கு 01.07.2022 முதல் மற்றுமொரு தனிப்பட்ட உயர்வு (Ad-hoc Increase) அனுமதித்து கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவித்துள்ளவாறு ஆணையிடப்பட்டுள்ளது:-

எந்நாளிலிருந்து வழங்கத் தக்கது	மற்றொரு தனி உயர்வு (Another Ad-hoc Increase)	
	ரூ.2500 வரை பெறும் பணியாளர்களுக்கு திங்களொன்றுக்கு	ரூ.2500க்கு மேலாக பெறும் பணியாளர்களுக்கு திங்களொன்றுக்கு
(1)	(2)	(3)
01-07-2022	ரூ. 50	ரூ. 100

2) இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட மற்றுமொரு தனிப்பட்ட உயர்வு (Ad-hoc Increase) ஜூலை-2022 முதல் தற்போது நடைமுறையில் உள்ள பணமில்லா பரிவர்த்தனை முறையான மின்னணு தீர்வு சேவை மூலம் வழங்கிட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) அரசாணையின் விபரம் கீழ்கண்டுள்ளவாறு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

FINANCE [Allowances] DEPARTMENT

G.O.Ms.No.256, Dated:18th August 2022.
(*Subakiruthu, Aavani -2,Thiruvalluvar Aandu 2053)*

ABSTRACT

AD-HOC INCREASE - Employees drawing Consolidated Pay / Fixed Pay / Honorarium - Another Ad-hoc Increase from **01-07-2022** - Orders - Issued.

Read the fo11owing:-

1. G.O.Ms.No.5, Finance (Allowances) Department, dated: 01-01-2022.
2. G.O.Ms.No.254, Finance (Allowances) Department, dated: 18-08-2022.

-o0o-

ORDER:

In the Government Order first read above, orders were issued sanctioning another Ad-hoc Increase in respect of employees those drawing revised Consolidated Pay / Fixed Pay / Honorarium as shown below:-

With effect form	Ad-hoc Increase	
	Employees drawing upto Rs.2500/p.m.	Employees drawing above Rs. 2500/p.m.
(1)	(2)	(3)
01-01-2022	Rs. 50	Rs. 100

2. In the Government Order second read above, orders were issued enhancing the Dearness Allowance payable to Government employees who are drawing pay in Levels of Pay in the respective Pay Matrix with effect from 01-07-2022.

3. Government has therefore, decided to grant another Ad-hoc Increase to those drawing revised Consolidated Pay / Fixed Pay / Honorarium with effect from 01-07-2022. Accordingly, Government direct that employees drawing Consolidated Pay / Fixed Pay / Honorarium be allowed another Ad-hoc Increase with effect from 01-07-2022 as detailed below:-

With effect form	**Ad-hoc Increase**	
	Employees drawing upto Rs. 2500/p.m.	**Employees drawing above Rs. 2500/p.m.**
(1)	**(2)**	**(3)**
01-07-2022	Rs. 50	Rs. 100

4. The payment of arrears of Ad-hoc Increase for the month of July,2022 shall be drawn and disbursed by existing cashless mode of Electronic Clearance System (ECS).

5. This order shall also apply to the employees of Local Bodies, Over Head Tank Operators and Sweepers working in Rural Development and Panchayat Raj Department.

(BY ORDER OF THE GOVERNOR)

N.MURUGANANDAM
ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT

4) எனவே, அரசாணை (நிலை) எண்.256, நிதி(படிகள்)த்துறை, நாள்:18.08.2022ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.199/2022 நாள்.26.09.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

நி.நி.பி. ந.க.எண். பி3/1502/2022

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 26.08.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:429/2022 **பொருள் எண்.28**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிதி நிர்வாகப் பிரிவு (மத்திய கணக்கு குழுமம்) குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் - (MSME) வர்த்தகவரவுகள் தள்ளுபடி அமைப்பு (Trade ReceivablesDiscounting System (TReDS)) - மாநில பொதுத் துறை நிறுவனங்கள், சட்டப்பூர்வ அமைப்புகள், வாரியங்கள், அனைத்து மாநகராட்சிகள் மற்றும் அபெக்ஸ் கூட்டுறவு நிறுவனங்களில் பட்டியல்களை தீர்வு செய்து வழங்குவதற்கு வர்த்தகவரவுகள் தள்ளுபடி முறை தளர்தல் அமைப்பில் (Trade Receivables Discounting System (TReDS) கட்டயாமாகப் பங்கேற்க உத்தரவிடப்பட்டுள்ளது அரசாணையினை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த அனுமதி

அரசாணை(நிலை) எண்.173, நிதி (சம்பளம்) துறை நாள்:13.06.2022ல், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள்(MSME)யாவும், வர்த்தகவரவுகள் தள்ளுபடி அமைப்பில் (Trade Receivables Discounting System (TReDS) மாநில பொதுத் துறை நிறுவனங்கள், சட்டப்பூர்வ வாரியங்கள், அனைத்து மாநகராட்சிகள், மற்றும் அபெக்ஸ் கூட்டுறவு நிறுவனங்களில் பட்டிகளை தீர்வு செய்து வழங்குவதற்கு, வர்த்தகவரவுகள் தள்ளுபடி முறை தளர்தல், (Trade_(Receivables Discounting System (TReDS) அமைப்பில் கட்டாயமாக பங்கேற்க உத்தரவிடப்பட்டது. இதன்படி இவ்வரசாணையில், தெரிவித்துள்ள நடவடிக்கைகளை பெருநகர சென்னை மாநகராட்சியிலும் ஏற்று நடைமுறைப்படுத்த அரசாணையை மாமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

ABSTRACT

Finance Department - Micro, Small and Medium Enterprises - Trade Receivables Discounting System (TReDS) - Participation of the State Public Sector Undertakings, Statutory Boards, Municipal Corporations and Apex Co-operatives in the Trade Receivables Discounting System (TReDS) for settling the Bills of their MSME Suppliers of Goods and Services - Operational Guidelines -Orders -Issued.

Finance (Salaries)Department

G.0.Ms.No.173 Dated:13.06.2022

சுபகிருது வைகாசி-30

திருவள்ளுவர் ஆண்டு - 2053.

Read:1.G.O.Ms.No.237,Finance(Salaries)Department,Dated:25.10.2021.

2.From the Industries Commissioner and Director of Industries and Commerce Letter No. 11911/IES2/2021, Dated:17.11.2021, 25.02.2022 and 28.02.2022.

-oOo-

ORDER:-

In the Government Order first read above, orders were issued for participation of State Public Sector Undertakings,Statutory Boards, Municipal Corporations and Major Apex Co-operatives in the Trade Receivables Discounting System platform for settling the bills of the Micro, Small and Medium Enterprises Suppliers of Goods and Services.

2. Among others, the following agencies were ordered to mandatorily participate in TReDS (Trade Receivables Discounting System)platform for settling the bills of their Micro, Small and Medium Enterprises Suppliers of goods and services.

i. All State Public Sector Undertakings and companies where the State Government exercise managerial control by appointing its Chief Executive Officer.

ii. All Municipal Corporations.

iii. Major Statutory Boards like Chennai Metropolitan Water Supply and Sewerage Board, Tamil Nadu Water Supply and Drainage Board, Tamil Nadu Housing Board and Tamil Nadu Urban Habitat Development Board.

iv. Major Apex Co-operatives like Aavin and Co-optex.

3. In the reference second read above, the Industries Commissioner and Director of Industries and Commerce has sent detailed proposal on the operational guidelines for implementation of TReDS (Trade Receivables Discounting System)platform for Micro,Small and Medium Enterprises and onboarding of all State Public Sector Undertakings, Statutory Boards, Municipal Corporations and all Apex Co-operatives for approval of Government.

4. After careful consideration, Government has decided to accept the proposal of Industries Commissioner and Director of Industries and Commerce. Accordingly, the Government approve the operational guidelines sent in the references second read above and the same is annexed to this order for strict compliance.

(BY ORDER OF THE GOVERNOR)

N. MURUGANANDAM

ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT.

ANNEXURE

To G.O.Ms.No.173 ,Finance(Salaries)Department, dated:13.06.2022

OPERATIONAL GUIDELINES FOR TReDS (Trade Receivables Discounting System) AN ONLINE PLATFORM FOR FACILITATING THE FINANCING/DISCOUNTING OF THE TRADE RECEIVABLES OF MSMEs DEPARTMENT THROUGHMULTIPLE FINANCIERS.

The Government had already issued orders for Micro, Small and Medium Enterprises - Trade Receivables Discounting System based on the Announcement made by the Hon'ble Minister(Finance and Human Resources Management) during the Budget Speech for 2021 - 2022 for the participation of the State Public Sector Undertakings, Statutory Boards, Municipal Corporations and Apex Co-operatives in the Trade Receivables Discounting System for settling the Bills of the Micro, Small and Medium Enterprises Suppliers of Goods and Services.

2.In view of the above orders, the Government issues the following Operational Guidelines for onboarding the procuring entities in the Trade Receivables Discounting System platform:-

(i) TAICO Bank being the principal agency for TReDS platform in Tamil Nadu shall partner with RXIL a Joint Venture between Small Industries Development Bank of India (SIDBI) and National Stock Exchange (NSE) as the sole operator of current accounts with flexi deposit and OD facility for auto debit on behalf of Government of Tami Nadu and will operate the MIS required for the same. For this TAICO bank will enter into an MoU with RXIL such that 90% of each invoice value is brought in for auction on RXIL, if the buyer is registered with TAICO bank. The purpose of 90% is stated in point (vii) & (viii) below.

(ii) All buyers (Government departments, PSU'setc.) will register with RXIL and simultaneously will automatically get registered with TAICO bank's MIS.

(iii) The Government of Tamil Nadu entities shall register on RXIL as buyers and at the same time create daughter and grand daughter accounts with TAICO bank's current account for effecting payments to TReDS only through TAICO bank's current account.

(iv) MSME suppliers of Government of Tamil Nadu entities, who have registered as sellers on RXIL's TReDS platform shall upload their invoices on TReDS platform after completing pre-TReDS procedure (pre-TReDS means the stage before uploading the invoices on the TReDS Platform) procedure, the Sellers will be allowed to upload their supply status of goods and services and their Buyers will be able to validate them electronically and the buyer either accepts or rejects the invoice.

(v) RXILconducts the auction of 90% of invoice value and one of RXIL's registered financiers finances the invoices following the routine TReDS process. The seller shall exercise their option to accept or reject the bid rate offered by the financiers.

(vi) If the Government of Tamil Nadu entity who is the buyer releases the 100% payment within 179 days, it pays to TAICO bank's account and TAICO bank makes available the 90% amount to the financier for auto debit and releases the 10% amount to the MSME supplier directly on TReDS real time or at the most T+1.Apart from the invoice amount settlement, the accrued interest if any on the fund transferred by buyer to TAICO bank's designated bank account is paid to the MSME supplier directly. The normal routine procedure shall be on these lines and TAICO bank will not retain any amount or cause any delay in this case.

(vii) If the Buyer settles the amount before the Due Date, the difference in interest cost will be returned to the Cost Bearer subject to Financier's prior written approval with respect to such early payment and refund of interest for the remaining days in the Due Date.

(viii) If the Government of Tamil Nadu buyer entity on TReDS does not clear100%of a particular invoice on TReDS by the179th day, TAICO bank will allow RXIL to auto debit 90% of the invoice from its designated bank account and clear the invoice from the RXIL platform on the 180th day. TAICO will move 100% of the invoice amount into its bill discounting loan portfolio.The 10% will serve as a deposit in lieu of TAICO bank's interest charges payable by the MSME seller, till the buyer entity clears 100% of the invoice directly to TAICO bank. Once 100% is received, TAICO bank will reduce its interest cost including OD charges payable to TAICO Bank and release the rest of the 10%and accrued interest,if any,to the MSME seller.

(ix) This will ensure that MSME suppliers to Government of Tamil Nadu entities on TReDS get the cheapest bill financing possible in the first 180 days as the financiers are assured of their payments by TAICO bank. TAICO bank's interest cost will also be borne by the MSME seller from the 10% which is not brought on auction on the TReDS platform.

(x) IC&DIC shall work with RXIL and TAICO bank to create the required MIS for operationalising and monitoring the above arrangements seamlessly. The MIS so created shall account for all the transactions like receipt from the buyer, auto debit by the financier, adjustment from 10%, creation of loan account in TAICO bank whenever necessary and reconcile the same with dues on real time basis.IC &DIC will also facilitate

(a) MoU by and among TAICO, RXIL and Buyer entity which would serve as a master agreement.

(b) RXIL's standard MoU between Buyer &RXIL

(c) RXIL's standard MoU between RXIL & TAICO bank as financier.

(xi) The TReDS platform and all the financiers (all banks) on TReDS would consider an invoice as beyond its due date only if it is not paid by the due date committed on the invoice. It is also proposed to keep the due date (on the invoices uploaded by MSME's to be paid by the Tamil Nadu State government entities) in alignment with TAICO bank's own Bill Financing scheme period(which is currently 240 days and in special cases 300 days) in order to facilitate TAICO bank being the principal agent of the Government of Tamil Nadu. An overall

limit of Rs.250 crore may be fixed for any State / PSU Individual liability/Bills.

(xii) Government of Tamil Nadu entities shall be advised to onboard the RXIL platform on TReDS, free of cost, to enable monitoring of performance centrally by the Government. IC&DIC will provide a model agreement for the same.

(xiii) IC&DIC is authorized to facilitate an MoU between TAICO bank and RXIL in this regard to enable development of the system, the MIS and the monitoring mechanism. TAICO bank shall also be authorized to enter into such agreement with RXIL in line with the operational guidelines of Government of Tamil Nadu and act as a principal agent of the nodal department IC&DIC.

(xiv) As Managing Director, MSME - Trade and Investment Promotion Bureau (M-TIPB), shall be authorized to develop or facilitate the development of the necessary software in this regard within TAICO Bank and RXIL such that it is integrated with the bank CBS system and RXIL's TReDS platform.

(xv) The IC&DIC as a nodal department of MSMEs, shall facilitate the Finance Department in monitoring/ reviewing the performance of Tamil Nadu Government entities on the TReDS platform, henever Finance Department so desires.

(xvi) IC&DIC shall be authorised to issue and operate all further instructions, guidelines and electronic workflows to all concerned for implementing the above operational guidelines.

எனவே, அரசாணை(நிலை) எண்.173, நிதி (ஊதியத்துறை) நாள்:13.06.2022.ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைபடுத்த, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி மூலமாக) மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.200/2022 நாள்.26.09.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.13.ந.க.எண்சி2 /3403 /2022

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 09.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:430 / 2022 **பொருள் எண்.29**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13, பகுதி-40, வார்டு-173 அடையார் காந்தி நகர் கால்வாய்கரை சாலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பூங்காவிற்கு கலைஞர். மு.கருணாநிதி பூங்கா என்று பெயர் சூட்டுவதற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 13, பகுதி - 40, வார்டு - 173 அடையார் காந்தி நகர், கால்வாய்கரை சாலையில் ***CRRT*** திட்டத்தின் கீழ் ரூ.941.00 இலட்சம் மதிப்பில் புதிய பூங்கா அமைக்கப்பட்டுள்ளது, இந்நிலையில் 13வது மண்டலகுழு தலைவர் அவர்களின் 08.07.2022 நாளிட்ட கடிதத்தில், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் என்று மக்களால் போற்றப்பட்ட **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் 03.06.1924-ல் பிறந்து தனது 14 வயதிலேயே பொது வாழ்க்கையில் ஈடுபட்டு 13 முறை தமிழக சட்ட மன்ற உறுப்பினராகவும், 5 முறை தமிழ்நாடு முதலமைச்சராகவும் பொறுப்பேற்று 94 வயதில் தனது 80 ஆண்டு கால பொது வாழ்க்கையில் தமிழக மக்களின் வாழ்க்கை தரம் மேம்படுவதற்காக பலவித போராட்டங்களில் ஈடுபட்டு பலமுறை சிறை தண்டனை அனுபவித்து தமிழ் மக்களின் சமூக நீதியை வென்றெடுத்து மக்கள் அனைவரும் சகோதரத்துவத்துடன் சமத்துவமாக வாழ்வதற்கு தனது வாழ்க்கையை அர்பணித்த **முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு. கருணாநிதி** அவர்களின் நினைவை போற்றும் விதமாக பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, பகுதி-40, வார்டு-173 அடையார், காந்தி நகர், கால்வாய்கரை சாலையில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள பூங்காவிற்கு **கலைஞர் மு .கருணாநிதி** பூங்கா என்று பெயர் வைக்க மண்டல குழு கூட்டத்தில் பொருள் கொண்டுவரப்பட்டது.

அதனை தொடர்ந்து 11-07-2022 அன்று நடைபெற்ற 13வது மண்டல வார்டு குழு கூட்டத்தில் இப்புதிய பூங்காவிற்கு **கலைஞர் மு.கருணாநிதி பூங்கா** என்று பெயர் சூட்டுவதற்கு மன்றத்தின் அனுமதி பெற தீர்மானம் எண்.128/2022 ல் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி பெறவேண்டியது அவசியமாகிறது.

எனவே, மண்டலம் - 13 பகுதி - 40 வார்டு - 173 அடையார் காந்தி நகர் கால்வாய்கரை சாலையில் அமைக்கப்பட்டுள்ள இப்புதிய பூங்காவிற்கு **கலைஞர் மு.கருணாநிதி பூங்கா** என்று பெயர் சூட்டுவதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

> *"26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தலைவர், நிலைக்குழு(வ.வி.ம.நி) அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில், **டாக்டர். கலைஞர் மு.கருணாநிதி பூங்கா என்ற திருத்தத்துடன்**, இதனை தீர்மான எண்.201/2022 நாள்.26.09.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".*

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.4/சு.து.ந.க.எண்.சு3/7185 /2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:431/2022 **பொருள் எண்.30**

பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம்-4 - சுகாதாரத்துறை - சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின்(NULM) சுய உதவி குழுக்கள் மூலமாக 142 சுகாதாரப் பணியாளர்களை தற்காலிகத் தொழிலாளர்களாக பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர் - அப் பணியாளர்களின் பணிக் காலம் 26.09.2022 உடன் முடிவடைவதால் மேலும் ஓர் ஆண்டு காலம் (27.09.2022 முதல் 26.09.2023 வரை) சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள பணி நீட்டிப்பு ஆணை வழங்க நிர்வாக அனுமதி.

சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.793/2018, 20.09.2018 மற்றும் பொது சுகாதாரம் பூச்சி தடுப்பு துறையின், 24.09.2018 நாளிட்ட சுற்றறிக்கையின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4, சுகாதாரத்துறையில் கோட்டம்-34 முதல் 48 வரை உள்ள கோட்டங்களில் ஒவ்வொரு வீட்டிலும் உள்ள நீர்தேக்க தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படாத வண்ணம் கொசுப்புழுக்களை அழித்தல் மற்றும் முதிர்ந்த கொசுக்களை மருந்து தெளிக்கப்பட்டு அழிப்பதன் மூலம் கொசுவினால் பரவும் மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா, யானைக்கால் மற்றும் மூளை காய்ச்சல் போன்ற நோய்களை கட்டுப்படுத்த கொசு மருந்து தெளிக்கவும், முதிர்ந்த கொசுக்களை அழிப்பதற்கு புகைப்பரப்பும் பணிகளை மேற்கொள்ளவும், மேலும், நீர்வழித் தடங்களில் உள்ள ஆகாயத்தாமரை மற்றும் தேவையற்ற கழிவுகளை அகற்றும் பணிகளை மேற்கொள்வதற்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின்(NULM) சுய உதவி குழுக்கள் மூலமாக 142 சுகாதாரப் பணியாளர்களை பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.753/2021, நாள்.29.09.2021ல், மண்டலம்-4, சுகாதாரத்துறையில் கோட்டம்-34 முதல் 48 வரையுள்ள மேற்கண்ட கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள 142 தற்காலிக சுகாதாரப் பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின்(NULM) குழுக்கள் மூலம் பெற்று சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள 27.09.2021 முதல் 26.09.2022 வரை ஓராண்டு காலத்திற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு பணி செய்யப்பட்டது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின், 06.06.2022 நாளிட்ட செயல்முறை ஆணையின் அட்டவணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் அனைத்து துறைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் பணிபுரியும் தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய 2022 - 2023ம் ஆண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட தற்காலிக ஊதியத்தினை 01.04.2022 முதல் உயர்த்தி வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர்-4. அவர்களின் ஒப்புதலில், மேற்கண்ட 142 தற்காலிக சுகாதாரப் பணியாளர்களின் (NULM) பணிக்காலம் 26.09.2022 அன்றுடன் முடிவடைவதால், மேலும் ஓராண்டிற்கு (27.09.2022 முதல் 26.09.2023 வரை) கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்த முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களுக்கும் மற்றும் மன்றத்துறைக்கு குறிப்பு வைக்க மண்டல அலுவலர்-4 அவர்களின் ஆணை பெறப்பட்டது. இதனை தொடர்ந்து மேற்கண்ட பணிகளுக்கு ஊதியம் வழங்க கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு ஊதிய மதிப்பீடு கணக்கிடப்பட்டுள்ளது.

அட்டவணை

வ. எண்.	பணியின் வரம்	தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) மூலம் ஈடுபடுத்தப்பட்ட தற்காலிக பணியாளர்களின் எண்ணிக்கை	மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியம் (2022 - 2023ம் ஆண்டுக்கானது)	தோராய செலவினம். ரூ
1	கொசுப்புழு தடுப்புப்பணி, மருந்து தெளிப்புப்பணி புகைப்பரப்பும் பணி நீர் வழித்தடப்பணி மற்றும் சுகாதாரப் பணிகள்	142	ரூ.424/-	ரூ.424/-X142 (தற்காலிக பணியாளர்கள்)X365 நாட்கள்= ரூ.2,19,75,920/-

எனவே

அ)	மண்டலம்-4, சுகாதாரத்துறை, கோட்டம்-34 முதல் 48 வரையுள்ள மேற்கண்ட சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள 142 தற்காலிக பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின்(NULM) குழுக்கள் மூலமாக 27.09.2022 முதல் 26.09.2023 வரை ஓராண்டு காலத்திற்கு எடுத்துக் கொள்ள நிர்வாக அனுமதியும்,
ஆ)	மாவட்ட ஆட்சியரின் விலைப்பட்டியலின் அடிப்படையில் ஒரு நாளுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.424/-வீதம் 142 நபர்கள் X 365 நாட்கள் X ரூ.424 = ரூ.2,19,75,920/-க்கு (ரூபாய் இரண்டு கோடியே பத்தொன்பது இலட்சத்து எழுபத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து இருபது மட்டும்) நிர்வாக அனுமதியும்,
இ)	சுகாதாரப் பணியில் ஈடுபட்டு வரும் தற்காலிக தொழிலாளர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் அன்னாரை மண்டல அலுவலர்-4, அவர்களின் அனுமதியுடன் பணியிலிருந்து நீக்கம் செய்ய அனுமதியும்,
ஈ)	மேற்கண்ட பணிநீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு பதிலாக புதிய நபர்களை பணிக்கு எடுத்து ஈடுபடுத்த வட்டார துணை ஆணையர்(வடக்கு) அவர்களின் ஒப்புதல் பெற்று பணிகளை மேற்கொள்ள அனுமதியும்,
உ)	சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளும் தற்காலிக மலேரியா (NULM) பணியாளர்கள் பணி செய்த நாட்களுக்கு மண்டல நல அலுவலர்-4, அவர்களிடமிருந்து வருகை சான்றொப்பம் பெற்று அதன் அடிப்படையில் கணக்கிட்டு நாள் ஒன்றுக்கு ரூ.424/- வீதம் தினக்கூலி கணக்கிட்டு ஊதியம் வழங்க அனுமதியும்,
ஊ)	தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் வரும் நிதியாண்டுகளில் திருத்தியமைக்கப்படும் பொழுது அதனடிப்படையில் ஊதியம் வழங்க அனுமதியும்
எ)	மேற்கண்ட தற்காலிக மலேரியா பணியாளர்களுக்கு (NULM) கோட்டம் வாரியாக 9 குழுக்கள் அமைத்து அக் குழுக்கள் மூலமாக ஊதியம் வழங்க அனுமதியும்,
ஏ)	இப்பணிக்கான செலவீனத் தொகையை கணக்கு குறியீட்டு எண்.30-32-02, கணக்கு தலைப்பு எண்.210-10-06-02 என்ற தலைப்பில் ரூ.2.20 கோடியினை கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதியும்,

மேற்கண்ட அ முதல் ஏ வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"20.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு(பொதுசுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான.எண்.068/2022,நாள்.20.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

> *"26.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.202/2022 நாள்.26.09.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.5.சு.து.ந.க.எண்.எச்2/12029/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:432/2022 **பொருள் எண்.31**

பெருநகர சென்னை மாநகராட்சி - சுகாதாரத்துறை மண்டலம்-5 - கோட்டம்-49 முதல் 63 வரை உள்ள கோட்டங்களில் சுகாதார பணிகளை மேற்கொண்டு வரும் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) சுய உதவிக்குழு குழுக்கள் வழியாக சுகாதார பணிக்காக 125 நபர்கள் மற்றும் ரிப்பன் மாளிகை, பணிக்காக 16 நபர்கள் என மொத்தம் 141 பணியாளர்களை (01.10.2022 முதல் 30.09.2023 வரை) ஓர் ஆண்டு காலத்திற்கு தற்காலிகமாக பணியமர்த்த நிர்வாக அனுமதி.

சிறப்பு அதிகாரி மற்றும் ஆணையர் அவர்களின் 29.09.2020 நாளிட் ஆணையின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை, மண்டலம்-5, கோட்டம்-49 முதல் 63 வரை உள்ள கோட்டங்களில் வீட்டிலுள்ள நீர்தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத்தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படா வண்ணம், கொசு மருந்து தெளிக்கவும், கொசுக்களின் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த புகைமருந்து தெளிக்கும் பணி மற்றும் சுகாதார பணிகளை மேற்கொள்ளவும் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) சுய உதவிக்குழு குழுக்கள் வழியாக சுகாதார பணிக்காக 125 நபர்கள் மற்றும் ரிப்பன் மாளிகை, பணிக்காக 16 நபர்கள் என மொத்தம் 141 பணியாளர்களை (01.10.2021 முதல் 30.09.2022 வரை) ஓர் ஆண்டு காலத்திற்கு தற்காலிக தினக்கூலி பணியாளர்களை பணியமர்த்த சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.769/2021, 06.10.2021ல், ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தலைமை செயலகம், கலைவாணர் அரங்கம் ரிப்பன் மாளிகை, உயர்நீதி மன்றம், காவல் ஆணையர் அலுவலகம், இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, எழும்பூர் மகப்பேறு மருத்துவமனை, எழும்பூர் அரசு கண் மருத்துவமனை, அரசு ஸ்டான்லி மருத்துவமனை, ஆர்.எஸ்.ஆர்.எம் மகப்பேறு மருத்துவமனை, ஓமந்தூரார் பல்நோக்கு அரசு பொது மருத்துவமனை மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் போன்ற மிக முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை அரசு அலுவலகங்கள் மண்டலம்-5க்குட்பட்ட எல்லையில் இயங்கி வருவதால் தனிக்கவனம் செலுத்தும் வகையில், சுகாதார பணியில் ஈடுபடுத்த 141 பணியாளர்களை பணியமர்த்துவது அவசியமாகிறது. மேலும் 30.09.2022 அன்றுடன் ஓர் ஆண்டு பணிக்காலம் நிறைவடைவதால், பொது சுகாதாரம் மற்றும் பொது மக்கள் நலன் கருதியும் இப்பணிகளை தொடர வேண்டியுள்ளது.

மேலும், மண்டலம்-5, சுகாதார பணிகளை மேற்கொண்டு வரும் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) சுய உதவிக்குழு குழுக்கள் வழியாக சுகாதார பணிக்காக 125 நபர்கள் மற்றும் ரிப்பன் மாளிகை, பணிக்காக 16 நபர்கள் மொத்தம் 141 பணியாளர்களை (01.10.2022 முதல் 30.09.2023 வரை) ஓர் ஆண்டு காலத்திற்கு தற்காலிக தினக்கூலி பணியாளர்களை பணியமர்த்தவும் ஆணை வேண்டப்படுகிறது..

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின், 06.06.2022 நாளிட்ட, செயல்முறை ஆணையின்படி பணிபுரியும் பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

வ எண்	பணியாளர்கள் எண்ணிக்கை	நாள் ஒன்றுக்கு ஊதியம்	01.10.2022 முதல் 30.09.2023 வரை	மொத்தம்
1	141	ரூ.424/-	365 நாட்கள்	ரூ.2,18,21,160

இதனை தொடர்ந்து (01.10.2022 முதல் 30.09.2023 வரை) 141 நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.424/- வீதம் 424 X 365 X 141 = ரூ.2,18,21,160/- (ரூபாய் இரண்டு கோடியே பதினெட்டு இலட்சத்து இருபத்து ஒராயிரத்து நூற்று அறுபது மட்டும்) தேவைப்படுவதால் இத்தொகையை

கணக்கு குறியீடு எண்.30-32-02 மற்றும் கணக்கு தலைப்பு எண்.210-100-602 தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்து தொடர்ந்து பணியினை மேற்கொள்ள ஆணை வேண்டப்படுகிறது.

எனவே,

1) மண்டலம்-5ல் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் பணிகளை மேற்கொள்ள 141 பணியாளர்களுக்கு அடுத்த ஒரு ஆண்டுக்கு 01.10.2022 முதல் 30.09.2023 வரை தினக்கூலி அடிப்படையில் பணிபுரிய தற்காலிகமாக பணியாளர்களை பணியமர்த்தவும்,
2) 141 தற்காலிக பணியாளர்களுக்கு, அடுத்த ஒரு ஆண்டுக்கான 01.10.2022 முதல் 30.09.2023 வரை ஊதியம் வழங்கிட கணக்கு குறியீடு எண்.30-32-02 மற்றும் கணக்கு தலைப்பு எண்.210-100-602ல் ரூ.2,18,21,160/- (ரூபாய் இரண்டு கோடியே பதினெட்டு இலட்சத்து இருபத்து ஒராயிரத்து நூற்று அறுபது மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(பொதுசுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான.எண்.069/2022,நாள்.20.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.203/2022 நாள்.26.09.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ம.அ.8. ந.க.எண்.எச்1/1664/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.08.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:433/2022 **பொருள் எண்.32**

பெருநகர சென்னை மாநகராட்சி-மண்டலம்-8, பகுதி-21 முதல் 23 வரையுள்ள கோட்டம்-94 முதல் 108 வரை-தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட Sector பணியாளர்களின் பணிக்காலம் 30.09.2022ல் முடிவடைகிறது. 01.10.2022 முதல் 30.09.2023 வரை ஒருவருட காலத்திற்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட 149 Sector பணியாளர்களை பணியமர்த்த நிர்வாக அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-8 (அண்ணா நகர்) பகுதி 21, 22 மற்றும் 23 (கோட்டம்-94 முதல் 108 வரை) 15 கோட்டங்களை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் சுமார் 81,027 வீடுகள் உள்ளன. இங்கு டெங்கு, மலேரியா, சிக்குன் குனியா போன்ற கொசுவினால் பரவும் நோய்களை கட்டுப்படுத்த கொசுப்புழுக்கள் வளரிடங்களை கண்டறிந்து அழிக்கும் பணிகளான கிணறு, கீழ்நிலை மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் மருந்திடும் பணி (Sector Work) மழைநீர் கால்வாய், நீர்வழி பிரிவுகளில் வளரும் கொசுப்புழுவை அழிக்கும் வகையில் மருந்து தெளிக்கும் பணி, புகை மருந்து அடிக்கும் பணி மற்றும் டெங்கு, மலேரியா கொரோனா தொற்றால் பாதிப்படைந்த வீடுகளில் கிருமி நாசினி தெளிக்கும் பணி, வீட்டில் தனிமைப்படுத்தப்பட்ட நோயாளிகளுக்கு தினசரி உடல் வெப்பநிலை மற்றும் SPO2 அளவுகளை பரிசோதனை செய்யும் பணி, மேலும், தேவையான பொருட்களை பெற்று வழங்குதல், தடை செய்யப்பட்ட நெகிழி பறிமுதல் செய்யும் பணி, தடுப்பூசி செலுத்தாத நபர்களை கண்டறிந்து தடுப்பூசியின் அவசியத்தை எடுத்துரைத்து தடுப்பூசி செலுத்திக்கொள்வதற்கான உறுதி படிவத்தை வழங்குதல், அவ்வபோது மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை பற்றிய விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை வீடு வீடாக சென்று விநியோகித்தல் மற்றும் சாலையில் சுற்றி திரியும் மாடுகளை பிடிக்கும் பணி போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கோட்டம்-94 முதல் 108 வரை பொது சுகாதாரத்துறை மலேரியா பிரிவில் கடந்த ஆண்டு மொத்தம் 94 மலேரியா பணியாளர்கள் பணிபுரிந்து வந்தனர். அவர்களில் 12 நிரந்தர பணியாளர்கள் வயது முதிர்வு காரணமாக பணி ஓய்வில் சென்றுவிட்டனர். மேலும் 1 பணியாளர் உடல் நல குறைவு காரணமாக இறந்துவிட்டார். தற்போது 81 நிரந்தர மலேரியா பணியாளர்கள் மற்றும் 149 NULM பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்ள நிரந்தர பணியாளர்கள் அல்லாமல் 149 தற்காலிக பணியாளர்களை பணியமர்த்த ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டுள்ளது.

எனவே மொத்தம் 149 பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM)கீழ் பணியமர்த்தி நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து பணி நடைபெற்று வருகிறது. இப்பணியானது 30.09.2022 ல் முடிவடைகிறது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 06.02.2022 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி தினக்கூலி ரூ.410/- லிருந்து ரூ.424/-ஆக உயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே,

அ) மண்டலம்-8, பகுதி-21, 22 மற்றும் 23, கோட்டம்-94 முதல் 108 வரை உள்ள பகுதிகளுக்கு 149 தற்காலிக Sector பணியாளர்களை 01.10.2022 முதல் 30.09.2023 வரை ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்தவும், மாவட்ட ஆட்சியரின் தினக்கூலியின் அடிப்படையில் நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.424/- வீதம் (149 நபர்கள் X ரூ.424 X 365 நாட்கள்) ரூ.2,30,59,240/- (ரூபாய் இரண்டு கோடியே முப்பது லட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து இருநூற்று நாற்பது மட்டும்) செலவினம் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும்,

ஆ) மேற்கண்ட 149 பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தி கொள்ளவும்,

இ) சுகாதார துறையின் தலைப்பு குறியீட்டு எண்.30-32-02 கணக்கு தலைப்பு எண்.210-10-06-02 என்ற தலைப்பில் செலவினங்களை மேற்கொள்ளவும்.

மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொதுசுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான.எண்.062/2022,நாள்.20.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.204/2022 நாள்.26.09.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.9.ந.க.எண்.எச்.2/2279/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 16.08.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:434/2022 **பொருள் எண்.33**

பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம்-9, பகுதி-24 முதல் 27 வரையுள்ள கோட்டம்-109 முதல் 126 வரை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட செக்டார் பணியாளர்களின் பணிக்காலம் 30.09.2022 ல் முடிவடைகிறது. 01.10.2022 முதல் 30.09.2023 வரை ஒரு வருட காலத்திற்கு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் 114 செக்டார் பணியாளர்களை பணியமர்த்த நிர்வாக அனுமதி.

பொது சுகாதாரம், பூச்சி தடுப்புத்துறை, 24.09.2018 நாளிட்ட சுற்றறிக்கையில் கொசு தடுப்பு மற்றும் ஒழிப்பு பணியை மேற்கொள்ளும் ஒப்பந்த தொழிலாளர்களை அந்தந்த மண்டலத்திலேயே தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் (NULM) குழுக்கள் அமைத்து அதன் மூலம் 365 நாட்களுக்கு தற்காலிக தொழிலாளர்களை கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்த அந்தந்த மண்டல அலுவலர்கள் ஆணையரிடம் நிர்வாக அனுமதி பெற்று பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண். 745/2021, 26.09.2021ல், மண்டலம்-9, பகுதி-24 ,25, 26 (ம) 27, கோட்டம்-109 முதல் 126 வரை உள்ள 18 கோட்டங்களில் சுமார் 10 இலட்சம் மக்கள் தொகையும், 226557 வீடுகளும், 63 அரசு கட்டிடங்களும், 231 பள்ளிகளும், 92 குடிசை பகுதிகளும் உள்ளடங்கியுள்ள இப்பகுதிகளில் மலேரியா, டெங்கு மற்றும் இதர தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பு நடவடிக்கைக்காக, கொசு ஒழிப்பு பணிகளான, மழைநீர் வடிகால்வாயில் கொசு கொல்லி மருந்து தெளிக்கும் பணி, கால்வாயில் கொசு கொல்லி மருந்து தெளிக்கும் பணி, வீடுகளில் உள்ள தண்ணீர் தொட்டிகளில் கொசுப்புழு கொல்லி மருந்து போடுதல், கொசு கொல்லி மருந்து தெளிக்கும் பணிகள், எலிக்கொல்லி மருந்து வைக்கும் பணிகள் மற்றும் பொது சுகாதாரத்துறை சார்ந்த பணிகளான தெருக்களில் சுற்றித்திரியும் மாடுகள் பிடிக்கும் பணிகள் மேற்கொள்ள ஒரு பணியாளருக்கு ஒரு நாளைக்கு ரூ. 424/- வீதம் 114 தொழிலாளர்களை தற்காலிகமாக தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (NULM) திட்டத்தின் மூலம் 01.10.2021 முதல் 30.09.2022 வரை ஓராண்டிற்கு தற்காலிகமாக பணியமர்த்த அனுமதி வழங்கப்பட்டது.

மேற்படி வழங்கப்பட்ட ஆணை 30.09.2022 அன்றுடன் முடிவடைவதால், இப்பணிக்கு 109 முதல் 126 வரையிலான கோட்டங்களில் உள்ள 500 வீடுகள் 1 செக்டார் என கணக்கிட்டு 1 செக்டாருக்கு 1 பணியாளர் என 159 செக்டார்களுக்கு 159 பணியாளர்கள் வீடுகளில் உள்ள தண்ணீர் தொட்டிகளில் கொசு கொல்லி மருந்து இடும் பணிகளுக்காகவும், கொசு கொல்லி புகை பரப்பும் பணிகள் மேற்கொள்ள கோட்டம் வாரியாக தலா 1 பணியாளர் என 18 கோட்டங்களுக்கு 18 பணியாளர்களும், கொசு கொல்லி மருந்து தெளிக்கும் பணிகளுக்காக 23 பணியாளர்களும், மழைநீர்வடிகால்வாயில் கொசு கொல்லி மருந்து தெளிக்கும் பணிகளுக்காக 30 பணியாளர்களும், கால்வாயில் கொசு கொல்லி மருந்து தெளிக்கும் பணிகளுக்காக 22 பணியாளர்களும், இதர பணிகளுக்காக 10 பணியாளர்களும் என கணக்கிட்டு மொத்தம் தேவைப்படும் பணியாளர்களின் தேவை குறித்த அட்டவணை கீழ்கண்டவாறு,

S.NO	DN	NO OF SECTOR WORKERS	FOGGING WORKERS	NO OF SPRAY WORKERS	NO.OF SWD WORKERS	NO OF CANAL WORKERS	TOTAL WORKERS
1	109	9	1	1	2	2	15
2	110	8	1	1	3	0	13
3	111	8	1	1	2	2	14

4	112	7	1	1	1	0	10
5	113	11	1	1	1	0	14
6	114	7	1	1	2	1	12
7	115	7	1	1	2	0	11
8	116	9	1	2	3	0	15
9	117	8	1	1	2	8	20
10	118	9	1	1	1	0	12
11	119	8	1	1	1	0	11
12	120	8	1	1	2	2	14
13	121	7	1	1	1	2	12
14	122	10	1	1	2	0	14
15	123	14	1	2	1	1	19
16	124	11	1	2	1	4	19
17	125	12	1	2	2	0	17
18	126	7	1	2	2	0	12
TOTAL WORKERS		160	18	23	31	22	254
19	WATER WAYS, VM FOGG, CATTLE CATCHERS AND DATA ENTRY OPERATORS						10
GRAND TOTAL							264

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு மண்டலம்-9க்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரத்துறையில் பணிபுரிய 264 பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். இவர்களில் 150 நிரந்தர பணியாளர்கள் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். எனவே, மண்டலம்-9 பொது சுகாதாரத்துறையில் பணிபுரிய தேவைப்படும் 264 பணியாளர்களில் 150 நிரந்தர பணியாளர்கள் போக மீதம் 114 பணியாளர்கள் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் பொதுமக்களின் நலன் கருதி 01.10.2022 முதல் 30.09.2023 வரை மேலும் ஒருவருட காலத்திற்கு தற்காலிகமாக பணியமர்த்த மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைத்துறை 08.06.2022 நாளிட்ட சுற்றறிக்கையின் படி குறைந்தபட்சம் ஊதியம் நபர் ஒன்றுக்கு தினசரி ஊதியம் ரூ.424/-வீதம் 365 நாட்களுக்கு (365x 114x424) ரூ.1,76,42,640/- மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும்,

2. 114 செக்டார் பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழுக்கள் (NULM) மூலம் பணியமர்த்தி பணி மேற்கொள்ள ஒப்பந்த புள்ளி நடைமுறையில் இருந்து விலக்கு அளிக்கவும்,

3. இப்பணிக்கு தேவையான நிதி ரூ.1,76,42,640/- (114 workers x per day Rs.424 x 365 days) 303202/210100602 என்ற கணக்கு தலைப்பில் நிதி ஆலோசகர் மூலம் நிதி ஒதுக்கீடு செய்வதற்கும்,

4. பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைத்துறை 08.06.2022 நாளிட்ட சுற்றறிக்கையின் படி நபர் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ஊதியம் தினசரி ஊதியம் ரூ.424/-வீதம், 365 நாட்களுக்கு (365x 114x424) ரூ.1,76,42,640/- மதிப்பீட்டிற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்), நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"20.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான.எண்.066/2022,நாள்.20.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

> *"26.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.205/2022 நாள்.26.09.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.11.ந.க.எண்.சி1/392/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 07.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:435/2022 **பொருள் எண்.34**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-11, பகுதி-32, 33 (ம) 34, கோட்டம் -143 முதல் 155 வரை உள்ள சென்னை மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுப்புறமும் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் ஆகியவற்றை சுத்தம் செய்யும் பணிக்காக தற்காலிகமாக தேசிய நகர்ப்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (NULM) திட்டத்தின் மூலம் பணியாளர்கள் நியமனம் - 01.01.2022 முதல் 31.03.2022 வரை பணிபுரிந்ததற்கு பின்னேற்பு அனுமதி மற்றும் அதற்கான ஊதியம் வழங்க அனுமதி - 01.09.2022 முதல் 30.04.2023 வரையிலான காலத்திற்கு பணியமர்த்த அனுமதி.

அரசாணை Municipal Administration and Water Supply (Ma.IV) Department, G.O (MS) No.166, dated 23.11.2016ன்படி, அந்தந்த உள்ளாட்சி எல்லைக்குள் அமைந்துள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்ய பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் பணியில் ஈடுபடுத்தி பணி மேற்கொள்ளவும், இப்பணிக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்கள் அந்தந்த பள்ளியின் தலைமையாசிரியர்கள் PTA நிதியிலிருந்து பெற்று வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துணை ஆணையர் (கல்வி) அவர்களின் சுற்றறிக்கையில், தெற்கு வட்டார மண்டலங்களான 11 முதல் 15 வரையிலுள்ள சென்னை மாநகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளுக்கு தனியார் நிறுவனத்தின் மூலம் துப்புரவு பணி மேற்கொள்வதை தவிர்த்து வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளப்படி வழிமுறைகளை பின்பற்றி தேவையான பணியாளர்களை கணக்கிட்டு ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டுகுழு திட்டத்தின் மூலம் பணியாளர்களை பணியமர்த்தி பணியை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 2021ஆம் ஆண்டு சென்னை மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி விகிதத்தில் சென்னை மாநகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுப்புறமும் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்யும் பணிக்கு 21 பள்ளிகளில் வகுப்பறைகளை மட்டும் சுத்தம் செய்ய 21 பணியாளர்கள் மற்றும் கழிவறைகளை மட்டும் சுத்தம் செய்ய 17 பணியாளர் மற்றும் வகுப்பறை மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்ய 6 பணியாளர்களும் என மொத்தம் 44 தற்காலிக தினக்கூலி பணியாளர்களும் தேசிய நகர்ப்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (NULM) திட்டத்தின் மூலம் தினக்கூலி பணியில் எடுக்கப்பட்டு (கொரோனா நோய் காரணமாக பள்ளிகள் மூடப்பட்ட காலங்களை தவிர்த்து ஏனைய நாட்களில்) தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டது.

சிறப்பு அதிகாரி (மன்றம்) தீர்மான எண் 360/2021, நாள் 26.02.2021ன்படி மண்டலம் -11க்குட்பட்ட சென்னை மாநகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுபுறமும் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்ய மன்றத் தீர்மானம் மற்றும் நிர்வாக அனுமதி பெறப்பட்டு கீழ்கண்ட பள்ளிகளில் 19.01.2021 முதல் தூய்மை பணிகள் நடைபெற்று வந்தன. இந்நிர்வாக அனுமதி பெறப்பட்ட காலம் 31.12.2021 அன்று முடிவடைந்தது.

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பு நாள். 25.01.2022ன்படி 01.01.2022 முதல் 31.12.2022 வரை மீண்டும் இப்பணியை மேற்கொள்வதற்கு முதன்மை செயலர்/ஆணையர் மற்றும் சிறப்பு அதிகாரி அவர்களின் அனுமதி கோரி கோப்பு 25.01.2022 அன்று அனுப்பப்பட்டது.

இதற்கிடையில் ஏற்கனவே பணிபுரிந்த தற்காலிக பணியாளர்கள் அந்தந்த பள்ளிகளில் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி பணிபுரிய அனுமதிக்கப்பட்டனர். உள்ளாட்சி தேர்தல் பணி காரணமாக கோப்பு தொடர் நடவடிக்கையில் தலைமையகத்தில் பராமரிக்கப்பட்டது.

நிதி ஆலோசகர் அவர்களின் 22.03.2022 நாளிட்ட குறிப்பு மற்றும் மேற்பார்வை பொறியாளர் (தெற்கு) அவர்களின் 27.04.2022 நாளிட்ட குறிப்பின்படி உள்ளாட்சி தேர்தல்

நடைபெற்றுள்ளதால் தற்போதைய நிலையில் மாமன்றத்திற்கு நிலைக்குழு(கல்வி) வழியாக கோப்பினை அனுப்பி உரிய அனுமதி பெறுமாறு கோப்பு திருப்பப்பட்டது.

இந்நிலையில் உரிய அனுமதி பெறப்படாததால் கோட்டம்-143 முதல் 155 வரை உள்ள சென்னை மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுப்புறமும் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் ஆகியவற்றை சுத்தம் செய்யும் பணியினை மேற்கொண்டு வந்த NULM பணியாளர்கள் 01.01.2022 முதல் 31.03.2022 வரையிலான காலத்திற்கு பிறகு 01.04.2022 முதல் இப்பணியிலிருந்து நிறுத்தம் செய்யப்பட்டனர்.

மேலும் நிதி ஆலோசகர் அவர்களின் 22.03.2022 நாளிட்ட குறிப்பு மற்றும் மேற்பார்வை பொறியாளர் (தெற்கு) அவர்களின் 27.04.2022 நாளிட்ட குறிப்பின்படி குறைபாடுகளை அனைத்தும் சரிசெய்யப்பட்டு மண்டலம்-11, வார்டு குழு தீர்மானம் எண். 108, நாள். 15.06.2022ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, கீழ்க்கண்டுள்ள அட்டவணையின்படி மண்டலம்-11ல் உள்ள சென்னை மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுப்புறமும் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் ஆகியவற்றை சுத்தம் செய்யும் பணியினை மேற்கொள்வதற்கு NULM பணியாளர்கள் தற்காலிகமாக பணியமர்த்த முதன்மை செயலர்/ஆணையர் மற்றும் மன்றத்தின் அனுமதி கோரி கோப்பு 18.07.2022 அன்று மீண்டும் கோப்பு அனுப்பப்பட்டது.

பகுதி 32

வ. எண்	கோட்டம் எண்	பள்ளியின் பெயர்	பள்ளிகளில் ஆண்/பெண் விவரம்	வகுப்பறை சுத்தம் செய்பவர்	கழிவறை சுத்தம் செய்பவர்	வகுப்பறை மற்றும் கழிவறை சுத்தம் செய்பவர்	மொத்தம்	குழு எண்ணிக்
1	143	பஞ்சாயத்து யூனியன் நடுநிலை பள்ளி பாடசாலை தெரு, நொளம்பூர்	ஆண்/பெண் இரு பாலர்	1	1	-	2	
2	143	பஞ்சாயத்து யூனியன் துவக்க பள்ளி 5வது பிளாக், சிவன்கோயில் தெரு.	ஆண்/பெண் இரு பாலர்	-	-	1	1	
3	143	அரசு உயர்நிலைப் பள்ளி, 4வது தளம் நொளம்பூர்.	ஆண்/பெண் இரு பாலர்	2	2	-	4	I
4	144	அரசு உயர்நிலைப் பள்ளி, சன்னதி தெரு, மதுரவாயல்	ஆண்/பெண் இரு பாலர்	2	2		4	
5	144	பஞ்சாயத்து யூனியன் துவக்க பள்ளி சன்னதி தெரு, மதுரவாயல்	ஆண்/பெண் இரு பாலர்	-	-	1	1	
6	144	ஆதிதிராவிடர் நடுநிலைப் பள்ளி, பாரதியார் தெரு, மதுரவாயல்	ஆண்/பெண் இரு பாலர்	1	1	-	2	

7	144	பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப் பள்ளி 4வது பிரதான சாலை மதுரவாயல்	ஆண்/ பெண் இரு பாலர்	1	1	-	2	II
8	147	அரசு துவக்க பள்ளி, பெருமாள் கோயில் தெரு, ஆலப்பாக்கம்	ஆண்/ பெண் இரு பாலர்	-	-	1	1	
9	147	அரசு உயர்நிலைப் பள்ளி, பிரதான சாலை ஆலப்பாக்கம்	ஆண்/ பெண் இரு பாலர்	1	1	-	2	
10	147	அரசு உயர்நிலைப் பள்ளி தெரு, கங்கா நகர், மதுரவாயல்	ஆண்/ பெண் இரு பாலர்	1	1	-	2	III
		மொத்தம்		9	9	3	21	

பகுதி 33

வ. எண்	கோட்டம் எண்	பள்ளியின் பெயர்	பள்ளி களில் ஆண்/ பெண் விவரம்	வகுப்பறை சுத்தம் செய்பவர்	கழிவறை சுத்தம் செய்பவர்	வகுப்பறை மற்றும் கழிவறை சுத்தம் செய்பவர்	மொத்தம்	குழு எண்ணிக்
1	145	அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் துவக்கப் பள்ளிக்கூட தெரு, நெற்குன்றம்		1	1		2	
2	148	வில்லிவாக்கம் பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப் பள்ளி, நெற்குன்றம்.		1	1		2	
3	152	ஆதி திராவிடர் உயர்நிலைப் பள்ளி ஆற்காடு சாலை வளசரவாக்கம்		1	1		2	IV
		மொத்தம்		3	3		6	

பகுதி 34

வ. எண்	கோட்டம் எண்	பள்ளியின் பெயர்	பள்ளி களில் ஆண்/ பெண் விவரம்	வகுப்பறை சுத்தம் செய்பவர்	கழிவறை சுத்தம் செய்பவர்	வகுப்பறை மற்றும் கழிவறை சுத்தம் செய்பவர்	மொத்தம்	குழு எண்ணிக்
1	150	நடுநிலைப் பள்ளி, காரம்பாக்கம்.	ஆண்/ பெண் இரு பாலர்	1	1	-	2	

2	150	வில்லிவாக்கம் பஞ்சாயத்து யூனியன் துவக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளி செட்டியார் அகரம்.	ஆண்/ பெண் இரு பாலர்	-	-	1	1	
4	151	அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, பள்ளி சாலை, போரூர்.	பெண் கள் மட்டும்	4	1		5	
5	151	வில்லிவாக்கம் பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப் பள்ளி, பூத்தபேடு, போரூர்.	ஆண்/ பெண் இரு பாலர்	1	1	-	2	V
6	153	வில்லிவாக்கம் துவக்கப் பள்ளி, செட்டி தெரு, போரூர்.	ஆண்/ பெண் இரு பாலர்	-	-	1	1	
7	153	அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, செட்டி தெரு, போரூர்.	ஆண் கள் மட்டும்	2	1	-	3	
8	155	அரசு உயர்நிலை பள்ளி, ஈஸ்வரன் கோயில் தெரு, இராமாபுரம்.	ஆண்/ பெண் இரு பாலர்	1	1	-	2	
9	155	பஞ்சாயத்து யூனியன் துவக்கப் பள்ளி, ஈஸ்வரன் கோயில் தெரு, இராமாபுரம்.	ஆண்/ பெண் இரு பாலர்	-	-	1	1	VI
		மொத்தம்		9	5	3	17	

செயற்பொறியாளர், மாண்புமிகு மேயர் அலுவலகம் அவர்களின் 18.08.2022 நாளிட்ட குறிப்பின்படி தற்காலிக பணியாளர்களுக்கு (NULM) தினக்கூலியாக ரூ.410/- எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 06.06.2022 நாளிட்ட செயல்முறை ஆணையில் தினக்கூலி ரூ.424/- எனக் குறிப்பிட்டுள்ளதால், இதன்படி கோப்பு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என தெரிவித்து, இக்காரணங்களை திருத்தி மீண்டும் கோப்பினை மீள சமர்ப்பிக்குமாறு கோரி கோப்பு திருப்பப்பட்டுள்ளது. இதன்படி கணக்கீடு திருத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே தேசிய நகர்புற வாழ்வாதார அண்டைவீட்டு குழுக்கள் (NULM) மூலம் பணியமர்த்த பெறப்பட்ட நிர்வாக அனுமதி காலம் 31.12.2021 அன்று முடிவுற்ற நிலையில், மேற்படி பணியாளர்களுக்கு ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் மாதம் தினக்கூலி வழங்கப்படாமல் உள்ளது. அரசு பள்ளிகளில் சுற்றுப்புறமும் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்யும் பணி மிக்க அவசியம் என்பதாலும், மாமன்றத்தின் அனுமதி பெற காலதாமதம் ஏற்படக்கூடும் என்பதாலும் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு, கீழ்க்கண்டுள்ள இனங்களுக்கு மன்றத்தின் பின்னேற்பு மற்றும் அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

அ) அவசர மற்றும் அவசியம் காரணமாக மண்டலம் 11, பகுதி 32, 33 (ம) 34, கோட்டம் 143 முதல் 155 வரை உள்ள -21- சென்னை மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுப்புறமும் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் ஆகியவற்றை சுத்தம் செய்யும் பணியினை தேசிய நகர்ப்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழுக்கள் (NULM)

மூலம் 01.01.2022 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில் தற்காலிக பணியாளர்கள் மூலம் பணியினை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதியும், இப்பணியாளர்களுக்கு 01.01.2022 முதல் 31.03.2022 வரையிலான பணிக்காலத்திற்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2021-2022 ஆண்டிற்கான ஊதிய நிர்ணயம் ஆணையின்படி ஊதியம் கணக்கிட்டு வழங்குவதற்கு அனுமதியும்,

ஆ) மண்டலம் 11, பகுதி 32, 33 (ம) 34, கோட்டம் 143 முதல் 155 வரை உள்ள -21- சென்னை மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுப்புறமும் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் ஆகியவற்றை சுத்தம் செய்யும் பணியினை தேசிய நகர்ப்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழுக்கள் (NULM) தற்காலிக பணியாளர்கள் மூலம் 01.09.2022 முதல் 30.04.2023 வரையிலான காலத்திற்கு அரசு பள்ளிகளில் சுற்றுப்புறம் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதியும்,

இ) தேசிய நகர்ப்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழுக்கள் (NULM) மூலம் பணி மேற்கொள்ள ஒப்பந்த புள்ளி நடைமுறையில் இருந்து விலக்கு அளிக்கவும்,

ஈ) 01.01.2022 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில் பணிபுரிந்த பணியாளர்களுக்கு தரப்பட வேண்டிய தினக்கூலியாக நபர் ஒருவருக்கு தினசரி ஊதியம் ரூ.410/- வீதம், 90 நாட்கள் x ரூ. 410/- x 44 நபர்கள் என ரூ.16,23,600/- (ரூபாய் பதினாறு இலட்சத்து இருபத்தி மூன்றாயிரத்து அறுநூறு மட்டும்) மற்றும் 01.09.2022 முதல் 30.04.2023 வரையிலான காலத்திற்கு இப்பணிக்கு தேவையான நிதியாக நபர் ஒருவருக்கு தினசரி ஊதியம் ரூ.424/- வீதம் 212 நாட்கள் x ரூ.424/- x 44 நபர்கள்) என ரூ.39,55,072/-ம் ஆக மொத்தம் ரூ.55,78,672/ஐ (ரூபாய் ஐம்பத்தைந்து இலட்சத்து எழுபத்தி எட்டாயிரத்து அறுநூற்று எழுபத்தி இரண்டு மட்டும்) கணக்கு தலைப்பு எண். 20-21-07 / 230-150-500 வருவாய் நிதி, தனியார்மயம், பள்ளி பராமரிப்பு என்ற கணக்கு தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்யவும், மற்றும் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்ய தேவைப்படும் பொருட்கள் (துடப்பம், பிளீச்சிங் பவுடர், பிரஷ், பெனாயில்) அந்தந்த பள்ளியின் PTA நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளவும், பின்னர் அச்செலவீனங்கள் மாநகராட்சி மூலம் திரும்ப வழங்கவும்,

மேற்கண்ட 'அ முதல் ஈ' வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"16.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண். 28/2022, நாள்.16.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.206/2022 நாள்.26.09.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ம.அ.13.ந.க.எண்.சி1/5175/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *07.09.2022* நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:436/2022 **பொருள் எண்.35**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-*13*, பகுதி-*38,39*,40 (ம) 40(அ), கோட்டம்-170 முதல் 182 வரை உள்ள சென்னை மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுப்புறமும் வகுப்பு அறைகள் மற்றும் கழிவறைகள் ஆகியவற்றை ஒப்பந்த அடிப்படையில் சுத்தம் செய்யும் 95 பணியாளர்களை தற்காலிகமாக தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (*NULM*) திட்டத்தின் மூலம் 01.08.2022 முதல் 31.07.2023 வரை பணியமர்த்த அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறை சுற்றிக்கையில், தொடக்க / நடுநிலை / உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள வகுப்பறைகள் மற்றும் கழிவறைகளை சுத்தம் செய்ய ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (*NULM*) திட்டத்தின் மூலம் பணியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அரசாணை *Municipal Administration AND Water Supply (Ma-IV) Department, G.O.(MS) No.166, dated 23.11.2016*ல், அந்தந்த உள்ளாட்சி எல்லைக்குள் அமைந்துள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்ய பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் பணியில் ஈடுபடுத்தி பணி மேற்கொள்ளவும், இப்பணிக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்கள் அந்தந்த பள்ளியின் தலைமையாசிரியர்கள் *PTA* நிதியிலிருந்து வாங்கி வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வி அலுவலர் அவர்களின் *30.05.2017* நாளிட்ட குறிப்பில், அந்தந்த மண்டலங்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் சென்னை பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளின் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகளை பராமரித்து தூய்மைபடுத்தும் பணியினை துப்புரவு பணியாளர்கள் மூலம் மேற்கொள்ள துணை ஆணையர் (கல்வி) அவர்கள் அறிவுறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு, பள்ளி இயங்கும் அனைத்து நாட்களிலும் வேலை நாட்கள் மட்டுமின்றி தேர்தல் பணி, சிறப்பு வகுப்புகள் மற்றும் வேறு முகாம்கள் நடைபெறும் நாட்களில் தூய்மை பணி மேற்கொள்ளப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மண்டலம்-13, பகுதி-38,39,40 மற்றும் 40(அ), கோட்டம்-168 முதல் 180 வரை உள்ள சென்னை மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுப்புறமும் வகுப்பு அறைகள் மற்றும் கழிவறைகள் ஆகியவற்றை ஒப்பந்த அடிப்படையில் சுத்தம் செய்ய 95 பணியாளர்களை தற்காலிகமாக தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (*NULM*) திட்டத்தின் மூலம் பணியமர்த்த சிறப்பு அதிகாரி மன்ற தீர்மான எண்.1036/2020, நாள்-17.12.2020ன்படி அனுமதி பெறப்பட்டு, 01.08.2020 முதல் 31.07.2021 வரை பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும் பணியமர்த்த சிறப்பு அதிகாரி மன்ற தீர்மான எண்.907/2021, நாள்-18.12.2021ன்படி அனுமதி பெற்று 01.08.2021 முதல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்காலம் 31.07.2022 அன்றுடன் முடிவடைந்துள்ளது.

மேலும் பணி காலம் 31.07.2022 அன்று முதல் முடிவடைந்ததை தொடர்ந்து மாணவர்கள் நலன் கருதியும், சுற்றுசூழல்களையும் பாதுகாக்க தூய்மை பணியாளர்களின் பணி காலத்தை 01.08.2022 முதல் தொடர்ந்து நீடித்து வழங்க ஆவண செய்ய *13*வது மண்டல வார்டு குழுவின் தீர்மான எண்.*115/2022*, நாள்- *11.07.2022* ல் பரிந்துரை பெறப்பட்டுள்ளது.

ஆகவே, சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண். *C2/16317/2021*. நாள்-*06.06.2022*ன்படி நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி விகிதத்தில் ஒரு பணியாளர்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.424/- வீதம் மண்டலம்-13ல் உள்ள 29 பள்ளிகளில் வகுப்பறைகளை சுத்தம் செய்ய 60 பணியாளர்கள் மற்றும் கழிவறைகளை சுத்தம் செய்ய 35 பணியாளர்கள் என மொத்தம் 95 பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 26 நாட்கள் வீதம் 01.08.2022 முதல் 12 மாதத்திற்கு தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (*NULM*) திட்டத்தின் மூலம்

தொடர்ந்து பணிமேற்கொள்ள தேவைப்படும் தொகை ரூ.1,25,67,360/- ஆகும். (424 x 95 x 26 x 12 = 1,25,67,360/-)

கீழ்காணும் பள்ளிகளில் உள்ள சுற்றுபுறம், வகுப்பறைகளின் எண்ணிக்கை மற்றும் கழிவறைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் இதுவரை பணியமர்த்தப்பட்டு பணிமேற்கொள்ளப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பணியாளர்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, கீழ்கண்ட பணியாளர்களை நான்கு பகுதிகளாக பிரித்து வைக்கப்பட்டுள்ளது.

வ. எண்.	வார்டு எண்.	பள்ளியின் பெயர்	மொத்த வகுப்பறை எண்ணிக்கை	வகுப்பறை சுத்தம் செய்பவர்	கழிவறை சுத்தம் செய்பவர்	மொத்தம்
பகுதி-38						
1	176	சாஸ்திரி நகர் 11வது குறுக்கு தெருவில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி	6	1	1	2
2	176	தாமோதரபுரம் 5வது தெருவில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளி	6	1	1	2
3	176	பெசன்ட் நகர் 3வது அவின்யூவில் உள்ள அறிஞர் அண்ணா அரசினர் மேல்நிலைப்பள்ளி	25	2	1	3
4	181	குப்பம் பீச் சாலையில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி	15	1	1	2
5	181	திருவான்மியூர் ஓடை குப்பத்தில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி	7	1	1	2
6	181	காந்தி கிராமத்தில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளி	15	2	1	3
7	182	திருவான்மியூர் பாரதிதாசன் தெருவில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி	23	1	1	2
8	182	திருவான்மியூர் பாரதிதாசன் தெருவில் உள்ள சென்னை மேல்நிலைப் பள்ளி	45	5	2	7
		மொத்தம்	142	14	9	23

வ. எண்.	வார்டு எண்.	பள்ளியின் பெயர்	மொத்த வகுப்பறை எண்ணிக்கை	வகுப்பறை சுத்தம் செய்பவர்	கழிவறை சுத்தம் செய்பவர்	மொத்தம்
பகுதி-39						
1	178	ராஜலட்சுமி நகர் 2வது பிரதான சாலையில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி	18	1	1	2

2	178	ராஜலட்சுமி நகர் 2வது பிரதான சாலையில் உள்ள சென்னை மேல்நிலைப் பள்ளி	29	2	2	4
3	178	திரௌபதி அம்மன் கோயில் 5வது தெருவில் உள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளி	45	5	2	7
4	179	உதயம் நகர் 2வது பிரதான சாலையில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி	7	1	1	2
5	180	பெருமாள் கோயில் தெரு தரமணியில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி	20	2	1	3
6	180	பெருமாள் கோயில் தெரு தரமணியில் உள்ள சென்னை மேல்நிலைப் பள்ளி	24	4	3	7
		மொத்தம்	**143**	**15**	**10**	**25**

வ. எண்.	வார்டு எண்.	பள்ளியின் பெயர்	மொத்த வகுப்பறை எண்ணிக்கை	வகுப்பறை சுத்தம் செய்பவர்	கழிவறை சுத்தம் செய்பவர்	மொத்தம்
		பகுதி-40				
1	171	வெங்கடாபுரத்தில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி	22	1	1	2
2	171	அண்ணா சாலை, சைதாப்பேட்டையில் உள்ள அரசு மாதிரி பள்ளி	44	4	3	7
3	171	அண்ணா சாலை, சைதாப்பேட்டையில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி	30	3	2	5
4	172	கோட்டூர், புது தெருவில் உள்ள சென்னை மழலையர் பள்ளி மற்றும் ஆரம்ப பள்ளி	13	1	0	1
5	172	கோட்டூர், புது தெருவில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளி	16	2	1	3
6	172	கோட்டூர்புரம் சித்ரா நகரில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி	7	1	0	1
7	173	பார்க் வியூ தெருவில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளி	15	1	1	2

8	175	இந்திர நகர் 29வது குறுக்கு தெருவில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி	10	1	0	1
9	175	காமாராஜ் அவின்யூ 1வது தெருவில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி	6	1	0	1
10	175	காமாராஜ் அவின்யூ 1வது தெருவில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளி	15	2	2	4
		மொத்தம்	**178**	**19**	**8**	**27**

வ. எண்.	வார்டு எண்.	பள்ளியின் பெயர்	மொத்த வகுப்பறை எண்ணிக்கை	வகுப்பறை சுத்தம் செய்பவர்	கழிவறை சுத்தம் செய்பவர்	மொத்தம்
பகுதி-40(அ)						
1	170	பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி	7	1	0	1
2	170	சின்னமலையில் உள்ள சென்னை மேல் நிலைப்பள்ளி	20	3	2	5
3	174	ஐந்து பர்லாங் சாலையில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி	20	2	1	3
4	174	ஐந்து பர்லாங் சாலையில் உள்ள சென்னை உயர் நிலைப்பள்ளி	34	5	5	10
5	177	தா.நா. வீ.வ. வாரியம் 3வது அவன்யூவில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி	7	1	0	1
		மொத்தம்	**88**	**12**	**8**	**20**

எனவே,

அ) மண்டலம்-13, பகுதி-38,39,40 மற்றும் 40(அ), கோட்டம்-168 முதல் 180 வரை உள்ள 29 சென்னை மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுப்புறமும் வகுப்பு அறைகள் மற்றும் கழிவறைகள் ஆகியவற்றை சுத்தம் செய்யும் பணிக்கு தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழுக்கள் (NULM) மூலம் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2022-2023 ஆண்டிற்கான ஊதிய ஆணையின்படி நபர் ஒருவருக்கு தினசரி ஊதியம் ரூ.424/- வீதம் 95 பணியாளர்களை 01.08.2022 முதல் 12 மாத காலத்திற்கு பணியமர்த்திக் கொண்டமைக்கும்,

ஆ) தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழுக்கள் (NULM) மூலம் பணிமேற்கொள்ள ஒப்பந்த புள்ளி நடைமுறையில் ஈடுபடுத்த விலக்கு அளிக்கவும்,

இ) இப்பணிக்கு தேவையான நிதி ரூ.1,25,67,360/-ஐ (424 x 95 x 26 x 12 =1,25,67,360/-) 202107 / 210-100-605 என்ற கணக்கு தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்யவும் மற்றும் வகுப்பறைகைள் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்ய தேவைப்படும் பொருட்கள் (துடப்பம், பிளிச்சீங் பவுடர், பிரஷ், பெனாயில்) அந்தந்த பள்ளியின் P.T.A. நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளவும், பின்னர் அச்செலவினங்கள் மாநகராட்சி மூலம் திரும்ப வழங்கவும்

மேற்கண்ட 'அ முதல் இ' வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"16.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண். 29/2022, நாள்.16.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.207/2022 நாள்.26.09.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.14.ந.க.எண். இ1&இ2/3967/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.08.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:437/2022 **பொருள் எண்.36**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-14, வார்டு-181 முதல் 191 வரை உள்ள பெருநகரசென்னை மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுப்புறமும் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் ஆகியவற்றை ஒப்பந்த அடிப்படையில் சுத்தம் செய்யும் பணியாளர்களை தற்காலிகமாக தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (NULM) திட்டத்தின் மூலம் பணியமர்த்த அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளாட்சி எல்லைக்குள் அமைந்துள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்ய பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் பணியில் ஈடுபடுத்தி பணி மேற்கொள்ளவும், இப்பணிக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்கள் அந்தந்த பள்ளியின் தலைமையாசிரியர்கள் PTA நிதியிலிருந்து மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 23.11.2016 நாளிட்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்தந்த மண்டலங்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் சென்னை பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளின் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகளை பராமரித்து தூய்மைபடுத்தும் பணியினை துப்புரவு பணியாளர்கள் மூலம் மேற்கொள்ள துணை ஆணையர் (கல்வி) அவர்கள் அறிவுறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு, பள்ளி இயங்கும் அனைத்து நாட்களிலும் வேலை நாட்கள் மட்டுமின்றி தேர்தல் பணி, சிறப்பு வகுப்புகள் மற்றும் வேறு முகாம்கள் நடைபெறும் நாட்களில் தூய்மைப் பணி மேற்கொள்ளப்படவேண்டும் என 30.05.2017 நாளிட்ட கல்வி அலுவலர் அவர்களின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறை சுற்றிக்கையில் தொடக்க/நடுநிலை/உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள வகுப்பறைகள் மற்றும் கழிவறைகளை சுத்தம் செய்ய ஒப்பந்ததாரர்கள் மூலம் பணி மேற்கொள்வதைவிட NULM திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்வதால் குறைந்த செலவினம் ஏற்படும் என்பதால் தற்காலிகமாக தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (NULM) திட்டத்தின் மூலம் பணியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

கொரோனா நோய் தொற்று பேரிடர் காலத்திற்குப்பின் அனைத்து பள்ளிகளும் திறக்கப்பட்டு நடைபெற்று வருவதாலும், பள்ளி தலைமை ஆசிரியர்கள்கள் வகுப்பறை மற்றும் கழிவறை சுத்தம் செய்யும் பணியினை மேற்கொள்ள ஆட்களை பணியமர்த்த கடிதம் அளித்துள்ள நிலையில் கீழ்காணும் பள்ளிகளில் உள்ள சுற்றுபுறம், வகுப்பறைகள் மற்றம் கழிவறைகள் சுத்தம் செய்யும் பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

வ. எண்.	வார்டு எண்.	பள்ளியின் பெயர்	வகுப்பறை மற்றும் மாணவர் எண்ணிக்கை		வகுப்பறை சுத்தம் செய்பவர்	கழிவறை சுத்தம் செய்பவர்	மொத்தம்
1	181	கொட்டிவாக்கம் குப்பம் பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப்பள்ளி	2	50	1	-	1
2	182	பெருங்குடி பள்ளிசாலை அரசு உயர்நிலைப்பள்ளி	30	1115	2	1	3
3	183	கிழக்கு கடற்கரை சாலை பிரதான சாலை ஆதி திராவிட அரசு உயர்நிலைப்பள்ளி	14	361	1	1	2

4	183	கந்தசாமி நகர் 6வதுதெரு ஆதி திராவிட அரசு ஆரம்பப்பள்ளி	10	180	1	-	1
5	184	பெருங்குடி பள்ளி சாலை அரசு ஆரம்பப்பள்ளி	7	600	1	-	1
6	185	நங்கநல்லூர் 6வது பிரதான சாலை பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப்பள்ளி	6	75	1	-	1
7	186	புழுதிவாக்கம் ராவணன் நகர் பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப்பள்ளி	6	73	1	-	1
8	186	புழுதிவாக்கம் கலைமகள் தெரு அரசு மேல்நிலைப்பள்ளி	6	586	1	1	2
9	187	மடிப்பாக்கம் குளக்கரை பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளி	10	246	1	1	2
10	188	பள்ளிக்கரனை மயிலை பாலாஜி நகர் பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளி	10	127	1	1	2
11	190	பள்ளிக்கரனை தாம்பரம் வேளச்சேரி பிரதான சாலை பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளி	8	370	1	1	2
12	190	பள்ளிக்கரனை தாம்பரம் வேளச்சேரி பிரதான சாலை அரசு உயர்நிலைப்பள்ளி	50	1500	5	1	6
13	191	ஜல்லடியன்பேட்டை வீராத்தம்மன் கோவில் தெரு பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளி	17	418	2	1	3
		மொத்தம்	**176**	**5701**	**19**	**8**	**27**

இதன் பொருட்டு மேற்குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுப்புறம், வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் ஆகியவற்றை சுத்தம் செய்யும் பணியாளர்களை தற்காலிகமாக தேசிய நகர்ப்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (NULM) திட்டத்தின் மூலம் 27 பணியாளர்களை தினக்கூலி ரூ.410 வீதம் 11 மாத காலம் பணியமர்த்த ஆகும் செலவினத் தொகை ரூ.36,97,380/-ற்கு (334 நாட்கள் x 27 நபர்கள் x ரூ.410/-) நிலைக்குழு (கல்வி) மூலம் மன்றத்தின் நிர்வாக அனுமதி பெற 14வது மண்டல வார்டு குழு தீர்மானம் பொருள் எண்.36ல் அனுமதி மற்றும் பரிந்துரை பெறப்பட்டுள்ளது.

எனவே,

1. மண்டலம்-14, பகுதி-41, 42, 43ற்குட்பட்ட கோட்டம்-181 முதல் 191 வரை பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுப்புறம், வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் ஆகியவற்றை சுத்தம் செய்யும் பணிக்கு தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழுக்கள் (NULM) மூலம் 27 பணியாளர்களை 11 மாத காலத்திற்கு (ஜூலை 2022 முதல் மே 2023 வரை) பணியமர்த்த நிர்வாக அனுமதியும்,

2. மேற்படி 27 பணியாளர்களுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2021-22 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட ஊதிய அட்டவணையின்படி நபர் ஒருவருக்கு தினக்கூலி ரூ.410/-வீதம் 11 மாத காலத்திற்கு ரூ.36,97,380/-(27 persons x 334 days x Rs. 410/-) வழங்க அனுமதியும்,
3. மேற்படி பணியினை தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழுக்கள் (NULM) மூலம் பணி மேற்கொள்வதால் ஒப்பந்த புள்ளி நடைமுறையிலிருந்து விலக்கு அளிக்கவும்,
4. மேற்படி பணிக்கு தேவையான செலவுத் தொகை ரூ.36,97,380/-னை பிரிவு குறியீடு 40-41-03ல் 230-150-100 என்ற கணக்கு தலைப்பில் நிதி ஒதுக்கீடு பெறுவதற்கும்
5. வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்ய தேவைப்படும் பொருட்கள் (துடப்பம், பிளீச்சிங் பவுடர், பிரஷ், பெனாயில்) அந்தந்த பள்ளியின் P.T.A. நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளவும், பின்னர் அச்செலவினத்தை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் திரும்ப வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> "16.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண். 25/2022, நாள்.16.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

> "26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.208/2022 நாள்.26.09.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

சு.து.ந.க.எண்.NUHM/பி2/6870/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.08.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:438/2022 **பொருள் எண்.37**

பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுசுகாதாரத்துறை- தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தின் கீழ் - நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 107 மருத்துவ அலுவலர்கள் 09.08.2021 முதல் 08.07.2022 வரை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டனர் - இந்த பணியானது மேலும் 10.07.2022 முதல் 09.06.2023 வரை 11 மாத காலத்திற்கு புதுப்பிக்கப்பட்டது - இதில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட மருத்துவ அலுவலர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் மாத ஊதியம் ரூ.60,000/- த்தினை தொடர்ந்து இந்த ஆண்டும் வழங்கவும் (தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் மாத ஊதியமாக ரூ.40,000/- ம் மாநகராட்சி நிதியில் ரூ.20,000/-ம்) இதற்கென கூடுதலாக தேவைப்படும் தொகையினை மாநகராட்சி நிதியில் இருந்து வழங்க நிர்வாக அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையில் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தின் கீழ் 2022-23 நிதியாண்டில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 107 மருத்துவ அலுவலர்கள் ஒப்பளிக்கப்பட்டு, அவர்கள் 09.08.2021 முதல் 08.07.2022 வரை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு பணிக்காலம் முடிவடைந்த நிலையில், முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின், 01.08.2022 நாளிட்ட ஆணையின்படி, ஒப்பந்த காலம் மேலும் 10.07.2022 முதல் 09.06.2023 வரை 11 மாத காலத்திற்கு புதுப்பிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும், மருத்துவ அலுவலர்களுக்கு மாத ஊதியம் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் ரூ.40,000/-ம் மாநகராட்சி நிதியில் ரூ.20,000/-ம் மொத்தம் ரூ.60,000 வழங்க, சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மான எண்.648/2021 நாள்.13.08.2021ல் அனுமதி பெறப்பட்டு 09.08.2021 முதல் 08.07.2022 வரை வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டும் 10.07.2022 முதல் 09.06.2023 வரை11 மாத காலத்திற்கு மருத்துவ அலுவலர்களுக்கு மாத ஊதியம் ரூ.60,000 வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

Sanctioned Post in ROP 2022- 23 for UPHC & UCHC (A)	NUHM Contribution(B)	GCC Contribution(C)	Medical Officer Salary/Month (B+C =D)	Total Salary for 11 Months (A*D*11 months) =(E)	GCC Contribution for 11 Months (A*C*11 months) = (F)
107	Rs.40,000	Rs.20,000	Rs.60,000	Rs.7,06,20,000	Rs.2,35,40,000

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையில், தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் ஒப்பளிக்கப்பட்ட நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற சமுதாய நல மையங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வரும் 107 மருத்துவ அலுவலர்களுக்கு ஏற்கென வழங்கப்பட்டு வரும் மாத ஊதியம் ரூ.60,000/ (தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் ரூ.40,000/-ம் மாநகராட்சி நிதியில் ரூ.20,000/-ம்) 10.07.2022 முதல் 09.06.2023 வரை 11 மாத காலத்திற்கு வழங்க அனுமதிக்கும்,

2. தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை விட கூடுதலாக தேவைப்படும் தொகை ரூ. 2,35,40,000/- (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்தி ஐந்து லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) மாநகராட்சி நிதி பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-15-09-00 என்ற தலைப்பின் கீழ் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(பொதுசுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான.எண்.064/2022,நாள்.20.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.209/2022 நாள்.26.09.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

க.து.ந.க.எண்.அ1/6676/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.08.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:439/2022 **பொருள் எண்.38**

பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - சென்னைப் பள்ளி மாணவ/மாணவியர்கள் பல்வேறு போட்டித் தேர்வுகளில் பங்கு பெற்று சிறந்த தொழில் சார்ந்த உயர் கல்லூரிகளில் சேர்ந்து பயில சிறப்பு பயிற்சி அளிக்க மாதிரி பள்ளிகள் உருவாக்குதல் - அப்பள்ளிகளில் உட்கட்டமைப்பை மேம்படுத்தவும், கற்றல் - கற்பித்தல் சிறப்பாக நடைபெறும் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதி.

ஒப்பம் 30.05.2022 அன்று திறக்கப்பட்டது. ஒப்பத்தில் திருவாளர்கள் Marwell Enconn Tech Pvt Ltd (Authorized dealer for M/s Doosan Bobcat India Pvt Ltd) நிறுவனத்தார் மட்டுமே கலந்து கொண்டு ஒப்ப வைப்புத் தொகையினை online மூலம் செலுத்தி ஒப்பத்தில் கலந்து கொண்டனர். இந்நிறுவனத்தார் இவ்வொப்பத் தொழில்நுட்ப தகுதிக்குத் தேவையான ஆவணங்களை உரிய முறையில் சமர்ப்பிக்காத நிலையில் இந்நிறுவனத்தாரின் ஒப்பம் தகுதியற்றதாகக் கருதி நிராகரிக்கப்பட்டு இவ்வொப்பம் இரத்து செய்யப்பட்டது.

எனவே, 09.06.2022 அன்று மறு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும், தமிழ்நாளேடு, ஆங்கில நாளேடு மற்றும் மாநில ஒப்பந்த புள்ளி செய்தி மலர் ஆகியவற்றில் மறு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஒப்ப ஆவணங்கள் இலவசமாக இறக்கம் செய்யும் பொருட்டு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டது. மறு ஒப்பம் 22.06.2022 அன்று திறக்கப்பட்டது. மறு ஒப்பத்திலும் திருவாளர்கள். *Marwell Enconn Tech Pvt Ltd (Authorized dealer for M/s. Doosan Bobcat India Pvt Ltd)* நிறுவனத்தார் மட்டுமே கலந்து கொண்டு ஒப்ப வைப்புத் தொகையினை *online* மூலம் செலுத்தி ஒப்பத்தில் கலந்து கொண்டனர். மறு ஒப்பத்தில் இந்நிறுவனத்தார் இவ்வொப்பத்திற்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும், உரிய முறையில் சமர்ப்பித்திருந்த நிலையில், இந்நிறுவனத்தார் அனைத்து தொழில்நுட்ப தகுதிகளையும் பெற்றிருந்ததுடன் *Bobcat make Skid Steer loader* உபகரண உற்பத்தியாளரான திருவாளர்கள் *Doosan Bobcat India Pvt Ltd* நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர் என்பதால் இந்நிறுவனத்தாரின் ஒப்பம் ஏற்கப்பட்டு இந்நிறுவனத்தின் நிதி ஒப்பம் 05.07.2022 அன்று திறக்கப்பட்டது.

திருவாளர்கள். *Marwell Enconn Tech Pvt Ltd (Authorized dealer for M/s. Doosan Bobcat India Pvt Ltd)* நிறுவனத்தார் 42 எண்ணிக்கையிலான *Skid Steer* லோடர்களை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள கீழ்கண்டவாறு விலைபுள்ளி வழங்கியுள்ளனர்.

Operation (A)

Sl.No	*Description*	*Operation Cost per vehicle per shift. (Exclu.GST)*	GST@ 18%	*Total Amount per vehicle per shift (Inclu. GST)*	*Total Amount for 42 nos of vehicles for a period of 1 year Inclu.GST) Rs.*
01.	*Operation Cost*	*1058/-*	*190.44*	*1248.44*	*1,91,38,585.20*
Total Operation Cost for 1 year Inclu GST					*1,91,38,585.20*

Maintenance Cost- (B)

Sl.No	*Description*	*Maintenance Cost per vehicle per day (Exclu.GST)*	GST@ 18%	*Total Amount per vehicle per shift (Inclu.GST)*	*Total Amount for 42 nos of vehicles for a period of 1 year Inclu.GST) Rs.*
01.	*Maintenance Cost*	*3435/-*	*618.30*	*4053.30*	*6,21,37,089/-*
Total Maintenance Cost for 1 year Inclu GST					*6,21,37,089/-*

மேற்கண்ட அட்டவணையின்படி, திருவாளர்கள். *Marwell Enconn Tech Pvt Ltd (Authorized dealer for M/s. Doosan Bobcat India Pvt Ltd)* நிறுவனத்தார் 42 எண்ணிக்கையிலான *Skid Steer* லோடர்களை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள வழங்கியுள்ள தொகை

42 எண்ணிக்கையிலான *Skid Steer Loader*களை

ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் பணிக்கான தொகை - ரூ 1,91,38,585.20 *(A)*

ஒருங்கிணைந்த பராமரிப்பிற்கான தொகை - ரூ. 6,21,37,089.00 *(B)*

மொத்த தொகை *(Inclu.GST@18%)* ரூ.8,12,75,674.20

எனவே இந்நிறுவனத்தாரை 05.07.2022 நாளிட்ட கடிதம் வாயிலாக விலை குறைப்பு வழங்குமாறு கோரப்பட்டது. திருவாளர்கள். *Marwell Enconn Tech Pvt Ltd (Authorized dealer for M/s Doosan Bobcat India Pvt Ltd))* நிறுவனத்தார் தங்களது 05.07.2022 நாளிட்ட கடிதம் வாயிலாக இயக்குதல் பணிக்கான தொகையில் விலையேதும் குறைக்காமல் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான தொகையில் கீழ்கண்டவாறு விலைகுறைப்பு வழங்கியுள்ளனர்.

Operation Cost after 1st Negotiation -(A)

Sl.No	Description	Operation Cost per Shift of 8 hours Exclu. GST in Rs.)		Final Amount per shift vehicle inclu.GST@18% After Negotiation(in Rs)	Total Amount for 42 no of vehicle for a period of 1 year inclu.GST@18% (Rs)	Total Discounted amount after negotiation (in Rs)
		Before Negotiation (a)	After negotiation (b)			
01.	Operation Cost	1058	1058	1248.44	1,91,38,585.20	NIL
Total Operation Cost for a period of 1 year (Inclu.GST@18%)					1,91,38,585.20	NIL

Maintenance Cost after 1st Negotiation -(B)

Sl.No	Description	Maintenance Cost per Day Exclu. GST		Final Amount per day per vehicle Inclu.GST@18% After Negotiation	Total Amount for 42 Nos of Vehicle for a period of one year year inclu.GST@18%	Total Discounted amount after negotiation
		Before Negotiation	After negotiation			
01.	Maintenance Cost	3435	2985	3522.30-	5,39,96,859/-	81,40,230/-
Total Maintenance Cost for 1 year Inclu.GST@18%					5,39,96,859/-	

42 எண்ணிக்கையிலான *Skid Steer Loader*களை

ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் பணிக்கான தொகை - ரூ 1,91,38,585.20 *(A)*

ஒருங்கிணைந்த பராமரிப்பிற்கான தொகை - ரூ. *5,39,96,859.00(B)*

மொத்த தொகை *(Inclu.GST@18%)* ரூ.7,31,35,444.20

மேற்கண்ட அட்டவணையின்படி திருவாளர்கள் *Marwell Enconn Tech Pvt Ltd (Authorized dealer for M/s Doosan Bobcat India Pvt Ltd))* நிறுவனத்தார் இயக்குதல் பணியில் விலை குறைப்பு ஏதும் வழங்காமல் ஒரு வருட காலத்திற்கான ஒருங்கிணைந்த பராமரிப்பு தொகையில் மட்டும் மொத்தம் ரூ.81,40,230/-விலை குறைப்பு செய்து 42 எண்ணிக்கையிலான *Skid Steer Loader*களை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு மேற்கொள்ள இறுதி தொகையாக ரூ.7,31,35,444.20 *(Inclu.GST@18%)* வழங்கியுள்ளனர்.

எனவே, இந்நிறுவனத்தாரை மேலும் விலைகுறைப்பு வழங்குமாறு 06.07.2022 நாளிட்ட கடிதம் வாயிலாக கேட்டுக் கொள்ளப்பட்டது. திருவாளர்கள் *Marwell Enconn Tech Pvt Ltd (Authorized dealer for M/s Doosan Bobcat India Pvt Ltd)* நிறுவனத்தார் தங்களது 07.04.2022 நாளிட்ட கடிதம் வாயிலாக தாங்கள் 2009 முதல் இவ்வுபகரணங்களுக்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொண்டு வருவதாகவும் அது முதல் இவ்வுபகரணங்களை நல்ல முறையில் பராமரித்து வருவதாகவும், கொரோனா ஊரடங்கு காலத்திலும் தாங்கள் நல்ல முறையில் உபகரணங்களை பராமரித்து வந்ததாகவும், 2018 முதல் தங்களுக்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான தொகையில் விலையேற்றம் ஏதும் செய்யப்படவில்லை என்றும் இக்காலத்தில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியில் விலையேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், மேலும் இவ்வுபகரணத்திற்கான உதிரி பாகங்கள் 100% இறக்குமதி செய்யப்படும் காரணத்தினால் அந்நிய செலாவணியின் மதிப்பில் ஸ்திரத் தன்மை இல்லாது உள்ளது என்றும் எனினும் தாங்கள் விலைகுறைப்பு வழங்குவதாகவும் தெரிவித்து ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியில் மட்டும் கீழ்கண்டவாறு விலைகுறைப்பு வழங்கியுள்ளனர்.

Operation Cost after 2nd Negotiation:

Sl.No	Description	Operation Cost per Shift of 8 hours Exclu. GST in Rs.)		Final Amount per shift vehicle Inclu.GST@18% After Negotiation (in Rs)	Total Amount for 42 no of vehicle for a period of 1 year (Inclu.GST@18%) (Rs)	Total Discounted amount after 2nd negotiation (in Rs)
		Before 2nd Negotiation	After 2nd negotiation			
01.	Operation Cost for 1st year	1058	1058	1248.44	1,91,38,585.20	NIL
Total Operation Cost for one year Inclu.GST@18%					1,91,38,585.20	NIL

Maintenance Cost after 2nd Negotiation -(B)

Sl.No	Description	Maintenance Cost per Day Exclu. GST Rs.		Final Amount per day per vehicle Inclu.GST@18% After Negotiation Rs.	Total Amount for 42 Nos of Vehicle for a period of one year year Inclu.GST@18%	Tottal Discounted amount after 2nd Negotiation Rs.
		Before 2nd Negotiation	After 2nd negotiation			
01.	Maintenance Cost for 1st year	2985	2560/-	3020.80	4,63,08,864/-	76.87.995/-
Total Maintenance for one year Inclu.GST@18%					4,63,08,864/-	76,87,995-

இரண்டாவது விலைகுறைப்பிற்கு பின்பு

42 எண்ணிக்கையிலான *Skid Steer Loader*களை

ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் பணிக்கான தொகை - ரூ 1,91,38,585.20 *(A)*

ஒருங்கிணைந்த பராமரிப்பிற்கான தொகை - ரூ. 4.63.08.864 *(B)*

மொத்த தொகை *(Inclu.GST@18%)* ரூ.6,54,47,449.20

மேற்கண்ட அட்டவணைகளின்படி திருவாளர்கள் *Marwell Enconn Tech Pvt Ltd(Authorized dealer for M/s Doosan Bobcat India Pvt Ltd)* **நிறுவனத்தார் தங்களது இரண்டாவது விலைகுறைப்பு கடிதத்தில் இயக்குதல் பணியில் விலை குறைப்பு ஏதும் வழங்காமல் ஒரு வருட காலத்திற்கான ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான தொகையில் மட்டும் மொத்தம் ரூ.76,87,995/-விலை குறைப்பு செய்து 42 எண்ணிக்கையிலான** *Skid Steer Loader***களை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிமேற்கொள்ள இறுதி தொகையாக ரூ.6,54,47,449.20 (***Inclu.GST@18%***) வழங்கியுள்ளனர்..**

இரண்டாவது விலைகுறைப்பிற்குப்பின், திருவாளர்கள் *Marwell Enconn Tech Pvt Ltd (Authorized dealer for M/s Doosan Bobcat India Pvt Ltd)* **நிறுவனத்தார்42 எண்ணிக்கையிலான** *Skid Steer Loader***களை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள தெரிவித்துள்ள இறுதி விலைப்புள்ளியான ரூ.6,54,47,449.20 ஆனது தோராய மதிப்பீடான ரூ.6,56,00,000/- 0.23% குறைவாக இருப்பினும், இந்நிறுவனத்தார் ஒருங்கிணைந்த பாராமரிப்பு பணிக்கென வழங்கியுள்ள விலைப்புள்ளியான நாளொன்றிற்கு ரூ.2560/- என்பது தோராய மதிபீட்டுத் தொகையான ரூ.2523/-ஐ விட கூடுதல் என்பதால் இந்நிறுவனத்தாரை மூன்றாவது முறையாக விலைகுறைப்பு வழங்குமாறு** *08.07.2022* **நாளிட்ட கடிதம் வாயிலாக கேட்டுக் கொள்ளப்பட்டது.**

இதன் தொடர்ச்சியாக, திருவாளர்கள் *Marwell Enconn Tech Pvt Ltd (Authorized dealer for M/s. Doosan Bobcat India Pvt Ltd)* **நிறுவனத்தார் தங்களது 25.07.2022 நாளிட்ட கடிதம் வாயிலாக இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பில் கீழ்கண்டவாறு விலைகுறைப்பு வழங்கியுள்ளனர்.**

Operation Cost after 3rd Negotiation

Sl.No	Description	Operation Cost per Shift of 8 hours Exclu. GST in Rs.)		Final Amount per shift vehicle Inclu.GST@18% After Negotiation(in Rs)	Total Amount for 42 no of vehicle for a period of 1 year (Inclu.GST@18%) (Rs)	Total Discounted amount after 3rd negotiation (in Rs)
		Before 3rd nd Negotiation	After 3rd negotiation			
01.	Operation Cost for 1st year	1058	1040	1227.20	1,88,12,976/-	3,25,609.20
Total Operation Cost for one year Inclu.GST@18%					1,88,12,976/-	3,25,609.20

Maintenance Cost after 3rd Negotiation -(B)

Sl.No	Description	Maintenance Cost per Day Exclu. GST Rs.		Final Amount per day per vehicle Inclu.GST@18% After 3rd Negotiation Rs.	Total Amount for 42 Nos of Vehicle for a period of one year year Inclu.GST@18%	Tottal Discounted amount after 3rd Negotiation Rs.
		Before 3rd Negotiation	After 3rd negotiation			
01.	Maintenance Cost for 1st year	2560	2520/-	2973.60	4.55.85.288/-	7.23.576/-
Total Maintenance for one year Inclu.GST@18%					4,55,85,288/-	7,23,576/-

மூன்றாவது விலைகுறைப்பிற்கு பின்பு

42 எண்ணிக்கையிலான *Skid Steer Loader*களை

ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் பணிக்கான தொகை - ரூ 1,88,12,976 *(A)*

ஒருங்கிணைந்த பராமரிப்பிற்கான தொகை - ரூ. *4,55,85,288(B)*

மொத்த தொகை *(Inclu.GST@18%)* ரூ.6,43,98,264/-

மேற்கண்ட அட்டவணையின்படி திருவாளர்கள். *Marwell Enconn Tech Pvt Ltd (Authorized dealer for M/s Doosan Bobcat India Pvt Ltd)* நிறுவனத்தார் 42 எண்ணிக்கையிலான *Skid Steer Loader*களை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள இறுதி விலைப்புள்ளியாக ரூ.6,43,98,264/- வழங்கியுள்ளனர். இத்தொகையானது தோராய மதிப்பீடான ரூ.6,56,00,000/-ஐவிட 1.83% குறைவாக உள்ளது.

எனவே, திருவாளர்கள் *Marwell Enconn Tech Pvt Ltd(Authorized dealer for M/s Doosan Bobcat India Pvt Ltd)* நிறுவனத்தார் 42 எண்ணிக்கையிலான *Skid Steer Loader*களை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள அளித்துள்ள இறுதி விலைப்புள்ளியான ரூ.6,43,98,264/- (ரூபாய் ஆறு கோடியே நாற்பத்தி மூன்று இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து இருநூற்று அறுபத்தி நான்கு மட்டும்)ஐ ஏற்று இந்நிறுவனத்தின் மூலம் 42 எண்ணிக்கையிலான *Skid Steer Loader* களுக்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிது.

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உயர்மட்ட ஒப்ப சீராய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு, ஒப்ப சீராய்வு குழுவின் 10.08.2022 நாளிட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே ஒப்ப சீராய்வு குழுவின் பரிந்துரையின்படி, திருவாளர்கள் *Marwell Enconn Tech Pvt Ltd(Authorized dealer for M/s. Doosan Bobcat India Pvt Ltd)* மூலம் 42 எண்ணிக்கையிலான *Skid Steer Loader* களுக்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை ரூ.6,43,98,264/- *(Inclu.GST@18%)* (ரூபாய் ஆறு கோடியே நாற்பத்தி மூன்று இலட்சத்து தொண்ணூற்று

எட்டாயிரத்து இருநூற்று அறுபத்தி நான்கு மட்டும்) தோராய செலவீனத்தில் மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட இப்பணிக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஆய்வு வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண் 40-41-10ல் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான கணக்கு குறியீட்டு எண். 230 – 80 – 03 – 00ல் 2022-23, 2023-24ஆம் நிதி ஆண்டுகளில் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியால் மண்டலம் 1,2,3,7,11,12,14 மற்றும் 15 ஆகியவற்றிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருக்களில் அன்றாடம் கொட்டப்படும் கட்டிட இடிபாடுகள் மற்றும் மண்டலங்கள் 4,5,6,7,8 ஆகிய பகுதிகளில் சேரும் பூங்கா கழிவுகள் (Garden Garbages) ஆகியவற்றை அகற்ற பயன்படுத்தப்படும் 42 எண்ணிக்கையிலான Skid Steer Loaderகளை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள கோரப்பட்ட மின்னணு ஒப்பத்தில் கலந்து கொண்டு விலைபுள்ளி வழங்கியுள்ள ஒரே நிறுவனமான திருவாளர்கள். Marwell Enconn Tech Pvt Ltd(Authorized dealer for M/s. Doosan Bobcat India Pvt Ltd) வழங்கியுள்ள கீழ்கண்ட விலையை ஏற்கவும்,

Description	Operation & Comprehensive maintenance for 42 Nos of Skid Steer Loaders (Bobcat Make)	
	Rate per vehicle Inclu.GST@18%	Total Amount for 42 nos of vehicle for a period of 1 year
Operation Cost per Shift of 8 Hours (Inclu.GST)	Rs.1227.20	Rs.1,88,12,976/-
Maintenance Cost per day of 8 hours (Inclu.GST)	Rs.2973.60	Rs.4,55,85,288/-
TOTAL		**Rs. 6,43,98,264/-**

2. மேற்கண்ட விலை விகிதத்தில் 42 எண்ணிக்கையிலான Skid Steer Loader களுக்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கான கீழ்கண்ட தோராய செலவீனமான ரூ.6,43,98,264/- (Inclu.GST@18%) (ரூபாய் ஆறு கோடியே நாற்பத்தி மூன்று இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து இருநூற்று அறுபத்தி நான்கு மட்டும்)ஐ ஏற்கவும்,

3. திருவாளர்கள். Marwell Enconn Tech Pvt Ltd (Authorized dealer for M/s. Doosan Bobcat India Pvt Ltd) நிறுவனத்தாருக்கு பணி ஆணை வழங்கவும்,

4. திருவாளர்கள். Marwell Enconn Tech Pvt Ltd (Authorized dealer for M/s. Doosan Bobcat India Pvt Ltd) நிறுவனத்தாரிடமிருந்து மொத்த ஒப்பத் தொகையில் 2% பாதுகாப்பு தொகையாக பெற்றுக் கொண்டு இந்நிறுவனத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளவும்,

5. இதற்கான செலவீனத்தினை 2022-23, 2023-24ஆம் நிதி ஆண்டுகளில், ஆய்வுவாகனப் பணிமனை பிரிவு குறியீட்டு எண். 40 – 41 – 10 மற்றும் கணக்கு குறியீட்டு எண் 230 – 80 – 03 – 00 ன் கீழ் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். *170 /2022,* நாள். *23.09.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.220/2022 நாள்.26.09.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது*"*.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

இ.பொ. து.ந.க.எண்.எம்1/0390/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:446/2022 **பொருள் எண்.45**

ஒப்பம் - பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை -17 எண்ணிக்கையிலான சக்கர தடை வாகனங்கள்(Skid Steer Loaders Gamzen Make) ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள கோரப்பட்ட மின்னணு ஒப்பத்தில் கலந்து கொண்டு விலைபுள்ளி அளித்துள்ள ஒரே நிறுவனமான திருவாளர்கள் Gamzen Plast Pvt Ltd (Origizal Equipment Manufacturer) மூலம் ஒரு வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சியால் மண்டலங்கள் 1,2,3,7,11,12,14 மற்றும் 15 ஆகியவற்றிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருக்களில் அன்றாடம் கொட்டப்படும் கட்டிட இடிபாடுகள் மற்றும் மண்டலங்கள் 4,5,6,7,8 ஆகிய பகுதிகளில் சேரும் பூங்கா கழிவுகள் *(Garden Garbages)* ஆகியவற்றை அகற்ற பயன்படுத்தப்படும் 59 எண்ணிக்கையிலான சக்கரத் தடை வாகனங்களில் *(Skid Steer Loaders) 42* எண்ணிக்கையிலான சக்கர தடை வாகனங்கள் *Bobcat* நிறுவன தயாரிப்பாகும், மீதமுள்ள 17 எண்ணிக்கையிலான சக்கரத் தடை வாகனங்கள் *Gamzen* நிறுவன தயாரிப்பாகும் .

இவை முறையே 2008 மற்றும் 2011 வருடங்களில் கொள்முதல் செய்யப்பட்டவையாகும். இவ்வகை உபகரணங்கள் ஹைட்ராலிக் முறையிலும் மற்றும் அதிக தொழில்நுட்பத்துடன் கூடிய உபகரணம் என்பதாலும் மற்றும் இவ்வுபகரணத்திற்குத் தேவையான உதிரி பாகங்கள் உபகரண உற்பத்தியாளர்கள் மூலமே பெற இயலும் என்பதாலும் மற்றும் இவ்வுபகரணங்களை இயக்க போதிய தொழில்நுட்ப பணியாளர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் இல்லாத நிலையிலும் இவ்வுபகரணத்திற்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை உபகரண தயாரிப்பாளரின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் 30.*04.2022* அன்றுடன் முடிவடைய இருந்த நிலையில், இவ்வகை உபகரண உற்பத்தியாளர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர் மூலம் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி ரூ.2,67,00,000/- மதிப்பீட்டில் மின்னணு ஒப்பம் கோரி மேற்கொள்ள சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் 25.02.2022 நாளிட்ட அனுமதி மற்றும் மன்றத் தீர்மானம் எண்:*186*/2022 நாள் 01.03.2022 மூலம் மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

இதன் அடிப்படையில், *17* எண்ணிக்கையிலான *Skid Steer Loader (Gamzen Make)*களை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி, *05.04.2022* அன்று ஒப்பந்த புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும் தமிழ்நாளேடு, ஆங்கில நாளேடு மற்றும் மாநில ஒப்பந்த புள்ளி செய்தி மலர் ஆகியவற்றில் ஒப்பந்த புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஒப்ப ஆவணங்களை இலவசமாக இறக்கம் செய்யும் பொருட்டு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

ஒப்ப திறப்பு நாள் 20.05.2022 என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், 16.05.2022 அன்று நடைபெற்ற ஒப்பத்திற்கு முந்தைய கூட்டத்தில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரரின் கோரிக்கைக்கிணங்க , ஒப்பத் திறப்பு நாள் 30.05.2022 அன்றிற்கு ஒத்தி வைக்கப்பட்டது.

ஒப்பம் 30.05.2022 அன்று திறக்கப்பட்டது. ஒப்பத்தில் திருவாளர்கள் *Gamzen Plast Pvt Ltd (Original EquipmentManufacturer)* நிறுவனத்தார் மட்டுமே கலந்து கொண்டு ஒப்ப வைப்புத் தொகையினை *online* மூலம் செலுத்தி ஒப்பத்தில் கலந்து கொண்டனர். இந்நிறுவனத்தார் இவ்வொப்பத்திற்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும், உரிய முறையில் சமர்ப்பித்திருந்த நிலையில், இந்நிறுவனத்தார் அனைத்து தொழில்நுட்ப தகுதிகளையும் பெற்றிருந்ததுடன் *Gamzen make Skid Steer loader* உபகரண உற்பத்தியாளர் என்பதால் இந்நிறுவனத்தாரின் ஒப்பம் ஏற்கப்பட்டு இந்நிறுவனத்தின் நிதி ஒப்பம் *15.06.*2022 அன்று திறக்கப்பட்டது.

திருவாளர்கள். Gamzen Plast Pvt Ltd (Original Equipment Manufacturer) நிறுவனத்தார் 17 எண்ணிக்கையிலான Skid Steer லோடர்களை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள கீழ்கண்டவாறு விலைபுள்ளி வழங்கியுள்ளனர்.

Operation (A)

Sl.No	Description	Operation Cost per vehicle per shift. (Exclu.GST)	GST@ 18%	Total Amount per vehicle per shift (Inclu.GST)	Total Amount for 17 nos of vehicles for a period of 1 year Inclu.GST) Rs.
01.	Operation Cost	1045/-	188.10	1233.10	76,51,385.50
Total Operation Cost for 1 year Inclu GST					76,51,385.50

Maintenance Cost- (B)

Sl.No	Description	Maintenance Cost per vehicle per day (Exclu.GST)	GST@ 18%	Total Amount per vehicle per shift (Inclu.GST)	Total Amount for 17 nos of vehicles for a period of 1 year Inclu.GST) Rs.
01.	Maintenance Cost	2590/-	466.20	3056.20	1,89,63,721/-
Total Maintenance Cost for 1 year Inclu GST					1,89,63,721/-

மேற்கண்ட அட்டவணையின்படி, திருவாளர்கள். Gamzen Plast Pvt Ltd (Original Equipment Manufacturer) நிறுவனத்தார் 17 எண்ணிக்கையிலான Skid Steer லோடர்களை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள வழங்கியுள்ள தொகை

17 எண்ணிக்கையிலான Skid Steer Loaderகளை

ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் பணிக்கான தொகை - ரூ 76,51,385.50 (A)

ஒருங்கிணைந்த பராமரிப்பிற்கான தொகை - ரூ. 1,89,63,721.00 (B)

மொத்த தொகை (Inclu.GST@18%) ரூ.2,66,15,106.50

எனவே, இந்நிறுவனத்தாரை 15.06.2022 நாளிட்ட கடிதம் வாயிலாக விலை குறைப்பு வழங்குமாறு கோரப்பட்டது. திருவாளர்கள். Gamzen Plast Pvt Ltd (Original Equipment Manufacturer) நிறுவனத்தார் தங்களது 21.06.2022 நாளிட்ட கடிதத்தில் தற்போதைய காலகட்டத்தில் Steel –ன் விலை 60-65% வரை உயர்ந்துள்ளதாகவும் மற்றும் வருடாந்திர பண மதிப்பீடு மார்ச் மாத நிலவரப்படி 6.95 சதவிகிதம் உயர்ந்துள்ளதாகவும் இருப்பினும் தாங்கள் விலை குறைப்பு வழங்குவதாகவும் தெரிவித்து கீழ்கண்டவாறு விலைகுறைப்பு வழங்கியுள்ளனர்.

Operation Cost after 1st Negotiation -(A)

Sl.No	Description	Operation Cost per Shift of 8 hours Exclu. GST in Rs.)		Final Amount per shift vehicle inclu.GST@18% After Negotiation(in Rs)	Total Amount for 17 nos of vehicle for a period of 1 year inclu.GST@18% (Rs)	Total Discounted amount after negotiation (in Rs)
		Before Negotiation (a)	After negotiation (b)			
01.	Operation Cost	1045	1040	1227.20	76,14,776	36,609.50
Total Operation Cost for a period of 1 year (Inclu.GST@18%)					76,14,776	36,609.50

Maintenance Cost after 1st Negotiation -(B)

Sl.No	Description	Maintenance Cost per Day Exclu. GST		Final Amount per day per vehicle Inclu.GST@18% After Negotiation	Total Amount for 17 Nos of Vehicle for a period of one year year inclu.GST@18%	Total Discounted amount after negotiation
		Before Negotiation	After negotiation			
01.	Maintenance Cost	2590	2585	3050.30	1,89,27,111.50	36609.50
Total Maintenance Cost for 1 year Inclu.GST@18%					1,89,27,111.50	36609.50

17 எண்ணிக்கையிலான Skid Steer Loaderகளை

ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் பணிக்கான தொகை	-	ரூ 76,14,776.00 (A)
ஒருங்கிணைந்த பராமரிப்பிற்கான தொகை	-	ரூ. 1,89,27,111.50(B)
மொத்த தொகை(Inclu.GST@18%)		ரூ.2,65,41,887.50

மேற்கண்ட அட்டவணையின்படி திருவாளர்கள் Gamzen Plast Pvt Ltd (Original Equipment Manufacturer) நிறுவனத்தார் ஒரு வருட காலத்திற்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புபணிக்கான தொகையில் மொத்தம் ரூ.73,219/-விலை குறைப்பு செய்து 17 எண்ணிக்கையிலான Skid Steer Loaderகளை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு மேற்கொள்ள இறுதி தொகையாக ரூ.2,65,41,887.50 (Inclu.GST@18%) வழங்கியுள்ளனர்.

முதலாவது விலைகுறைப்பிற்குப்பின், திருவாளர்கள் Gamzen Plast Pvt Ltd (Original Equipment Manufacturer) நிறுவனத்தார் 17 எண்ணிக்கையிலான Skid Steer Loaderகளை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள தெரிவித்துள்ள இறுதி விலைப்புள்ளியான ரூ.2,65,41,887.50 ஆனது தோராய மதிப்பீடான ரூ.2,67,00,000/- விட 0.59% குறைவாக இருப்பினும், இந்நிறுவனத்தார் ஒருங்கிணைந்த பாராமரிப்பு பணிக்கென வழங்கியுள்ள விலைப்புள்ளியான நாளொன்றிற்கு ரூ.2585/- (Exclu.GST) என்பது தோராய மதிபீட்டுத் தொகையான ரூ.2541.07 (Exclu.GST)-ஐ விட கூடுதல் என்பதால் இந்நிறுவனத்தாரை இரண்டாவது முறையாக விலைகுறைப்பு வழங்குமாறு 18.07.2022 நாளிட்ட கடிதம் வாயிலாக கேட்டுக் கொள்ளப்பட்டது.

திருவாளர்கள். Gamzen Plast Pvt Ltd(Original Equipment Manufacturer) நிறுவனத்தார் தங்களது 26.07.2022 நாளிட்ட நாளிட்ட கடிதத்தில், தற்போதைய காலகட்டத்தில் Steel -ன் விலை 60-65% வரை உயர்ந்துள்ளதாகவும் மற்றும் வருடாந்திர பண மதிப்பீடு மார்ச் மாத நிலவரப்படி 6.95 சதவிகிதம் உயர்ந்துள்ளதாகவும் இருப்பினும் தாங்கள் மேலும் விலை குறைப்பு வழங்குவதாகவும் தெரிவித்து ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான தொகையில் மட்டும் கீழ்கண்டவாறு விலைகுறைப்பு வழங்கியுள்ளனர்.

Operation Cost after 2nd Negotiation

Sl.No	Description	Operation Cost per Shift of 8 hours Exclu. GST in Rs.)		Final Amount per shift vehicle Inclu.GST@18% After Negotiation(in Rs)	Total Amount for 17 nos of vehicle for a period of 1 year (Inclu.GST@18%) (Rs)	Total Discounted amount after 2nd negotiation (in Rs)
		Before 2nd Negotiation	After 2nd negotiation			
01.	Operation Cost for 1st year	1040	1040	1227.20	76,14,776/-	Nil
Total Operation Cost for one year Inclu.GST@18%					76,14,776/-	Nil

Maintenance Cost after 2nd Negotiation -(B)

Sl.No	Description	Maintenance Cost per Day Exclu. GST Rs.		Final Amount per day per vehicle Inclu.GST@18% After 3rd Negotiation Rs.	Total Amount for 17 Nos of Vehicle for a period of one year year Inclu.GST@18%	Tottal Discounted amount after 2nd Negotiation Rs.
		Before 2nd Negotiation	After 2nd negotiation			
01.	Maintenance Cost for 1st year	2585	2520/-	2973.60	1,84,51,188/-	4,75,923.50
Total Maintenance for one year Inclu.GST@18%					1,84,51,188/-	4,75,923.50

<u>இரண்டாவது விலைகுறைப்பிற்கு பின்பு</u>

17எண்ணிக்கையிலான Skid Steer Loaderகளை

ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் பணிக்கான தொகை	-	ரூ 76,14,776/- (A)
ஒருங்கிணைந்த பராமரிப்பிற்கான தொகை	-	ரூ. 1,84,51,188/-(B)
மொத்த தொகை (Inclu.GST@18%)		ரூ.2,60,65,964/-

மேற்கண்ட அட்டவணையின்படி திருவாளர்கள். Gamzen Plast Pvt Ltd (Original Equipment Manufacturer) நிறுவனத்தார் 17 எண்ணிக்கையிலான Skid Steer Loaderகளை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள இறுதி விலைப்புள்ளியாக ரூ.2,60,65,964/- வழங்கியுள்ளனர். இத்தொகையானது தோராய மதிப்பீடான ரூ. 2,67,00,000/-ஐவிட 2.37% குறைவாக உள்ளது.

எனவே, திருவாளர்கள் Gamzen Plast Pvt Ltd (Original Equipment Manufacturer) நிறுவனத்தார் 17எண்ணிக்கையிலான Skid Steer Loaderகளை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள அளித்துள்ள இறுதி விலைப்புள்ளியான ரூ.2,60,65,964/- (Inclu.GST@18%) (ரூபாய் இரண்டு கோடியே அறுபது இலட்சத்து அறுபத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தி நான்கு மட்டும்)ஐ ஏற்று இந்நிறுவனத்தின் மூலம் 17 எண்ணிக்கையிலான Skid Steer Loader களுக்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிது.

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உயர்மட்ட ஒப்ப சீராய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு, ஒப்ப சீராய்வு குழுவின் 10.08.2022 நாளிட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே ஒப்ப சீராய்வு குழுவின் பரிந்துரையின்படி, திருவாளர்கள் Gamzen Plast Pvt Ltd (Original Equipment Manufacturer) மூலம் 17 எண்ணிக்கையிலான Skid Steer Loader களுக்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை ரூ.2,60,65,964/- (Inclu.GST@18%) (ரூபாய் இரண்டு கோடியே அறுபது இலட்சத்து அறுபத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தி நான்கு மட்டும்) தோராய செலவீனத்தில் மேற்கொள்ளலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட இப்பணிக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஆய்வு வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண்40-41-10ல் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான கணக்கு குறியீட்டு எண். 230 – 80 – 03 – 00ல் 2022-23, 2023-24ஆம் நிதி ஆண்டுகளில் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியால் மண்டலங்கள் 1,2,3,7,11,12,14 மற்றும் 15 ஆகியவற்றிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருக்களில் அன்றாடம் கொட்டப்படும் கட்டிட இடிபாடுகள் மற்றும் மண்டலங்கள் 4,5,6,7,8 ஆகிய பகுதிகளில் சேரும் பூங்கா கழிவுகள் (Garden Garbages) ஆகியவற்றினை அகற்ற பயன்படுத்தப்படும் 17 எண்ணிக்கையிலான Skid Steer Loaderகளை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள கோரப்பட்ட மின்னணு ஒப்பத்தில் கலந்து கொண்டு விலைபுள்ளி வழங்கியுள்ள ஒரே நிறுவனமான திருவாளர்கள். Gamzen Plast Pvt Ltd (Original Equipment Manufacturer) வழங்கியுள்ள கீழ்கண்ட விலையை ஏற்கவும்,

Description	Operation & Comprehensive maintenance for 17 No of Skid Steer Loaders (Gamzen Make)	
	Rate per vehicle Inclu.GST@18%	Total Amount for 17 nos of vehicle for a period of 1 year
Operation Cost per Shift of 8 Hours (Inclu.GST)	Rs.1227.20	Rs.76,14,776/-
Maintenance Cost per day of 8 hours (Inclu.GST)	Rs.2973.60	Rs.1,84,51,188/-/-
TOTAL		**Rs. 2,60,65,964/-**

2. மேற்கண்ட விலை விகிதத்தில் 17 எண்ணிக்கையிலான Skid Steer Loader களுக்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கான தோராய செலவீனமான ரூ.2,60,65,964/- (Inclu.GST@18%) (ரூபாய் இரண்டு கோடியே அறுபது இலட்சத்து அறுபத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தி நான்கு மட்டும்) ஐ ஏற்கவும்,
3. திருவாளர்கள். Gamzen Plast Pvt Ltd (Original Equipment Manufacturer) நிறுவனத்தாருக்கு பணி ஆணை வழங்கவும்,
4. திருவாளர்கள். Gamzen Plast Pvt Ltd (Oriinal Equipment Manufacturer) நிறுவனத்தாரிடமிருந்து மொத்த ஒப்பத் தொகையில் 2% பாதுகாப்பு தொகையாக பெற்றுக் கொண்டு இந்நிறுவனத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளவும்,,
5. இதற்கான செலவீனத்தினை 2022-23, 2023-24, ஆம் நிதி ஆண்டுகளில், ஆய்வுவாகனப் பணிமனை பிரிவு குறியீட்டு எண் 40 – 41 – 10 மற்றும் கணக்கு குறியீட்டு எண் 230 – 80 – 03 – 00 ன் கீழ் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 183 /2022, நாள். 23.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.224/2022 நாள்.26.09.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

இ.பொ.து.ந.கஎண்.எம்1/1000/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:447/2022 **பொருள் எண்.46**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - துணை ஆணையர் (வ (ம) நிதி) அவர்கள் தலைமையில் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டம் - *Metropolitan Transport Corporation Ltd (MTC)* நிறுவனம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தவேண்டிய சொத்துவரி மற்றும் தொழில்வரி ரூ.*24,17,10,498/-*க்கு ஈடாக *Metropolitan Transport Corporation (Chennai) Ltd (MTC)* நிறுவனத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி செலுத்த வேண்டிய வாடகை பேருந்துக்களுக்கான தொகை ரூ.*21,15,84,716/-*யினை நேர்செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டுதல் - மற்றும் கொரோனா நோய்த் தொற்று இரண்டாம் அலையின் காரணமாக முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது - மாநகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள், வெளிநாட்டிலிருந்து வரும் மக்கள் மற்றும் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் ஆகியோரின் போக்குவரத்து வசதிக்காக பணியின் அவசர அவசியத்தினை கருதி சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதியினை எதிர்நோக்கி தமிழ்நாடு அரசு நிறுவனமான மாநகர போக்குவரத்துக் கழகத்திடமிருந்து *(MTC)* பேருந்துக்களை *15.05.2020* முதல் *19.05.2020* வரை, *06.06.2020* முதல்*10.06.2020* வரை, *11.06.2020* முதல் *20.06.2020* வரை, *21.06.2020* முதல் *07.09.2020* வரை மொத்தம் *99* நாட்களுக்கும் மற்றும் நிவர் புயல் காரணமாக *25.11.2020* முதல் *28.11.2020* வரையிலான *4* நாட்களுக்கு அடையாறு கால்வாய்கரையோரம் உள்ள பொதுமக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லவும் வாடகை அடிப்படையில் பணியமர்த்தி பணி மேற்கொண்டமைக்கான செலவுத் தொகை ரூ.*14,13,43,631/-*க்கு பின்னேற்பு அனுமதி

துணை ஆணையர் (வ (ம) நிதி) அவர்களின் தலைமையில், வருவாய்த்துறை அலுவலர்கள், *Metropolitan Transport Corporation Ltd (MTC)* நிறுவன அலுவலர்கள் மற்றும் இயந்திர பொறியியல் துறை அலுவலர்கள் ஆகியோரின் முன்னிலையில் 29.09.2021 மற்றும் 31.05.2022 நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் *Metropolitan Transport Corporation Ltd (MTC)* நிறுவனம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்படவேண்டிய சொத்துவரி *(Property Tax)* மற்றும் தொழில்வரி *(Professional Tax)* உள்ளிட்டவைகளுக்கான நிலுவைத் தொகைக்கான விவரம் மற்றும் கொரோனா நோய்த் தொற்று பரவல் காரணமாக தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட காலங்களில் *Metropolitan Transport Corporation Ltd (MTC)* நிறுவனத்திடமிருந்து வாடகை அடிப்படையில் பேருந்துக்களை பயன்படுத்தியமைக்கான செலவுத் தொகைக்கான விவரங்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில், *Metropolitan Transport Corporation Ltd (MTC)* நிறுவனம் பெருநகர சென்னை மாநகராட்சி செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையினை *Metropolitan Transport Corporation Ltd (MTC)* நிறுவனத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையுடன் நேர் செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது. அதன்படி, 17.05.2022 நாளிட்ட கலந்தாய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட நிலுவைத் தொகை விவரம் பின்வருமாறு.

வ.எண்	விவரம்	தொகை ரூ.
1	*Metropolitan Transport Corporation (Chennai) Ltd (MTC)* நிறுவனம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தவேண்டிய நிலுவைத் தொகை	*24,17,10,498/-*
2	*Metropolitan Transport Corporation (Chennai) Ltd (MTC)* நிறுவனத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை	*21,15,84,716/-*

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் *Metropolitan Transport Corporation (Chennai) Ltd (MTC)* நிறுவனத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை விவரம் பின்வருமாறு.

***Metropolitan Transport Corporation (Chennai) Ltd (MTC)* நிறுவனத்தின் பட்டி விவரம்**

Sl. No	Invoice No/Date	Hiring Period		No. of Buses	Amount Rs.	Details	A S Obtained / Not
		From	To				
1	IL0035/31.03.2020	25.03.2020	31.03.2020	567	69,95,363.00	GCC Staff's	Res.No-311/20,
2	JA0003/30.04.2020	01.04.2020	10.04.2020	899	1,10,91,413.00		

3	JA0008/30.04.2020	11.04.2020	20.04.2020	919	1,13,38,163.00		dt.04.05.2020, Res.No-364/20, dt.08.06.2020. Bill Passed Rs.12,16,39,615
4	JA0018/30.04.2020	21.04.2020	30.04.2020	1022	1,26,08,925.00		
5	JB0001/31.05.2020	01.05.2020	03.05.2020	307	37,87,613.00		
6	JB0006/31.05.2020	04.05.2020	12.05.2020	964	1,18,93,350.00		
7	JB0014/21.05.2020	13.05.2020	16.05.2020	451	55,64,213.00		
8	JB0023/05.06.2020	17.05.2020	31.05.2020	1650	2,03,56,875.00		
9	JB0015/21.05.2020	13.05.2020	16.05.2020	376	37,50,600.00	Foreign Repatriates & Migrant Labours	
10	JB0019/29.05.2020	17.05.2020	24.05.2020	712	71,02,200.00		
11	JB0025/05.06.2020	25.05.2020	31.05.2020	752	75,01,200.00		
12	JC0001/11.06.2020	01.06.2020	05.06.2020	372	37,10,700.00		
13	JC0002/16.06.2020	01.06.2020	10.06.2020	1148	1,41,63,450.00	GCC Staff's	
14	JB0009/31.05.2020	09.05.2020	12.05.2020	178	17,75,550.00	Foreign Repatriates & Migrant Labours	
15	JC0004/16.06.2020	06.06.2020	10.06.2020	226	22,54,350.00	Migrant Labours	A S Not obtained, Bill Pending
16	JC0008 /29.06.2020	15.05.2020	19.05.2020	45	4,48,875.00		
17	JC0008 /29.06.2020	11.06.2020	20.06.2020	1158	1,42,86,825.00	GCC Staff's	
18	JC0012 /29.06.2020	11.06.2020	20.06.2020	795	79,30,125.00	Foreign Repatriates & Migrant Labours	
19	JC0008 /29.06.2020	21.06.2020	30.06.2020	153	15,26,175.00		
20	JC0008 /29.06.2020	21.06.2020	30.06.2020	1132	1,39,66,050.00	GCC Staff's	
21	JC0008 /29.06.2020	01.07.2020	10.07.2020	1146	1,41,38,775.00		
22	JC0008 /29.06.2020	01.07.2020	10.07.2020	107	10,67,325.00	Foreign Repatriates & Migrant Labours	
23	JD0040 /29.06.2020	11.07.2020	31.07.2020	177	17,65,575.00		
24	JD0039 /31.07.2020	11.07.2020	31.07.2020	2461	3,03,62,588.00	GCC Staff's	
25	JE0007 /26.08.2020	01.08.2020	15.08.2020	1741	2,14,79,588.00		
26	JE0006 /26.08.2020	01.08.2020	15.08.2020	114	11,37,150.00	Foreign Repatriates & Migrant Labours	
27	JE0041 /07.09.2020	11.08.2020, 14.08.2020& 16.08.2020	31.08.2020	163	16,25,925.00		
28	JE0040 /07.09.2020	16.08.2020	31.08.2020	1856	2,28,98,400.00	GCC Staff's	
29	JE0002 /14.09.2020	01.09.2020	07.09.2020	486	59,96,025.00		
30	JF0065 /03.10.2020	23.09.2020	24.09.2020	9	89,775.00	Airport to Army Unit	
31	JI0001/31.12.2020	25.11.2020	28.11.2020	30	3,70,125.00	Nivar Cyclone - Public for Adyar river.	
32	KA0003/30.04.2021	25.04.2021	25.04.2021	95	11,72,063.00	GCC Staff's (Sunday)	Res.No-476/21, dt.08.05.2021. Bill Pending
33	KA0004/30.04.2021	25.04.2021	25.04.2021	21	2,09,475.00		
34	KB0001/04.05.2021	02.05.2021	02.05.2021	93	11,47,388.00		
35	KB0002/04.05.2021	02.05.2021	02.05.2021	14	1,39,650.00		
36	KF0005/22.09.2021	17.05.2021	29.05.2021	26	2,59,350.00	Migrant Labours	Res.No-184/22, dt.28.06.2
37	KF0003/22.09.2021	17.05.2021	31.05.2021	1832	2,26,02,300.00	GCC Staff's	

38	KC0008/15.06.2021	10.05.2021	16.05.2021	23	2,69,588.00	Migrant Labours	022. Bill Pending
39	KC0009/15.06.2021	10.05.2021	16.05.2021	847	1,02,63,225.00	GCC Staff's	
40	KF0004/22.09.2021	01.06.2021	20.06.2021	2460	3,03,50,250.00		
41	KJ0003/31.01.2022	09.01.2022	09.01.2022	117 (104+13)	14,12,775.00		Res.No-45/22, dt.22.01.2022. Res.No-134 &135/22, dt.25.01.2022 Bill Pending
42	KJ0004/31.01.2022	16.01.2022	16.01.2022	103 (93+10)	12,47,138.00		
43	KJ0045/31.01.2022	23.01.2022	23.01.2022	96	11,67,863.00		
			Total	**27914**	**33,32,24,331.00**		

மேற்கண்ட பணிக்காக நிர்வாக அனுமதி பெறப்பட்டதற்கான விவரங்கள் பின்வருமாறு.

வ. எண்	பணியின் விவரம்	மன்ற தீர்மான எண் / நாள்.	காலம்	தொகை ரூ
1	துப்புரவு பணியாளர்கள், மருத்துவ சேவை பணியாளர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் அம்மா உணவக தொழிலாளர்களை பணிக்கு அழைத்து வருவதற்கும் மீண்டும் இருப்பிடத்திற்கு அழைத்துச் செல்வதற்கும்	311/2020, 04.05.2020	23.03.2020 to 11.05.2020 (50 days)	6,93,25,000.00
2	புலம் பெயர்ந்த பணியாளர்களுக்காக பல்வேறு இடங்களிலிருந்து சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு அழைத்து வரும் பணி. (MTC, TNSTC & SETC)	364/2020, 08.06.2020	மே-2020 & ஜூன்-2020	4,00,00,000.00
3	துப்புரவு பணியாளர்கள், மருத்துவ சேவை பணியாளர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் அம்மா உணவக தொழிலாளர்களை பணிக்கு அழைத்து வருவதற்கும் மீண்டும் இருப்பிடத்திற்கு அழைத்துச் செல்வதற்கும்.	476/2021, 08.05.2021	24.04.2021 to 31.05.2021 (6 day's -Sunday Only)	82,91,136.00
4		045/2022, 22.01.2022	09.01.2022	14,43,546.00
5		134/2022, 25.01.2022	16.01.2022	12,70,814.00
6		135/2022, 25.01.2022	11.08.2022	11,84,448.00
7		184/2022, 28.06.2022	10.05.2021 to 20.06.2021 (Full Lockdown)	6,37,44,713.00
மொத்தம்				***18,52,59,657.00***

***MTC* நிறுவனத்திற்கு வாடகைத் தொகை வழங்கியமைக்கான விவரம்.**

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	காலம்	மொத்தம் ரூ. *(Gross)*	வழங்கப்பட்ட தொகை ரூ. *(Nett)*	வங்கி/காசோலை எண்/நாள்
1	MTC Ltd, Chennai	25.03.2020 to 10.04.2020	1,80,86,776.00	1,73,63,304.00	IOB/456366/05.06.2020
2		11.04.2020 to 03.05.2020	2,77,34,701.00	2,66,25,313.00	IOB/588104/09.07.2020
3		04.05.2020 to 10.06.2020	5,19,77,888.00	4,98,98,772.00	IOB/588158/16.10.2020
4		09.05.2020 to 05.06.2020	2,38,40,250.00	2,28,86,639.00	IOB/588171/11.12.2020
	மொத்தம்		***12,16,39,615.00***	***11,67,74,028.00***	

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், 23.03.2020 முதல் 23.01.2022 வரையிலான காலங்களில் கொரோனா நோய்த்தடுப்பு முன்னெச்சரிக்கை பணிக்காக ஊரடங்கு காலங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் ஆகியோர்களின் பயன்பாட்டிற்கென மாநகர போக்கவரத்துக் கழக பேருந்துக்களை *(MTC)* வாடகை அடிப்படையில் அமர்த்தியதற்கான செலவுத் தொகை ரூ.33,32,24,331/-ல் அந்நிறுவனத்திற்கு வழங்கிய தொகை ரூ.12,16,39,615/- போக மீதமுள்ள தொகை ரூ.21,15,84,716/- மாநகர போக்குவரத்துக் கழகத்திற்கு வழங்கப்படவேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும், 23.03.2020 முதல் 30.06.2020 வரையிலான காலத்திற்கு ரூ.10,93,25,000/-க்கு சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மானம் (தீர்மான எண்.311/2020, நாள்.04.05.2020 மற்றும் 364/2020, நாள்.06.06.2020) பெறப்பட்ட நிலையில் ரூ.12,16,*39,615/-* செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, கூடுதல் செலவினம் ரூ.1,23,14,615/-க்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்பட வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இந்நிலையில் கொரோனா நோய்த் தொற்றின் தாக்கம் அதிகமான காரணத்தினால் தமிழக அரசு 10.05.2020 முதல் 07.09.2020 வரை முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்ட நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் ஆகியோர்களின் பயன்பாட்டிற்கென மாநகர போக்குவரத்துக் கழக பேருந்துக்களை *(MTC)* வாடகை அடிப்படையில் அமர்த்தியதற்காக 10.05.2020 முதல் 20.06.2020 வரை 42 நாட்களுக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்பட்ட நிலையில் விடுபட்ட காலங்களாகிய 15.05.2020 முதல் 19.05.2020 வரை, 06.06.2020 முதல்10.06.2020 வரை, 11.06.2020 முதல் 20.06.2020 வரை, 21.06.2020 முதல் 07.09.2020 வரை மற்றும் 25.11.2020 முதல் 28.11.2020 என மொத்தம் 103 நாட்களுக்கு பணியின் அவசர அவசியத்தினை கருதி சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதியினை எதிர்நோக்கி தமிழ்நாடு அரசு நிறுவனமான மாநகர போக்குவரத்துக் கழகத்திடமிருந்து *(Metropolitan Transport Corporation (Chennai) Ltd)* பேருந்துக்களை வாடகை அடிப்படையில் பணியமர்த்தி பணி மேற்கொண்டமைக்கான விவரம் பின்வருமாறு.

பின்னேற்பு நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டிய பணிக்கான விவரம்.

பணியின் விவரம்	பயன்படுத்திய நாட்கள்	பேருந்துக்களின் எண்ணிக்கை	பட்டி விவரம்	வாடகை கட்டணம்	தொகை ரூ.
துப்புரவு பணியாளர்கள், மருத்துவ சேவை பணியாளர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் அம்மா உணவக தொழிலாளர்களை பணிக்கு அழைத்து வருவதற்கும் மீண்டும் இருப்பிடத்திற்கு அழைத்துச் செல்வதற்கும் *(MTC)* வாகனங்களை பயன்படுத்தியது.	*11.06.2020 to 20.06.2020*	*1158*	*JC0008/29.06.2020*	*Rs.11,750+GST 5% Rs.588 = Rs.12,338/Bus*	*1,42,86,825*
	21.06.2020 to 30.06.2020	*1132*	*JC0008/29.06.2020*		*1,39,66,050*
	01.07.2020 to 10.07.2020	*1146*	*JC0008/29.06.2020*		*1,41,38,775*
	11.07.2020 to 31.07.2020	*2461*	*JD0039/31.07.2020*		*3,03,62,588*
	01.08.2020 to 15.08.2020	*1741*	*JE0007/28.08.2020*		*2,14,79,588*
	16.08.2020 to 31.08.2020	*1856*	*JE0040/07.09.2020*		*2,28,98,400*
	01.09.2020 to 07.09.2020	*486*	*JE0002/14.09.2020*		*59,96,025*
மொத்தம்	***89***	***10203***			***12,31,28,251***
வெளிநாட்டில் இருந்து வரும் இந்தியர்களை விமான	*15.05.2020 to 19.05.2020*	*45*	*JC0008/29.06.2020*	*Rs.9,500+GST 5% Rs.475 =*	*4,48,875*

நிலையத்திலிருந்து மற்றும் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் ஆகியோரை பல்லாவரத்தில் அமைக்கப்பட்ட ராணுவ கோவிட் முகாம் மற்றும் ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை ஆகியவற்றில் பரிசோதித்து தனிமைப்படுத்தப்பட்டு அவரவர் இருப்பிடத்திற்கு செல்ல ஏதுவாக சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு அழைத்துச் செல்ல (MTC) வாகனங்களை பயன்படுத்தியது.	06.06.2020 to 10.06.2020	226	JC0004/16.06.2020	Rs.9,975/Bus	22,54,330
	11.06.2020 to 20.06.2020	795	JC0012/29.06.2020		79,30,125
	21.06.2020 to 30.06.2020	153	JC0008/29.06.2020		15,26,175
	01.07.2020 to 10.07.2020	107	JC0008/29.06.2020		10,67,325
	11.07.2020 to 31.07.2020	177	JD0040/31.07.2020		17,65,575
	01.08.2020 to 15.08.2020	114	JE0006/26.08.2020		11,37,150
	16.08.2020 to 31.08.2020	163	JE0041/07.09.2020		16,25,925
	01.09.2020 to 07.09.2020	9	JF0065/03.10.2020		89,775
மொத்தம்	**10**	**1789**			**1,78,45,255**
Nivar Cyclone	25.11.2020 to 28.11.2020	30	JI0001/31.12.2020	Rs.11,750+GST 5% Rs.588 = Rs.12,388/Bus	3,70,125
மொத்த கூடுதல்	**89+10+4=103**	**11799**			**14,13,43,631**

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், 15.05.2020 முதல் 19.05.2020 வரை, 06.06.2020 முதல் 10.06.2020 வரை, 11.06.2020 முதல் 20.06.2020 வரை, 21.06.2020 முதல் 07.09.2020 வரை மொத்தம் 99 நாட்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள், மருத்துவ சேவை பணியாளர்கள், சுகாதார பணியாளர்கள் மற்றும் ஊரடங்கு காலத்தில் இயங்கி வரும் அம்மா உணவகங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் அனைவரும் பகல் மற்றும் இரவு பணிக்கு வருவதற்கும் மீண்டும் அவரவர்களின் இருப்பிடத்திற்கு அழைத்துச் செல்வதற்கும் மற்றும் விமான நிலையத்திற்கு வரும் வெளிநாட்டில் வாழும் இந்தியர்களை கோவிட் பரிசோதனைக்காக பல்லாவரத்தில் அமைக்கப்பட்ட ராணுவ கோவிட் முகாம் மற்றும் ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைகளில் பரிசோதனைக்குட்படுத்தி தனிமைப்படுத்தப்பட்டு மீண்டும் அவரவர் இருப்பிடத்திற்கு செல்ல ஏதுவாக சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு அழைத்துச் செல்வதற்கும் மற்றும் நிவர் புயல் காரணமாக 25.11.2020 முதல் 28.11.2020 வரையிலான 4 நாட்களுக்கு அடையாறு கால்வாய் கரையோரம் உள்ள பொதுமக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லவும் போக்குவரத்து வசதி ஏற்படுத்த தமிழ்நாடு அரசு நிறுவனமான மாநகர போக்குவரத்து கழகத்திடமிருந்து *Metropolitan Corporation (Chennai) Ltd (MTC) 12,022* எண்ணிக்கையிலான பேருந்துக்களை வாடகை அடிப்படையில் மொத்தம் ரூ.14,13,43,631/- செலவினத்தில் பணியமர்த்தியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்பட வேண்டும்.

இதற்கான செலவினத்தினை இயந்திர பொறியியல் துறை தலைமையகத்தின் கீழ் கொரோனா நோய்த் தொற்று தடுப்பு பணிக்கென வாடகை வாகனங்கள் அமர்த்துவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கணக்குத் தலைப்பு எண்.40-41-01/230-701-204 வாடகை செலவினம் என்னும் தலைப்பின் கீழ் 2022-23 ஆம் நிதி ஆண்டில் நிதி ஒதுக்கீடு பெற்று செலவினம் மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. கொரோனா நோய்த் தொற்று பரவல் காரணமாக ஊரடங்கு காலங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள், மருத்துவ சேவை பணியாளர்கள், சுகாதார பணியாளர்கள் மற்றும் அம்மா உணவகங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் அனைவரும் பகல் மற்றும் இரவு பணிக்கு வருவதற்கும் மீண்டும் அவரவர்களின் இருப்பிடத்திற்கு அழைத்துச் செல்வதற்கும், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் விமான நிலையத்திற்கு வரும் வெளிநாட்டில் வாழும் இந்தியர்களை பரிசோதனைக்குட்படுத்தி தனிமைப்படுத்தப்பட்டு மீண்டும் அவரவர் இருப்பிடத்திற்கு செல்ல ஏதுவாக 23.03.2020 முதல் 30.06.2020 வரையிலான காலத்திற்கு மாநகர பேருந்துகளை வாடகை அடிப்படையில் பயன்படுத்தியமைக்கான ரூ.10,93,25,000/-க்கு சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மானம் (தீர்மான எண்.311/2020, நாள்.04.05.2020 மற்றும் 364/2020, நாள்.06.06.2020) பெறப்பட்ட நிலையில், இப்பணிக்காக ரூ.12,16,39,615/-க்கு பட்டி தீர்வு செய்யப்பட்டதனால் ஏற்பட்ட கூடுதல் செலவினம் ரூ.1,23,14,615/-க்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

2. கொரோனா நோய்த் தொற்று இரண்டாம் அலையின் ஒரு பகுதியாக ஊரடங்கு அமல்படுத்தப்பட்ட நிலையில் 10.05.2020 முதல் 20.06.202 வரை 42 நாட்களுக்கு மாநகர பேருந்துக்களை வாடகை முறையில் பணியமர்த்தியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு பெறப்பட்ட நிலையில், கொரோனா தொற்று பரவல் இரண்டாம் அலையின் தீவிரம் காரணமாக விடுபட்ட காலங்களாகிய 15.05.2020 முதல் 19.05.2020 வரை, 06.06.2020 முதல்10.06.2020 வரை, 11.06.2020 முதல் 20.06.2020 வரை மற்றும் 21.06.2020 முதல் 07.09.2020 வரை மொத்தம் 99 நாட்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள், மருத்துவ சேவை பணியாளர்கள், சுகாதார பணியாளர்கள் மற்றும் அம்மா உணவகங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் அனைவரும் பகல் மற்றும் இரவு பணிக்கு வருவதற்கும் மீண்டும் அவரவர்களின் இருப்பிடத்திற்கு அழைத்துச் செல்வதற்கும் மற்றும் விமான நிலையத்திற்கு வரும் வெளிநாட்டில் வாழும் இந்தியர்களை கோவிட் பரிசோதனைக்காக பல்லாவரத்தில் அமைக்கப்பட்ட ராணுவ கோவிட் முகாம் மற்றும் ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைகளில் பரிசோதனைக்குட்படுத்தி தனிமைப்படுத்தப்பட்டு மீண்டும் அவரவர் இருப்பிடத்திற்கு செல்ல ஏதுவாக சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு அழைத்துச் செல்வதற்கும் மற்றும் நிவர் புயல் காரணமாக 25.11.2020 முதல் 28.11.2020 வரையிலான 4 நாட்களுக்கு அடையாறு கால்வாய்கரையோரம் உள்ள பொதுமக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லவும் போக்குவரத்து வசதி ஏற்படுத்த தமிழ்நாடு அரசு நிறுவனமான மாநகர போக்குவரத்து கழகத்திடமிருந்து *(MTC) 11,799* எண்ணிக்கையிலான பேருந்துக்களை வாடகை அடிப்படையில் மொத்தம் ரூ.14,13,43,631/- செலவினத்தில் பணியமர்த்தியமைக்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

3. இனம் 2 ஏற்பின், *Metropolitan Transport Corporation (Chennai) Ltd (MTC)* நிறுவனம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தவேண்டிய சொத்துவரி மற்றும் தொழில்வரி நிலுவைத் தொகை ரூ.24,17,10,498/-க்கு ஈடாக *Metropolitan Transport Corporation (Chennai) Ltd (MTC)* நிறுவனத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி செலுத்த வேண்டிய வாடகை பேருந்துக்களுக்கான தொகை ரூ.21,15,84,716/-யினை நேர்செய்ய அனுமதி வேண்டியும்,

4. இதற்கான செலவினத்தினை இயந்திர பொறியியல் துறை தலைமையகத்தின் கீழ் கொரோனா நோய்த் தொற்று தடுப்பு பணிக்கென வாடகை வாகனங்கள் அமர்த்துவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கணக்குத் தலைப்பு எண்.40-41-01/230-701-204 வாடகை செலவினங்கள் என்னும் தலைப்பின் கீழ் 2022-23 ஆம் நிதி ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்து வழங்க நிதி ஆலோசகர் அவர்களை கோர அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 182 /2022, நாள். 23.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.223/2022 நாள்.26.09.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

இ.பொ.து.ந.க.எண்.எம்1/1199 C/2021

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:448/2022 **பொருள் எண்.47**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - வடகிழக்கு பருவ மழை காரணமாக ஏற்படுகின்ற வெள்ள பாதிப்புகளை சீர்செய்ய ஒரு மண்டலத்திற்கு 2 வீதம் 15 மண்டலங்களுக்கு 30 எண்ணிக்கையில் 25 HP திறன் கொண்ட நீர் இறைக்கும் பம்புகள் கொள்முதல் செய்ய ஒப்பம் கோரப்பட்டது - குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். Gita Pumps India Pvt. Ltd., நிறுவனத்தாரிடமிருந்து முதற்கட்டமாக 10 எண்ணிக்கையில் 25 HP திறன் கொண்ட நீர் இறைக்கும் பம்புகள் கொள்முதல் செய்ய அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதி வடகிழக்கு பருவழை மற்றும் பருவ நிலை மாறுபாடுகளின் பேரிடர் நிகழ்வுகளின் போது மீட்பு பணிக்கான உபகரணங்கள், மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து கொள்முதல் செய்ய 18.11.2019 நாளிட்ட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதன் தொடர்பாக, சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட தாழ்வான பகுதிகளில் தேங்குகின்ற மழைநீரை உடனுக்குடன் அகற்றுவதற்கு 30 எண்ணிக்கையில் 25 *HP* திறன் கொண்ட நீர் இறைக்கும் பம்புகள் கொள்முதல் செய்ய மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கென மண்டலம் 1 முதல் 15 வரை மண்டலங்களில் இருப்பில் உள்ள நீர் இறைக்கும் பம்புகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனினும், தற்பொழுதுள்ள பம்புகள் போதுமான அளவில் இல்லாததால், மேற்கண்ட அரசாணையின்படி மண்டலத்திற்கு 2 வீதம் 15 மண்டலங்களுக்கு 30 எண்ணிக்கையில் 25 *HP* திறன் கொண்ட பம்புகள், இயந்திரப் பொறியியல் துறை, தலைமையகத்தின் வாயிலாக மின்னணு ஒப்பம் கோர மன்றத் தீர்மான எண்.048/2020, நாள் 21.01.2020 மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது.

முதன்மைச் செயலாளர்/ ஆணையர் அவர்களின் 03.12.2021 நாளிட்ட குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, ஒப்பந்ததாரர் திருவாளர்கள். *Fermier Engineers (P) Ltd.*, அவர்கள், இப்பணிக்கான பணி ஆணையினை பெற்ற பிறகு கொரோனா பாதிப்பு காரணத்தால் பம்புகளை வழங்க இயலாததற்கு தெரிவித்துள்ள காரணங்களை ஏற்று இவ்வொப்பத்தை ரத்து செய்து மறு ஒப்பம் கோர ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வொப்பந்ததாரர் செலுத்தியுள்ள ஒப்ப முன் வைப்புத் தொகை ரூ.1,50,000/-ஐ அபராதமாக பறிமுதல் செய்யவும் ஆணை வழங்கப்பட்டது.

இதன் அடிப்படையில் இப்பணிக்கான பல்வேறு நாளிட்ட ஒப்ப அறிவிப்புகள் வெளியிடப்பட்டும் இப்பணிக்கான ஒப்பத்தில் எந்தவொரு ஒப்பந்ததாரரும் பங்குபெறவில்லை. இந்நிலையில் 16.05.2022 அன்று வெளியிடப்பட்ட 3ம் கட்ட மறு ஒப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டது. 30 எண்ணிக்கையில் பம்புகள் கொள்முதல் செய்ய 02.06.2022 அன்று ஒப்பம் திறக்கப்பட அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஒப்பந்ததாரர்களின் கோரிக்கையினை ஏற்று ஒப்பம் 22.06.2022 அன்று திறக்கப்பட்டது. ஒப்பத்தில் திருவாளர்கள். *Gita Pumps India Pvt. Ltd.*, என்கிற ஒரு நிறுவனம் மட்டும் கலந்து கொண்டது.

இந்நிறுவனத்தின் தொழில்நுட்ப ஒப்பம், ஒப்ப சீராய்வு குழுவினரால் சீராய்விற்கு உட்படுத்தப்பட்டது. இதில் திருவாளர்கள். *Gita Pumps India Pvt. Ltd.*, நிறுவனத்தார் அனைத்து ஆவணங்களையும் உரிய முறையில் சமர்ப்பித்ததுடன் அனைத்து தொழில்நுட்ப தகுதிகளையும் பெற்றிருந்ததால், இந்நிறுவனத்தின் ஒப்பம் தகுதியானதாக கருதப்பட்டு இந்நிறுவனத்தின் நிதி ஒப்பம் 05.07.2022 அன்று திறக்கப்பட்டது.

இதில் திருவாளர்கள். *Gita Pumps India Pvt. Ltd.*, நிறுவனத்தார் 30 எண்ணிக்கையில் *25 HP* திறன் கொண்ட பம்புகள் வழங்க கீழ்கண்டவாறு விலைப்புள்ளி வழங்கியுள்ளனர்.

Sl. No.	Name of the Company	Total Amount for 30 Nos. of 25 HP Pumps Rs.	Remarks
1.	திருவாளர்கள். Gita Pumps India Pvt. Ltd.,	1,56,79,036.80 Including 12% GST (Rs.5,22,634.56 Unit)	L1

மேற்கண்ட அட்டவணையின்படி, திருவாளர்கள். Gita Pumps India Pvt. Ltd., நிறுவனத்தார் 30 எண்ணிக்கையில் 25 HP திறன் கொண்ட பம்புகள் வழங்க ரூ.1,56,79,036.80 (Including 12% GST) என குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளார். இதன்படி ஒரு பம்பின் விலை ரூ. 5,22,634.56 ஆகும். இந்நிறுவனத்தாரை விலைக்குறைப்பு வழங்க கோரி 05.07.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. திருவாளர்கள். Gita Pumps India Pvt. Ltd., நிறுவனத்தார் 06.07.2022 நாளிட்ட கடிதத்தில் கீழ்கண்டவாறு விலை குறைப்பு செய்து வழங்கியுள்ளார்.

Sl. No.	Name of the Company	Description	Qty	Quoted Rate (Including 12% GST) Rs.	Rate after negotiation Rs.	Final Amount Rs.
1.	திருவாளர்கள். Gita Pumps India Pvt. Ltd.,	Purchase of 25 HP Diesel operated dewatering pumps with necessary accessories mounted on trailer for the use of Zone I to XV	30 Nos.	Rs.5,22,634.56 unit rate per pump	Rs. 4,99,000/- unit rate per pump	**Total Rs. 1,49,70,000/- Incl. GST @ 12 %**
				Total Rs. 1,56,79,036.80 (Including 12% GST)	Total Rs. 1,49,70,000/- (Including 12% GST)	

விலைக்குறைப்பிற்கு பின் 30 எண்ணிக்கையில் 25 HP திறன் கொண்ட பம்புகள் வழங்க தெரிவித்துள்ள இறுதி விலையான ரூ.1,49,70,000/- இப்பணிக்கான தோராய மதிப்பீடான ரூ.1,50,00,000/-ஐ விட (-) 0.20% குறைவாகும்.

எனவே, திருவாளர்கள். Gita Pumps India Pvt. Ltd., நிறுவனத்தார் 30 எண்ணிக்கையில் 25 HP திறன் கொண்ட பம்புகள் வழங்க தெரிவித்துள்ள இறுதி விலையான ரூ.1,49,70,000/- ஏற்புடையதாக கருத்தில் கொண்டு உயர் மட்ட குழுவின் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது. இக்கோப்பில் துணை ஆணையர் (வ (ம) நி) அவர்களின் 30.07.2022 நாளிட்ட குறிப்பில் மேலே தெரிவிக்கப்பட்டுள்ள டீசல் இன்ஜினில் இயங்கும் நீர் இறைக்கும் பம்புகள் கொள்முதலை ரூ.50.00 இலட்சத்திற்கு குறைத்திட அறிவுறுத்தி இருந்தார்கள்.

இதன்படி, உயர் மட்ட ஒப்ப குழுமத்தின் 15.09.2022 நாளிட்ட பரிந்துரையில், தலைமை பொறியாளர் (இ/தி.க.மே) அவர்கள் முதற்கட்டமாக 10 எண்ணிக்கையில் 25HP திறன் கொண்ட பம்புகளை கொள்முதல் செய்து பயன்படுத்திய பின் பம்புகளின் செயல் திறனின் அடிப்படையில் மீதமுள்ள 20 பம்புகளை கூடுதலாக கொள்முதல் செய்யலாம் என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அரசாணை எண். GO.Ms.No.442 Revenu Deprtment. Date.18.11.2019ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் பருவ மழை காலங்களில் வெள்ள நீரை வெளியேற்ற 30 எண்ணிக்கையில் நீர் இறைக்கும் பம்பு கொள்முதல் செய்ய மாநில பேரிடர் மேலாண்மை நிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூ.1.50 கோடியிலிருந்து ரூ.1.00 கோடி செலவீனத்தில் மின்சார துறை மூலம் மின்சாரத்தில் இயங்கும் நீர் மூழ்கி பம்புகள் கொள்முதல் செய்யவும், மற்றும் மீதமுள்ள ரூ.50.00 இலட்சத்தில் இயந்திர பொறியியல் துறை மூலம் வெள்ள நீரை வெளியேற்ற மேலே தெரிவிக்கப்பட்ட டீசல் இன்ஜின் மூலம் இயங்கும் நீர் இறைக்கும் பம்புகள் கொள்முதல் செய்ய மன்றத்தின் நிர்வாக அனுமதி மின்சார துறை மூலம் மன்ற தீர்மான எண்.299, நாள்.30.07.2022ல் பெறப்பட்டுள்ளது.

எனவே, திருவாளர்கள். *Gita Pumps India Pvt. Ltd.*, நிறுவனத்தாரிடமிருந்து முதற்கட்டமாக 10 எண்ணிக்கையில் 25 *HP* திறன் கொண்ட பம்புகளை ரூ.49,90,000/- மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்படுத்திய பின் பம்புகளின் செயல் திறனின் அடிப்படையில் மீத முள்ள 20 பம்புகளை கூடுதலாக கொள்முதல் செய்யலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. வடகிழக்கு பருவ மழை காரணமாக ஏற்படுகின்ற வெள்ள பாதிப்புகளை சீர்செய்ய மண்டலத்திற்கு 2 வீதம் 15 மண்டலங்களுக்கு 30 எண்ணிக்கையில், 25 *HP* திறன் கொண்ட நீர் இறைக்கும் பம்புகள் கொள்முதல் செய்ய கோரப்பட்ட ஒப்பத்தில் குறைந்த விலைப்புள்ளியாக திருவாளர்கள். *Gita Pumps India Pvt. Ltd.*, நிறுவனத்தார் ஒரு பம்பின் விலை ரூ.4,99,000/- வீதம் 30 பம்புகளுக்கு மொத்தம் ரூ.1,49,70,000/- *(Inclu GST 12%)* (ரூபாய். ஒரு கோடியே நாற்பத்தி ஒன்பது இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) கோரியிருந்ததை ஏற்கவும்,
2. பெறப்பட்டுள்ள அரசாணையின்படி ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் மின் துறையின் மூலம் மின்சார நீர் மூழ்கி மோட்டார் கொள்முதல் செய்ய ரூ.1.00 கோடி மற்றும் மீதமுள்ள ரூ.50.00 இலட்சத்தில் மேற்கண்ட ஒப்பத்தில் கோரியுள்ள நீர் இறைக்கும் பம்புகள் இயந்திர பொறியியல் துறையின் மூலம் கொள்முதல் செய்ய மன்ற தீர்மான எண்.299/2022, நாள்.30.07.2022ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதால் இயந்திர பொறியியல் துறையின் மூலம் முதற்கட்டமாக 10 எண்ணிக்கையில் *25 HP* திறன் கொண்ட டீசல் இன்ஜினில் இயங்கும் பம்புகளை ரூ.49,90,000/- மதிப்பீட்டில் திருவாளர்கள். *Gita Pumps India Pvt. Ltd.*, நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்திட அனுமதி வேண்டியும்,
3. மேலே தெரிவிக்கப்பட்ட படி 10 எண்ணிக்கையில் *25 HP* திறன் கொண்ட டீசல் இன்ஜினில் இயங்கும் பம்புகளை கொள்முதல் செய்து பயன்படுத்திய பின் பம்புகளின் செயல் திறனின் அடிப்படையில் மீத முள்ள 20 பம்புகளை தேவையின் அடிப்படையில் கொள்முதல் செய்யவும்,
4. இதற்கான செவீனத்தை மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு (நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு ம நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"23.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். *194/2022*, நாள். *23.09.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".
>
> *"26.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.232/2022 நாள்.26.09.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது*"*.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

க.து.ந.க.எண்.பி11/MP/1942/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.08.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:449/2022 **பொருள் எண்.48**

பெருநகர சென்னை மாநகராட்சி - ஒப்பம் - 2021-22 - கட்டடத்துறை - மத்திய சென்னை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதிமாறன் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் மண்டலம்-5, பகுதி-13, வார்டு-55 அப்பு (மே) தெருவில் நகர்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டும் பணிக்கு திருவாளர் SMK Construction அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும் மற்றும் ரூ.1,60,31,681/க்கு திருத்திய நிர்வாக அனுமதி.

1	பணியின் விவரம்	மண்டலம்-5, பகுதி-13, வார்டு-55 அப்பு (மே) தெருவில் நகர்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	முதன்மை செயலாளர் / ஆணையர் அவர்களின் அனுமதி நாள்: 24.06.2022
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம்- 5
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2021-2022 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	ரூ.1,46,91,265.00
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 1,30,01,119.48
	(ஆ) மின்சாரம் கட்டணம்	ரூ. ---
	(இ) மற்றைய எதிர்பாரா செலவு 2.5 %	ரூ. ----
	(ஈ)தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொதுநல வாரியநிதி 1 %	ரூ. 1,30,011.19
	(உ) சரக்கு மற்றும் சேவை வரி 12 %	ரூ. 15,60,134.33
	மொத்தம்	**ரூ.1,46,91,265.00**
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	முரசொலி நாள்: 01.07.2022 தி டெக்கான் க்ரோனிக்கல் நாள் :01.07.2022 சென்னை மாநகராட்சி செய்திமலர் நாள்: 30.06.2022
7	ஒப்பந்த புள்ளி எற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	14-07-2022
8	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா	ஆம்
9	எத்தனைஒப்பங்கள்பெறப்பட்டன	இரண்டு மின் ஒப்பங்கள் (e- Tender) இணையத்தளத்தின் மூலம் இரண்டு ஒப்ப படிவம் பெறப்பட்டுள்ளது.
10	பணிக்கான நிதி ஆதாரம் அ) வரவு செலவு திட்ட தலைப்பு	மத்திய சென்னை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்ட நிதி
11	ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம்	14-10-2022

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

வ. எண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள் / திருமதி	பணியின் அலுவலக மதிப்பு 2022-2023	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை (ரூ)	விலைவிகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு
1	SMK Contractors	ரூ.1,45,61,253.94	ரூ.1,61,62,991.87	(+)11.00% அதிகம்
2	P. Dhanasekaran	ரூ.1,45,61,253.94	ரூ.1,65,99,829.49	(+)14.00% அதிகம்

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 16.07.2022 அன்று இரண்டு மின் ஒப்பங்கள் (e-Tender) பெறப்பட்டன. ஒப்பந்ததாரரான திருவாளர் SMK Contractors அவர்களின் ஒப்பத் தொகை 2022-2023 ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.1,45,61,253.94யைவிட (+)11.00% அதிகமாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத் தொகை ரூ.1,61,62,991.87 ஆகும்.

ஒப்பந்ததாரரை விலைக்குறைப்பு செய்ய கோரியதில் 20.07.2022 அன்று முதல் கட்டமாக இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.1,45,61,253.94 யைவிட (+)4.50% அதிகமாக விலைக் குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத் தொகை ரூ.1,52,16,510.23 ஆகும்.

மேலும், ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகைவிலை குறைப்பிற்கு பின் சரக்கு மற்றும் சேவை வரி 18% சேர்த்து மொத்த தொகை ரூ.1,60,31,681/- ஆகும்.

இப்பணிக்கான ஒப்பத் தொகைக்கு பணியின் மதிப்பீடு ரூ.1,30,01,119.48 ஆகவும், சரக்கு மற்றும் சேவைவரி 18% ரூ.23,40,202/- சேர்த்து மொத்த தொகையான ரூ.1,53,41,321/-க்கான ஒப்பத்தை ஏற்று குறைந்த ஒப்பந்த புள்ளி (+)4.50 ஒப்பத்தொகை ரூ.1,60,31,681/- குறைத்து அளித்த திருவாளர் SMK Contractors அவர்களுக்கு ஒப்பம் வழங்கலாம் என கருதப்படுகிறது.

சரக்கு மற்றும் சேவை வரியினை மத்திய அரசு 12 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக உயர்த்தியதால் ஏற்பட்ட கூடுதல் தொகையான ரூ.10,31,681க்கு பரிந்துரை கடிதம் மாண்புமிகு மத்திய சென்னை பாராளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதி மாறன் அவர்களிடமிருந்து 20.08.2022 அன்று பெறப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பம் அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகையானது ரூ.1,60,31,681/- ஆகவும், (ரூபாய் ஒரு கோடியே அறுபது இலட்சத்து முப்பத்தோராயிரத்து அறநூற்று எண்பத்து ஒன்று மட்டும்) திருத்திய சரக்கு மற்றும் சேவைவரி 18% உட்பட 2021-2022ம் ஆண்டின் அலுவலக மதிப்பீட்டு விலைப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் (+)4.50% அதிகமான விழுக்காட்டிற்கு திருவாளர். SMK Contractors அவர்களுக்கு பணி வழங்கலாம் எனக் கருதப்படுகிறது.

எனவே,

1) இப்பணிக்கான ரூ.1,60,31,681/-க்கு மதிப்பீட்டிற்கு திருத்திய நிர்வாக அனுமதியும்,
2) குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திருவாளர்.SMK Contractors அவர்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரி 18% சேர்த்து ரூ.1,60,31,681/-க்கு (ரூபாய் ஒரு கோடியே அறுபது இலட்சத்து முப்பத்தோராயிரத்து அறநூற்று எண்பத்து ஒன்று மட்டும்) க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பபணியை வழங்கவும்,

மேற்கண்ட *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"23.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். *164 /2022*, நாள். *23.09.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".
>
> *"26.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.216/2022 நாள்.26.09.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது*"*.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

க.துந.க.எண் பி6/2454-1/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.08.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:450/2022 **பொருள் எண்.49**

பெருநகர சென்னை மாநகராட்சி - பாலங்கள் துறை, மின்துறை, பேருந்து சாலைகள் துறை, மழைநீர் வடிகால் துறை மற்றும் சிறப்பு திட்டங்கள் துறை தொடர்பான நேரடி பணிகள் தவிர்த்து மீதமுள்ள அனைத்து பணிகளும் மண்டலம் மூலமாக மதிப்பீடு தயாரித்து ஒப்பங்கள் கோரி பணியினை மேற்கொள்வதற்கும் - சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கு அசையும் பொருட்கள் (Smart Class Rooms, Computers & School Furniture) பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறை மற்றும் தகவல் தொழில்நுட்ப துறை மூலம் கொள்முதல் செய்ய அனுமதி

ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் திரு. எழிலன் நாகநாதன் அவர்களின் 26.07.2021 நாளிட்ட கடிதத்தில், "22க்கும் மேற்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களை, பெருநகர சென்னை மாநகராட்சியின் தலைமை அலுவலகத்தின் பொறுப்பில் செயல்படுத்துவதால், திட்டங்களை செயல்படுத்துவதில் நிர்வாக ரீதியான தாமதங்கள் ஏற்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் அமைந்துள்ள ஒவ்வொரு மண்டலத்திலும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சட்டமன்ற தொகுதிகள் அமைந்துள்ளன. இந்நிலையில் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்புகளை, திட்டத்தின் மதிப்பீடுகள் அடிப்படையில் அல்லாமல், அனைத்து திட்டங்களையும் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலங்களுக்கு வழங்குவது, அத்திட்டங்கள் விரைந்து மற்றும் மேலும் சீரிய வகையில் செயலாக்க உதவும். இக்கோரிக்கையை கனிவுடன் பரிசீலனை செய்து, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் திட்டங்களை செயல்படுத்தும் முகமையாக மாநகராட்சி மண்டலங்களை வரையறுத்து, பொறுப்புகளை மண்டல அளவிலான அமைப்புகளிடம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு" கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே, மேற்குறிப்பிட்ட பொருள் மீது தெரிவிப்பது யாதெனில் மன்ற தீர்மான எண் 764/2000 நாள்.16.10.2000-ன்படி தற்போது சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டப்பணிகள் அனைத்தும் கட்டடத்துறையின் மூலம் ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1. மதிப்பீடு மண்டலம் மற்றும் துறைகள் மூலம் தயாரிக்கப்பட்டு கட்டடத்துறையின் மூலம் நிதியிசைவு வழங்கப்பட்டு துணை ஆணையர் (பணிகள்) அவர்கள் மூலம் நிர்வாக அனுமதி அளிக்கப்படுகிறது.

2. துணை ஆணையர் (பணிகள்) அவர்கள் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட பின்னர், ரூ.50.00 இலட்சம் வரையுள்ள பணிகளின் ஒப்பங்கள் குறித்த அனைத்து பணிகளும் மண்டலங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3. ரூ.50.00 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளுக்கு கட்டடத்துறையின் மூலம் நிதியிசைவு மற்றும் நிர்வாக அனுமதி பெற்று, ஒப்பங்கள் கோருதல் மற்றும் பணி ஆணை வழங்குதல் போன்ற பணிகள் மட்டுமே கட்டத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

4. பணிகளை மேற்கொண்டு இறுதி பட்டி தீர்வு செய்வது வரை சம்பந்தப்பட்ட மண்டலங்கள்/துறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது நிர்வாக வசதிக்காக, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட பணிகள், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட பணிகள் மற்றும் மாண்புமிகு மேயர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு திட்ட பணிகள் உள்ளிட்ட அனைத்து பணிகளும் (பாலங்கள், மின்துறை, பேருந்து சாலைகள் துறை, மழைநீர் வடிகால் துறை மற்றும் சிறப்பு திட்டங்கள் துறை தொடர்பான நேரடி பணிகள் தவிர்த்து) மதிப்பீடு தயாரித்து அரசாணையின்படி

உரிய அலுவலரிடம் நிர்வாக அனுமதி பெற்று ஒப்பம் கோரி பணியினை மேற்கொண்டு பட்டித்தீர்வு செய்தல் மற்றும் அது தொடர்பான அனைத்து பணிகளையும் மண்டலங்கள் மூலமாக மேற்கொள்ள அதிகார பங்களிப்பு அளிக்கலாம் என கருதப்படுகிறது.

எனவே,

1. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட பணிகள், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட பணிகள் நமக்கு நாமே திட்ட பணிகள் மற்றும் மாண்புமிகு மேயர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு திட்ட பணிகள் உள்ளிட்ட அனைத்து பணிகளும் (பாலங்கள், மின்துறை, பேருந்து சாலைகள் துறை, மழைநீர் வடிகால் துறை மற்றும் சிறப்பு திட்டங்கள் துறை தொடர்பான நேரடி பணிகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கு தேவையான எந்த ஒரு அசையும் பொருட்களை கொள்முதல் செய்யும் பணிகள் தவிர்த்து) மண்டலங்கள் மூலமாக மதிப்பீடு தயாரித்து அரசாணையின்படி உரிய அலுவலரிடம் நிர்வாக அனுமதி பெறவும்,

2. நிர்வாக அனுமதி பெற்ற பின்னர் அனைத்து மதிப்பிலான பணிகளுக்கு ஒப்பங்கள் கோரி பணியினை மேற்கொள்ளுதல், பட்டி தீர்வு செய்தல் மற்றும் அது தொடர்பான பிற அனைத்துப் பணிகளையும் மண்டலங்கள் (பாலங்கள், மின்துறை, பேருந்து சாலைகள் துறை, மழைநீர் வடிகால் துறை மற்றும் சிறப்பு திட்டங்கள் துறை தொடர்பான நேரடி பணிகள் தவிர்த்து) மூலம் மேற்கொள்ளவும்.

3. பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கு தேவையான எந்த ஒரு அசையும் பொருட்களை கொள்முதல் செய்யும் பணிகள் *(Smart Class Rooms, Computers & School Furniture)* கல்வித்துறை மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை மூலம் கொள்முதல் செய்யவும்

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"23.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். *165 /2022,* நாள். *23.09.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".
>
> *"26.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.217/2022 நாள்.26.09.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

க.து.ந.க.எண்.பி6/MLA/1433/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:451/2022 **பொருள் எண்.50**

பெருநகர சென்னை மாநகராட்சி - ஒப்பம் - 2021-22 - கட்டடத்துறை - சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் மண்டலம்-9, பகுதி-27, வார்டு-116 டாக்டர் பெசன்ட் சாலையில் உள்ள அலுவலக கட்டிட வளாகத்தில் ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு மற்றும் விளையாட்டு மைய கட்டிடம் கட்டும் பணிக்கு திருவாளர்கள் MPK Enterprises அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும் மற்றும் ரூ.1,05,35,450/-க்கு திருத்திய நிர்வாக அனுமதி

1	பணியின் விவரம்	மண்டலம்-9, பகுதி-27, வார்டு-116 டாக்டர் பெசன்ட் சாலையில் உள்ள அலுவலக கட்டிட வளாகத்தில் ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு மற்றும் விளையாட்டு மைய கட்டிடம் கட்டும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் அனுமதி நாள்: 13.05.2022.
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம்-9
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2021-2022 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	ரூ.1,00,00,000.00
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 87,53,282.15
	(ஆ) மின்சாரம் கட்டணம்	ரூ .....
	(இ) மற்றைய எதிர்பாரா செலவு 2.5%	ரூ. 21,258.35
	(ஈ)தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொதுநல வாரியநிதி 1%	ரூ. 87,532.82
	(இ) சரக்கு மற்றும் சேவை வரி12%	ரூ. 10,50,393.86
	மொத்தம்	ரூ.1,00,00,000.00
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	தி டைம்ஸ் ஆப் இந்தியா நாள்: 23.06.2022 தினத்தந்தி: 23.06.2022 சென்னை மாநகராட்சி செய்திமலர் நாள்: 23.06.2022
7	ஒப்பந்த புள்ளி எற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	06.07.2022
8	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து15நாட்கள்ஒதுக்கப்பட்டுள்ளதா	ஆம்
9	எத்தனைஒப்பங்கள்பெறப்பட்டன	இரண்டு மின் ஒப்பங்கள் (e-Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பபடிவம் பெறப்பட்டுள்ளது.
10	பணிக்கானநிதிஆதாரம் அ) வரவுசெலவுதிட்டதலைப்பு	சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்ட நிதி
11	ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம்	05.10.2022

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 07.07.2022 அன்று இரண்டு மின் ஒப்பங்கள்(e-Tender) பெறப்பட்டன. ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்:

வ. எண்	ஒப்பத்தில்பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள் / திருமதி	பணியின் அலுவலக மதிப்பு 2019-2020	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை (ரூ)	விலைவிகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு
1	M/S MPK Enterprises	ரூ.98,03,676.01	ரூ.1,02,93,859.81	(+) 5.00% அதிகம்
2	M/S Renu Builders	ரூ.98,03,676.01	ரூ.1,04,01,700.24	(+) 6.10% அதிகம்

ஒப்பந்ததாரரான திருவாளர்கள் MPK Enterprises அவர்களின் ஒப்பத் தொகை 2021-2022 ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.98,03,676.01யைவிட (+)5.00% அதிகமாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத் தொகையான ரூ.1,02,93,859.81 ஆகும்.

ஒப்பந்ததாரரை விலைக்குறைப்பு செய்ய கோரியதில் 29.07.2022 அன்று முதல் கட்டமாக இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.98,03,676.01 யைவிட (+) 2.00% அதிகம் விலைக் குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத் தொகை ரூ.99,99,749.53 ஆகும்.

ஒப்பந்ததாரரிடம் விலைக் குறைப்பிற்காக 29.07.2022 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குப்பின் கீழ்கண்டவாறு விலை குறைப்பு செய்துள்ளார்.

ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள் / திருமதி	மதிப்பீட்டில் பணியின் தொகை 2021-2022 ஆம் ஆண்டின் அலுவலக விலை	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை GST 12% தொகை சேர்த்து	விலைக் குறைப்பிற்கு பின் ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை GST 18% தொகை சேர்த்து	2021-2022 ஆம் ஆண்டின் அலுவலகவிலையுடன் ஒப்பிடுகையில் சதவீதம்	ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்பத் தொகைக்கான GST 18% தொகை
M/S MPK Enterprises	ரூ.98,03,676.01	ரூ.1,02,93,859.81	ரூ.1,05,35,450.00	(+) 2.00 % அதிகம்	ரூ.15,75,591.00

மேலும் ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை விலை குறைப்பிற்கு பின் சரக்கு மற்றும் சேவை வரி 18% சேர்த்து மொத்த தொகை ரூ.1,05,35,450.00 ஆகும்.

இப்பணிக்கான ஒப்பத் தொகையானது பணியின் மதிப்பு ரூ.87,53,282.15 ஆகவும், சரக்கு மற்றும் சேவைவரி 18% ரூ.15,75,591/- சேர்த்து மொத்த தொகையான ரூ.1,03,28,873.15க்கான ஒப்பத்தை ஏற்று, குறைந்த ஒப்பந்த புள்ளி (+) 2.00%, ஒப்பத் தொகை ரூ.1,05,35,450.00 அளித்த திருவாளர் M/S. MPK Enterprises அவர்களுக்கு ஒப்பத்தை வழங்கலாம் என கருதப்படுகிறது.

சரக்கு மற்றும் சேவை வரியினை மத்திய அரசு 12 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக உயத்தியதால் ஏற்பட்ட கூடுதல் தொகையான ரூ.5,35,350/- க்கு பரிந்துரை கடிதம் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களிடமிருந்து 14.09.2022 அன்று பெறப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பம் அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகையானது ரூ.89,59,859/-ஆகவும், (ரூபாய் எண்பத்தி ஒன்பது இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரத்து எண்ணூற்றி ஐம்பத்தொன்பது மட்டும்) சரக்கு மற்றும் சேவைவரி 18% ரூ.15,75,591/-சேர்த்து மொத்த தொகையான ரூ.1,05,35,450/-க்கு (ரூபாய் ஒரு கோடியே ஐந்து இலட்சத்து முப்பத்தி ஐந்தாயிரத்து நாநூற்றி ஐம்பது மட்டும்) 2021-2022ம் ஆண்டின் அலுவலக மதிப்பீட்டு விலைப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் (+)2.00% அதிகமான விழுக்காட்டிற்கு திருவாளர்கள் MPK Enterprises அவர்களுக்கு பணி வழங்கலாம் எனக் கருதப்படுகிறது.

எனவே,

1) இப்பணிக்கான ரூ.1,05,35,450.00மதிப்பீட்டிற்கு திருத்திய நிர்வாக அனுமதியும்,
2) குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். *MPK Enterprises* அவர்களுக்கு (சரக்கு மற்றும் சேவை வரி *18%* சேர்த்து) ரூ.1,05,35,450.00(ரூபாய் ஒரு கோடியே ஐந்து இலட்சத்து முப்பத்தி ஐந்தாயிரத்து நாநூற்றி ஐம்பது மட்டும்) க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பபணியை வழங்கவும்

மேற்கண்ட *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

"23.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். *199/2022*, நாள். *23.09.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.234/2022 நாள்.26.09.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது*"*.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.2.ந.க.எண்.சி1/3670 /2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:452/2022 **பொருள் எண்.51**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 2 (மணலி)- வார்டு-15 முதல் 22 வரைக்குட்பட்ட பகுதிகளில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் (NULM) பணிபுரியும் சாலை பணியாளர்களின் பணிக்காலம் 30.09.2022 உடன் முடிவடையவுள்ளது. இந்த பணியாளர்களின் பணிகாலத்தினை கூடுதலாக 01.10.2022 முதல் 30.09.2023 வரை பணிநீட்டிப்பு செய்ய நிர்வாக அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மணலி மண்டலம் -2 ல் பகுதி 4 மற்றும் 5, வார்டு-15 முதல் 22 வரை 42.93 சதுர கி.மீ பரப்பளவுள்ள 8 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும் . இந்த மண்டலத்தில் 10 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 1157 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு சாலை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மண்டலம்-2 ல் நிரந்தர சாலை பணியாளர்கள் 19 நபர்கள் அதில் 5 சாலைப்பணியாளர்கள் மாற்றுப்பணி தலைமையிடத்தில் பணிபுரிந்து வருகிறார்கள். தற்போது மண்டலம்-2ல் 14 எண்ணிக்கை நிரந்தர சாலைப்பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள். சாலைப்பணியாளர்களின் அன்றாட பணிகளை கீழ்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

1. *Road Patch work / pot hole attended*
2. *Removal of Debris*
3. *Clearing of unauthorized encroachment*
4. *Strom water Drain Silt catch pit cleaning & Chute pipe Cleaning*
5. *Water table cleaning*
6. *Filling of Road cut made by service department*
7. *Road Sectioning*
8. *Desilting of SWD & open Canal*
9. *Removing the storm water*
10. *Clearing the tree branches on the road to prevent the traffic block*
11. *Clearing the tree branches on the road tree prunning & branches cutting*
    Fallen tree removing
12. ***All other related road works***
    1. *Hot mix patch attended.*
    2. *CC patch work attended*
    3. *Cold mix patch attended*

13. ***In Rainy Season***
    1. *Diesel pump operation*
    2. *Food distribution work*
    3. *Relief centre work etc.*
14. ***Election work***
    1. *Defacing*
    2. *Flag removing*
    3. *Poster & Banners removing.*
    4. *Flag post & Flag pole removing etc..*

Municipal Administration and Water Süpply G.O. No.95 நாள் 14.10.2012 ன்படி ஒரு வார்டுக்கு 8 சாலைப்பணியாளர்கள் என பணியாளர்கள் எண்ணிக்கை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மண்டலம்-2 வார்டு-15 முதல் 22 வரை உட்பட்ட பகுதிகளில் 19 சாலைப்பணியாளர்களில் 5 சாலைப்பணியாளர்கள் மாற்றுப்பணி தலைமையிடத்தில் பணிபுரிகிறார்கள். மீதமுள்ள 14 சாலைப்பணியாளர்களை மட்டுமே கொண்டு மேற்குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்வதால், பணிகளில் தொய்வு ஏற்படும் நிலை உள்ளது.

மண்டலம்-2 (மணலி) வார்டு-15 முதல் 22 வரை உட்பட்ட பகுதிகளில் சாலைப்பணிகளை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் *(NULM)* மூலம் 33 நபர்கள் கொண்டு 01.04.2022 முதல் 30.09.2022 வரை சாலைப்பணிகள் மேற்கொள்ள, மன்ற தீர்மான எண் 122/2022 நாள் 30.05.2022- ன்படி, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இப்பணியானது 30.09.2022 அன்றுடன் முடிவடையவுள்ளது.

வார்டு வாரியாக மண்டலம்-2ல் பணிபுரியும் *NULM* பணியாளர்களின் எண்ணிக்கை கீழ்கண்டவாறு அட்டவணையிடப்படுகிறது.

வார்டு எண்.	மொத்த தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை	தற்போது பணிபுரியும் நிரந்தர சாலை பணியாளர் எண்ணிக்கை	காலிப் பணியிடம்	தற்போது பணிநீட்டிப்பு செய்ய தேவைப்படும் பணியாளர்கள் எண்ணிக்கை *(NULM)*	குறிப்பு
15	8	2	6	4	
16	8	1	7	4	
17	8	1	7	4	
18	8	1	7	4	
19	8	6	2	1	*T.J* ஜெகநாதன் சாலைப்பணியாளர் , கோட்டம்-*19* மாற்று பணி அடிப்படையில் துணைஆணையர் (கல்வி) அலுவலகத்தில் பணி
20	8	6	2	4	திரு.*B.* நரசிம்மராவ், சாலைப்பணியாளர் கோட்டம் 20 மாற்று பணி அடிப்படையில் ஆணையர் அலுவலகத்தில் பணி. திரு.*C.A* கல்யாண் குமார், சாலைப் பணியாளர் கோட்டம்- 20 மாற்று பணி அடிப்படையில் பாலங்கள் துறையில் பணி திருமதி.*N.* மோனிகா, சாலைப்பணியாளர் கோட்டம்-*20* மாற்று பணி அடிப்படையில் பாலங்கள் துறையில் பணி
21	8	2	6	4	செல்வி. *A.* நிவேதித்தா சாலைப்பணியாளர் கோட்டம்-21 மாற்று பணி அடிப்படையில் பேருந்து சாலை துறையில் பணி

22 (புதியதாக இணைக்கப்பட்டுள்ள கோட்டம்) மழைநீர்வடிகால்வாய் தூர்வாரும் பணியாளர்கள்	8	-	8	8 2	
மொத்தம்	64	19	45	35	

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 05.03.2022 நாளிட்ட செயல்முறை ஆணையில், உள்ளாட்சி அமைப்புகளின் எல்லை விரிவாக்க நிர்ணயத்தின் அடிப்படையில், மண்டலம்-3க்கு உட்பட்ட கோட்டம்-29 தற்போது மண்டலம்-2 கோட்டம்-22 ஆக இணைக்கப்பட்டுள்ளது. மண்டலம்-3 பழைய கோட்டம்-29ல் 3 எண்ணிக்கை *NULM* மழைநீர் வடிகால்வாய் தூர்வாரும் பணியாளர்கள் பணிபுரிந்துள்ளார்கள். மண்டலம்-3, பழைய வார்டு-*29* மறுசீரமைப்பின்படி புதிய வார்டு-22ஆக மண்டலம்-2ல் இணைக்கப்பட்டு, பழைய வார்டு-29ல் பணிபுரிந்த பணியாளர்களின் விவரங்களை மண்டல அலுவலர்-3 அவர்களின் 06.05.2022 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தெரிவித்துள்ளார். தற்போது 3 எண்ணிக்கை *NULM* மழைநீர் வடிகால்வாய் தூர்வாரும் பணியாளர்களில் 2 NULM மழைநீர் வடிகால்வாய் தூர்வாரும் பணியாளர்கள் மட்டுமே 42 தெருக்களின் கால்வாய் அடைப்பு நீக்கும் பணியினை மண்டலம்-2ல் வார்டு-22ல் மேற்கொண்டு வருகின்றனர். 01.04.2022 முதல் 30.09.2022 வரையிலான காலத்திற்கு சாலைப்பணிகளை மேற்கொள்ள தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் *(NULM)* மூலம் 33 பணியாளர்களுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டது. தற்பொழுது கூடுதலாக இணைக்கப்பட்ட கோட்டம்-22 ல் தூர்வாரும் பணியாளர்கள் 3 நபர்களிலிருந்து 1நபரை குறைத்து 2 நபர்களை மட்டும் சாலைப்பணிகளுடன் இணைத்து (33+2=35) 35 நபர்களாக எண்ணிக்கையை உயர்த்தி வழங்க நிர்வாக அனுமதி பெற வேண்டியுள்ளது.

எனவே, இனிவரும் காலங்களில் தொடர்ந்து, மண்டலம்-2, வார்டு-22ல் மழைநீர் வடிகால்வாய் தூர்வாரும் பணியாளர்களாக பணிபுரிவதற்கும், அப்பணியாளர்களுக்கு மண்டலம்-2ன் மூலம் ஊதியம் வழங்க வேண்டியுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர், சென்னை அவர்களின் 06.06.2022 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, 2022-23ஆம் ஆண்டிற்கான தற்காலிக பணியாளர்களுக்கு ஒரு நாளைக்கு குறைந்தபட்ச ஊதியமாக ரூ.424/- வீதம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் 01.10.2022 முதல் 30.09.2023 வரை 1 வருடத்திற்கு ரூ.54,16,600/- (ரூபாய் ஐம்பத்து நான்கு இலட்சத்து பதினாறாயிரத்து அறுநூறு மட்டும்) (35நபர்கள்*x*ரூ.424x365 நாட்கள்) ஆகும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டல அலுவலகம்-2 வார்டுகுழுவின் 10.08.2022 நாளிட்ட 4வது சாதாரண கூட்டத்தில் மேற்கண்ட *NULM* சாலைப்பணியாளர்களின் பணிக்காலத்தை 01.10.2022 முதல் 30.09.2023 வரை பணிநீட்டிப்பு செய்ய தீர்மானம் எண் 256, நாள் 10.08.2022 அன்று நிறைவேற்றப்பட்டுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இப்பணிக்காண கணக்கு குறியீட்டு எண். 20-21-07 கணக்கு தலைப்பு 210-100-603 கீழ் நடப்பு ஆண்டில் (2022 - 2023) ரூ.40,00,000/- நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஜூலை-2022 வரை 22,17,304/- செலவு செய்யப்பட்டு மீதம் ரூ.17,82,696/- இருப்பில் உள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. Municipal Administration and Water Supply G.O. No.95 நாள் 14.10.2012ன்படி மண்டலம்-2ற்கு ஒரு வார்டுக்கு 8 நபர்கள் வீதம் 8 வார்டிற்கு 64 நபர்கள் என்ற பணியாளர்களின் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பினும், மேற்குறிப்பிட்ட பணிக்காக மண்டலம் -2 (மணலி), பகுதி 4 மற்றும் 5க்கு உட்பட்ட பகுதிகளில் சாலை பணிகள் மேற்கொள்ள அவசரம் மற்றும் அவசியம் கருதி ஏற்கனவே பணிபுரியும் *NULM* 33 சாலைப்பணியாளர்கள் மற்றும் 2 எண்ணிக்கை *NULM* மழைநீர் வடிகால்வாய் தூர்வாரும் பணியாளர்கள் 01.10.2022 முதல் 30.09.2023 வரை (365 நாட்கள்) தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் மூலம் *(NULM)* பணியமர்த்த நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்ட பணிக்காக ஆகும் செலவு தொகை ரூ.54,16,600/- (ரூபாய் ஐம்பத்து நான்கு இலட்சத்து பதினாறாயிரத்து அறுநூறு மட்டும்) (35நபர்கள்x ரூ.424x365 நாட்கள்) நிதிஆலோசகர் மூலம் கூடுதலாக நிதி ஒதுக்கீடு பெற நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. இச்செலவீனத்தை கணக்கு குறியீட்டு எண்20-21-07கணக்கு தலைப்பு எண் 210-100-603 கீழ் மேற்கொள்ளவும்,
4. மேற்கண்ட தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.424/- என்பது 2022 – 2023 ஆம் ஆண்டு அரசினால் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியம், எதிர்வரும் காலங்களில் 2023-2024 ஆம் ஆண்டிற்கான தினக்கூலி ஊதியம் உயர்த்தி அரசினால் நிர்ணயம் செய்யப்படின் உயர்த்தி வழங்கிய தினக்கூலி ஊதியத்தை நிர்ணயம் செய்து வழங்க சிறப்பு அனுமதி வேண்டியும்.

மேற்கண்ட 1 முதல் 4 வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.*166/2022*, நாள்.*23.09.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.218/2022 நாள்.26.09.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

Z.O.IX.C.No.E1/2227/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:453/2022 **பொருள் எண்.52**

Greater Chennai Corporation – Zone-9 – Unit-26 – Division – 117 – G.N.Chetty road demolition and construction of storm water drain - Sanctioned fund for desilting by removing top slab – Reallocation of fund and change of work – For Ratification Approval.

G.N.Chetty road in Zone-9 has a twin drain of size of (1.50 X 1.50 m) and running on the northern side of the road starting from Thirumalaipillai junction to Mambalam canal in Zone-9 reach. The G.N.Chetty road is the disposal route for in and around Bazulla road areas.

This twin drain size (1.50 X 1.50 m) acts as major arterial drain for the disposal of the rainwater of catchment in and around Bazullah road areas.

During North-East monsoon, 2021 the stormwater was disposed to mambalam canal through G.N.Chetty road through this twin drain. This drain was reconstructed in the year 2009 under the JNNURM fund by changing only the top slab.

After the 2021 North-East monsoon, the Advisory committee has inspected in and around Bazulla road i.e., the heavy water inundation area and advised to desilt the stormwater drain completely by opening the top slab of the drain up to the disposal point - Mambalam canal. Accordingly orders received from under TUFIDCO fund, to desilt the stormwater drain after removing of topslab and putting new slab at the cost of Rs. 2.71 crore. During execution of desiltation work, it is found that the existing twin drain was Constructed with the brick walls and collapsed while removing the top slab.

In this scenario, it is essential to construct new drain at the size of (3.0X1.5 m) after demolishing the existing twin drain, since it serves main arterial drain for entire T.Nagar area.

In zone-9, three packages work is going on under Singara Chennai 2.0 viz., sethammal colony (Package-1) for Rs.30.11 crores, Habibulla road (package-7) for Rs.3.25 crores, bazullah road (package-10) for Rs.24.06 crores as detailed below:

S.No.	Name of the contractor	Package street name	Package No.	Contract Award cost Rs. In Crore	25% excess Amount in Crore
1	M/s.CMK Projects	Seethammal Colony	1	30.12	7.53
2	T.Kumar	Habibullah Road	7	3.25	0.81
3	M/s.BOSON Infrastructure Pvt Ltd.,	Bazullah Road	10	24.07	6.02

The estimation for construction of new RCC storm water drain for a length of 940 meteres on the north side of G.N.Chetty road from Thirumalai road junction to Mambalam canal is 7.66 crores.

The tender amount 2.71 crores alloted to M/s.Bosan infrastructure private limited for desilting of SWD by removing top slab may be utilised for the construction of new RCC drain of size (3.00X1.50m) upto a length of 350 meters from the Thirumalaipillai road junction to G.N.Chetty rd. The excess 25% in this tender was utilised by Zone-10 by proposing additional drain in Zone-10.

The 25% amount available with the Habibullah Road Tender comes to only Rs.81.00 Lakhs which cannot be utilised for construction of remaining portion of 590m length SWD in G.N.Chetty Road.

Hence, it is proposed to execute the balance length of 590 meters of drain at the value of Rs.4.95 crores from the 25% excess amount of Seethammal colony packages by M/s.CMK projects.

The above council ratification approval is requested through standing committee (works) and Standing Committee(T&F).

"23.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். *186 /2022,* நாள். *23.09.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.227/2022 நாள்.26.09.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது*"*.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.10.வ.து.ந.க.எண்.ஆர்4/01477/2022

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 21.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:454/2022 **பொருள் எண்.53**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 10 - கோட்டம் - 136 (புதிய கோட்டம் - 133) தியாகராயா நகர், டாக்டர். நாயர் ரோடு, புதிய வணிக வளாகத்தில் காலியாக உள்ள கடை எண். 10 ஐ திரு.எஸ்.சக்தி என்பவருக்கு மூன்று ஆண்டு காலத்திற்கு பொது ஏல முறையில் அல்லாமல் மாத வாடகை அடிப்படையில் சிறப்பினமாக ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி அளிக்கப்பட்டது - வாடகை முன் பணத்தினை தவணை முறையில் செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 10, கோட்டம் - 130ல் உள்ள எண். 147/150, ஒத்தவாடை தெரு, கோடம்பாக்கம், சென்னை. 600 024 என்ற முகவரியில் வசித்து வரும் திரு.எஸ்.சக்தி அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு அளித்துள்ள 30.06.2022 நாளிட்ட கடிதத்தில், தனது மகள், எஸ். சிந்து பள்ளி பருவத்திலேயே சிறந்த விளையாட்டு வீரர் என்றும், அவருக்கு திடீரென ஏற்பட்ட விபத்தின் காரணமாக கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக சிகிச்சை மேற்கொண்டு வருகிறோம் என்றும், தற்பொழுது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மாணவி சிந்து பூரணமாக குணமடைய ஓமந்தூரார் அரசு பல்நோக்கு மருத்துவமனையில் சிறப்பு சிகிச்சை அளிப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளார் என்றும், எஸ்.சக்தி ஆகிய தான் தேநீர் விற்று வருகிறேன் என்றும், தனக்கு கருணை அடிப்படையில் தியாகராயா நகர், டாக்டர். நாயர் ரோடில் உள்ள புதிய வணிக வளாகத்தில் தரை தளத்தின் இரண்டாவது கடையில் தேநீர் கடை அமைக்க, கடையினை ஒதுக்கீடு செய்து தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மன்றத் தீர்மான எண்.324/2022, நாள்.30.07.2022ல், மண்டலம் - 10, கோட்டம் - 136 (புதிய கோட்டம் - 133) டாக்டர். நாயர் ரோடு, புதிய வணிக வளாகம் தரை தளம் கடை எண்.10ஐ சிறப்பினமாக பொது ஏல முறையில் அல்லாமல் மாத வாடகை அடிப்படையில் திரு. எஸ். சக்தி அவர்களுக்கு மாத வாடகை ரூ. 7840/. மற்றும் சரக்கு சேவை வரி (GST) 18% தனி ரூ.1411/- என மாதம் ரூ.9251/- என வாடகை நிர்ணயித்து கடைக்கான சாவியினை பெறும் நாளிலிருந்து மூன்று ஆண்டு காலத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது. (ஒதுக்கீட்டு நிபந்தனைகளின்படி, ஒதுக்கீட்டுதாரர் 12 மாத வாடகையினை முன்பணமாக (ரூ. 94,080/- ஐ) செலுத்திட வேண்டும்

திரு.எஸ்.சக்தி அவர்கள் 10.08.2022 நாளிட்ட கடிதத்தில், தனது மகள் சிந்துவுக்கு ஓமந்தூரார் அரசு பல்நோக்கு மருத்துவ மனையில் சிறப்பு சிகிச்சை அளித்து கொண்டு இருக்கிறார்கள் எனவும், அதற்கு முன்பாக கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக மகளின் மருத்துவ சிகிச்சைக்காக தனது சேமிப்பினை செலவழித்து விட்டதாகவும், குடியிருக்கும் வீட்டிற்கு வாடகை செலுத்த முடியாத காரணத்தினால் முன்பணத்தை கழித்து விட்டு வீட்டை காலி செய்து விட்டதாகவும், தனது மகளுக்கு சிகிச்சை இன்னும் முடியவில்லை என்றும், கல்லூரியில் சேர்ப்பதற்கு பணம் இல்லை எனவும், தான் மிகவும் வறுமையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தி.நகரில் உள்ள வணிக வளாக புதிய கட்டிடத்தில் தனக்கு ஒதுக்கப்பட்ட இரண்டாவது கடையின் 12 மாத வாடகை தொகையை முன்பணமாக செலுத்த முடியாத நிலையில் உள்ளதாகவும், 6 மாதத்திற்குள் தவணை முறையில் முன்பணத்தினை செலுத்தி விடுவதாகவும் தெரிவித்து அனுமதி கோரியுள்ளார்.

எனவே , பெருநகர சென்னை மாநகராட்சி , மண்டலம் - 10ல் செல்வி . சிந்து அவர்களின் தந்தை திரு . எஸ் . சக்தி அவர்களுக்கு மண்டலம் – 10 , பழைய கோட்டம் – 136 (புதிய கோட்டம் – *133)* தியாகராயா நகர், டாக்டர்.நாயர் ரோடு பகுதியில் உள்ள வணிக வளாகத்தின் தரை தளத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட கடை எண் . 10 க்கான 12 மாத வாடகை முன் பணத் தொகையினை 6 மாத காலத்தில் தவணை முறையில் செலுத்த அனுமதி வழங்கிட, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"26.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.214/2022 நாள்.26.09.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது*".*

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.10.வ.து.ந.க.எண்.ஆர்4/11695/2019
முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 23.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:455/2022 **பொருள் எண்.54**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 10 - கோட்டம் - 142 - சலவையர் காலனியில் கட்டிடத் துறையால் கட்டி முடிக்கப்பட்ட 192 ஓய்வறைகளில் 128 ஓய்வறைகள் அப்பகுதியில் சலவைத் தொழில் கல் உரிமம் பெற்று தொழில் செய்து வந்தவர்களுக்கு வழங்கப்பட்டது போக மீதம் உள்ள ஓய்வறைகளில் சலவையாளர்களின் வாரிசுதாரர்களின் வாரிசு சான்றிதழ் வழங்கியவர்களுக்கும் - கல் உரிமம் மட்டும் வைத்திருந்தவரிகளில் அசல் ஒதுக்கீட்டாளர்களுக்கும், வாரிசு சான்றிதழ் சமர்பித்தவர்களுக்கும், வாரிசு சான்றிதழ் சமர்ப்பிக்காதவர்களுக்கு சிறப்பினமாக ஓய்வறை ஒதுக்கீடு செய்திடவும் மற்றும் ஆக்கிரமிப்பாளர்களுக்கும் கல் உரிமம் மற்றும் ஓய்வறை ஒதுக்கீடு செய்திட மன்றத்தின் அனுமதி

மன்றத் தீர்மானம் எண்.403/2008, நாள். 18.07. 2008 ன்படி, கோட்டம் - 142, சைதாப் பேட்டை சலவைத் துறையில் சலவைத் தொழில் செய்து வந்த சலவைத் தொழிலாளர்களுக்கு 146 துணி துவைக்கும் கற்களும், 78 ஓய்வறைகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டு சலவைக் கற்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.6/- வீதமும், சலவைத் தொழில் செய்யும் ஓய்வறைகளுக்கு ரூ. 50/- வீதமும் வாடகை வசூல் செய்ய ஆணை பெறப்பட்டு மாநகராட்சி மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கட்டிடத் துறை மூலமாக கோட்டம்-142, சைதாப்பேட்டை சலவைத் துறையில் சலவைத் தொழில் மேற்கொண்டு வரும் சலவைத் தொழில் செய்பவர்களுக்கு ஓய்வறை ஒதுக்கீடு செய்யும் வகையில் புதியதாக 64 ஓய்வறைகள் கொண்ட பகுதி - I கட்டிடம் 2016 ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் பேரவையின் கோரிக்கையின் பேரில், மன்றத் தீர்மானம் 411/2016, வ.து.ந.க.எண்.ஜி4/003612/2016, நாள் - 27. 07. 2016 ன்படி, கல் உரிமம் பெற்ற 59 அசல் ஒதுக்கீடுதாரர்களுக்கு ஓய்வறை ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதே ஆண்டின் இறுதியில் 2016 டிசம்பர் மாதம் வர்தா புயல் காரணமாக அடையாறு ஆற்றில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் பொழுது சலவையாளர் குடியிருப்பில் தங்கிட இடமில்லாமல் இருந்த 5 நபர்களால் மேற்காணும் மீதமிருந்த 5 ஓய்வறைகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, தற்பொழுது வரை பயன்படுத்தி வருகிறார்கள்.

மன்றத் தீர்மானம் எண்.765/2019 நாள்- 29/11/2019 ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 10, கோட்டம் - 142, அப்துல் ரசாக் தெருவில் சலவையர் காலனியில் அமைந்துள்ள 58 - 86 கிரவுண்டு நிலமானது சென்னை மாநகராட்சியின் தனி நிலமாகும். இந்த இடத்தில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் பிரதம மந்திரி அவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் 272 குடியிருப்புகள் கட்ட உத்தேசிக்கப்பட்டு இடம் தேர்வு செய்கையில் மன்ற தீர்மான எண். 403/2008, நாள் - 30.07.2008ன்படி சலவையாளர்களால் ஒதுக்கீடு பெற்ற 78 பழைய ஓய்வறைகள் கொண்ட இடமும், இடிக்கப்பட வேண்டிய கட்டுமானப் பகுதியாக கணக்கில் எடுக்கப்பட்டது.

அதன்படி சென்னை மாநகராட்சி கட்டிடத் துறையால் சைதாப்பேட்டை, கோட்டம் - 142 சலவையாளர் காலனியில் சலவையாளர்களுக்கு மேலும் பகுதி II & பகுதி - III ஓய்வறை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டதில் அக்கட்டிடங்களில் 64 X 2 = 128 ஓய்வறைகளுக்கு ஒதுக்கீட்டு ஆணை வழங்க அப்பகுதியில் 2008 ஆம் ஆண்டில் சலவையாளர்களுக்கு வழங்கப்பட்ட பழைய ஓய்வறை கட்டிடங்களில் இருந்த 78 ஓய்வறை பயனாளர்களுக்கு புதிய கட்டிடத்தில் மாற்றம் செய்ய வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அவர்களின் 28.01.2020 மற்றும் 18.02.2020 நாளிட்ட ஆணையின்படி பகுதி - III கட்டிடத்தில் 64 நபர்களுக்கும் பகுதி II கட்டிடத்தில் 5 நபர்களுக்கும் மொத்தம் கல் உரிமம் பெற்ற 69 நபர்களுக்கும் ஓய்வறை ஒதுக்கப்பட்டது.

இந்நிலையில் பகுதி 1 ஒய்வறை கட்டிடத்தில் 5 ஒய்வறைகளும், பகுதி 3 ஒய்வறை கட்டிடத்தில் 59 ஒய்வறைகள் மொத்தம் 64 ஒய்வறைகள் காலியாக உள்ளது என்றும் 146 துணி துவைக்கும் கல் உரிமம் பெற்றவர்களில் 128 நபர்களுக்கு ஒய்வறைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்கண்டுள்ள மன்றத் தீர்மானத்தின் படி சலவையாளர்களின் வாரிதாரரிடமிருந்து வாரிசு சான்றிதழ் பெற்று மீதமுள்ள 18 கல் உரிமம் பெற்ற வாரிசுதாரர்களுக்கு ஒய்வறை ஒதுக்கீடு செய்ய ஆணை பெறப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது, மேலும், சைதாப்பேட்டை சலவையாளர் பொதுநல சங்கத்தின் 10.05.2022 நாளிட்ட கடிதத்தில் தங்களது சங்கத்தின் கோரிக்கையை ஏற்று 192 ஒய்வறைகள் கட்டி அதில் 128 ஒய்வறைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டது என்றும் மீதமுள்ள 64 ஒய்வறைகளை கல் உரிமம் பெற்றவர் 18 கல் உரிமையாளர்களுக்கும் மேலும், பல ஆண்டு காலமாக சலவைத்தொழில் செய்து குடும்பத்துடன் அப்பகுதியில் ஆக்கிரமித்து வசிப்பவர்கள் தற்பொழுது புதிய குடிசைமாற்று வாரிய குடியிருப்புக்கான சாலை வசதி அமைக்க வேண்டியுள்ளதால் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்துவரும் 46 குடும்பங்களின் வாழ்வதாரத்தை கருத்தில் கொண்டு இவர்களுக்கு ஒய்வறைகள் மற்றும் கல் உரிமம் ஒதுக்கீடு செய்து தர கேட்டுக்கொண்டுள்ளனர். மேலும், இக்கடிதத்தில் கல் கட்டும் வரை அவர்கள் 192 ஒதுக்கீடுதாரர்களும் 18 துணி துவைக்கும் கல்லை சுழற்சி முறையில் பயன்படுத்திக்கொள்கிறோம் என தெரிவித்துள்ளனர்.

அட்டவணை - 1

பெருநகர சென்னை மாநகராட்சி - சைதாப்பேட்டை சலவையாளர் பகுதியில் பழைய ஒய்வு அறை மற்றும் கல் உரிமம் பெற்று கட்டிடம் இடிக்கப்பட்டதால் தற்பொழுது ஒய்வறை இல்லாமல் இருக்கும் வாரிசுதாரர்களின் பட்டியல் பின்வருமாறு :

வ. எண்.	அசல் ஒதுக்கீடுதாரர் பெயர்	ஒய்வறையை பயன்படுத்தும் வாரிசுதாரரின் உறவினர்	தொலைபேசி எண்	கல் ஒதுக்கீடு எண்	பழைய கட்டிட ஒய்வறை ஒதுக்கீடு எண்	புதிய கட்டிட ஒய்வறை ஒதுக்கீடு எண்
1	க. பூபாலன்	பி. ஜானகி க/பெ. பூபாலன் வாரிசு சான்றிதழ் சமர்ப்பித்தவர்	9884318456	10	02	70
2	அ. ராஜி	தேவராஜ், (மகன்) த/பெ. ராஜி வாரிசு சான்றிதழ் சமர்ப்பித்தவர்	9790704102	36	07	71
3	எம்.வேலுசாமி	குப்புலட்சுமி (மகள்) க/பெமணிகண்டன் வாரிசு சான்றிதழ் சமர்ப்பித்தவர்	9566270076	89	12	72
4	எம். பலராமன்	பிரேம்குமார் (பேரன்) த/பெ.வெங்கடேசன்	9791073252	21	13	73
5	.பி. முருகன்	பாபு பாஷா த/பெ.. அமீர்	8056293456	80	28	74
6	பி. ராஜேந்திரன்	விஜயா க/பெ. முருகன்	9940659885	94	04	75
7	எம். அகமது பாய்	நாசினி க/பெ.அப்துல் சலாம்	9600128976	110	68	76
8	பி. பழனி	உஷா, க/பெ. குமார்	9710425338	144	78	77
9	பி.கே.விஜயன்	பாண்டியம்மாள், க/பெ. கதிரேசன்	9789001146	87	17	78

அட்டவணை - 2

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம். 10, கோட்டம் -142 ல் கல் உரிமம் பெற்று இந்நாள் வரை ஓய்வறை ஒதுக்கீடு செய்யப்படாதவர்களில் வாழ்நாளில் இருப்பவர்களும், இறந்துவிட்டவர்களின் வாரிசதாரர்களில் வாரிசு சான்று வழங்கியவர்கள் பட்டியல் பின்வருமாறு

வ. எண்.	கல் ஒதுக்கீடு எண்	கல் ஒதுக்கீடு பெற்ற அசல் ஒதுக்கீடுதாரர் பெயர்	ஓய்வறையை ஒதுக்கீடு வேண்டி கோருபவர் பெயர் / உறவு முறை	புதிக கட்டிட ஓய்வறை ஒதுக்கீட்டு எண்.	குறிப்பு
1	52	R.S.மணி	M.ரமேஷ் (மகன்) த/பெ. R.S.மணி	143	
2	81	கே. ராஜி	எஸ். முத்துகுமார் த/பெ. சுப்பிரமணி	140	வாரிசு சான்று வழங்கியவர் (ம) வர்தா புயல் பெருமழை காரணமாக டிசம்பர் 2016 ஆம் ஆண்டு முதல் ஓய்வறையினை ஆக்கிரமிப்பு செய்தவர்
3	91	G.மாரிமுத்து	M.மணோன்மணி க/பெ. G.மாரிமுத்து	144	வாரிசு சான்று வழங்கியவர்
4	105	கே. கோபி	கே. கோபி த/பெ.கிருஷ்ணன்	145	வாழ்நாளில் இருப்பவர்
5	114	எம். ராஜேந்திரன்	எம். ராஜேந்திரன் த/பெ.முருகன்	146	வாழ்நாளில் இருப்பவர்
6	116	கே. மோகன்	எம். தமிழரசன் த/பெ.மோகன்	147	வாரிசு சான்று வழங்கியவர்
7	121	கு. துரைசாமி	த/பெ.குமாரசாமி	148	வாரிசு சான்று வழங்கியவர்
8	109	K.குருசாமி	தினேஷ்குமார் த/பெ.பால்ராஜ்(பெயரன்)	149	
9	122	எஸ்.கல்யாணகுமார்	எஸ்.கல்யாணகுமார் த/பெ.சுப்பைய்யா	150	வாழ்நாளில் இருப்பவர்

அ) இந்நிலையில் இவ்வினம் மீது தெரிவிப்பது யாதெனில் மேற்கண்டுள்ள சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மானம் 765 நாள் – 29.11.2019ன்படி முந்தைய ஒதுக்கீடுதாரர்களின் வாரிசுதாரர்கள் உரிய வாரிசு சான்றிதழ் வழங்கிய பின்னர் அவர்களுக்கு ஓய்வறைகள் ஒதுக்கீடு செய்திட ஆணை பெறப்பட்டுள்ள நிலையில் அட்டவணை-1ல் கண்டுள்ளபடி வாரிசு சான்றிதழ் சமர்ப்பித்துள்ள மூன்று நபர்களுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளின்படி புதிய ஓய்வறை ஒதுக்கீடு செய்திடவும் வேண்டும் இதர வாரிசு சான்றிதழ் பெறப்பட வேண்டிய ஆறு நபர்களுக்கு சிறப்பினமாக கருதி கீழ்கண்ட நிபந்தனைகளின்படி புதிய ஓய்வறை ஒதுக்கீடு செய்திட 10வது மண்டல வார்டு குழுவில் 11.07.2022 நாளிட்ட தீர்மான எண் -69ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. இவ்வினம் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ஆ) அட்டவணை 2 – ல் கண்டுள்ளபடி , சலவைத் துறையில் கல் ஒதுக்கீடு பெற்று இது நாள் வரை ஓய்வறை ஒதுக்கீடு செய்யப்படாதவர்களில் வரிசை எண் . 01 முதல் 03 வரை வாழ்நாளில் இருப்பவர்கள் , வாரிசு சான்றிதழ் சமர்ப்பித்தவர்கள் வரிசை எண் . 04 முதல் 07 வரையிலான நபர்களுக்கும் மற்றும் இதர வாரிசு சான்றிதழ் பெறப்பட வேண்டிய இரண்டு நபர்களுக்கு சிறப்பினமாக கருதி கீழ்கண்ட நிபந்தனைகளின்படி புதிய ஓய்வறை ஒதுக்கீடு செய்திட 10வது மண்டல வார்டு குழுவில் 11.07.2022 நாளிட்ட தீர்மான எண் -69ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. இவ்வினம் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

இ) சைதாப்பேட்டை சலவையாளர் பொதுநல சங்கத்தின் கோரிக்கையின் மீது நடவடிக்கை மேற்கொள்ள மேற்கண்டுள்ள கல் ஒதுக்கீடுதாரர்களுக்கான ஓய்வறை ஒதுக்கீடு போக புதிய குடிசை மாற்று வாரிய குடியிருப்புக்கான சாலை வசதி அமைக்கபட வேண்டிய நிலையில் புதிய ஓய்வறை அல்லாது அப்பகுதியில் ஆக்கிரமிப்பு செய்து வசிக்கக்கூடிய சலவை தொழில் செய்து வரும் சலவையாளர்களை கண்டறியும் பொருட்டு மண்டலம் – 10, வார்டு எண் 142 வரி மதிப்பீட்டாளர், உதவி பொறியாளர், மற்றும் சுகாதார ஆய்வாளர் ஆகியோர் அடங்கிய மண்டல அளவிலான குழு அமைக்கப்பட்டதற்கு 10வது மண்டல வார்டு குழுவில் 11.07.2022 நாளிட்ட தீர்மான எண் -69ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. இவ்வினம் மீது மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

ஈ) மேலும், மண்டல அளவிலான குழுவின் கள ஆய்வு அறிக்கையின்படி அட்டவணை 3ல் கண்டுள்ள 30 எண்ணிக்கையிலான சலவையாளர்களுக்கு கல் உரிமத்துடன் கூடிய ஓய்வறை ஒதுக்கீடு செய்திட 10வது மண்டல வார்டு குழுவில் 11.07.2022 நாளிட்ட தீர்மான எண் - 69ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. இவ்வினம் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அட்டவணை-3

வ . எண் .	கல் உரிமம் & ஓய்வு அறை ஒதுக்கீடு பெறுபவர்கள்	ஒதுக்கப்படும் புதிய ஓய்வறை எண்	ஒதுக்கப்படும் புதிய கல் எண் பெயரளவிற்கு	தொலைபேசி எண்	குறிப்பு
1	பா . ஆனந்தி , க / பெ . பாலு	151	147	9514325005	
2	ஆர் . முருகன் , த / பெ . ராஜி	152	148	8220120318	
3	ஜி . குமார் , த / பெ . கணேசன்	153	149	8939792737	
4	ஜி . சித்திரா , க / பெ . காந்தி	154	150	9952004540	
5	ஆர் . ஜோதி , க/ பெ . ராமலிங்கம்	155	151	9382146617	
6	மு . ஜெயலட்சுமி க / பெ . முரளி	156	152	9677279772	
7	சு . கலைவாணி , க/ பெ . சுந்தர்	157	153	9500103647	
8	கே . ரங்கன் , த / பெ . கனகசபை	158	154	9176379870	
9	ஆர் . சதீஷ் குமார் , த / பெ . ரவி	159	155	9840758075	
10	டி . பிரபு , த / பெ . தேவராஜ்	160	156	9840318985	

11	தா.முத்து , த/பெ.தானப்பன்	161	157	9176444566	
12	S.கலைவாணி க/பெ.சதீஷ் அண்ணா	162	158		
13	P.கெஜபாண்டியன் த/பெ.பாண்டியன்	163	159	9551614205	
14	க.சிவக்குமார் , த/பெ.கணபதி	164	160	9840298126	
15	ப.மும்தாஜ் , க/பெ.பஷீர்	165	161	8148227589	
16	கா.ரமேஷ் , த/பெ.காந்தி	166	162	9941284412	
17	ச.நிர்மலா , க/பெ.சந்திரன்	167	163	9080501691	
18	செ.ராஜேஸ்வரி , க/பெ.செல்வம்	168	164	9840590169	
19	டி.ராஜேந்திரன் , த/பெ.தேவராஜ்	169	165	9840492540	
20	க.கார்த்திக் , க/பெ.கந்தன்	170	166	9042883894	
21	வி.சிங்காரவேலன் த/பெ. விஜயன்	171	167	9952990274	
22	ஆ.குமரேசன் , த/பெ.ஆறுமுகம்	172	168	9841189824	
23	ரா.சேகர் , த/பெ.ராமலிங்கம்	173	169	9176841837	
24	கி.கார்த்திக்,, த/பெ.கிருஷ்ணமூர்த்தி	174	170	9789933207	
25	சு.சுரேஷ் , த/பெ.சுப்பிரமணி	175	171	7305421044	
26	செ.சுரேஷ் , த/பெ.செல்வம்	176	172	6374407224	
27	கி.சாந்தா , க/பெ. கிருஷ்ணகுமார்	177	173	8939462053	
28	எ.லோகநாதன் , த/பெ.எத்திராஜ்	178	174	8248002152	
29	காஜா பீ மாசுமுசா	179	175	9600018618	
30	எம்.ஆறுமுகம் த/பெ.அ.மாரிமுத்து	180	176		

உ) அட்டவணை 4-ல் கண்டுள்ளபடி வரிசை எண்-1 திரு.பெ.மணி த/பெ.பெரியசாமி சலவைத்தொழிலாளர் அவர்களுக்கு தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க கீழ்க்கண்ட நிபந்தனைகளின்படி கல் உரிமத்துடன் கூடிய ஓய்வறை ஒதுக்கீடு செய்திடவும் மற்றும் வரிசை எண்-2 முதல் 5 வரையிலான சலவைத்தொழிலாளர்கள் வர்தா புயல் பெருமழை காரணமாக டிசம்பர் 2016 ஆம் ஆண்டு முதல் ஓய்வறையினை ஆக்கிரமிப்பு செய்து வசித்து வரும் சலவையாளர்களுக்கும் கல் உரிமத்துடன் கூடிய ஓய்வறை

ஒதுக்கீடு செய்திட 10வது மண்டல வார்டு குழுவில் 11.07.2022 நாளிட்ட தீர்மான எண் -69ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. இவ்வினம் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அட்டவணை-4

வ. எண்.	கல் உரிமம் & ஓய்வு அறை ஒதுக்கீடு பெறுபவர்கள்	ஒதுக்கப்படும் புதிய ஓய்வறை எண்	ஒதுக்கப்படும் புதிய கல் எண் பெயரளவிற்கு	தொலைபேசி எண்	குறிப்பு
1	பெ. மணி, த/பெ. பெரியசாமி	181	177	9445166358	தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணையத்திடம் திரு.பெ.மணி அவர்கள் முறையிட்டு (TNSLSA NO. 1728/G/ 2017 அவ்வழக்கில் ஆணையத்திடமிருந்து உத்தரவு பெற்றுள்ளார். அவ்வுத்தரவு நடைமுறைப்படுத்தப்படுகிறது.
2	திரு.சேகர் த/பெ ஆறுமுகம்	138	178		வர்தா புயல் பெருமழை காரணமாக டிசம்பர் 2016 ஆம் ஆண்டு முதல் ஓய்வறையினை ஆக்கிரமிப்பு செய்தவர்
3	M. கார்த்திகேயன் த/பெ.முனுசாமி	139	179		
4	திருமதி.ஜீவா க/பெ ராஜ்குமார்	141	180		
5	திருமதி.லட்சுமி க/பெ பசுபதி	142	181		

எனவே,

நிபந்தனைகள்

1. கல் உரிம வாடகை மாதத்திற்கு ரூ.6/- மற்றும் ஓய்வறை வாடகை மாதம் ஒன்றிற்கு ரூ.50/-ம் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும்,
2. ஒதுக்கீடு செய்யப்படும் ஓய்வறைக்கான மின்சாரம் கட்டணத்தினை ஒதுக்கீட்டுதாரரே செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும்,
3. மேற்காணும் அட்டவணை 2ல் வரிசை எண்1 மற்றும் அட்டவணை 4ல் வரிசை எண் 02 முதல் 05 வரை வர்தா புயல் பெருமழை காரணமாக டிசம்பர் 2016 ஆம் ஆண்டு முதல் ஓய்வறையினை ஆக்கிரமிப்பு செய்து வசித்து வரும் சலவையாளர்களுக்கு ஓய்வறை வாடகை ஒதுக்கீடு டிசம்பர் 2016 ம் ஆண்டு முதல் நடப்பு மாதம் வரை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வாடகை செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும்,.
4. புதிய ஓய்வறைகளுக்கு மாற்றம் செய்த பின்னர் ஆக்கிரமிப்பு இடங்களை இடித்துவிட்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு சாலை அமைக்கும் பணிக்காக பொறியியல் துறை மூலம் ஒப்படைப்பு செய்ய வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும்,

5. துணை ஆணையர் (வ (ம) நி) அவர்களின் மேற்குறிப்பில் *May be approved. We may also propose to increase the rent to a minimum of Rs. 5/- per square feet (i.e) Rs. 250/- per room instead of Rs.50/-* என தெரிவித்துள்ளார்.

மேற்காணும்1 முதல் 5 வரை உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 'அ' முதல் 'உ' வரையில் உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.255/2022 நாள்.26.09.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.14.ந.க.எண்.அ7/1141/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 02.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:456/2022 **பொருள் எண்.55**

பெருநகர சென்னை மாநகராட்சி - முன்பணம் - மண்டலம்-14 - கோட்டம்-168,169,183 முதல் 191 வரையிலான பகுதிகளில் 2021ம் ஆண்டு வடகிழக்கு பருவமழையினால் ஏற்பட்ட புயல் மற்றும் கனமழையில் தேங்கும் மழைநீரை பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு இல்லாமல் உடனுக்குடன் வெளியேற்ற ரூ.71,50,000/- முன்பணமாக பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டது - பெறப்பட்ட முன்பணத்தில் செலவுகள் மேற்கொள்ளப்பட்ட இனங்களுக்கான தொகை ரூ.71,19,152/- போக மீதமுள்ள தொகை ரூ.30,848/- பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டது - பெறப்பட்ட முன்பணத்தில் செலவுகள் மேற்கொள்ளப்பட்ட தொகையினை நேர் செய்ய கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யவும் மற்றும் பெறப்பட்ட முன்பணத் தொகை ரூ.71,50,000/-க்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி

08.11.2021 நாளிட்ட சுற்றறிக்கையில் வடகிழக்கு பருவமழை-2021 தற்பொழுது தீவிரம் அடைந்துள்ளதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மண்டலம்-14, பகுதி-41,42(ம)43, வார்டு-168,169,183 முதல் 191 வரையுள்ள பகுதிகளில் அவசரம் மற்றும் அத்தியாவசிய பணிகளுக்கு கோட்டம் ஒன்றிற்கு ரூ.2,00,000/- வீதம் முன்பணமாக பெற்று உடனடியாக பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களின் 10.11.2021 நாளிட்ட குறிப்பில் இப்பணிகளுக்கு முன்பணமாக பெற்று மேற்கொள்ளப்படும் செலவீனங்களை தேவையறிந்து மேற்கொள்ளவும், செலவிடப்படாமல் உள்ள தொகையை பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திடவும் தெரிவித்துள்ளார்கள், அதன்படி கோட்டம் ஒன்றிற்கு ரூ.2,00,000/- வீதம் ரூ.22,00,000/-ஐ முன்பணமாக மண்டலம்-14, பகுதி கணக்கு குழுமம் மூலமாக பெறப்பட்டு நிவாரண பணிகள் மேற்கொள்ளப்பட்து

அதனை தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சி, தலைமையிடத்தில் உள்ள தலைமை காசாளர் மூலமாக வார்டு ஒன்றுக்கு ரூ.2.00 இலட்சம் வீதம் 11 வார்டுகளுக்கும் சேர்த்து ரூ.22.00 இலட்சங்கள் 11.11.2021 அன்று ரொக்கமாக முன்பணம் பெறப்பட்டது அதுமட்டுமின்றி மீண்டும் தலைமைகாசாளர் மூலமாக வார்டு ஒன்றுக்கு ரூ.2.50 இலட்சம் வீதம் 11 வார்டுகளுக்கும் சேர்த்து ரூ.27.50 இலட்சங்கள் 19.11.2021 அன்று ரொக்கமாக முன்பணம் பெறப்பட்டது ஆக மொத்தம் மண்டலம்-14 2021ம் ஆண்டு வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு நிவாரணப் பணிகள் மேற்கொள்ள ரூ.71.50. இலட்சங்கள் முன்பணம் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி மண்டலம்-14ல் ரூ.71.50 இலட்சங்கள் முன்பணம் பெற்று நிவாரணபணிகள் மேற்கொள்ளப்பட்டது அதற்கு வார்டு வாரியாக செலவுகள் மேற்கொள்ளப்பட்ட விவரம் பின்வருமாறு :-

வ.எண்	Unit No	Division No	Expenditure
1	Unit -41	183	12,99,521
		184	4,14,280
		185	9,16,104
		186	4,05,375
2	Unit-42	168	3,01,880
		169	7,04,223
		187	3,12,750
		188	10,40,323
3	Unit-43	189	6,19,163
		190	6,76,626
		191	4,28,907
மொத்தம்			71,19,152

பெறப்பட்ட முன்பணத் தொகை ரூ.71,50,000/-ல் மேற்கண்ட செலவினங்கள் போக மீதமுள்ள தொகை ரூ.30848/- பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டது.

எனவே,

(1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-14, வார்டு 168,169,183 முதல் 191 வரையிலான பகுதிகளில் 2021ம் ஆண்டு வடகிழக்கு பருவ மழையினால் ஏற்பட்ட புயல் மற்றும் கனமழையில் தேங்கும் மழைநீரை பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு இல்லாமல் உடனுக்குடன் வெளியேற்ற ரூ.71,50,000/- முன்பணம் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதியும்,

(2) பெறப்பட்ட முன்பணத்தில் செலவுகள் மேற்கொள்ளப்பட்ட இனங்களுக்கான தொகை ரூ.71,19,152/-ஐ நேர் செய்வதற்கும் மற்றும் கீழ்கண்ட தலைப்புகளில் நிதி ஆலோசகர் மூலமாக நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதி வேண்டியும்,

வ.எண்	பிரிவு எண்	கணக்கு குறிப்பீடு எண்	பணியின் தலைப்பு	தேவைப்படும் நிதி
1	2021-07	230-700-100	Flood Relief Works-Interior Roads	25,38,524
2	2021-07	230-700-402	Flood Relief Works- Food Expenses	6,62,450
3	2021-07	230-700-600	Flood Relief work hire Chargers	29,17,920
4	2021-07	230.700-900	Flood Relief Work Equipment	1,30,478
5	2021-07	230-701-000	Flood Relief Work Man power and other	8,69,780
			மொத்தம்	**71,19,152**

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். *169 /2022,* நாள். *23.09.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.219/2022 நாள்.26.09.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

பே.சா.து.ந.க.எண்.பி3/3907/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.08.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:457/2022 **பொருள் எண்.56**

பெருநகர சென்னை மாநகராட்சி - பேருந்து சாலைகள் துறை - சாலைப்பணிகள் - பொதுப்பணி துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் நீர்வளத்துறைகளிடமிருந்து பெறப்பட்ட பொருட்களின் விலை (அடிப்படை இனங்கள் மட்டும்) 2022 – 2023 ஆம் ஆண்டிற்குரியது பெறப்பட்டது - அதனடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலக விலை விவரப்பட்டியல் (*Office Schedule of Rates*) 2022 - 2023 தயாரிக்கப்பட்டது - பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து துறைகளிலும் அமுல்படுத்த அனுமதி.

தமிழ்நாடு பொதுப்பணி துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் நீர்வளத் துறையிடமிருந்து பெறப்பட்ட 2022 – 2023 ஆம் ஆண்டிற்கான விலை விவர அட்டவணை *(Standard Schedule of Rates)* (பொருட்கள் அடிப்படை இனங்கள் மட்டும் *GST* மற்றும் பிற வரிகள் நீங்கலாக) பெருநகர சென்னை மாநகராட்சியில் பெறப்பட்டது.

அதனடிப்படையில் சாலைப்பணிகள் மற்றும் அதனை சார்ந்த பணிகளுக்கு தற்போது நடைமுறையிலுள்ள விவரப்பட்டியினை *(Data)* ஆதாரமாக கொண்டும், பெருநகர சென்னை மாநகராட்சி, பேருந்து சாலைகள் துறை மூலம் விலை விவரப்பட்டியல் *(Schedule of Rates)* 2022-2023 தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து துறைகளிலும், விலைவிவர பட்டியலினை *(Schedule of Rates)* மதிப்பீடு தயாரிப்பதற்கு மன்றத்தின் அனுமதி பெற்று நடைமுறைப்படுத்தலாம் எனக் கருதப்படுகிறது.

எனவே,

1) தமிழ்நாடு பொதுப்பணி துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் நீர்வளத் துறையிடமிருந்து பெறப்பட்ட 2022- 2023 ஆம் ஆண்டிற்கான பொருட்களின் விலையின் (அடிப்படை இனங்கள் மட்டும் *GST* மற்றும் பிற வரிகள் நீங்கலாக) அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சாலைப்பணிகள் மற்றும் அதனை சார்ந்த பணிகளுக்கான விலை விவரப்பட்டியல் *(Schedule of Rates)* பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து துறைகள் மதிப்பீடுகள் தயாரிக்க 01.09.2022 முதல் அமுல்படுத்துவதற்கும்,
2) ஒப்புதல் பெறப்பட்ட சாலை பணிகளுக்கான அலுவலக விலைவிவர பட்டியலை *(Office Schedule of Rates) IT Cell* மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

> *"23.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். *178 /2022,* நாள். *23.09.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".
>
> *"26.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.221/2022 நாள்.26.09.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

SWD.CNo.B1/0976/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 10.08.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:458/2022 **பொருள் எண்.57**

Greater Chennai Corporation – Stormwater Drain Department – Demolition and reconstruction / construction of stormwater drain at various streets in Zone- 13 – Tender awarded to M/s.VRP Constructions – Name change requested from M/s.VRP Constructions to M/s.Samrat Constructions- For Approval

Tender was called for Demolition and reconstruction / construction of stormwater drain at various streets in package-13 under Flood Mitigation Fund. Tender was awarded to the successful for the lowest eligible bidder to M/s.VRP Constructions for the amount of Rs.10,75,25,067.96. The letter of acceptance has been issued to M/s.VRP Constructions on 18.05.2022 and work is on progress.

During the time of tender submission the bidder had submitted all the relevant documents such as certificate issued by the Registrar of Trade Union, Erode, affidavit, PWD Registration copy, IT documents in the name of M/s.Samrat Constructions as the original company M/s.VRP Construction name has been changed to M/s.Samrat Constructions. However, during tender uploading the bidder uploaded in the online using the tender key which reflects the old company name M/s.VRP Construction and hence the letter of acceptance was issued in the name of M/s.VRP Construction in order to close the award of contract in online tender website.

M/s.Samrat Construction has submitted a request letter on 18.07.2022 for the change the name of the company/firm in letter of acceptance as M/s.Samrat Construction enclosing the name change issued by Registrar , Registration of Trade Union, Erode.

Hence, to issue revised letter of acceptance for the work of Demolition and reconstruction/ construction of stormwater drain at various streets in Zone- 13 (Package-13) under flood mitigation fund to M/s.Samrat Construction which has been issued in the name of M/s.VRP Construction. Orders of the Council are requested, through Standing Committee (Works) and Standing Committee (Taxation and Finance).

"23.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். *184 /2022,* நாள். *23.09.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.225/2022 நாள்.26.09.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது*"*.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.நீ.வ.து.ந.க.எண்.பி3/416/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:459/2022 **பொருள் எண்.58**

பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால் துறை - மண்டலம் -9 சிப்பம் -7- Singara Chennai 2.0 Phase-1- திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி - கூடுதல் நீளம் பணி மேற்கொள்ளப்பட்டது - பட்டியில் சேர்த்து தொகை தீர்வு செய்ய அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -9ல் மழைநீர் வடிகால் துறை மூலம் சிங்கார சென்னை 2.0 பேஸ்-1 திட்டத்தின் கீழ் 3 சாலைகளில் வடகிழக்கு பருவமழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினை தடுக்கும் விதமாக வடிகால்கள் அமைக்கும் பணி மேற்கொள்ள திருவாளர்.டி.குமார் அவர்களுக்கு ரூ.3,25,90,378/-க்கு பணி ஆணை வழங்கப்பட்டது.

பணி ஆணை வழங்கப்பட்ட ஹபிபுல்லா சாலையில் 230மீ நீளத்திற்கு 1200X1200 அகலத்திற்கு வடிகால் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டது.

இதனிடையே பணியிடத்தின் தன்மை மற்றும் நீர் வெளியேற வழிவகை ஏற்படுத்தும் விதமாக கூடுதலாக 180மீ நீளத்திற்கு வடிகால் அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆக மேற்கண்ட ஹபிபுல்லா சாலையில் மொத்தமாக 410 மீ நீளத்திற்கு 1500X1500 அளவுள்ள மழைநீர் வடிகால் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி தற்போது 410 மீ நீளத்திற்கு 1500X1500க்கு வடிகால் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், மேற்கண்ட சிப்பத்தில் மீதமுள்ள சாரதி சாலை மற்றும் வால்மீகி சாலையில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு அதற்கான பகுதி பட்டித்தொகையாக ரூ.2,11,80,000/-ஐ தீர்வு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி கூடுதலாக நீளம் மற்றும் அகலத்திற்கு வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அதற்கான கூடுதல் செலவினத்தொகை ரூ.78,59,621/-ம் வழங்கப்பட வேண்டியுள்ளது. மேற்கண்ட கூடுதல் செலவினத்தொகையானது ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கை தொகையில் 25% க்கு மிகாமல் உள்ள நிலையில் ஒப்பக்கூறு **54. Non-tendered items**: Non tendered items of work up to 25 % of contract value can be carried out without supplemental Agreement. 25% variation in the quantity at the tender awarded rate can be carried out, with the approval of the Commissioner.
For items of work for which the rates can be derived from the rates of the items in the original agreement, the rates will be derived by applying the overall tender premium or discount to the rates for the new item by applying the prorate excess or discount for the item of work, from which the rate is derived; the lesser rate of these two will be adopted for making payment to the contractor.ன்படி கூடுதல் தொகையான ரூ.78,59,621/-ஆனது 25% தொகைக்கு மிகாமல் உள்ள நிலையில் மேற்கண்ட பணிக்கான அளவீடுகளுடன் (Measurement) பதிவு செய்து பட்டியினை தீர்வு செய்து கூடுதல் உடன்படிக்கை மேற்கொள்வதில் இருந்து விலக்களித்து கூடுதல் தொகையினை வழங்க, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "23.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 185 /2022, நாள். 23.09.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".
>
> "26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.226/2022 நாள்.26.09.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.நீ.வ.து.(செ.ந.பு.அ).ந.க.எண்.பி3/0131-1/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:460/2022 **பொருள் எண்.59**

பெருநகர சென்னை மாநகராட்சி - ஒப்பம் - மழைநீர் வடிகால் துறை (CRRT) - சென்னை நதிநீர் புனரமைப்பு அறக்கட்டளை திட்ட நிதியின் கீழ் மண்டலம்-5, கோட்டம்-59-ல் உள்ள காயித்-இ-மில்லத் பாலம் முதல் லாஸ் பாலம் வரை கூவம் ஆற்றங்கரையில் மரங்கள் நட்டு, 2 ஆண்டுகள் பராமரிக்கும் பணி - ஒப்பம் கோரப்பட்டது - ஒப்பந்ததாரர் திரு.என்.முகமது ஜமாலுதீன் அவர்களுக்கு பணியினை வழங்க அனுமதி

1	பணியின் பெயர்	மண்டலம்-5-ல் கோட்டம்-59-ல் உள்ள காயித்-இ-மில்லத் பாலம் முதல் லாஸ் பாலம் வரை கூவம் ஆற்றங்கரையில் மரங்கள் நட்டு, 2 ஆண்டுகள் பராமரிக்கும் பணி
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	அரசாணை, G.O(MS) No.72, நாள்: 12.07.2017
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	CRRT திட்டம் துறை
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2021-22 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை:	**ரூ. 1,73,00,000/-**
அ	பணியின் மதிப்பு மற்றும் ஜி.எஸ்.டி.12%	ரூ. 1,54,54,177.04
ஆ	மேற்பார்வை செலவு -10%	ரூ. 13,79,837.24
இ	தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1%	ரூ. 1,37,983.72
ஈ	மற்றைய எதிர்பாரா செலவு-2.5%	ரூ. 3,28,002.00
	மொத்தம்	**ரூ. 1,73,00,000/-**
6	எந்தெந்த பத்திரிகையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	1. முரசொலி நாளிதழ்,நாள்:22.06.2022 2. டெக்கான் க்ரோனிக்கல் நாளிதழ், நாள்: 22.06.2022 3. பெருநகர சென்னை மாநகராட்சி செய்தி மலர், எண்.28, நாள்: 23.06.2022
7	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	06.07.2022
8	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும்	ஆம்
9	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	இரண்டு - இணையத்தளத்தின் (e-tender) மூலம் ஒப்பம் பெறப்பட்டுள்ளது.

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்,

வ. எண்	திரு / திருமதி / திருவாளர்கள்	பணியின் அலுவலக மதிப்பு ரூ.(ஜி.எஸ்.டி. 12%சேர்த்து)	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ. (ஜி.எஸ்.டி.12% சேர்த்து)	2020-21 ஆம் ஆண்டின் விலை விகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு
1.	என்.முகமது ஜமாலுதீன்	1,54,54,177.04	1,60,72,344.12	(+)4.00 % அதிகம்
2	மாடர்ன் இஞ்சினியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கோ-ஆப்ரட்டிவ் சொஸைட்டி லிட்.	1,54,54,177.04	உரிய ஒப்ப ஆவணங்கள் அளிக்காததால் ஒப்பம் நிராகரிக்கப்பட்டது	

10	குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள்	ஆம். 11.07.2022, 21.07.2022, 03.08.2022 மற்றும் 02.09.2022 ஆகிய நாட்களில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது.
11	பேச்சு வார்த்தைக்குப்பின் ஒப்பத் தொகை / ஒப்ப சதவீதம் (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)	ரூ. 1,60,25,981.59 (+) 3.70 % அதிகம் 2021-22 ஆம் ஆண்டின் விலை விவரப்படி
12	குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு	வகுப்பு-1
13	பணிக்கான நிதி ஆதாரம்	CRRT திட்ட நிதி
14	ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம்	06.10.2022

12.07.2017 நாளிட்ட அரசாணை மற்றும் அரசு தலைமை செயலர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற CRRT குழுவின் ஒப்புதலின்படி, சென்னை நதிநீர் புனரமைப்பு அறக்கட்டளை (CRRT) திட்ட நிதியின் கீழ் மண்டலம்-5, கோட்டம்-59-ல் உள்ள காயித்-இ-மில்லத் பாலம் முதல் லாஸ் பாலம் வரை கூவம் ஆற்றங்கரையில் மரங்கள் நட்டு, 2 ஆண்டுகள் பராமரிக்கும் பணிக்காக ரூ.1,73,00,000/- மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, ஒப்பங்கள் கோரப்பட்டன. ஒப்ப இறுதி நாளான 06.07.2022 அன்று e-tender மூலமாக ஒரு ஒப்பம் பெறப்பட்டு, 07.07.2022 அன்று ஒப்பம் திறக்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டதில், ஒப்பந்ததாரர்களின் தொழில் நுட்ப ஆவணங்கள் (Technical Bid) பரிசீலிக்கப்பட்டதில், திருவாளர்கள். மாடர்ன் இஞ்சினியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கோ-ஆப்ரட்டிவ் சொஸைட்டி லிட். அவர்களின் உரிய ஒப்ப ஆவணங்கள் அளிக்காததால் ஒப்பம் நிராகரிக்கப்பட்டது. மற்றொரு ஒப்பந்ததாரர் திரு.என்.முகமது ஜமாலுதீன் அவர்கள் உரிய நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளமையால், இவர்களுடைய விலைப்புள்ளி (Price Bid) 09.07.2022 அன்று திறக்கப்பட்டன. இதன்படி, விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திரு.என்.முகமது ஜமாலுதீன் அவர்களின் ஒப்ப சதவீதம், 2021-22 ஆம் ஆண்டின் அலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான (ஜி.எஸ்.டி 12% சேர்த்து) ரூ.1,54,54,177.04-ஐ விட (+)4.00% அதிகமாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.1,60,72,344.12 ஆகும். மேலும், 11.07.2022, 21.07.2022 03.08.2022 மற்றும் 02.09.2022 ஆகிய நாட்களில் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்ப சதவீதம் (-)0.10% குறைவு ஆகும். இதன்படி, ஒப்பத்தொகை ரூ.1,54,38,722.87 ஆகும்.

இந்நிலையில், துணை ஆணையர்(வ.ம.நி) அவர்களின் 30.07.2022 நாளிட்ட செயல்முறை ஆணையில் 30.07.2022 அன்று முதல் ஜி.எஸ்.டியானது, தற்போது ஜி.எஸ்.டி. 12%-லிருந்து 18%-

ஆக உயர்த்தப்பட்டுள்ளதால் 18.07.2022 முதல் பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகளுக்கும் ஜி.எஸ்.டி. 12%-லிருந்து 18%-ஆக உயர்த்தி பணி மேற்கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி, *CRRT*-யிடமிருந்து கூடுதலாக ஜி.எஸ்.டி 6% நிதி பெறப்படவேண்டும். அதன்படி, ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை விவரம்,

பணியின் மதிப்பு (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)	ரூ. 1,54,54,177.04
ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)	ரூ. 1,54,38,722.87
ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2021-22 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி	(-)0.10% குறைவு
ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை (ஜி.எஸ்.டி 18% சேர்த்து)	ரூ.1,62,65,797.31

இதன்படி, 09.09.2022 அன்று நடந்த ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுவில் (Tender Scrutiny Committee) மேற்கண்ட பணிக்காக (ஜி.எஸ்.டி 18% சேர்த்து) ரூ.1,62,65,797.31-க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப் பணியை ஒப்பந்ததாரர் திரு.என்.முகமது ஜமாலுதீன் அவர்களுக்கு வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்டவற்றின் அடிப்படையில், ஒப்பந்ததாரர் திரு.முகமது ஜமாலுதீன் அவர்களுக்கு (ஜி.எஸ்.டி 18%சேர்த்து) ரூ.1,62,65,797.31 (-)0.10% குறைவு, 2021-22 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி (ரூபாய் ஒரு கோடியே அறுபத்து இரண்டு லட்சத்து அறுபத்து ஐந்தாயிரத்து எழுநூற்று தொண்ணூற்று ஏழு மற்றும் முப்பத்து ஒன்று பைசா மட்டும்)க்கான ஒப்பப்பணியினை வழங்கவும் மற்றும் *CRRT*-யிடமிருந்து கூடுதலாக ஜி.எஸ்.டி 6% நிதி பெறுவதற்கும் நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"23.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். *219/2022*, நாள். *23.09.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".
>
> *"26.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.251/2022 நாள்.26.09.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது*"*.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.நீ.வ.து.(செ.ந.பு.அ).ந.க.எண்.பி3/0131-2/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:461/2022 **பொருள் எண்.60**

பெருநகர சென்னை மாநகராட்சி - ஒப்பம் - மழைநீர் வடிகால் துறை (CRRT) - சென்னை நதிநீர் புனரமைப்பு அறக்கட்டளை திட்ட நிதியின் கீழ் மண்டலம்-5, கோட்டம்-60-ல் உள்ள காயித்-இ-மில்லத் பாலம் முதல் நேப்பியர் பாலம் வரை கூவம் ஆற்றங்கரையில் மரங்கள் நட்டு, 2 ஆண்டுகள் பராமரிக்கும் பணி - ஒப்பம் கோரப்பட்டது - ஒப்பந்ததாரர் திரு.என்.முகமது ஜமாலுதீன் அவர்களுக்கு பணியினை வழங்க அனுமதி

1	பணியின் பெயர்	மண்டலம்-5, கோட்டம்-60-ல் உள்ள காயித்-இ-மில்லத் பாலம் முதல் நேப்பியர் பாலம் வரை கூவம் ஆற்றங்கரையில் மரங்கள் நட்டு, 2 ஆண்டுகள் பராமரிக்கும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	அரசாணை, G.O(MS) No.72, நாள்: 12.07.2017
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	CRRT திட்டம் துறை
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2021-22 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை:	**ரூ. 1,78,00,000/-**
அ	பணியின் மதிப்பு மற்றும் ஜி.எஸ்.டி.12%	ரூ. 1,59,45,650.58
ஆ	மேற்பார்வை செலவு -10%	ரூ. 14,23,718.80
இ	தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1%	ரூ. 1,42,371.88
ஈ	மற்றைய எதிர்பாரா செலவு-2.5%	ரூ. 2,88,258.73
	மொத்தம்	**ரூ. 1,78,00,000/-**
6	எந்தெந்த பத்திரிகையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	1. முரசொலிநாளிதழ்,நாள்:22.06.2022 2. டெக்கான் க்ரோனிக்கல் நாளிதழ், நாள்: 22.06.2022 3. பெருநகர சென்னை மாநகராட்சி செய்தி மலர், எண்.28, நாள்: 23.06.2022
7	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	06.07.2022
8	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும்	ஆம்
9	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	ஒன்று - இணையத்தளத்தின் (e-tender) மூலம் ஒப்பம் பெறப்பட்டுள்ளது.

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்,

வ. எண்	திரு / திருமதி / திருவாளர்கள்	பணியின் அலுவலக மதிப்பு ரூ.(ஜி.எஸ்.டி. 12%சேர்த்து)	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ. (ஜி.எஸ்.டி.12% சேர்த்து)	2020-21 ஆம் ஆண்டின் விலை விகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு
1.	என்.முகமது ஜமாலுதீன்	1,59,45,650.58	1,65,83,476.61	(+)4.00 % அதிகம்

10	குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள்	ஆம். 11.07.2022, 21.07.2022, 03.08.2022 மற்றும் 02.09.2022 ஆகிய நாட்களில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது.
11	பேச்சு வார்த்தைக்குப்பின் ஒப்பத் தொகை / ஒப்ப சதவீதம் (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)	ரூ. 1,65,35,639.65 (-) 0.10 % குறைவு 2021-22 ஆம் ஆண்டின் விலை விவரப்படி
12	குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு	வகுப்பு-1
13	பணிக்கான நிதி ஆதாரம்	CRRT திட்ட நிதி
14	ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம்	06.10.2022

12.07.2017 நாளிட்ட அரசாணை மற்றும் அரசு தலைமை செயலர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற CRRT குழுவின் ஒப்புதலின்படி, சென்னை நதிநீர் புனரமைப்பு அறக்கட்டளை (CRRT) திட்ட நிதியின் கீழ் மண்டலம்-5, கோட்டம்-60-ல் உள்ள காயித்-இ-மில்லத் பாலம் முதல் நேப்பியர் பாலம் வரை கூவம் ஆற்றங்கரையில் மரங்கள் நட்டு, 2 ஆண்டுகள் பராமரிக்கும் பணிக்காக ரூ.1,78,00,000/- மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, ஒப்பங்கள் கோரப்பட்டன. ஒப்ப இறுதி நாளான 06.07.2022 அன்று e-tender மூலமாக ஒரு ஒப்பம் பெறப்பட்டு, 07.07.2022 அன்று ஒப்பம் திறக்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டதில், ஒப்பந்ததாரர் திரு.என்.முகமது ஜமாலுதீன் அவர்களின் தொழில் நுட்ப ஆவணங்கள் (Technical Bid) பரிசீலிக்கப்பட்டு, ஒப்பந்ததாரர் உரிய நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளமையால், இவர்களுடைய விலைப்புள்ளி (Price Bid) 09.07.2022 அன்று திறக்கப்பட்டன.

இதன்படி, விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திரு.என்.முகமது ஜமாலுதீன் அவர்களின் ஒப்ப சதவீதம், 2021-22 ஆம் ஆண்டின் அலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான (ஜி.எஸ்.டி 12% சேர்த்து) ரூ.1,59,45,650.58-ஐ விட (+)4.00% அதிகமாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.1,65,83,476.61 ஆகும். மேலும், 11.07.2022, 21.07.2022 03.08.2022 மற்றும் 02.09.2022 ஆகிய நாட்களில் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்ப சதவீதம் (-)0.10% குறைவு ஆகும். இதன்படி, ஒப்பத்தொகை ரூ.1,59,29,704.93 ஆகும்.

இந்நிலையில், துணை ஆணையர்(வ.ம.நி) அவர்களின் 30.07.2022 நாளிட்ட செயல்முறை ஆணையில் 30.07.2022 அன்று முதல் ஜி.எஸ்.டியானது, தற்போது ஜி.எஸ்.டி. 12%-லிருந்து 18%-ஆக உயர்த்தப்பட்டுள்ளதால் 18.07.2022 முதல் பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகளுக்கும் ஜி.எஸ்.டி. 12%-லிருந்து 18%-ஆக உயர்த்தி பணி மேற்கொள்ளுமாறு தெரிவித்து கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி, *CRRT*-யிடமிருந்து கூடுதலாக ஜி.எஸ்.டி 6% நிதி பெறப்படவேண்டும். அதன்படி ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை விவரம்,

பணியின் மதிப்பு (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)	ரூ. 1,59,45,650.58
ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)	ரூ.1,59,29,704.93
ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2021-22 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி	(-)0.10% குறைவு
ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை (ஜி.எஸ்.டி 18% சேர்த்து)	ரூ.1,67,83,081.98

இதன்படி, 09.09.2022 அன்று நடந்த ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுவில் (Tender Scrutiny Committee) மேற்கண்ட பணிக்காக (ஜி.எஸ்.டி 18% சேர்த்து) ரூ.1,67,83,081.38-க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப் பணியை ஒப்பந்ததாரர் திரு.என்.முகமது ஜமாலுதீன் அவர்களுக்கு வழங்க பரிந்துரை செய்யப்பட்டது.

எனவே, மேற்கண்டவற்றின் அடிப்படையில், ஒப்பந்ததாரர் திரு.முகமது ஜமாலுதீன் அவர்களுக்கு (ஜி.எஸ்.டி 18%சேர்த்து) ரூ.1,67,83,081.98 (-)0.10% குறைவு, 2021-22 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி (ரூபாய் ஒரு கோடியே அறுபத்து ஏழு லட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து எண்பத்து ஒன்று மற்றும் தொண்ணூற்று எட்டு பைசா மட்டும்)க்கான ஒப்பப்பணியினை வழங்கவும் மற்றும் *CRRT*-யிடமிருந்து கூடுதலாக ஜி.எஸ்.டி 6% நிதி பெறுவதற்கும், நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

> *"23.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். *217/2022*, நாள். *23.09.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".
>
> *"26.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.249/2022 நாள்.26.09.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது*"*.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.நீ.வ.து.(செ.ந. சீ.அ).ந.க.எண்.சி1/0232/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:462/2022 **பொருள் எண்.61**

பெருநகர சென்னை மாநகராட்சி - ஒப்பம் - மழைநீர் வடிகால் துறை (CRRT) - சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை திட்ட நிதியின் கீழ் மண்டலம்-11, கோட்டம்-143, 144, 145, 146 & 150 கூவம் ஆற்றின் கரையோரம் ரயில் நகர் பாலம் முதல் பெருநகர சென்னை மாநகராட்சி எல்லை (திருவேற்காடு நகராட்சி) வரை பராமரிப்பு பாதை அமைத்து மரங்கள் நட்டு 2 ஆண்டுகள் பராமரிக்கும் பணி - ஒப்பம் கோரப்பட்டது - ஒப்பந்ததாரர் திரு.ஆர்.நிம்ரோடு அவர்களுக்கு பணியினை வழங்க அனுமதி

1	பணியின் பெயர்	மண்டலம்-11, கோட்டம்-143, 144, 145, 146 & 150 கூவம் ஆற்றின் கரையோரம் ரயில் நகர் பாலம் முதல் பெருநகர சென்னை மாநகராட்சி எல்லை (திருவேற்காடு நகராட்சி) வரை பராமரிப்பு பாதை அமைத்து மரங்கள் நட்டு 2 ஆண்டுகள் பராமரிக்கும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	அரசாணை, G.O(MS) No.9, நாள்: 13.01.2015
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	CRRT துறை
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2021-22 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை:	**ரூ.** 2,08,22,384.83
அ	பணியின் மதிப்பு மற்றும் ஜி.எஸ்.டி.18%	ரூ. 37,48,029.27
ஆ	மேற்பார்வை செலவு -10%	ரூ. 5,20,559.62
இ	தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1%	ரூ. 2,08,223.85
ஈ	மற்றைய எதிர்பாரா செலவு-2.5%	ரூ. 4,80,802.44
	மொத்தம்	**ரூ. 2,57,80,000.00**
6.	எந்தெந்த பத்திரிகையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	1. முரசொலி நாளிதழ்,நாள்:25.08.2022 2. நியு இந்தியன் எக்ஸ்பிரஸ், நாள்: 25.08.2022 3. பெருநகர சென்னை மாநகராட்சி செய்தி மலர் எண்.28, இதழ்:1396, நாள்: 25.08.2022
7	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	14.09.2022
8	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும்	ஆம்
9	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	ஒன்று - இணையத்தளத்தின் (e-tender) மூலம் ஒப்பம் பெறப்பட்டுள்ளது.

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்,

வ. எண்	திரு / திருமதி / திருவாளர்கள்	பணியின் அலுவலக மதிப்பு ரூ.(ஜி.எஸ்.டி. 18%சேர்த்து)	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ. (ஜி.எஸ்.டி.18% சேர்த்து)	2020-21 ஆம் ஆண்டின் விலை விகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு
1.	திரு.ஆர்.நிம்ரோடு	ரூ.2,45,70, 414.10	2,23,59,076.83	(-) 9.00% குறைவு

10	குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள்	:	ஆம். 16.09.2022 அன்று பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது.
11	பேச்சு வார்த்தைக்குப்பின் ஒப்பத் தொகை / ஒப்ப சதவீதம் (ஜி.எஸ்.டி 18% சேர்த்து)	:	ரூ. 2,23,59,076.83 (-) 9.00% குறைவு 2021-22 ஆம் ஆண்டின் விலை விவரப்படி
12	குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு	:	வகுப்பு-1
13	பணிக்கான நிதி ஆதாரம்	:	CRRT திட்ட நிதி
14	ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம்	:	14.12.2022

11.07.2022 நாளிட்ட அரசாணை மற்றும் முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களின் 11.07.2022 நாளிட்ட CRRT குழுவின் ஒப்புதலின்படி, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை (CRRT) திட்ட நிதியின் கீழ் மண்டலம்-11, கோட்டம்-*143, 144, 145, 146* & 150 கூவம் ஆற்றின் கரையோரம் ரயில் நகர் பாலம் முதல் பெருநகர சென்னை மாநகராட்சி எல்லை (திருவேற்காடு நகராட்சி) வரை பராமரிப்பு பாதை அமைத்து மரங்கள் நட்டு 2 ஆண்டுகள் பராமரிக்கும் பணிக்காக ரூ.2,57,80,000.00 / - மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, ஒப்பங்கள் கோரப்பட்டன. ஒப்ப இறுதி நாளான 14.09.2022 அன்று e-tender மூலமாக ஒரு ஒப்பம் பெறப்பட்டு, 15.09.2022 அன்று திறக்கப்பட்டது. இதன்படி, ஒப்பந்ததாரர் திரு.ஆர்.நிம்ரோடு அவர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் (Technical bid) பரிசீலிக்கப்பட்டு, ஒப்பந்ததாரர் உரிய நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளமையால் இவர்களுடைய விலைப்புள்ளி (Price bid) 16.09.2022 அன்று திறக்கப்பட்டது. இதன்படி, விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திரு.ஆர்.நிம்ரோடு அவர்கள் அளித்த ஒப்ப சதவீதம் 2021-22 ஆம் ஆண்டின் அலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான (ஜி.எஸ்.டி 18% சேர்த்து) ரூ.2,45,70, 414.10 / -ஐ விட (-) 9.00% குறைவாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.2,23,59,076.83 / - ஆகும். மேலும், 16.09.2022 அன்று நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் விலை குறைப்பு அளிக்க இயலாது என கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். எனவே, குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்ப சதவீதம் (-) 9.00% குறைவு ஆகும். இதன்படி, ஒப்பத்தொகை ரூ.2,23,59,076.83 / - ஆகும்.

பணியின் மதிப்பு (ஜி.எஸ்.டி 18% சேர்த்து)	ரூ.2,45,70, 414.10
ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை (ஜி.எஸ்.டி 18% சேர்த்து)	ரூ.2,23,59,076.83
ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2021-22 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி	(-) 9.00% குறைவு

இதன்படி, 19.09.2022 அன்று நடந்த ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுவில் (Tender Scrutiny Committee) மேற்கண்ட பணிக்காக (ஜி.எஸ்.டி 18% சேர்த்து) ரூ.2,23,59,076.83/-க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப் பணியை ஒப்பந்ததாரர் திரு.ஆர்.நிம்ரோடு அவர்களுக்கு வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்டவற்றின் அடிப்படையில் ஒப்பந்ததாரர் திரு.ஆர்.நிம்ரோடு அவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையான (ஜி.எஸ்.டி 18% சேர்த்து) ரூ.2,23,59,076.83/- (2021-22 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி (-)9.00% குறைவு) (ரூபாய் இரண்டு கோடியே இருபத்து மூன்று இலட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து எழுபத்து ஆறு மற்றும் எண்பத்து மூன்று பைசா)க்கான ஒப்பப்பணியினை வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

> *"23.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். *216/2022,* நாள். *23.09.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".
>
> *"26.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.248/2022 நாள்.26.09.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது*"*.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

பூ.து.ந.க.எண்.பி2/1212-1/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:463/2022 **பொருள் எண்.62**

பெருநகர சென்னை மாநகராட்சி - ஒப்பம் - பூங்காதுறை - "சிங்கார சென்னை 2.0" திட்டத்தின் கீழ் மாநகராட்சிக்கு உட்பட்ட காலியாக உள்ள திறந்தவெளி நிலங்களில் புதிய பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் அமைக்கவும் மற்றும் ஏற்கனவே உள்ள பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத்திடல்களை மேம்படுத்தும் பணிகளுக்கு ஒப்பம் கோரப்பட்டது - மண்டலம்1-ற்கான பணிகளுக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணியினை வழங்க அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உலகதரத்திற்கு நவீன கட்டமைப்புகள் மற்றும் சேவை மேற்கொள்வதற்கு 2021-22ஆம் நிதியாண்டில் மேதகு ஆளுநர் உரையில் சிங்கார சென்னை 2.0 என்ற திட்டம் அறிவிக்கப்பட்டது. 28.09.2021 நாளிட்ட அரசாணையின் படி, சிங்கார சென்னை 2.0 திட்டத்தின்கீழ் பல்வேறு பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, 2022-23 ஆம் ஆண்டின் தமிழக சட்டப்பேரவையில் நடைபெற்ற மானிய கோரிக்கையின்போது மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர் வழங்கல் அமைச்சர் அவர்களால் கீழ்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"நகர்ப்புறங்களை பசுமையாக்கி, இயற்கை சூழலை மேம்படுத்த, பெருநகர சென்னை மாநகராட்சியில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் 150 திறந்தவெளி பூங்காக்கள் அமைக்கப்படும் எனவும், பெருநகர சென்னை மாநகராட்சியில் 50 எண்ணிக்கையிலான விளையாட்டுத் திடல்கள் புதிதாக அமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணி ரூ.50 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்" எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சிங்கார சென்னை 2.0 என்ற திட்டத்தின்கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி, பூங்கா துறையின் மூலம் மாநகராட்சிக்கு உட்பட்ட காலியாக உள்ள திறந்தவெளி நிலங்களில் புதிய பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத்திடல்கள் அமைக்கும் பணிகளுக்கு திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO)-க்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதனை ஆய்வு செய்தும் மற்றும் பணிகளை செயல்படுத்தும் இடங்களை கள ஆய்வு செய்தும் முதற்கட்டமாக 45 புதிய பூங்காக்கள் மற்றும் 13 விளையாட்டுத்திடல்கள் என மொத்தம் 58 எண்ணிக்கையிலான பணிகளை மேற்கொள்ள பரிந்துரை செய்யப்பட்டது.

சிங்கார சென்னை 2.0 என்ற திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் மேற்கொள்ள கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் தலைமையில் உள்ள சிங்கார சென்னை 2.0 திட்டப்பணிகள் ஒப்புதல் வழங்குதல் மற்றும் கண்காணிப்பு குழுவில் (Project Sanctioning and Monitoring Committee) கூடுதல் தலைமை செயலர் (நிதித்துறை), பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மை செயலர் / ஆணையர் மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் துறையின் நிர்வாக இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்கள் ஆவார்கள்.

கலந்தாய்வு கூட்ட நடவடிக்கை சுருக்கத்தின்படி, திட்ட ஒப்புதல் அளித்தல் மற்றும் கண்காணிப்பு குழு (Project Sanctioning and Monitoring Committee) 20.07.2022 அன்று நடைபெற்ற கூட்டத்தில் 2022-23 ஆம் நிதியாண்டில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சியில் 58 பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு,

Name of the Project	No.of works	Proposed Project Cost by GCC	Appraised Project cost by TUFIDCO	Singara Chennai 2.0 Share
		(Rupees in Crore)		
Park	45	20.53	16.79	16.79
Play field	13	5.30	4.76	4.76
Total	**58**	**25.83**	**21.55**	**21.55**

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சி, பூங்கா துறை மூலம் சிங்கார சென்னை *2.0* திட்டத்தின் கீழ் *58* பணிகளுக்கு ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு, ஒப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டு, மின்னணு முறையில் *(e-tender)* ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள். *08.09.2022* என ஒப்ப அறிவிப்பு *New Indian Express*, தினகரன் நாளிதழ்களில் *12.08.2022* அன்றும், பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் *11.08.2022* அன்றும் பிரசுரிக்கப்பட்டது.

மேற்படி ஒப்பந்தப்புள்ளி திறப்பு நாள் அன்று ஓணம் திருநாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசு, உள்ளூர் விடுமுறை அளித்துள்ளதால், மறுநாள் *09.09.2022* அன்று ஒப்பங்கள் திறக்கப்பட்டு, ஒப்பத்தில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு, ஒப்பந்தப் பணிகளுக்கான தொழில்நுட்ப ஆவணங்கள் பரீசிலனை செய்யப்பட்டது. தொழில்நுட்ப தகுதிப்பெற்ற மண்டலம்-*...1*-க்கான குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பத் தொகை மற்றும் ஒப்ப விழுக்காட்டின் விவரம் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

(அட்டவணை-*I*)

மண்டலம்- *1*- க்கான பணிகளுக்கான ஒப்ப விவரம்						
Sl. No.	File No P.D.C.NO	No. of Participants	Name of the L1 contractor	Work value Rs.	Quoted amount Rs.	Quoted %
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1	P2/1212-1/2022	3	R.V Engineering Construction	3734436.61	3548088.22	(-)4.99%
2	P2/1212-2/2022	4	Valli Saravana Construction	3618059.29	3437518.13	(-)4.99%
			R.V Engineering Construction		3437518.13	(-)4.99%
3	P2/2233-1/2022	4	R.V Engineering Construction	1729455.07	1565156.84	(-)9.50%
4	P2/2233-2/2022	3	R.V Engineering Construction	2311761.25	2092143.93	(-)9.50%
5	P2/2233-3/2022	3	R.V Engineering Construction	2373429.16	2147953.39	(-)9.50%
6	P2/2233-4/2022	3	R.V Engineering Construction	2274196.58	2058147.90	(-)9.50%
7	P2/2233-5/2022	3	R.V Engineering Construction	2876183.51	2602946.08	(-)9.50%

இதன் தொடர்ச்சியாக, மேற்கண்ட குறைந்த ஒப்ப புள்ளிகள் அளித்த ஒப்பந்ததாரர்களிடம் மேலும் விலைக்குறைப்பு செய்ய கோரி கடிதம் அளிக்கப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர்கள் விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள். இதில் வ.எண்.*2*ல் உள்ள பணிகளுக்கான ஒப்பப்புள்ளியில் இரு ஒப்பந்ததாரர்களான திருவாளர்கள்.வள்ளி சரவணா கன்ஸ்ட்ரக்ஷன் மற்றும் ஆர்.வி இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்கள் ஒரே விலைப்புள்ளி அளித்துள்ளதால் திருவாளர்கள்.வள்ளி சரவணா கன்ஸ்ட்ரக்ஷன் அவர்கள் விலைக்குறைப்பு செய்ய இயலாது எனத் தெரிவித்துள்ளார்கள் மற்றும் ஆர்.வி இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்கள் விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள். அதன்படி ஒப்பந்ததாரர்கள் அளித்துள்ள ஒப்ப இறுதி ஒப்பத்தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது,

(அட்டவணை-*II*)

S. No	Zone	File No P.D.C.NO	Name of the Bidder (L1)	Originally Quoted percentage	2021-22 (SOR) percentage offered after negotiation (including 18% GST)	2021-22 (SOR) after negotiation final amount (Rs.) (including 18% GST)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1	1	P2/1212-1/2022	R.V Engineering Construction	(-)4.99%	(-)4.99%	35,48,088.22

2	1	P2/1212-2/2022	R.V Engineering Construction	(-)4.99%	(-)5.10%	34,33,538.27
3	1	P2/2233-1/2022	R.V Engineering Construction	(-)9.50%	(-)9.50%	15,65,156.84
4	1	P2/2233-2/2022	R.V Engineering Construction	(-)9.50%	(-)9.50%	20,92,143.93
5	1	P2/2233-3/2022	R.V Engineering Construction	(-)9.50%	(-)9.50%	21,47,953.39
6	1	P2/2233-4/2022	R.V Engineering Construction	(-)9.50%	(-)9.50%	20,58,147.90
7	1	P2/2233-5/2022	R.V Engineering Construction	(-)9.50%	(-)9.50%	26,02,946.08

மேற்கண்ட பணிகளுக்கான ஒப்ப புள்ளிகள் *2021-22*ம் ஆண்டு அலுவலக விலைப்புள்ளியுடன், ஒப்பந்ததாரர்கள் குறிப்பிட்ட ஒப்ப புள்ளிகள் ஒப்பிடும் போது ஒப்பந்ததாரர்கள் குறிப்பிட்ட ஒப்ப புள்ளிகள் அனைத்தும் குறைந்த விழுக்காட்டில் உள்ளதால் ஒப்ப புள்ளிகளை ஏற்றுக்கொள்ளலாம் எனக் கருதப்படுகிறது.

எனவே,

1) மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர்களுக்கு, மேற்கண்ட அட்டவணை-*II*ல் கலம் எண் *6*-ல் உள்ள ஒப்ப புள்ளி சதவிகிதம் மற்றும் கலம் எண்-*7*ல் உள்ள ஒப்பத் தொகைக்கு பணியினை வழங்கவும்,

2) மேற்காணும் பணிகளுக்கான ஒப்பந்ததார்களுக்கு *"*சிங்கார சென்னை *2.0"* திட்டத்தின் கீழ் பட்டி தீர்வு செய்யவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

"23.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். *208/2022*, நாள். *23.09.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.240/2022 நாள்.26.09.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது*"*.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

பூ.து.ந.க.எண்.பி2/1212-3/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:464/2022 **பொருள் எண்.63**

பெருநகர சென்னை மாநகராட்சி - ஒப்பம் - பூங்காதுறை - "சிங்கார சென்னை 2.0" திட்டத்தின் கீழ் மாநகராட்சிக்கு உட்பட்ட காலியாக உள்ள திறந்தவெளி நிலங்களில் புதிய பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் அமைக்கவும் மற்றும் ஏற்கனவே உள்ள பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத்திடல்களை மேம்படுத்தும் பணிகளுக்கு ஒப்பம் கோரப்பட்டது - மண்டலம்-3க்கான குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணியினை வழங்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உலகதரத்திற்கு நவீன கட்டமைப்புகள் மற்றும் சேவை மேற்கொள்வதற்கு 2021-22ஆம் நிதியாண்டில் மேதகு ஆளுநர் உரையில் சிங்கார சென்னை 2.0 என்ற திட்டம் அறிவிக்கப்பட்டது. 28.09.2021 நாளிட்ட அரசாணையின் படி, சிங்கார சென்னை 2.0 திட்டத்தின்கீழ் பல்வேறு பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, 2022-23 ஆம் ஆண்டின் தமிழக சட்டப்பேரவையில் நடைபெற்ற மானிய கோரிக்கையின்போது மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர்வழங்கல் அமைச்சர் அவர்களால் கீழ்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"நகர்ப்புறங்களை பசுமையாக்கி, இயற்கை சூழலை மேம்படுத்த, பெருநகர சென்னை மாநகராட்சியில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் 150 திறந்தவெளி பூங்காக்கள் அமைக்கப்படும் எனவும், பெருநகர சென்னை மாநகராட்சியில் 50 எண்ணிக்கையிலான விளையாட்டுத் திடல்கள் புதிதாக அமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணி ரூ.50 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்" எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சிங்கார சென்னை 2.0 என்ற திட்டத்தின்கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி, பூங்கா துறையின் மூலம் மாநகராட்சிக்கு உட்பட்ட காலியாக உள்ள திறந்தவெளி நிலங்களில் புதிய பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத்திடல்கள் அமைக்கும் பணிகளுக்கு திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO)-க்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதனை ஆய்வு செய்தும் மற்றும் பணிகளை செயல்படுத்தும் இடங்களை கள ஆய்வு செய்தும் முதற்கட்டமாக 45 புதிய பூங்காக்கள் மற்றும் 13 விளையாட்டுத்திடல்கள் என மொத்தம் 58 எண்ணிக்கையிலான பணிகளை மேற்கொள்ள பரிந்துரை செய்யப்பட்டது.

சிங்கார சென்னை 2.0 என்ற திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் மேற்கொள்ள கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் தலைமையில் உள்ள சிங்கார சென்னை 2.0 திட்டப்பணிகள் ஒப்புதல் வழங்குதல் மற்றும் கண்காணிப்பு குழுவில் (Project Sanctioning and Monitoring Committee) கூடுதல் தலைமை செயலர் (நிதித்துறை), பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மை செயலர் / ஆணையர் மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் துறையின் நிர்வாக இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்கள் ஆவார்கள்.

கலந்தாய்வு கூட்ட நடவடிக்கை சுருக்கத்தின்படி, திட்ட ஒப்புதல் அளித்தல் மற்றும் கண்காணிப்பு குழு (Project Sanctioning and Monitoring Committee) 20.07.2022 அன்று நடைபெற்ற கூட்டத்தில் 2022-23 ஆம் நிதியாண்டில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சியில் 58 பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு,

Name of the Project	No.of works	Proposed Project Cost by GCC	Appraised Project cost by TUFIDCO	Singara Chennai 2.0 Share
		(Rupees in Crore)		
Park	45	20.53	16.79	16.79
Play field	13	5.30	4.76	4.76
Total	**58**	**25.83**	**21.55**	**21.55**

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சி, பூங்கா துறை மூலம் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் 58 பணிகளுக்கு ஒப்ப புள்ளி கோரப்பட்டு, ஒப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டு, மின்னணு முறையில் (e-tender) ஒப்பம் திறக்கப்படும் நாள். 08.09.2022 என ஒப்ப அறிவிப்பு New Indian Express, தினகரன் நாளிதழ்களில் 12.08.2022 அன்றும், பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் 11.08.2022 அன்றும் பிரசுரிக்கப்பட்டது.

மேற்படி ஒப்பந்தப்புள்ளி திறப்பு நாள் அன்று ஓணம் திருநாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசு, உள்ளூர் விடுமுறை அளித்துள்ளதால், மறுநாள் 09.09.2022 அன்று ஒப்பங்கள் திறக்கப்பட்டு, ஒப்பத்தில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு, மண்டலம்-3ன் ஒப்பந்தப் பணிகளுக்கான தொழில்நுட்ப ஆவணங்கள் பரீசிலனை செய்யப்பட்டது.

அதன்படி, மண்டலம்-3ல் உள்ள மொத்தம் எட்டு பணிகளுக்கான ஒப்பங்கள் பெறப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டது. இதன்படி, ஒப்பந்ததாரர்களின் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பத்தொகை மற்றும் ஒப்ப விழுக்காட்டின் விவரம் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

(**அட்டவணை**-I)

மண்டலம்- 3க்கான பணிகளுக்கான ஒப்ப விவரம்						
Sl. No.	File No / PARK C.No	No. of Participants	Name of the L1 contractor	Work value (With G.S.T. 18%) Rs.	Quoted amount Rs.	Quoted %
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1	P.D.C.NO.P2/1212-3/2022	10	S.Gouthaman	45,87,018.84	42,40,698.92	(-) 7.55 %
2	P.D.C.NO.P2/1212-4/2022	9	S.Gouthaman	38,51,178.53	35,91,223.98	(-) 6.75 %
3	P.D.C.NO.P2/1212-5/2022	5	K.Kandan	25,63,188.29	24,09,396.99	(-) 6.00 %
4	P.D.C.NO.P2/1212-6/2022	6	K.Sathishkumar	26,35,773.27	24,98,713.06	(-) 5.20 %
			K.Kandan	26,35,773.27	24,98,713.06	(-) 5.20 %
5	P.D.C.NO.P2/1212-7/2022	5	K.Sathishkumar	21,98,308.21	20,83,996.18	(-) 5.20 %
6	P.D.C.NO.P2/1212-8/2022	8	R.Nimrode	61,24,257.59	58,18,657.14	(-) 4.99 %
7	P.D.C.NO.P2/1212-9/2022	9	K.Sathishkumar	50,38,929.91	47,21,477.33	(-) 6.30 %
8	P.D.C.NO.P2/1212-10/2022	6	M.Tamilarasu	27,01,284.89	25,66,490.77	(-) 4.99 %

இதன் தொடர்ச்சியாக, மேற்கண்ட குறைந்த ஒப்ப புள்ளிகள் அளித்த ஒப்பந்ததாரர்களிடம் மேலும் விலைக்குறைப்பு செய்ய கோரி கடிதம் அளிக்கப்பட்டது. அதன்படி வ.எண்.4ல் உள்ள பணிக்கு ஒப்பத்தில் பங்கு பெற்ற 6 ஒப்பந்ததாரர்களில் திரு.கே.சதிஷ்குமார் மற்றும் கே.கந்தன் ஆகிய இரு ஒப்பந்ததாரர்களும் ஒரே விலைப்புள்ளி அளித்திருந்ததால் அவர்கள் இருவரிடமும் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டு திரு.கே.சதிஷ்குமார் (-) 10.60%யும் மற்றும் கே.கந்தன் அவர்கள் (-) 6.50 %.விழுக்காட்டிற்கு பணிகள் அளிக்க ஒப்புக் கொண்டு கடிதம் அளித்துள்ளார்கள், அதன்படி திரு.கே.சதிஷ்குமார் அவர்களே குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளார்கள் மற்ற பணிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் ஏற்கனவே குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளதால் விலைக்குறைப்பு செய்ய இயலாது என கடிதம் அளித்துள்ளார்கள். இதன்படி, மேற்கண்ட ஒப்பப்பணிகளின் இறுதி ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

(அட்டவணை-II)

S. No	Zone	File No / PARK.C.No.	Name of the Bidder (L1)	Originally Quoted percentage	2021-22 (SOR) percentage offered after negotiation	2021-22 (SOR) After negotiation final amount (Rs.) (including 18% GST)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1	3	P.D.C.NO.P2/1212-3/2022	S.Gouthaman	(-) 7.55 %	(-) 7.55 %	42,40,698.92
2	3	P.D.C.NO.P2/1212-4/2022	S.Gouthaman	(-) 6.75 %	(-) 6.75 %	35,91,223.98
3	3	P.D.C.NO.P2/1212-5/2022	K.Kandan	(-) 6.00 %	(-) 6.00 %	24,09,396.99
4	3	P.D.C.NO.P2/1212-6/2022	K.Sathishkumar	(-) 5.20 %	(-) 10.60 %	23,56,381.30
5	3	P.D.C.NO.P2/1212-7/2022	K.Sathishkumar	(-) 5.20 %	(-) 5.20 %	20,83,996.18
6	3	P.D.C.NO.P2/1212-8/2022	R.Nimrode	(-) 4.99 %	(-) 4.99 %	58,18,657.14
7	3	P.D.C.NO.P2/1212-9/2022	K.Sathishkumar	(-) 6.30 %	(-) 6.30 %	47,21,477.33
8	3	P.D.C.NO.P2/1212-10/2022	M.Tamilarasu	(-) 4.99 %	(-) 4.99 %	25,66,490.77

மேற்கண்ட பணிகளுக்கான ஒப்ப புள்ளிகள் 2021-22ம் ஆண்டு அலுவலக விலைப்புள்ளியுடன், ஒப்பந்ததாரர்கள் குறிப்பிட்ட ஒப்ப புள்ளிகள் ஒப்பிடும் போது ஒப்பந்ததாரர்கள் குறிப்பிட்ட ஒப்ப புள்ளிகள் அனைத்தும் குறைந்த விழுக்காட்டில் உள்ளதால் ஒப்பப்புள்ளிகளை ஏற்றுக்கொள்ளலாம் எனக்கருதப்படுகிறது.

மேலும், வ.எண்.6–ல் உள்ள பணியானது ரூ.50 இலட்சத்திற்கு கூடுதலாக உள்ளதால் இப்பணியினை வழங்க ஒப்பக்கூர்ந்தாய்வு குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது, இதனை ஒப்பக்கூர்ந்தாய்வு குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

இதன்படி, மேற்கண்ட பணிகளுக்கான இறுதி ஒப்பத்தொகை மற்றும் ஒப்ப சதவீத விவரம் பின்வருமாறு:

(அட்டவணை-III)

S. No	Zone	File No / PARK.C.No.	Name of the Bidder (L1)	2021-22 (SOR) percentage offered after negotiation	2021-22 (SOR) After negotiation final amount (Rs.) (including 18% GST)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	3	P.D.C.NO.P2/1212-3/2022	S.Gouthaman	(-) 7.55 %	42,40,698.92
2	3	P.D.C.NO.P2/1212-4/2022	S.Gouthaman	(-) 6.75 %	35,91,223.98
3	3	P.D.C.NO.P2/1212-5/2022	K.Kandan	(-) 6.00 %	24,09,396.99
4	3	P.D.C.NO.P2/1212-6/2022	K.Sathishkumar	(-) 10.60 %	23,56,381.30
5	3	P.D.C.NO.P2/1212-7/2022	K.Sathishkumar	(-) 5.20 %	20,83,996.18
6	3	P.D.C.NO.P2/1212-8/2022	R.Nimrode	(-) 4.99 %	58,18,657.14
7	3	P.D.C.NO.P2/1212-9/2022	K.Sathishkumar	(-) 6.30 %	47,21,477.33
8	3	P.D.C.NO.P2/1212-10/2022	M.Tamilarasu	(-) 4.99 %	25,66,490.77

எனவே,

1) மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர்களுக்கு மேற்கண்ட அட்டவணை–IIIல் கலம் எண் 5-ல் உள்ள ஒப்ப புள்ளி சதவிகிதம் மற்றும் கலம் எண்-6ல் உள்ள ஒப்பத் தொகைக்கு பணியினை வழங்கவும்,

2) மேற்காணும் பணிகளுக்கான ஒப்பந்ததார்களுக்கு "சிங்கார சென்னை 2.0" திட்டத்தின் கீழ் பட்டி தீர்வு செய்யவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். *204/2022*, நாள். *23.09.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.237/2022 நாள்.26.09.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

பூ.து.ந.க.எண்.பி2/1212-13/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:465/2022 **பொருள் எண்.64**

பெருநகர சென்னை மாநகராட்சி - ஒப்பம் - பூங்காதுறை - "சிங்கார சென்னை 2.0" திட்டத்தின் கீழ் மாநகராட்சிக்கு உட்பட்ட காலியாக உள்ள திறந்தவெளி நிலங்களில் புதிய பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் அமைக்கவும் மற்றும் ஏற்கனவே உள்ள பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத்திடல்களை மேம்படுத்தும் பணிகளுக்கு ஒப்பம் கோரப்பட்டது - மண்டலம்-6-க்கான குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணியினை வழங்க அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உலகதரத்திற்கு நவீன கட்டமைப்புகள் மற்றும் சேவை மேற்கொள்வதற்கு 2021-22ஆம் நிதியாண்டில் மேதகு ஆளுநர் உரையில் சிங்கார சென்னை 2.0 என்ற திட்டம் அறிவிக்கப்பட்டது. 28.09.2021 நாளிட்ட அரசாணையின்படி, சிங்கார சென்னை 2.0 திட்டத்தின்கீழ் பல்வேறு பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, 2022-23 ஆம் ஆண்டின் தமிழக சட்டப்பேரவையில் நடைபெற்ற மானிய கோரிக்கையின்போது மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர் வழங்கல் அமைச்சர் அவர்களால் கீழ்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"நகர்ப்புறங்களை பசுமையாக்கி, இயற்கை சூழலை மேம்படுத்த, பெருநகர சென்னை மாநகராட்சியில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் 150 திறந்தவெளி பூங்காக்கள் அமைக்கப்படும் எனவும், பெருநகர சென்னை மாநகராட்சியில் 50 எண்ணிக்கையிலான விளையாட்டுத் திடல்கள் புதிதாக அமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணி ரூ.50 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்" எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சிங்கார சென்னை 2.0 என்ற திட்டத்தின்கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி, பூங்கா துறையின் மூலம் மாநகராட்சிக்கு உட்பட்ட காலியாக உள்ள திறந்தவெளி நிலங்களில் புதிய பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத்திடல்கள் அமைக்கும் பணிகளுக்கு திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO)-க்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதனை ஆய்வு செய்தும் மற்றும் பணிகளை செயல்படுத்தும் இடங்களை கள ஆய்வு செய்தும் முதற்கட்டமாக 45 புதிய பூங்காக்கள் மற்றும் 13 விளையாட்டுத்திடல்கள் என மொத்தம் 58 எண்ணிக்கையிலான பணிகளை மேற்கொள்ள பரிந்துரை செய்யப்பட்டது.

சிங்கார சென்னை 2.0 என்ற திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் மேற்கொள்ள கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் தலைமையில் உள்ள சிங்கார சென்னை 2.0 திட்டப்பணிகள் ஒப்புதல் வழங்குதல் மற்றும் கண்காணிப்பு குழுவில் (Project Sanctioning and Monitoring Committee) கூடுதல் தலைமை செயலர் (நிதித்துறை), பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மை செயலர் / ஆணையர் மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் துறையின் நிர்வாக இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்கள் ஆவார்கள்.

கலந்தாய்வு கூட்ட நடவடிக்கை சுருக்கத்தின்படி, திட்ட ஒப்புதல் அளித்தல் மற்றும் கண்காணிப்பு குழு (Project Sanctioning and Monitoring Committee) 20.072022 அன்று நடைபெற்ற கூட்டத்தில் 2022-23 ஆம் நிதியாண்டில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சியில் 58 பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு,

Name of the Project	No.of works	Proposed Project Cost by GCC	Appraised Project cost by TUFIDCO	Singara Chennai 2.0 Share
		(Rupees in Crore)		
Park	45	20.53	16.79	16.79
Play field	13	5.30	4.76	4.76
Total	**58**	**25.83**	**21.55**	**21.55**

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சி, பூங்கா துறை மூலம் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் 58 பணிகளுக்கு ஒப்ப புள்ளி கோரப்பட்டு, ஒப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டு, மின்னணு முறையில் (e-tender) ஒப்பம் திறக்கப்படும் நாள். 08.09.2022 என ஒப்ப அறிவிப்பு New Indian Express, தினகரன் நாளிதழ்களில் 12.08.2022 அன்றும், பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் 11.08.2022 அன்றும் பிரசுரிக்கப்பட்டது.

மேற்படி ஒப்பம் திறப்பு நாள் அன்று ஓணம் திருநாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசு, உள்ளூர் விடுமுறை அளித்துள்ளதால், மறுநாள் 09.09.2022 அன்று ஒப்பங்கள் திறக்கப்பட்டு, ஒப்பத்தில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு, ஒப்பந்தப் பணிகளுக்கான தொழில்நுட்ப ஆவணங்கள் பரீசிலனை செய்யப்பட்டது. தொழில்நுட்ப தகுதிப்பெற்ற மண்டலம்-6க்கான ஒப்பந்ததாரர்களின் ஒப்பத் தொகை மற்றும் ஒப்ப விழுக்காட்டின் விவரம் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

(**அட்டவணை**-I)

மண்டலம்-6க்கான பணிகளுக்கான ஒப்ப விவரம்						
Sl. No.	File No / PARK C.No	No. of Participants	Name of the L1 contractor	Work value Rs.	Quoted amount Rs.	Quoted %
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1	P2/1212-13/ 2022	5	Thiu.S.Gowthaman	1,13,93,276.57	1,07,09,679.98	(-) 6.00%
2	P2/1212-14/ 2022	4	Thiu.K.Danasekaran	1,27,14,671.84	1,20,66,223.58	(-) 5.10%
3	P2/1212-15/ 2022	5	Thiu.T.Kumar	70,55,164.16	69,77,557.35	(-) 1.10%

எனவே, மனை உரிமையாளர்கள் Thiru. K. Palaniswamy, Thiru. P. Kumar Senthil Represented by his GPA Mr. K. Palaniswamy, Ms. P. Kanchana & Thiru. P. Rajkumar அவர்கள் T.S.No.33/2 & 33/3, Block No.36, Plot No.72 of Ayanavaram Villageல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 68.48ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"27.09.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.75/2022, நாள்.27.09.2022-ன்படி, இதற்கு நிலைக்குழு(நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ப.து.ந.க.எண்.*D1/LA/SD/WDCN15/00248/2022*

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *19.09.2022* நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:490/2022 **பொருள் எண்.89**

தானப்பத்திரம்

மண்டலம்-15ல், M/s. Sashankar Developers (GPA) represented by its partner Mr. B. Vishnu Sashankar for (1) Mrs. Sanma Bee, (2) Mrs. Noornnisha, (3)Mr.M.Hussain Basha and (4) Mr. Iliyas pasha அவர்கள் S.No.15/2A2, 15/2B2 of Semmenchery Village and comprised in S.No.406 part of Sholinganallur Villageல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN15/00248/2022 நாள்:08.04.2022ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்.09.12.2020-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை. திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கான நிலம் (பூங்கா)மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்களான M/s. Sashankar Developers (GPA) represented by its partner Mr. B. Vishnu Sashankar for (1) Mrs. Sanma Bee, (2) Mrs. Noornnisha, (3)Mr.M.Hussain Basha and (4) Mr. Iliyas pasha மனைப்பிரிவில் சாலை, திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கான நிலம் (பூங்கா) மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது:

(அ) M/s. Sashankar Developers (GPA) represented by its partner Mr. B. Vishnu Sashankar for (1) Mrs. Sanma Bee, (2) Mrs. Noornnisha, (3)Mr.M.Hussain Basha and (4) Mr. Iliyas pasha என்பவர் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி நிலத்தின் மொத்தப் பரப்பளவு 7483.00 ச.மீஆகும். அவற்றில் சாலைக்கென 1397.95சதுர மீட்டர் நிலமும்,திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கான 280.00சதுர மீட்டர் நிலமும்TANGEDCOவிற்கு 30.22சதுர மீட்டர் நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கான 30.22சதுர மீட்டர் நிலமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) M/s. Sashankar Developers (GPA) represented by its partner Mr. B. Vishnu Sashankar for (1) Mrs. Sanma Bee, (2) Mrs. Noornnisha, (3)Mr.M.Hussain Basha and (4) Mr.Iliyas pasha என்பவர் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனை உரிமையாளர் பட்டாவினை, வட்டாட்சியர், சோழிங்கநல்லூர் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

(இ) விண்ணப்பதாரர் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019க்கு ஏற்ப உள்ளது. மனைக்கு அணுகு சாலையாக 12.00மீட்டர் அகல சாலை அமைந்துள்ளது.

(ஈ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019 உள்ள விதிகளின் படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, மனையின் பரப்பளவில் (சாலை பகுதி நீங்களாக) மனை பரப்பளவில் 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5%TANGEDCO- விற்கு மற்றும் 0.5%பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும்.M/s. Sashankar Developers (GPA) represented by its partner Mr. B. Vishnu Sashankar for (1) Mrs. Sanma Bee, (2) Mrs. Noornnisha, (3) Mr. M. HussainBasha and

(4) Mr. Iliyas pasha அவர்கள் அதற்கேற்றவாறு 30.22ச.மீ பரப்பளவு நிலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார். மேலும் 30.22ச.மீ பரப்பளவு நிலம் TANGEDCOவிற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்கள்.

(உ) மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை மேம்படுத்த மற்றும் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பதாரர்களே முன்வந்துள்ளதால் அரசாணை எண்.141, Housing and Urban Development [UD4(1)] Department, dated.16.07.2022ன்படி அனுமதிக்கப்பட்டு கட்டணங்கள் வசூலிக்கப்படவில்லை.

(ஊ) மனைப்பிரிவில் மேற்கொள்ளப்படும் சாலைப்பணிகள் மற்றும் தெருவிளக்கு அமைத்தல் ஆகியவை பெருநகர சென்னை மாநகராட்சி, பேருந்து சாலை துறை மற்றும் மின் துறை பரிந்துரைக்கும் விவரக்குறிப்புகளுக்கு ஏற்ப முறையே அமைக்கப்பட வேண்டும். இந்த விவரக்குறிப்புகளை கொண்டுதான் சாலைப் பணிகள் மற்றும் தெரு விளக்குகள் அமைக்கப்பட வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்படும்.

(எ) மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர்கள் M/s.Sashankar Developers (GPA) represented by its partner Mr. B. Vishnu Sashankar for (1) Mrs. Sanma Bee, (2) Mrs. Noornnisha, (3)Mr.M.Hussain Basha and (4) Mr. Iliyas pasha அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும் சாலைக்கென 1397.95 சதுர மீட்டர் நிலமும்திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கான நிலம் (பூங்கா) 280.00 சதுர மீட்டர் நிலமும் மற்றும் பொது பயன்பாட்டிற்கான 30.22 சதுர மீட்டர் நிலம் தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே, S.No.15/2A2, 15/2B2 of Semmenchery Village and comprised in S.No.406 part of Sholinganallur Villageல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கென 1397.95 சதுர மீட்டர் நிலமும், திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கான (பூங்கா) 280.00 சதுர மீட்டர் நிலமும் மற்றும் பொது பயன்பாட்டிற்கான 30.22 சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை M/s. Sashankar Developers (GPA) represented by its partner Mr. B. Vishnu Sashankar for (1) Mrs. Sanma Bee, (2) Mrs. Noornnisha, (3) Mr.M.Hussain Basha and (4) Mr. Iliyas pasha அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"27.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.76/2022, நாள்.27.09.2022-ன்படி, இதற்கு நிலைக்குழு(நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

பொ.சு.கா.ம.பி.ந.க.எண்.அ2/0455 /2022

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 19.08.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:491/2022 **பொருள் எண்.90**

பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - கால்நடை மருத்துவப்பிரிவு - சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில்/சாலைகளில் சுற்றித்திரியும் மாடுகளால் ஏற்படும் தொல்லைகளை கட்டுப்படுத்தும் பொருட்டு மாடு ஒன்றிற்கு தற்போது அபராதத் தொகையாக ரூ.1,550/-ஐ (அபராத தொகை ரூ.1250/- மற்றும் பராமரிப்பு செலவாக நாள் ஒன்றிக்கு ரூ.100/- என மூன்று நாட்களுக்கு ரூ.300/-) வசூலிக்கப்பட்டு வருகிறது - இந்த அபராதத் தொகையை உயர்த்தி ரூ.3000/- என முதல் இரண்டு நாட்களுக்கு வசூலிக்கவும் - மூன்றாம் நாள் முதல் பாரமரிப்பு செலவாக நாள் ஒன்றிற்கு கூடுதலாக ரூ.200/- எனவும் உயர்த்துவதற்கு மன்றத்தின் அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சி, சாலைகளில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக சுற்றித்திரியும் பசு, எருமை, காளை ஆகியவை பொது சுகாதாரத்துறை, கோட்ட சுகாதார ஆய்வாளர்களின் மேற்பார்வையில், கால்நடை பிடிக்கும் வாகனங்கள் மூலம் பிடிக்கப்பட்டு புதுப்பேட்டை மற்றும் பெரம்பூரில் உள்ள மாநகராட்சி மாட்டுத் தொழுவங்களில் அடைக்கப்பட்டு கால்நடை உதவி மருத்துவர்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு தொழுவங்களில் அடைக்கப்படும் மாடுகளுக்கு சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.515/2021, நாள்.26.06.2021ன்படி மாடு ஒன்றிற்கு தற்போது அபராதத் தொகையாக ரூ.1,550/- ஐ (அபராத தொகை ரூ.1250/- மற்றும் பராமரிப்பு செலவாக நாள் ஒன்றிக்கு ரூ.100/- என மூன்று நாட்களுக்கு ரூ.300/-) வசூலிக்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் 01.07.2021 முதல் 30.06.2022 வரை 4099 மாடுகள் பிடிக்கப்பட்டு ரூ. 61,63,750/- (ரூபாய் அறுபத்தி ஒரு இலட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்) அபராத தொகையாக வசூலிக்கப்பட்டு சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

வ.எண்	மாதம்	பிடிக்கப்பட்ட மாடுகளின் எண்ணிக்கை
1	ஜூலை /2021	163
2	ஆகஸ்ட்	121
3	செப்டம்பர்	99
4	அக்டோபர்	184
5	நவம்பர்	139
6	டிசம்பர்	451
7	ஜனவரி /2022	278
8	பிப்ரவரி	339
9	மார்ச்	810
10	ஏப்ரல்	527
11	மே	528
12	ஜூன்	460

இதற்கு முன்னர் கடந்த 3 ஆண்டுகளில் சுற்றித்திரியும் மாடுகள் பிடிக்கப்பட்டு இரண்டு மாட்டுத் தொழுவங்களில் அடைக்கப்பட்ட விவரம் பின்வருமாறு:

2018-2019	653
2019-2020	642
2020-2021	280

ஒப்பீட்டளவில் தற்போது அதிக எண்ணிக்கையிலான மாடுகள் பிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், மண்டல அளவில் மண்டல நல அலுவலர், கால்நடை உதவி மருத்துவர், துப்புரவு அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் மாடுகளின் உரிமையாளர்களுடன் அவ்வப்போது கலந்துரையாடல் கூட்டங்களை நடத்தி மாடுகளை சாலைகளில் திரிய விடக்கூடாது என்று அறிவுரைகளையும் விழிப்புணர்வையும் வழங்கி வருகின்றனர்.

மதுரை மாநகராட்சியில் சுற்றித்திரியும் மாடு, காளை, எருமை ஆகியவற்றிற்கு ரூ.3,000/- அபராதத் தொகையாகவும் + தினப்படியாக ரூ.500/- வீதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் சுற்றித்திரியும் கன்றுகளுக்கு அபராதத் தொகையாக ரூ.1,550/-ம் + தினப்படியாக ரூ.250/-ம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, இப்பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு, மாடு ஒன்றிற்கு அபராதத்தொகையாக ரூ.3000/- என முதல் இரண்டு நாட்களுக்கு வசூலிக்கவும் மற்றும் மூன்றாம் நாள் முதல் பராமரிப்பு தொகையாக நாள் ஒன்றிற்கு கூடுதலாக ரூ.500/- என நிர்ணயித்து, நடைமுறைப்படுத்தினால், மாட்டின் உரிமையாளர்கள் கால்நடைகளை சாலைகளில் திரியவிடுவதை கட்டுப்படுத்த வாய்ப்புள்ளது.

அதன்படி கீழ்க்காணும் இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

1. பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைகள் மற்றும் பொது இடங்களில் இருந்து, கோட்ட சுகாதார ஆய்வாளர்களின் மேற்பார்வையில் பிடிக்கப்பட்டு மாநகராட்சி மாட்டுத் தொழுவங்களில் அடைக்கப்படும் மாடு ஒன்றிற்கான அபராதம் மற்றும் பராமரிப்பு தொகையாக வசூலிக்கப்படும் ரூ.1550/-ஐ உயர்த்தி அபராதத் தொகையை ரூ.3000/- எனவும் மற்றும் மூன்றாம் நாள் முதல் பாரமரிப்பு செலவுத் தொகை மாடு ஒன்றிற்கு நாள் ஒன்றிற்கு ரூ.500/- எனவும் நிர்ணயித்து அதனை செயல்படுத்தவும்,
2. காவல் துறையின் ஒத்துழைப்புடன் மாடு பிடிக்கும் பணியை மேற்கொள்வதற்கும்,
3. பெருநகர சென்னை மாநகராட்சியால் பிடிக்கப்படும் சுற்றித்திரியும் மாடுகளுக்கு அடையாளமாக காது மடலில் பெருநகர சென்னை மாநகராட்சி வரிசை எண்கள் அடிப்படையில் முத்திரை வில்லை பொருத்துவதற்கும்,
4. முத்திரை வில்லை பொருத்தப்பட்ட மாடுகள் மீண்டும் பிடிக்கப்பட்டால், அவற்றை தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடம் உரிய முறையில் ஒப்படைக்கவும் ஆணை வேண்டப்படுகிறது.

மேற்படி குறிப்பு மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதில், 26.08.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் இந்த அபராதத்தொகை ரூ.3000/- என முதல் இரண்டு நாட்களுக்கு வசூலிக்கவும், மூன்றாம் நாள் முதல் பராமரிப்பு செலவுத் தொகை ஒரு மாட்டிற்கு நாள் ஒன்றிற்கு ரூ.500/- என்பதற்கு பதிலாக ரூ.200/- என்ற திருத்ததத்துடன் தீர்மானம் எண்.058/2022-ன் படி பரிந்துரை செய்யப்பட்டு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து 26.08.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் இப்பொருள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட வேண்டுமென்று தெரிவித்த கருத்தின் அடிப்படையில், தீர்மான எண்.170/2022, நாள்.26.08.2022ன் படி நிலைக்குழு (வ.வி.ம.நி.) இதனை ஒத்திவைத்துள்ளது.

எனவே, சுற்றித்திரியும் மாடுகளை கட்டுப்படுத்த வேண்டிய இப்பொருளின் அவசியம் கருதி,

1. பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைகள் மற்றும் பொது இடங்களில் இருந்து, கோட்ட சுகாதார ஆய்வாளர்களின் மேற்பார்வையில் பிடிக்கப்பட்டு மாநகராட்சி மாட்டுத் தொழுவங்களில் அடைக்கப்படும் மாடு ஒன்றிற்கான அபராதம் மற்றும் பராமரிப்பு தொகையாக வசூலிக்கப்படும் ரூ.1550/-ஐ உயர்த்தி அபராதத் தொகையை ரூ.3000/- எனவும் மற்றும் மூன்றாம் நாள் முதல் பாரமரிப்பு செலவுத் தொகை மாடு ஒன்றிற்கு நாள் ஒன்றிற்கு ரூ.200/- எனவும் நிர்ணயித்து அதனை செயல்படுத்தவும்,

2. காவல் துறையின் ஒத்துழைப்புடன் மாடு பிடிக்கும் பணியை மேற்கொள்வதற்கும்,
3. பெருநகர சென்னை மாநகராட்சியால் பிடிக்கப்படும் சுற்றித்திரியும் மாடுகளுக்கு அடையாளமாக காது மடலில் பெருநகர சென்னை மாநகராட்சி வரிசை எண்கள் அடிப்படையில் முத்திரை வில்லை பொருத்துவதற்கும்,
4. முத்திரை வில்லை பொருத்தப்பட்ட மாடுகள் மீண்டும் பிடிக்கப்பட்டால், அவற்றை தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடம் உரியமுறையில் ஒப்படைக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"பெரும்பான்மை உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் 26.09.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி.)வின் கூட்டத்தில், தீர்மான எண்.213/2022ன்படி அபராத தொகை ரூ.3000/- என்பதற்கு பதிலாக ரூ.2000/- எனவும் மற்றும் மூன்றாம் நாள் முதல் பராமரிப்பு செலவுத் தொகை மாடு ஒன்றிற்கு நாள் ஒன்றிற்கு ரூ.200/- எனவும் வசூலிக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.து.ந.க.எண்.அ1/0619/2022

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 10.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:492/2022 **பொருள் எண்.91**

பெருநகர சென்னை மாநகராட்சி - மன்றத்துறை - திருமதி.யு.மல்லிகா, மன்ற உறுப்பினர், வார்டு எண்-118 அவர்கள் தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் நடைபெற்ற சாதாரண மாமன்ற கூட்டங்களில் கலந்துகொள்ளாதது குறித்த விவரம் மன்றத்திற்கு சமர்ப்பிப்பது.

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 28.08.2022 நாளிட்ட குறிப்பில், குமுதம் ரிப்போட்டர், நாள்.26.08.2022 அன்று வெளியிடப்பட்ட செய்தி நறுக்கில், பெருநகர சென்னை மாநகராட்சியின் 118வது வார்டு தி.மு.க. மன்ற உறுப்பினர், திருமதி.யு.மல்லிகா அவர்கள் அமெரிக்காவில் கடந்த நான்கு மாதங்களாக தங்கியிருப்பதாகவும், அவரது வார்டில் பொதுமக்கள் குறைகளை யாரிடம் தெரிவிக்க வேண்டுமென்று புரியாமல் உள்ளதாகவும், மேலும், மன்றக் கூட்டத்திலும் மற்றும் வார்டுக்குழு கூட்டத்திலும் தொடர்ந்து மூன்று கூட்டங்களுக்கு வருகைப்புரியாத மேற்படி மன்ற உறுப்பினர் மீது சட்ட விதிகளின்படி நடவடிக்கை மேற்கொண்டு தகுதி நீக்கம் செய்யப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ள செய்தி நறுக்கின் மீது நடவடிக்கை மேற்கொண்டு அறிக்கையினை அனுப்ப கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

திருமதி.யு.மல்லிகா, மன்ற உறுப்பினர், வார்டு-118 அவர்களின் 30.08.2022 நாளிட்ட மின்னஞ்சலில், தனது ஒரே மகள் வெளிநாட்டில் இருப்பதாகவும், தனது மகளின் அவசர அறுவை சிகிச்சையின் போது உடனிருந்து கவனித்துக்கொள்ள வேண்டிய இக்கட்டான மற்றும் தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக தான் உடனடியாக இந்தியாவிலிருந்து வெளிநாட்டிற்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது என்றும், இதனால், கடந்த இரண்டு மாதங்களில் நடைபெற்ற மன்ற கூட்டத்தில் தன்னால் கலந்துக்கொள்ள முடியவில்லை என்றும், ஆகஸ்ட் மாதம் நடைபெறும் மன்ற கூட்டத்திலும் தன்னால் கலந்துக்கொள்ள இயலாது என்றும், தான் வெளிநாட்டில் இருக்கும் போது தனது வார்டு பொது மக்களிடம் தொலைபேசி, வாட்ஸ் ஆப் மற்றும் சமூக வலைதளங்களின் மூலம் தொடர்ந்து தொடர்பு கொண்டு, தனது வார்டில் உள்ள அனைத்துப் பொதுப் பிரச்சனைகளையும் நாள்தோறும் கண்காணித்து செயல்படுத்தி வருவதாகவும், தான் வெளிநாட்டில் இருந்து 03.09.2022 அன்று சென்னை திரும்ப இருப்பதாகவும், தனது வார்டு பொது மக்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்து வைப்பதற்காக தான் கடினமாக உழைத்து வருவதாகவும், தனது குடும்ப சூழ்நிலையினை கருதி சிறப்பு நிகழ்வாக தொடர்ந்து மன்ற உறுப்பினராக தனது வார்டு பொது மக்களுக்கு பணியாற்றிட வாய்பளிக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது சம்பந்தமாக தெரிவிக்கப்படுவது யாதெனில், சென்னை மாநகர முனிசிபல் கார்ப்பரேஷன் சட்டம் 1919. பிரிவு 53 (1) *(i)* ல் *"a councilor shall cease to hold office as such, if he fails to attend the meeting of the council for a period of three consecutive months beginning from the date of the commencement of his term of office or of the last meeting, he "attended, as the case may be"* என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், பிரிவு 53(4)ல் *in the case of a person who has ceased to be a councilor in consequence of failure to attend meeting the matter shall be reported by the commissioner at the next ordinary meeting and the council may at that meeting restore such person to office"* எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், திருமதி.யு.மல்லிகா, மன்ற உறுப்பினர், வார்டு-118 அவர்கள் 09.04.2022 மற்றும் *30.05.2022* ஆகிய நாட்களில் நடைபெற்ற சாதாரண மன்ற கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளார் எனவும், அதே சமயம் 28.06.2022, 30.07.2022 மற்றும் 30.08.2022 ஆகிய மூன்று மாதங்களில் நடைபெற்ற சாதாரண மன்ற கூட்டத்தில் தொடர்ச்சியாக கலந்துக்கொள்ளவில்லை எனவும், தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும், மன்ற உறுப்பினர் தொடர்ச்சியாக மூன்று மன்ற கூட்டங்களில் கலந்துகொள்ளவில்லை என்றால் தகுதி நீக்கம் செய்வது குறித்தும் மற்றும் அவரை மீண்டும் மன்ற உறுப்பினராக பதவியில் அமர்த்துவது குறித்தும் மேற்கண்ட சட்ட விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இதன் அடிப்படையில், திருமதி.யு.மல்லிகா, மன்ற உறுப்பினர், வார்டு-118 அவர்கள் 28.06.2022, 30.07.2022 மற்றும் 30.08.2022 ஆகிய மூன்று மாதங்களில் நடைபெற்ற சாதாரண மன்ற கூட்டத்தில் தொடர்ச்சியாக கலந்துகொள்ளாத விவரத்தினை மன்றத்திற்கு சமர்ப்பித்து, தொடர்ந்து மன்ற உறுப்பினராக சென்னை மாநகர முனிசிபல் கார்ப்பரேஷன் சட்டம் 1919, பிரிவு 53(4)ல் குறிப்பிட்டுள்ளவாறு செயல்பட அனுமதிப்பது குறித்து, மன்றத்தின் முடிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

> **"தொடர்ந்து மூன்று மாதங்களில் நடந்த சாதாரண மன்றக்கூட்டங்களுக்கு வருகை புரியாததால் சென்னை மாநகராட்சி முனிசிபல் கார்ப்பரேஷன் சட்டம் *1919*, பிரிவு *53 (1) (i)*ன்படி, உறுப்பினர் பதவியை இழந்த வார்டு-*118* மன்ற உறுப்பினர் திருமதி.யு.மல்லிகா அவர்களை பெருவாரியான மன்ற உறுப்பினர்களின் கோரிக்கைக்கிணங்க சென்னை மாநகராட்சி முனிசிபல் கார்ப்பரேஷன் சட்டம் *1919*, பிரிவு *53(4)*ன் கீழ், மீண்டும் மன்ற உறுப்பினராக பதவி வழங்க மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

* * * * * *

ம.து.ந.க.எண்.அ1/0693/2022.

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 27.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:493/2022 **பொருள் எண்.92**

பெருநகர சென்னை மாநகராட்சி - மன்றத்துறை - திருமதி.ஆர்.பிரியா, மாண்புமிகு மேயர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்கள் - சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் உறுப்பினராக நியமனம் செய்து அரசு ஆணை வெளியிட்டுள்ள விவரத்தினை மன்றத்தின் தகவலுக்காகவும் பதிவிற்காகவும்.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (நவ3(2) துறை, அரசாணை (நிலை) எண்.164, நாள்.09.09.2022ல் திருமதி.ஆர்.பிரியா, மாண்புமிகு மேயர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களை, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினராக நியமனம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி அரசாணையின்படி திருமதி.ஆர்.பிரியா, மாண்புமிகு மேயர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களை, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டுள்ள விவரத்தினை, மன்றத்தின், தகவலுக்காகவும், பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது".

*** * * * * ***

வ.து.ந.க.எண்.ஜி1/ 6743 /2008

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 27.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:494/2022 **பொருள் எண்.93**

பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய்துறை - பொது சீராய்வு - சொத்துவரி பொது சீராய்வு - அரசாணை வெளியிடப்பட்டது - பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சொத்துவரி மதிப்பீடுகள் - மன்றத்தின் அனுமதிக்குட்பட்டு வரி மதிப்பீடுகளுக்கு 1/2022-23 முதல் சீராய்வு மேற்கொள்ளப்பட்டது - காலம் தாழ்த்தி செலுத்தும் சொத்துவரிக்கு தனிவட்டி விதித்தல் - 1/2022-23 முதல் சீராய்வின்படி நிர்ணயிக்கப்பட்ட சொத்துவரியினை செலுத்தாத இனங்களுக்கு - சிறப்பு நிகழ்வாக தனிவட்டி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்க அனுமதி.

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம்,1919ல், பிரிவு 98ன்படி, மன்றம் சொத்துவரி விதிக்க வழிவகை வழங்கப்பட்டுள்ளது. மேலும், பிரிவு 138, அட்டவணை IV, வரிவிதிப்பு விதிகள், பாகம்-1A, விதி 3 (3)-ல், மன்றம், சொத்துவரி தொடர்பாக வழிகாட்டுதல்கள் வெளியிடுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

U/s 138, CCMC Act, Schedule IV, Taxation Rules, Part – 1 A, Rule 3 (3) of CCMC Act, 1919, the Commissioner shall assess the property tax having regard, to " the property tax payable by the owner or the occupier withreference to the guidelines. if any, issued by the council."

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம்,1919, பிரிவு-104ன்படி, அரையாண்டு துவக்கத்தின் முதல் 15 தினங்களுக்குள் சொத்து உரிமையாளர் சொத்துவரி செலுத்த வேண்டும்.

U/s 104 of CCMC Act, " the property shall be levied every half-year and shall, save as otherwise expressly provided in Schedule IV, be paid by the owner of the assessed premises within fifteen days after commencement of the half year."

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம்,1919, பிரிவு-104ன்படி, அரையாண்டு துவக்கத்தின் முதல் 15 தினங்களுக்குள் சொத்துவரி செலுத்தும் சொத்து உரிமையாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கவும்/ காலம் தாழ்த்தி செலுத்துபவர்களுக்கு தனிவட்டி விதிப்பதற்கும் அரசால் வெளியிடப்பட்ட சட்ட திருத்தமானது (சென்னை மாநகராட்சி முனிசிபல் (திருத்தம்) சட்டம், 2018 (தமிழ்நாடு சட்டம் 37/2018)), அரசாணை எண்.119, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்: 13.09.2019ன்படி, 1 அக்டோபர் 2019 தேதியிலிருந்து நடைமுறைக்கு வருவதாக அறிவிப்பு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து, சிறப்பு அலுவலர் - மன்றத் தீர்மான எண்.666/2020, நாள்.22.09.2020ன்படி, மேற்படி சட்ட திருத்தம் பெருநகர சென்னை மாநகராட்சியில் II/2019-20 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

மேற்படி அரசால் வெளியிடப்பட்டு, நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட சட்ட திருத்தத்தின் (*சென்னை மாநகராட்சி முனிசிபல் (திருத்தம்) சட்டம், 2018 (தமிழ்நாடு சட்டம் 37/2018)*), தொடர்ச்சியாக, சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம், 1919, பிரிவு, 138, அட்டவணை IV, பாகம்-VI-ல், சேர்க்கப்பட்டுள்ள விதிகளில் ஒன்றான, " 29-D-ல், தாமதமாக சொத்துவரி செலுத்தும் சொத்து உரிமையாளர்கள் செலுத்த வேண்டிய தொகையுடன், கூடுதலாக 2 சதவீதத்திற்கு மிகாமல் தனிவட்டி (Simple Interest) சேர்த்து செலுத்தப்பட வேண்டும்" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

U/S 138, CCMC Act 1919, Schedule IV, Part-VI,Rule -29 D - " If any amount remains unpaid after the due date for its payment, the assessee shall pay, in addition to the amount due, interest at such rate not exceeding two per cent simple interest, as may be prescribed."

பெருநகர சென்னை மாநராட்சியில் கடந்த 11/2019-20 லிருந்து, சொத்துவரி நிலுவை வைத்துள்ள தொகையுடன், விதிகளின்படி, தனிவட்டி சேர்த்து, சம்மந்தப்பட்ட சொத்து உரிமையாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு வருகிறது. 1/2022-23 ஆம் அரையாண்டிலும், குறிப்பிட்ட காலத்தில் (அரையாண்டு துவக்கத்தின் முதல் 15 தினங்களுக்குள்) சொத்துவரி செலுத்தாத/நிலுவை வைத்துள்ள சொத்து உரிமையாளர்களுக்கும் செலுத்த வேண்டிய தொகையுடன், 2 சதவீதம் தனிவட்டி விதிக்கப்பட்டுள்ளது.

அரசால் வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண்.53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA IV) துறை, நாள் 30.03.2022ல், தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்றங்களால், மாநகராட்சி சட்ட விதிகளின்படி, சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள அறிவுறுத்தல்கள் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணையின் தொடர்ச்சியாக, சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்ட விதிகள் மற்றும் நடைமுறைகளை பின்பற்றி, மன்ற தீர்மான எண். 63/2022, நாள்: 30.05.2022ல், சொத்துவரி சீராய்வு மேற்கொள்வது தொடர்பாக பெறப்பட்ட ஆட்சேபணைகள் மற்றும் கருத்துக்கள் பரிசீலிக்கப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும், தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள இனங்களின் அடிப்படையில், 1/2022-23 முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட சுமார் 13.15 லட்சம் சொத்துவரி மதிப்பீடுகளில், இதுநாள்வரை சுமார் 12.89 லட்சம் சொத்துவரி மதிப்பீடுகளுக்கு 1/2022-23 முதல் சொத்துவரி சீராய்வின்படி சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

சொத்துவரி பொது சீராய்வு அறிவிப்புகள், சம்மந்தப்பட்ட சொத்து உரிமையாளர்களுக்கு, மத்திய அரசின் தபால் துறை மூலமாக சார்வு செய்யப்பட்டு வருகிறது. இதுநாள்வரை சுமார் 12 லட்சம் சொத்து உரிமையாளர்களுக்கு சொத்துவரி சீராய்வு அறிவிப்புகள் சார்வு செய்யப்பட்டுள்ளது. தோராயமாக 6.90 லட்சம் சொத்து உரிமையாளர்களால், 1/2022-23 அரையாண்டுக்குரிய சொத்துவரி முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது. மேலும், 6.25 லட்சம் சொத்து உரிமையாளர்கள் 1/2022-23 அரையாண்டுக்குரிய சொத்துவரி செலுத்தப்பட வேண்டும்.

நடப்பு நிதி (2022-23) ஆண்டின் இரண்டாம் அரையாண்டு (2/2022-23) துவங்க குறுகிய காலமே உள்ளதால், சீராய்வின்படி, 1/2022-23 முதல் நிர்ணயிக்கப்பட்ட வரியினை இதுவரை செலுத்தாத சொத்து உரிமையாளர்களுக்கு, சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம், 1919, பிரிவு-138, விதி 29-Dன்படி, வருகிற, 01.10.2022 முதல், செலுத்த வேண்டிய நிலுவை தொகையுடன் 2 சதவீதம் தனிவட்டி விதித்து, 2/2022-23 அரையாண்டிற்கான கேட்பு ERP-Application – மென்பொருளில் தானாகவே (Automated) உருவாக்கப்பட உள்ளது.

இது தொடர்பாக கீழ்கண்ட விவரங்கள் பரிசீலனை செய்ய சமர்ப்பிக்கப்படுகிறது.

- மன்றத் தீர்மான எண்.63/2022, நாள்:30.05.2022ன்படி, மேற்படி சொத்துவரி மதிப்பீடுகளுக்கு, கடந்த ஜூன்'2022 மாதம் முதல் ஒவ்வொரு பகுதியாக, (குடியிருப்புகள், குடியிருப்பு அற்றவைகள், குடியிருப்பு/ குடியிருப்பு அற்ற கலந்த இனங்கள், சிறப்புவகை கட்டிடங்கள், காலிமனைகள் போன்ற) 1/2022-23க்குரிய சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளப்பட்டு, படிப்படியாக சொத்து உரிமையாளர்களுக்கு, சீராய்வு அறிவுப்புகள் சார்வு செய்யப்பட்டு வருகின்றது.
- சில இனங்களுக்கு (கல்வி நிறுவன கட்டிடங்கள், சிறப்பு வகை கட்டிடங்கள், அலைப்பேசி கோபுரங்கள் கொண்ட சொத்துக்கள் போன்ற), சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள வேண்டியுள்ளது.

- **சொத்துவரி சீராய்வு அறிவிப்புகள் தொடர்பாக சொத்து உரிமையாளர்களால் சம்மந்தப்பட்ட வட்டார துணை ஆணையர் (வடக்கு, மத்தியம், தெற்கு) அலுவலகங்களில் முறையீடு அளிக்கப்பட்ட *12,300* எண்ணிக்கையிலான மனுக்களில், *10,000* மனுக்கள் வரை தீர்வு செய்யப்பட வேண்டிய நிலை உள்ளது.**
- **நடப்பு அரையாண்டில் *(1/2022-23)*, சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளப்படுவதற்கு முன்பு, சொத்துக்களுக்குரிய அரையாண்டு சொத்து வரியினை, சம்மந்தப்பட்ட சொத்து உரிமையாளர்களால் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகவே *(15.04.2022)* செலுத்தப்பட்டுள்ளது.**
- **சொத்துவரி சீராய்வினை எதிர்த்து, மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில் பல்வேறு தரப்பினரால் வழக்குகள் தொடுக்கப்பட்டு வழக்குகள் (WP.Nos.18534, 19392,…….22595 of 2022) நிலுவையில் உள்ளதாலும், *2/2022-23* அரையாண்டு துவங்குவதற்கு குறுகிய காலமே உள்ளதாலும், சொத்து உரிமையாளர்கள் சீராய்வின்படி, உயர்த்தப்பட்ட சொத்துவரியினை *30.09.2022*க்குள் செலுத்த வேண்டியுள்ளதாலும், மேற்படி தேதிக்குள் செலுத்த தவறும் பட்சத்தில், மேற்படி வகையான சொத்து உரிமையாளர்களுக்கும் (பொது சீராய்விற்கு முன்பு குறிப்பிட்ட காலத்தில் *(1/2022-23)* சொத்துவரி செலுத்திய சொத்து உரிமையாளர்களுக்கும்) சட்ட விதிகளின்படி தானாகவே *2* சதவீதம் தனிவட்டி *01.10.2022* முதல் விதிக்க வேண்டிய நிலை உள்ளதாலும், இதனால் சொத்து உரிமையாளர்கள் பாதிக்கப்படா வண்ணம், கூடுதல் நிதிச்சுமையை தவிர்க்கும் விதமாக, ஒருமுறை மட்டும் சிறப்பு நிகழ்வாக, சீராய்வின்படி உயர்த்தப்பட்ட சொத்துவரியினை மட்டும் செலுத்தாத, மேற்படி வகையான சொத்து உரிமையாளர்களுக்கு, உயர்த்தப்பட்ட சொத்துவரியினை செலுத்துவதற்கு, போதிய கால அவகாசம் அளிக்கலாம் என கருதப்படுகிறது. இது தொடர்பாக, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்திலும், கடந்த *26.09.2022* அன்று சீராய்வு எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு விசாரணையின்போது, பெருநகர சென்னை மாநகராட்சி தரப்பு வாதத்தில் எடுத்துரைக்கப்பட்டது.**
- **சிறப்பு அதிகாரி-மன்றத் தீர்மான எண்.*896/2020*, நாள்: *04.11.2020*ல் கொரோனா பேரிடர் தொற்று காரணமாக சொத்துவரியுடன் தனிவட்டி *2* விழுக்காடு என்பதற்கு பதிலாக *0.50* விழுக்காடாக *31.03.2020* வரை வசூலிக்க தீர்மானம் பெறப்பட்டுள்ளது.**

மன்றத் தீர்மான எண்.*63/2022*, நாள்:*30.05.2022*ன்படி, பொது சொத்துவரி சீராய்வு *(1/2022-23* முதல்*)* கடந்த ஜுன் மாதம் முதல் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், நடப்பு நிதி ஆண்டில் *2/2022-23* அரையாண்டு துவங்குவதற்கு குறுகிய காலமே உள்ளதாலும், சொத்துவரி சீராய்வு தொடர்பான வழக்குகள் மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளதாலும், சீராய்வின்படி, உயர்த்தப்பட்ட சொத்துவரியினை *30.09.2022*க்குள் செலுத்த வேண்டியுள்ளதாலும், மேற்படி தேதிக்குள் செலுத்த தவறும் பட்சத்தில், சொத்து உரிமையாளர்களுக்கு (பொது சீராய்விற்கு முன்பாக நிர்ணயிக்கப்பட்டிருந்த சொத்துவரியினை குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகவே *(01.04.2022* முதல் *15.04.2022* க்குள்*)* செலுத்தியுள்ளவர்கள் உட்பட*)* சட்ட விதிகளின்படி தானாகவே *2* சதவீதம் தனிவட்டி *01.10.2022* முதல் விதிக்க வேண்டிய நிலை உள்ளதாலும், சீராய்வின்படி உயர்த்தப்பட்ட சொத்துவரியினை செலுத்தாத சொத்து உரிமையாளர்களுக்கு மட்டும், உயர்த்தப்பட்ட சொத்துவரியினை செலுத்துவதற்கு, போதிய கால அவகாசம் வழங்கி, அத்தொகைக்கு தனிவட்டி *2* சதவீதம் விதிக்காமல் தளர்வளிப்பது அவசியமாக கருதப்படுகிறது.

அதன்படி, *2022*ல் மேற்கொள்ளப்பட்ட சொத்துவரி சீராய்வில், *1/2022-23* அரையாண்டு முதல் உயர்த்தப்பட்ட சொத்துவரியினை செலுத்தாத சொத்து உரிமையாளர்களுக்கு மட்டும், ஒரு முறை சிறப்பு நிகழ்வாக, சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்ட விதி *-29*ன்படி, தனிவட்டி *2* சதவீதம் விதிப்பதற்கு பதிலாக *0* சதவீதம் எனக் குறிப்பிட்டு, சட்ட விதிகளின்படி *2* சதவீதம் தனிவட்டி விதிப்பதற்கு தளர்வளிக்க மன்றத்தின் அனுமதி பெறலாம்.

எனவே, மன்றத் தீர்மான எண்.*63/2022*, நாள்:*30.05.2022*ன்படி, *1/2022-23* அரையாண்டு முதல் மேற்கொள்ளப்பட்டுள்ள சொத்துவரி சீராய்வில், சொத்துவரி மதிப்பீடுகளுக்கு உயர்த்தப்பட்ட சொத்துவரியினை, இதுவரை செலுத்தாத சொத்து உரிமையாளர்களுக்கு **(சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளப்படுவதற்கு முன்பு, சொத்துக்களுக்குரிய அரையாண்டு சொத்துவரியினை, குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகவே *(15.04.2022)* செலுத்திய/ செலுத்த தவறிய (தனிவட்டி விதிக்கப்பட்ட*)* சொத்து உரிமையாளர்கள்*)*** மட்டும், **ஒரு முறை சிறப்பு நிகழ்வாக,** சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்ட விதி -*29*ன்படி, தனிவட்டி *2* சதவீதம் விதிப்பதற்கு, பதிலாக *0* சதவீதம் எனக் குறிப்பிட்டு, மேற்படி *2* சதவீதம் தனிவட்டி விதிப்பிலிருந்து தளர்வு அளிக்க மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.6.ந.க.எண்/அ4/7955/2022

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 27.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:495/2022 **பொருள் எண்.94**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-6 - கோட்டம்-64 முதல் 78 வரை தற்காலிக தூய்மை பணியாளர்கள் 1029 நபர்கள் கொண்டு 01.10.2022 முதல் 31.03.2023 வரை தொய்வின்றி தூய்மைப் பணிகளை தொடர்ந்து செயல்படுத்திட அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-15, 16 மற்றும் 17-க்குட்பட்ட வார்டு-64 முதல் 78 வரை உள்ள 15 வார்டுகளில் ஓய்வு பெற்ற தூய்மைப் பணியாளர்களின் காலிப்பணியிடங்கள், தற்போதுள்ள பணியாளர்களுக்குரிய வார விடுமுறை, தற்செயல் விடுப்பு, ஈட்டிய விடுப்பு, மருத்துவ விடுப்பு, ஈட்டா விடுப்பு, முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமை போன்ற காரணங்களாலும், தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் தூய்மைப் பணியாளர்களை பணியில் அமர்த்தி குப்பைகளை அகற்ற ஏதுவாகவும், ஆட்டிறைச்சி கூடம், ஓட்டேரி குப்பை கொட்டும் வளாகத்திலும் மற்றும் அனைத்து பகுதிகளிலும் பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படாதவாறும், பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் முழுமையாக துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள மண்டலம்-6ல் உள்ள 15 வார்டுகளுக்கும் சுமார் 995 பணியாளர்களை (NULM) தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் பணிபுரியவும், ஒரு தூய்மை பணியாளருக்கு அன்றைய அலுவலக அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.410/- வீதம் 183 நாட்களுக்கு (01.04.2022 முதல் 30.09.2022 வரை) பணி செய்திட மன்ற தீர்மான எண்.32/2022, நாள்-11.04.2022-ன்படி அனுமதி பெறப்பட்டது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 06.06.2022 நாளிட்ட செயல்முறை ஆணையின்படியும் மற்றும் திடக்கழிவு மேலாண்மை துறையின் 08.06.2022 நாளிட்ட சுற்றறிக்கையின்படி தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.410/-லிருந்து ரூ.424/-ஆக 01.04.2022 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு மேற்கண்ட பணியாளர்களின் அனுமதி காலம் 30.09.2022 அன்றுடன் முடிவடைகிறது.

இந்நிலையில், தூய்மைப் பணியாளர்களை கொண்டு செயல்படுத்தப்பட்டு வரும் தூய்மைப்பணிகள் பெருநகர சென்னை மாநகராட்சியின் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், தற்போது தூய்மை இந்தியா திட்டம் மூலம் சென்னை மாநகராட்சி பிளாஸ்டிக் இல்லா மாநகராட்சியாக மாற்ற குப்பை தரம் பிரித்தல் (Source Segregation) போன்ற பணிகள் மண்டலம்-6ல் தொய்வின்றி நடைபெற ஒப்பளிக்கப்பட்ட மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 1785 ஆகும்.

மொத்த பணியாளர்கள் 1785ல், தற்போது 756 பணியாளர்கள் மட்டுமே உள்ளதாலும், மேலும் 26 பணியாளர்கள் வயது முதிர்வு ஓய்வு, 1 பணியாளர் பணியிடமாற்றம் மற்றும் 7 பணியாளர்கள் பணியிடையில் காலமானதால் 34 காலி பணியிடங்கள் ஏற்பட்டுள்ளது. புதிய தூய்மை இந்தியா திட்டத்தின்படி 01.10.2022 முதல் 31.03.2023 வரைக்கான காலத்திற்கு காலி பணியிடங்களை பூர்த்தி செய்ய 1029 தற்காலிக பணியாளர்கள் கீழ்கண்ட அட்டவணையின்படி தேவைப்படுகிறார்கள்.

வ. எண்	வார்டு எண்	ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை	தற்போது பணிபுரியும் நிரந்தரப் பணியாளர்கள்	30.09.2022 வரை ஏற்பட்டுள்ள காலி பணியிடத்திற்கு தேவைப்படும் பணியாளர்கள்
1	64	139	67	72
2	65	132	71	61
3	69	88	47	41
4	66	110	40	70
5	67	107	53	54
6	68	120	52	68
7	70	117	63	54

8	71	120	58	62
9	72	124	19	105
10	73	116	35	81
11	74	72	28	44
12	75	132	62	70
13	76	120	35	85
14	77	115	39	76
15	78	102	63	39
16	S.H	59	18	41
17	ODG	12	6	6
மொத்தம்		1785	756	1029

6வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.230/2022 நாள்.13.09.2022ல், மண்டலம்-6ல் கோட்டம் 64 முதல் 78 வரையுள்ள கோட்டங்களுக்கு 1029 தூய்மை பணியாளர்கள் NULM கீழ் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த ஆறு மாத காலத்திற்கு (01.10.2022 முதல் 31.03.2023 வரை) ரூ.7,94,05,872/-க்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், காலிப்பணியிடங்களுக்கு திடக்கழிவு மேலாண்மைத் துறையின் மூலம் நிரந்தர தூய்மைப் பணியாளர்களை பணியமர்த்தும் வரை குப்பைகளை அகற்றி தூய்மைப் பணி செய்திட ஒப்பந்த பணியாளர்கள் மூலமாக / NULM (தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின்) கீழ் பணியமர்வு செய்யலாம் என கருதப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்-6ல் உள்ள பகுதி-15,16 மற்றும் 17-க்குட்பட்ட வார்டு-64 முதல் 78 வரை உள்ள 15 வார்டுகள், ஆட்டிறைச்சிக் கூடம் (Slaughter House) மற்றும் ஓட்டேரி குப்பை கொட்டும் வளாகம் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடங்களுக்கு பொதுசுகாதாரம் சீர்கெடாத வகையில் தூய்மைப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள காலியாக உள்ள 34 பணியாளர்கள் சேர்த்து மொத்தம் 1029 தூய்மை பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். இப்பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.424/- வீதம் 182 நாட்களுக்கு (01.10.2022 முதல் 31.03.2023 வரை) ஆகும் செலவினத் தொகை (1029 x 424 x 182) ரூ.7,94,05,872/- (ரூபாய் ஏழு கோடியே தொண்ணூற்று நான்கு இலட்சத்து ஐந்தாயிரத்து எண்ணூற்று எழுபத்து இரண்டு மட்டும்).
2. மேற்கண்ட பணிக்கான ரூ.7,94,05,872/- செலவினத்தை வரவு செலவு திட்ட மதிப்பீடு 2022-2023 ஆம் நிதியாண்டில் கணக்கு பிரிவு எண் 40-41-03ல் பணியாளர்களுக்கான கட்டணம் - துப்புரவு பணி (PAYMENT TO CASUAL STAFF - CONSERVANCY WORKS) 210-100-601 என்ற கணக்கு தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்திடவும்,
3. பணி அமர்வு ஒப்பந்தம் ஏற்படும் வரை அவசர அவசியம் கருதி நடைமுறையிலுள்ள முறைப்படி துப்புரவு பணி தொடர அனுமதிக்கவும்,
4. மேற்கண்ட பணியாளர்களுக்கான EPF செலுத்த ஆகும் செலவின தொகையினை அனுமதிக்கவும்,
5. மேலும் 1029 தூய்மை பணியாளர்களை NULM (தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின்) கீழ் உள்ள குழுக்களில் பணியமர்த்தி கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ம.அ.3.பொ.சு.து.ந.க.எண்.எச்1/4922 /2022

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 24.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:496 / 2022 **பொருள் எண்.95**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-3 (மாதவரம்) கோட்டம்-23 முதல் 33 வரை பகுதிகளில் கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ள 123 எண்ணிக்கையிலான தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் உள்ள குழு உறுப்பினர்களின் பணி காலம் வரும் 26.09.2022 உடன் முடிவடையுள்ளது. இந்த பணியாளர்களின் பணி காலத்தினை கூடுதலாக ஒரு வருடம் காலம் 27.09.2022 முதல் 26.09.2023 வரை பணி நீட்டிப்பு செய்ய அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-3 கோட்டங்கள் 23 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் ஒவ்வொரு வீட்டிலுள்ள நீர்த் தேக்க தொட்டிகள் கிணறுகள், மேல் நிலைத் தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படா வண்ணம் கொசுப்புழு தடுப்பு பணி மேற்கொண்டு கொசுவினால் பரவும் மலேரியா, டெங்கு, சிக்குன் குனியா, யானைக்கால் மற்றும் மூளைக் காய்ச்சல் போன்ற நோய்களை கட்டுப்படுத்தவும், நீர் வழித்தடங்கள், மழைநீர் கால்வாய், பக்க கால்வாய்களில் கொசு மருந்து தெளிக்கவும், புகை பரப்பும் பணி மேற்கொள்ளவும், நிரந்தர பணியாளர்களின் பற்றாக்குறை காரணமாக மொத்தம் 123 குழு உறுப்பினர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் ஈடுபடுத்தி கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

மண்டலம்-3ல் மொத்தம் 56,624 வீடுகள் உள்ளன. இவ்வீடுகளில் உள்ள மேல்நிலைத் தொட்டிகள், கீழ்நிலைத் தொட்டிகள், மற்றும் கிணறுகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப் புழு வளர்ச்சி ஏற்படா வண்ணம் கொசுப்புழு தடுப்பு பணி மேற்கொள்ள 99 NULM குழு உறுப்பினர்களை கொண்டு கோட்டங்கள் 29, 30,31 மற்றும் 32ல் 9 கி.மீ நீளமுள்ள நீர் வழித்தடத்தில் உள்ள குப்பைகள் மற்றும் செடிகளை அகற்றி மருந்து தெளிக்கும் பணிகளை மேற்கொள்ள 7 குழு உறுப்பினர்கள் மழைநீர்க் கால்வாய் மற்றும் பக்க கால்வாய் என மொத்தம் 63.7 கி.மீ இவற்றில் மருந்து தெளிப்பு பணி மேற்கொள்ள 17 குழு உறுப்பினர்கள், புகை மருந்து தெளிப்பு பணி மேற்கொள்ள 11 குழு உறுப்பினர்கள் வாகன மூலம் புகைப்பரப்பும் பணி மேற்கொள்ள 3 குழு உறுப்பினர்கள் என மொத்தம் 150 நிரந்தர பணியாளர்கள் மற்றும் (NULM) குழு உறுப்பினர்கள் தேவைப்படுகின்றது.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி என்பதால் அவசரம் மற்றும் அவசியம் கருதி (NULM) குழு உறுப்பினர்களை மேற்கண்ட அளவில் நியமித்து பணி மேற்கொள்ள வேண்டியது அவசியம் ஆகிறது. முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 18.10.2021 நாளிட்ட ஆணை மற்றும் சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.809/2021ன்படி, 27.09.2021 முதல் 26.09.2022 வரை கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள மலேரியா பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.410/- என்ற அடிப்படையில் மண்டலம்-3ன் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தில் (NULM) குழுக்கள் அமைத்து அதன் மூலம் 365 நாட்களுக்கு குழு உறுப்பினர்கள் மூலம் கொசு ஒழிப்புப்பணியில் ஈடுபடுத்த ஆணை பெறப்பட்டது. மேலும் கோட்டம்-29, கோட்டம்-22ஆக மாற்றம் செய்யப்பட்டு மண்டலம்-2ல் சேர்க்கப்பட்டது பழைய கோட்டம்-29ல் பணிபுரிந்து வந்த பணியாளர்களுக்கு மண்டலம்-2ல் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

வ.எண்	பணி விவரம்	தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை	மண்டலம்-2 ஒப்படைக்கப்பட்ட மலேரியா பணியாளர்கள் எண்ணிக்கை	மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியம்(2022-2023 ஆண்டுக்கானது)	தற்போது பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை	தோராய செலவினம்
1	கொசுப்புழு தடுப்பு பணி, மருந்து தெளிப்புப் பணி, புகைப்பரப்பும் பணி, நீர் வழித்தடப் பணி	129	6	ரூ.424	123	ரூ.424 x 123 (பணியாளர்கள்) x 365 நாட்கள் =ரூ.1,90,35,480/-

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் (NULM) குழு உறுப்பினர்களை கொண்டு கொசுப் புழு தடுப்புப் பணி, மருந்து தெளிப்புப் பணி, புகை மருந்து தெளிப்புப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்-3ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 06.06.2022 நாளிட்ட சுற்றறிக்கையின்படி அங்கீகரிக்கப்பட்ட விலையான நாள் ஒன்றுக்கு ரூ.424/- வீதம் 123 (NULM) குழு உறுப்பினர்களுக்கு ஆகும் தோராய செலவு ரூ. 424 x 123 (பணியாளர்கள்) x 365 (நாட்கள்) என ஓர் ஆண்டிற்கு ரூ. 1,90,35,480/- என்று கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட 123 எண்ணிக்கையிலான (NULM) குழு உறுப்பினர்களை கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்த,

1. தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியாளர்களின் பணிக்காலம் 26.09.2022 அன்றுடன் முடிவடைகிறது. 27.09.2022 முதல் 26.09.2023 வரை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் குழு உறுப்பினர்களை கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்தவும்,

2. கொசு ஒழிப்பு பணிக்கான குழு உறுப்பினர்களின் ஊதியத்தை 365 நாட்களுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ424/- ஐ வழங்குவற்கு நிர்வாக அனுமதியும்,

3. கொசு ஒழிப்பு பணியில் ஈடுபட்டு வரும் குழு உறுப்பினர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் அன்னாரை மண்டல அலுவலர்-3 அவர்களின் அனுமதியுடன் பணியிலிருந்து நீக்கவும், நீக்கப்பட்ட பணியாளருக்கு பதிலாக மாற்று பணியாளரை பணியமர்த்தவும்,

4. கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடும் குழு உறுப்பினர்கள் பணி செய்த நாட்களுக்கு மண்டல நல அலுவலர்-3 அவர்களிடமிருந்து வருகை சான்றொப்பம் பெற்று அதன் அடிப்படையில் கணக்கிட்டு குழு உறுப்பினர்களுக்கு ஊதியம் வழங்கவும்,

5. இப்பணிக்கான செலவீன தொகையை (கணக்கு தலைப்பு எண்குறியீட்டு எண் .30-32-02, கணக்கு குறியீட்டு எண்.210-10-06-02) என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்யவும், எதிர்வரும் காலங்களில் தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் தமிழக அரசால் உயர்த்தி நிர்ணயிக்கப்படின் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தை வழங்க நிர்வாக அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.11ந.க.எண்.இ1/3062 /2022

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 27.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:497 / 2022 **பொருள் எண்.96**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 11, பகுதி - 33, கோட்டம் - 145 நெற்குன்றம் கிராமம் கோயம்பேடு விரிவாக்கம் 'A' சாலை மற்றும் 80 அடி இணைப்பு சாலை பூவிருந்தவல்லி நெடுஞ்சாலைக்கு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் இருந்து நிலம் பெறுவதற்கு அனுமதி.

G.O (Ms) No:288, Housing and Urban Development (UD3(1)) நாள்.29.11.2013ன்படி, பெருநகர வளர்ச்சி குழுமம் 'F' & 'G' சாலைகளில் கோயம்பேடு மொத்த விலை அங்காடி வளாகம் மிக முக்கியமான அனைத்து சாலைகளுக்கும் 'A' சாலை முதல் பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை வரை ஏற்படும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் வகையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு 16 ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் 4 (1)ல் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் (CMDA) தங்களுக்கு தேவையான வசதிகளை செய்து தர அதற்கு அனுமதி வழங்க 4 (1)ல் கோரிக்கை வைத்து அதை மாவட்ட வருவாய் அலுவலர் திருவள்ளூர் அவர்களின் பரிந்துரையின் பெயரில் புதிதாக 4 (1)ல் புதிய வரைவு கோரிக்கை அரசுக்கு அனுப்பி அனுமதி பெறலாம். அதற்கு அந்த முடிவு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தை சார்ந்ததாகும் (நெற்குன்றம் கிராமம்), எனவே, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமமே தகுந்த முடிவெடுக்க மாவட்ட வருவாய் அலுவலர் பரிந்துரைத்துள்ளார்.

சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் 27.09.2021 நாளிட்ட கடிதத்தின் படி தமிழ்நாடு அரசு நிர்வாக ஒப்புதல் கீழ்கண்ட நிலங்களுக்கு வழங்கியுள்ளது. புல எண்: 24/1, 40/5, 41, 42, 45, 46, 47, 48, 49, 50, 85, 89 நெற்குன்றம் கிராமத்தில் கோயம்பேடு விரிவாக்கம் 'A' சாலை மற்றும் 80 அடி பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை இணைப்பு சாலைக்கு மக்கள் நடமாட்டம் மற்றும் வாகன நெரிசலை கோயம்பேடு மொத்த வியாபார வளாக பகுதியில் தவிர்க்கலாம்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் கடிதத்தில் தொடர்ச்சியாக பெருநகர சென்னை மாநகராட்சி கீழ்கண்டவாறு ஏற்கனவே உள்ள 30 அடி சாலை புல எண்: 90 part & 91 part, 94 part, 95 part, 96 part, 48 part, 49 part புல எண்: 87 மற்றும் 89 நீக்கினால் நிலம் கையகப்படுத்தும் செலவுகள் குறையும் மற்றும் வழிகளின் படி கீழ்க்கண்ட புல எண்களில் உள்ள நிலங்களை கையகப்படுத்த 50, 49, 48, 47, 46, 45, 85, 86, 94, 95, 96, 91, 90 part நெற்குன்றம் கிராமம், மதுராவாயல் தாலுக்கா நிலம் மொத்தம் 12399ச.மீ. அல்லது 1.23.9 hectares நிலத்தை கையகப்படுத்த அரசின் ஒப்புதல் பெற்று மாற்றி அமைக்க 80 அடி இணைப்பு சாலை கோயம்பேடு 'A' சாலை முதல் பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை வரை சாலை அமைக்க சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் வரை வேண்டும்.

சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் நிறுவனத்தின் 07.12.2021 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டது போல ஏற்கனவே இருக்கும் நிலத்தின் 14336 ச. மீ அல்லது 1.43.36 hectares நிலம் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடமிருந்து பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டல அலுவலர்-11 மூலம் நில ஒப்படைப்பு அறிக்கை (LDR) பெற்று உரிய கள ஆயுவு செய்த பின் தேவையான மேம்பாட்டு பணிகள் 80 அடி சாலை அமைக்க மேற்கொள்ளவும்.

சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் நிறுவனத்தின் 03.06.2022 நாளிட்ட கடிதத்தில், நில ஒப்படைப்பு அறிக்கை பெற்று கோயம்பேடு *'A'* சாலை மற்றும் 80 அடி பூவிருந்தவல்லி சாலை நெடுஞ்சாலை இணைப்பு சாலை புல எண்: 52 *part*, *64 part*, *63 part*, *25 part*, *24 part*, *26 part*, *60 part* மற்றும் 29 *part* நெற்குன்றம் கிராமம் மதுரவாயல் தாலுக்கா நில அளவு 14336 ச. மீ சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு *(CMRL)* சொந்தமான நிலத்தை அனுமதித்து மீண்டும் நடவடிக்கை எடுப்பது சமந்தமாக அரசு வழிகாட்டு முறைகள் *G.O (Ms) No:288, Housing and Urban Development (UD3(1))* நாள்.29.11.2013ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி மேற்சொன்ன நிலத்தினை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடமிருந்து பெற நடவடிக்கை எடுக்கவும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சொத்து பதிவேடுகளில் பதிவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.10.சு.து.ந.க.எண்.எச்2/13391/2022
முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 26.09.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:498/2022 **பொருள் எண்.97**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-10 - சுகாதாரத்துறை - தற்காலிக தொழிலாளர்கள் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தில் குழுக்கள் (NULM) மூலம் பணியமர்த்தவும் - 147 பணியாளர்களுக்கு 01.10.2022 முதல் 30.09.2023 வரை ஓராண்டு காலத்திற்கு NULM மூலம் பணியமர்த்தி ஊதியம் வழங்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறை, பூச்சித்தடுப்பு துறை, சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.865/2021, நாள்:01.12.2021-ன்படி, மண்டலம்-10, பகுதிகளில் வீட்டிலுள்ள நீர்தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத்தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படாத வண்ணம் கொசு மருந்து தெளிக்கவும், கொசுக்களின் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த புகைமருந்து அடிக்கும் பணி மேற்கொள்ளவும், 127 பணியாளர்கள் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் குழுக்கள் மூலமாக பணியமர்த்த அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆணையர் அவர்களின் 05.03.2022 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, மண்டலம் -11, பகுதி -33, கோட்டம் - 148ல் சில பகுதிகள் வார்டு எல்லைகள் மறுவரையரையில் மண்டலம்-10, பகுதி - 29, கோட்டம்-127 எல்லைக்குள் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மண்டலம் - 11ல் கோட்டம் - 148 பகுதியில் பணிபுரிந்து வந்த 4 நபர்கள் மண்டலம்-10, பகுதி-29, கோட்டம்-127ல் பணி செய்திட பணியிடமாற்றம் செய்து மண்டலம் - 10ல் பணியமர்த்தவும்,

மேலும் துணை ஆணையர் (வ (ம) நி) அவர்களின் 23.09.2022 நாளிட்ட குறிப்பின்படி, கொசுப்புழு ஒழிப்பு பணியில் ஈடுபட்டு வந்த நிரந்தர பணியாளர் 6 நபர்கள் வயது முதிர்வு ஓய்வு பெற்றதாலும், 5 நபர்கள் பணியிடை காலமானதாலும், பதவி உயர்வில் 5 நபர்கள் சென்றுள்ளதால் கூடுதலாக 20 பணியாளர்கள் NULM குழுக்கள் மூலமாக பணிமர்த்த ஆணை வேண்டப்படுகிறது. மண்டலம் - 10ல் அடுக்குமாடி குடியிருப்புகள் (Multi Storied Apartments) அதிகரித்துள்ள காரணத்தினால் செக்டார் எண்ணிக்கை கோட்டம் - 128, 129, 136, 137 மற்றும் 138ல் அதிகரித்துள்ளது.

எனவே,

அ) மண்டலம்-10 சுகாதாரத்துறையில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் குழுக்கள் (NULM) மூலம் 147 பணியாளர்களை 01.10.2022 முதல் 30.09.2023 வரை ஓராண்டுக்கு பணியமர்த்த அனுமதியும்,

ஆ) மண்டலம்-10ல் பணிபுரிய தற்காலிக தொழிலாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) திட்டத்தின் கீழ் குழுக்கள் மூலம் பணியமர்த்தவும்,

இ) பெருநகர சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல் முறை ஆணையின் படி இப்பணிகளை மேற்கொள்ள ஒரு நாள் ஊதியம் ரூ.424/- என நிர்ணயம் செய்யவும், இதற்கான செலவினத்தொகை (147x424x365=2,27,49,720) (ரூபாய்

இரண்டு கோடியே இருபத்தி ஏழு இலட்சத்து நாற்பத்தி ஒன்பதாயிரத்து எழுநூற்று இருபது மட்டும்) ஆகும்.

ஈ) பணியாளர்களுக்கான ஊதியத்தை மண்டலம்-10, பகுதி கணக்கு குழுமத்தின் மூலம் குறியீட்டு எண்.30-32-02, கணக்கு தலைப்பு எண்.210-10-06-02 தலைப்பில் வழங்கவும்,

மேற்கண்ட அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***